# பல்கலை

தொகுதி II, இதழ் I – ஜூன் 2023

கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
இலங்கை

PALKALI is a bi-annual refereed journal published in Tamil by the Faculty of Arts, University of Peradeniya. It carries original research papers in social sciences and humanities. The contributions shall be in the form of research articles, book reviews, notes and comments and need to be academic nature. All the contributions and the communications should be addressed to the Editor, PALKALAI, Faculty Tamil Journal, Faculty of Arts, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

| | | |
|---|---|---|
| Co - Editors | : | Prof S.Pirashanthan<br>Dr. S. Baskaran |
| Managing Editor | : | Dr. M.Z.M. Nafeel |
| Editorial Board | : | Mrs. S.A.C. Ferckzia<br>Mrs. S. Chitra |

| | | |
|---|---|---|
| Annual Subscription | : | Local Rs. 600.00, Overseas $20 |
| Single Copy | : | 400.00 |

ISSN 2719-244 X

**பல்கலை,** பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்படும் ஓர் ஆய்விதழ். சமூக விஞ்ஞானம், மனிதப்பண்பாட்டியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளும், நூல் மதிப்புரைகளும், கருத்துரைகளும் இவ்வாய்விதழில் பிரசுரமாகும். துறைசார் அறிஞர்களின் மதிப்பீட்டின் பின்னரே ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும். தொடர்புகளுக்கான முகவரி: ஆசிரியர்கள், பல்கலை, தமிழ் ஆய்விதழ், கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

| | | |
|---|---|---|
| இணை ஆசிரியர் | : | பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்<br>கலாநிதி எஸ்.பாஸ்கரன் |
| நிர்வாக ஆசிரியர் | : | கலாநிதி எம்.ஸற்.எம். நபீல் |
| ஆசிரியர் குழு | : | திருமதி எஸ். ஏ. சி. பெரோஸியா<br>திருமதி எஸ். சித்திரா |

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | : | உள்நாடு ரூபா. 600.00 வெளிநாடு $ 20 |
| தனிப்பிரதி | : | ரூ. *400.00* |

# ஆசிரியர் பக்கம்

தேசத்தின் கொள்கை வகுப்புக்களுக்கு நிறைந்த பங்களிப்புச் செய்யும் அறிவுசார் உயர்கல்வி நிறுவனங்களின் பணிகள் பலதிறப்பட்டவை. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைக் கடந்து விரியும்..... பல்கலைக்கழகங்களின் புலமைச் செயற்பாடுகளுள் ஆய்வு நடிவடிக்கைகள் பிரதானமானவை. இவை, பல்வேறு விதமாக முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுள் மிகவும் முதன்மை பெறுவது, ஆய்விதழ் வெளியீடு என்பதை அனைவரும் அறிவர்.

இவ்வகையில் எமது பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்திலிருந்தும் ஆய்விதழ்கள் பல, பருவகால இதழ்களாகத் தொடர்ந்தும் வெளிவந்து, சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் துறைகளின் வளமார் செழிப்புக்குத் தம் இன்றியமையாப் பங்களிப்பை நல்கி வருகின்றன. இவ்விதழ்களுள் தமிழ்மொழி மூலமாக வெளிவரும் ஒரே இதழாக அமைந்து, அம்மொழி மூலமான புலமைசார் கருத்தாடலுக்கு வித்திட்டுவரும் சிறப்பு இப் "பல்கலை"க்கு உண்டு.

சிறிய இடைவெளியின் பின் மீண்டும் இப்பொழுது "பல்கலை" வெளிவருகின்றது. நம் பல்கலைக்கழக புலமையாளர்களின் பங்களிப்போடும், பிற பல்கலைக்கழக மற்றும் பிறதேசப் புலமையாளர்களின் பங்களிப்போடும் மலர்ந்துள்ள இவ்விதழ், ஆய்வுப் புலத்தை அணிசெய்யும் என்பது நிச்சயம்.

இலக்கியம், மெய்யியல், அரசியல், கல்வியியல், ஒப்பியல் எனப் பல புலங்களில் தம் கண்டடைவுகளையும், புதிய கருத்துக்களையும் ஆய்வாளர்கள் இவ்விதழில் முன்வைத்துள்ளனர். முக்கியத்துவம் மிக்க நூலொன்றுகுறித்த அறிமுகமும் காணப்பெறுகின்றது. பங்களிப்புச் செய்த புலமையாளர்கள் அத்துணைப் பேருக்கும் நன்றியுரைத்தல் கடன். தொடர்ந்தும் இப்புலமைப் பணியை ஊக்குவித்துநிற்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கலைப் பீடாதிபதி உள்ளிட்ட அனைவருக்கும் பணிவான நன்றி.

\- ஆசிரியர்கள்

## பொருளடக்கம்


1. இமாம் ஷைபானியின் சர்வதேச சட்டப் பங்களிப்பு 1

2. வடபுலத்தில் பாரதி 23

3. கிழக்கிலங்கையில் பாரதியின் செல்வாக்கு 48

4. தாராண்மைவாதக் கருத்தியலின் தத்துவார்த்த அடிப்படைகளும் அதன் வகைப்பாடும்: ஒரு விமர்சன ரீதியான மதிப்பீடு 56

5. நகுலேஸ்வரம் பற்றிய ஐதீகங்களும் வரலாற்று உண்மைகளும்: ஆய்வுச் சுருக்கம் 70

6. மலையகத்தில் பாரதியின் செல்வாக்கு 86

7. இரு சமய உடலாக இறந்தவரின் உடல்: காலனிய ஈழத்தில் அபரக் கிரியைக் கண்டனம் 107

8. யாழ்ப்பாண அரசுகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் ஒரு வரலாற்றுப்பார்வை 137

# இமாம் ஷைபானியின் சர்வதேச சட்டப் பங்களிப்பு

நபீல் ஸவாஹிர்


### ஆய்வுச்சாரம்

சர்வதேச சட்டத்துறை நவீன உலகின் முக்கிய துறைகளில் ஒன்று, பதினேழாம் நூற்றாண்டில் குரோட்டியஸ் போன்றவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு கலையாக இது அடையாளப்படுத்தப்படுகிறது. அந்தவகையில் சர்வதே சட்டம் மேற்கின் குழந்தையாகவே பொதுவாக நோக்கப்படுகிறது. ஆனால், மேற்கில் இத்துறை தோற்றம் பெறுவதற்கு முன்னரே முஸ்லிம் உலகில் சர்வதேச சட்டம் தொடர்பான விரிவான ஆய்வுகள் இடம் பெற்றிருப்பதை பலரும் அறியாதிருப்பது ஆச்சரியமாகும். அந்தவகையில் இஸ்லாமிய சட்ட மரபில் தோற்றம் பெற்ற அஸ்ஸியர் கோட்பாடு பற்றியும் அதன் மூலக்கர்த்தாவான இமாம் ஷைபானி பற்றியும் சர்வதேச சட்டத்திற்கான அவரது பங்களிப்பு பற்றியும் இங்கு எடுத்தாளப்படுகிறது. ஒரு பண்புசார் ஆய்வாக இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தி கருப்பொருள் பகுப்பாய்வின் அடிப்படையில் இங்கு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. நவீன சர்வதேச சட்டத்தின் தந்தை எனப் போற்றப்படும் குரோட்டியஸ் தோற்றம் பெறுவதற்கு சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே இஸ்லாமிய உலகில் இமாம் ஷைபானி அவர்களால் அஸ்ஸியர் அஸ்ஸகீர் மற்றும் அஸ்ஸியர் அல்கபீர் போன்ற சர்வதேச சட்டம் குறித்த விரிவான ஆய்வுகள் எழுதப்பட்டுள்ளன. அவரது இந்தப் பணியின் மூலம் சர்வதேச சட்டத்தின் பிதாமகனாக தன்னை நிலை நிறுத்தியுள்ளதுடன், சர்வதேச சட்டத்துறை தொடர்பான விதிகளை வகுத்தல் மற்றும் சாதாரண சட்டப் பரப்பை விட்டும் சர்வதேச சட்டத்தை வேறுபடுத்தி நோக்கியமை போன்றன சர்வதேச சட்டத்திற்கான இமாம் ஷை பானியுடைய விஷேட பங்களிப்புகளாக அமைந்துள்ளன. மனித சமூகத்திற்கு ஒவ்வொரு சமூகமும் வழங்கிய பங்களிப்பின் கௌரவத்தை அந்தந்த சமூகங்களுக்குப் பெற்றுக் கொடுப்பது முக்கியமானது என்றவகையில் இங்கு சர்வதேச சட்டத்திற்கான முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்பு எடுத்துக் காட்டப்படுகிறது.


திறவுச் சொற்கள்: சர்வதேச சட்டம், இமாம் ஷைபானி, இஸ்லாம்.

### ஆய்வுப் பின்னணி

சர்வதேச சட்டவாக்கத்தைப் பொறுத்தவரை, அது மேற்கின் குழந்தையாகவே அதிகம் பார்க்கப்படுகிறது. மேற்கின் சர்வதேச சட்டம் குறித்த பல ஆய்வுகள் அந்த

அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. ஆனால், இதில் இஸ்லாமிய வரலாற்றுக்கு ஒரு முன்னோடியான பாத்திரம் இருக்கிறது என்பதை பலரும் அறியாதிருக்கின்றனர். இமாம் ஷைபானி அவர்களை ஹனபி மத்ஹபின் ஒரு சட்டத் துறை அறிஞராக அறிந்து வைத்துள்ள அளவிற்கு அவரை சர்வதேச சட்டத்தின் பிதாமகனாக பலரும் அறியவில்லை. மேற்கிடம் இந்த சிந்தனை துளிர்விடுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இஸ்லாமிய உலகில் சர்வதேச சட்டம் பற்றிய ஆய்வுகள் தோற்றம் பெற்றமையை முஸ்லிம் உலகமும் இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை. (அத்தஸூகி. மு. 2013, https://www.alukah.net/culture/0/57183/) குறிப்பாக, தமிழ் பேசும் உலகில் இந்தப் பரிச்சயம் மிகவும் குறைவானது. தமிழுலகில் சி.ஜி வீரமந்திரி அவர்களது ஆங்கில மூலத்திலிருந்து ஏ.ஏ.எம். புவாஜி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட இஸ்லாமியச் சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை என்ற நூலில் இஸ்லாமிய சர்வதேச சட்டம் என்ற ஒரு அத்தியாயத்தில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக மேற்கின் சர்வதேச சட்ட சிந்தனையுடன் இஸ்லாமிய சர்வதேச சட்ட சிந்தனை உடன்பாடு காணும் இடங்களும் மேற்கின் சட்டங்களுக்கு இஸ்லாமிய சட்டங்கள் முன்னோடியாய் காணப்பட்டமையும் வெகுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (வீரமந்திரி. சி.ஜி. 2009) ஆனால், இமாம் ஷைபானியின் வகிபாகம் குறிப்பாக போதுமானளவு இதில் வெளிக் கொணரப்படவில்லை. அந்த இடைவெளியை இந்த ஆய்வு நிரப்புகிறது. இங்கு மேற்கு எதிர் இஸ்லாம் என்ற போட்டியை அல்லது முரண்பாட்டை வளர்ப்பதைத் தாண்டி, மனித வரலாற்றுக்கு பல்வேறு சமூகங்களும் மனித இனத்தின் பிரதிநிதிகளாக இருந்து பல்வேறு காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருக்கிறார்கள். அவற்றிற்கான நன்மதிப்பை அந்தந்த சமூகங்களுக்கு வழங்கி வைக்கும் விரிந்த மனப்பான்மையை வளர்ப்பதுவே முக்கியமானது.

சர்வதேச சட்டத்துறையில் முஸ்லிம்களின் ஈடுபாடு ஆரம்பம் முதல் காணப்பட்டமைக்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிட முடியும். ஒன்று அல்குர்ஆனும் சுன்னாவும் முழுவாழ்வுக்கும் வழிகாட்டுகிறது என்ற முஸ்லிம்களது நம்பிக்கை. இரண்டு, சர்வதேச சட்டத்திற்கான சமூகத் தேவை ஆரம்பம் முதலே இருந்து வந்தது. அதாவது, இஸ்லாம் அறிமுகமாகிய முதல் நூற்றாண்டிலேயே அது ஒரு பெரும் அரசியல் சக்தியாகவும் மாற்றமடைந்ததன் காரணமாக உலகின் பல்வேறு அரசியல் சமூகங்களுடன் அது உறவுகளைப் பேண வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சூழ்நிலைக்குரிய சட்டங்களைத் தேடிய பொழுதே சர்வதேச சட்டம் பற்றிய சிந்தனை அவர்கள் மத்தியில் தோற்றம் பெற்றது எனலாம். இதன் காரணமாகவே, இஸ்லாமிய சட்ட வரலாற்றில் “அஸ்ஸியர்” என்னும் கோட்பாடும் “முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி”யும் சர்வதேச சட்டம் என்று தலைப்பில் தவிர்க்க முடியாத சொற்களாகக் காணப்படுகின்றன.

### ஆய்வு நோக்கங்கள்

1. *அஸ்ஸியர் கோட்பாட்டை அறிந்து கொள்ளுதல்.*
2. *சர்வதேச சட்டத்தின் பிதாமகனை அடையாளம் காணுதல்.*
3. *சர்வதேச சட்டத்திற்கான இமாம் ஷைபானியின் பங்களிப்பைக் கண்டறிதல்.*

### ஆய்வு முறையியல்

*சர்வதேச சட்டத்திற்கான இமாம் ஷைபானியின் பங்களிப்பைக் கண்டடைவதை நோக்கமாகக் கொண்டுள்ள இவ்வாய்வு பின்வரும் ஆய்வு முறையியலைக் கொண்டமைந்துள்ளது. இது ஒரு பண்பு ரீதியான ஆய்வாகும். இதற்காக இரண்டாம் நிலைத் தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக இஸ்லாமிய சட்டவியல் தொடர்பாகவும் குறிப்பாக சர்வதேச சட்டவியல் தொடர்பாகவும் எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், கட்டுரைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்பு ரீதியான ஆய்வு என்றவகையில் பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையில் (*Thematic Analysis*) பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.*

### கலந்துரையாடல் மற்றும் கண்டறிதல்கள்

#### அஸ்ஸியர் கோட்பாடு

*அஸ்ஸியர் கோட்பாட்டை அறிந்து கொள்வதற்கு முன்னர் இமாம் ஷைபானியின் வாழ்வு குறித்த ஒரு சுருக்க அறிமுகத்தை நோக்குவோம்.*

#### இமாம் ஷைபானியின் வாழ்க்கைக் குறிப்பு

*இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் இப்னுல் பர்கத் அஷ்ஷைபானி அவர்கள் ஹி. 132 ல் ஷாம் பிரதேசத்தின் வாஸித் என்னும் நகரில் பிறந்தார்கள். இவரது கல்வி வாழ்க்கை பிரபல அறிவியல் நகரமான கூபாவிலேயே ஆரம்பமானது. அங்கு இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் அபூ யூசுப் போன்றவர்களிடம் ஹனபி சட்டப் பாரம்பரியத்தைக் கற்ற இவர் பின்னர் மதீனாவுக்குச் சென்று இமாம் மாலிக்கிடம் மாலிகி சட்டப் பாரம்பரியத்தையும் கற்றார்கள். பனூ ஷைபான் கோத்திரத்தினரிடம் கற்றதன் காரணமாக ஷைபானி என்ற குடும்பப் பெயரை தன்னுடன் இணைத்துக் கொண்டார்கள். இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் அபூ யூசுப் ஆகியோரிடமிருந்து பெற்ற ஹனபி சட்டப் பாரம்பரியத்தை சிதையாமல் அடுத்த பரம்பரையினருக்குத் தொகுத்து வழங்கியவர் இமாம் ஷைபானியாவர்கள், அல்மப்ஸூத், அல்ஜாமிஉஸ்ஸகீர் போன்ற நூல்கள் ஹனபி சட்டப் பாரம்பரியத்தை அதன் முதல் இருவரிடமிருந்தும் பெற்று, இமாம் ஷைபானி அவர்கள் தொகுத்த நூல்களாகும். இவற்றைக் கற்பிப்பதற்கு கூபாவில் இமாம் ஷைபானியவர்களுக்கு தனியான ஒரு பள்ளிவாயலும் காணப்பட்டது. ஹனபி பாரம்பரியத்தை ஒருவர்*

*கற்றுக் கொள்வதாக இருப்பின் இன்று அதற்காக ஒருவர் பயன்படுத்துவதற்குரியவை இமாம் ஷைபானியுடைய நூல்களாகும். ஹனபி சட்டப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தவர் என்று இவரைக் குறிப்பிடலாம். இது பற்றி இமாம் அபூ ஸஹ்ரா அவர்கள் குறிப்பிடும் பொழுது, "பொதுவாக ஈராக்கியர்களுடைய பிக்ஹும் குறிப்பாக இமாம் அபூ ஹனீபாவுடைய பிக்ஹும் இமாம் ஷைபானியின் நூல்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கின்றன. அவரது நூல்கள்தான் இந்த பிக்ஹைப் பாதுகாத்து அடுத்த பரம்பரைக்கு ஒரு மூலாதாரமாக வழங்கியது. பின்னையவர்கள் தமது அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதற்கு ஒரு ஊற்றாக அமைந்தது" என்றார்கள். (அபூ ஸஹ்ரா மு. 1947, ப.219).*

*இமாமவர்களது மதீனா பயணம் சுமார் மூன்று வருடங்களை எடுத்துக் கொண்டது. அங்கு இமாம் மாலிக்கிடம் முவத்தா உட்பட அவரது பிக்ஹையும் கற்றுக் கொண்டார். சுமார் எழுநூறு ஹதீஸ்களை முதவத்தாவிலிருந்து இமாம் ஷைபானி அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். முவத்தாவிலிருந்து தான் அறிவிப்புச் செய்யும் ஹதீஸ்களின் சட்ட விளக்கங்களில் ஹனபி பாரம்பரியத்திற்கு முரண்பட்ட விடயங்களை அவர் தனியாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே முவத்தாவை அறிவித்தவர்களுள் இமாம் ஷைபானியின் ரிவாயத்கள் விஷேடமான விளக்கங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டன. இமாம் மாலிக் அவர்களும் இமாம் ஷைபானி குறித்து மிகுந்த கௌரவத்துடன் காணப்பட்டார். ஒரு தடவை, கிழக்கிலிருந்து எம்மிடம் கற்க வருகின்றவர்களில் இந்த இளைஞரைத் தவிர வேறு எவரிடமும் விஷேடங்கள் இருக்கவில்லை என்று இமாம் ஷைபானியை காட்டிக் கூறினார்கள். (லுமைரிய்யா உ. ஜு. 1999, ப.93)*

*இமாம் அபூ ஹனீபா, இமாம் அபூ யூசுப், இமாம் அவ்ஸாஈ, இமாம் சுப்யான் அஸ்ஸௌரி போன்றவர்களிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்றமையினால் இவர்கள் மூலமாகவே சர்வதேச சட்டத் துறை மீது இவருக்கு ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. அஸ்ஸியர் அஸ்ஸகீர் மற்றும் அஸ்ஸியர் அல்கபீர் ஆகிய நூல்கள் இத்துறையில் அவரது பிரமாண்டமான படைப்புக்களாகும். இதில் முதலாவது நூல் சர்வதேச சட்டம் பற்றிய இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் அபூ யூசுப் ஆகியவர்களது கருத்துக்களின் தொகுப்பாகவும் இரண்டாவது நூல் தனது இறுதிக் காலப்பகுதியில் சர்வதேச சட்டம் தொடர்பாக எழுதிய விரிவான நூலாகவும் கருதப்படுகிறது. (சுவைதான், அ. மு. இ, 2016, பக்.14-15)*

*இமாம் ஷைபானி அவர்கள் ஆரம்ப நாட்களில் நீதிபதி பதவியை ஏற்றுக் கொள்வதில் தயக்கங்களை வெளிப்படுத்தினாலும் பிற்பட்ட நாட்களில் கலீபா ஹாரூன் ரஷீத் அவர்களால் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டு தனது வபாத் வரையில் அவருக்கு மிகவும் நெருக்கமான ஒருவராகச் செயற்பட்டார்கள். இறுதியாக ஹி. 189 ல் பாரசீகத்தின் ரய் என்ற பகுதிக்கு கலீபா ஹாரூன் ரஷீதுடன் ஒரு பயணத்தில் இருந்த போது வபாத்தானார்கள், அதே பயணத்தில் அவருடன் இருந்த மொழியியல் அறிஞர் இமாம் கிஸாஇயும் வபாத்தானார்கள். கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் இருவரையும் அடக்கம் செய்து விட்டு, இன்று ரய்யில் பிக்ஹையும் அறபு*

மொழியையும் அடக்கம் செய்து விட்டேன் என்று குறிப்பிட்டார்கள். (அந்நத்வி அ. அ, 1994, பக். 242-243)

### அஸ்ஸியர் கலை பற்றிய அறிமுகம்

#### இஸ்லாமிய சட்டக் கலையின் ஒரு பகுதி

இஸ்லாம் முதன் முதலில் பாலைவன அறபுச் சூழலில் தோற்றம் பெற்றாலும் அது அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வஹி என்ற வகையில் அதன் போதனைகளும் சட்டங்களும் எல்லாக் காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் பொருத்தமானதாக அமைந்து காணப்படுகின்றன. இதனை அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது, "இது அகிலங்களுக்கெல்லாம் நல்லுபதேசமன்றி வேறில்லை" (ஸாத் - 87) என்கின்றது. (ஜான் மு. http://www.tamililquran.com/qurandisp.php?start=38). கலாநிதி உஸாமா அல்ஹமவி அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் பொழுது, இஸ்லாமிய சட்டங்கள் முழு மனித வாழ்வையும் உள்ளடக்கியிருக்கின்றது. மனிதனின் அனைத்து நவடிக்கைகளையும் ஒழுங்கு படுத்துகிறது. அந்த வகையில் இமாம்கள் இஸ்லாமிய சட்டங்களை பிரதானமாக இரண்டு பகுதிகளாகப் பாகுபடுத்தினார்கள்.

ஒன்று: அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவை ஒழுங்கு படுத்தக் கூடிய வணக்க வழிபாடுகளுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள்.

இரண்டு: மனிதர்களுக்கிடையிலான உறவுகளை ஒழுங்கு படுத்தக் கூடிய சட்டங்கள். இதனை இன்னும் எட்டு பிரிவுகளாகப் பிரித்தார்கள். அவை:

1. குடும்ப சட்டங்கள்
2. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள்
3. குற்றங்கள், தண்டனைகளுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள்
4. அரசியல் சட்டங்கள்
5. நீதித்துறையுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள்
6. பொருளாதார சட்டங்கள்
7. சர்வதேச சட்டங்கள்
8. ஒழுக்கவியலுடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் (அல்ஹமவி, உ. 2009, பக்.23-24)

மனித உறவுகளை ஒழுங்கு படுத்தக் கூடிய சட்டப் பகுதியில் ஒன்றாக சர்வதேச சட்டம் என்ற ஒரு பகுதியையும் இமாம்கள் தமது சட்ட மரபில் பேசியுள்ளார்கள். எனவே சர்வதேச சட்டம் என்பது இஸ்லாமிய சட்ட மரபைப் பொறுத்தவரையில் அதன் ஆரம்ப காலம் முதலேயே பிரயோகத்தில் இருந்திருக்கிறது. ஆனால் ஆரம்ப கால இமாம்கள், "அஸ்ஸியர்" என்றே இதனை அழைத்தார்கள். இது ஒரு தனித்த கலையாக வளர்ச்சியடைந்த பொழுது, "இல்முஸ் ஸியர்" அதாவது ஸியர் கலை என்றழைத்தார்கள். நவீன காலத்தில் இதனை விளங்கப்படுத்தும் பொழுதே

*சர்வதேச சட்டம் என்ற பிரயோகம் பயன்படுத்தப்பட்டது. நவீன அறிஞர்கள் இதனை வரைவிலக்கணப்படுத்தும் பொழுது, முஸ்லிம் நாடு ஏனைய நாடுகளுடன் யுத்தம், சமாதானம் ஆகிய சூழ்நிலைகளை ஒழுங்கு படுத்துவதற்கும், முஸ்லிம் நாட்டில் முஸ்லிமல்லாதவர்களுடனான உறவை ஒழுங்கு படுத்துவதற்கும் உரிய சட்டங்களையும் யுத்தம் மற்றும் உடன்படிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய சட்டப் பகுதியையும் சர்வதேச சட்டம் என்பது குறிக்கும் என்றார்கள். (அல்ஹமவி, உ. 2009)*

### அஸ்ஸியர் என்ற பிரயோகம்

*ஸியர் என்ற பிரயோகம் மொழியில் ஸீரா என்ற சொல்லின் பன்மைச் சொல்லாகும். ஸீரா என்பது, போக்கு, வழிமுறை, வாழ்வு முறை போன்ற கருத்துக்களில் மொழியில் பயன்படுத்தப்படுகிறது. (ஷுமைரிய்யா. உ. ஜு. 1999, ப.228) பரிபாஷையில் பொதுவாக நபியவர்களுடைய வாழ்வைக் குறிக்கவும், நபியவர்கள் தவிர்ந்த நன்மக்களது வாழ்க்கை வரலாறு என்ற கருத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஸீரா என்பதன் பிரத்தியேகமான கருத்து, நபியவர்களது யுத்தங்கள் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளைக் குறிக்க இமாம்களால் பயன்படுத்தப்பட்டது, ஹதீஸ் தொகுப்புக்களில் கிதாபுல் மகாஸி வஸ்ஸியர் என்ற தனியான ஒரு பகுதியாக ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டதைக் காணலாம். சிலர் ஸியர் என்ற தலைப்பில் வெறுமனே நபியவர்களது யுத்தங்கள் அது சார்ந்த நிகழ்வுகளைத் தொகுக்கும் பணியைச் செய்த போது, மற்றும் சிலர் அதே தலைப்பில் அந்த யுத்தங்களில் இருந்து பெறும் சட்டங்களைத் தொகுத்தனர். கலாநிதி ஹமீதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுவது போல், நபியவர்களது யுத்தங்கள் மற்றும் ஏனைய சமூகங்களுடனான உறவாடல்கள் பற்றிய சட்டங்களைக் குறிக்க ஸியர் என்ற பிரயோகத்தை இமாம் அபூ ஹனீபா அவர்கள் முதன் முதலில் பயன்படுத்தியதாகக் குறிப்பிடுகிறார்கள். அவர் இது பற்றிக் குறிப்பிடுகையில் "ஹி. 2ம் நூற்றாண்டுகளில் இன்று நாம் சர்வதேச சட்டம் என்று பயன்படுத்துகின்ற கருத்தில் ஸியர் என்ற பிரயோகம் புழக்கத்தில் இருந்தது, இமாம் அபூ ஹனீபா அவர்கள் இதனை முதன் முதலில் கையாண்டிருக்கிறார்கள். அவர் தனது சட்ட விளக்க வகுப்புகளில் யுத்தம், சமாதானம் பற்றிய பாடங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். அவரது மாணவர்கள் அவற்றைத் தொகுத்து ஒழுங்கு படுத்திப் பரப்பியுள்ளனர். அவை எம்மிடம் அஸ்ஸியர் அஸ்ஸகீர் மற்றும் அஸ்ஸியர் அல்கபீர் என்ற பெயர்களில் இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷை யானி அவர்களது நூல்களாக வந்து சேர்ந்துள்ளன"' என்கிறார். (ஷுமைரிய்யா. உ. ஜு. 1999, பக். 251-252)*

### அஸ்ஸியர் என்ற கலையின் தோற்றமும் பொருள் பரப்பும்

*அஸ்ஸியர் என்பது ஒரு தனித்த கலையாக இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி அவர்களது அஸ்ஸியர் அஸ்ஸகீர் மற்றும் அஸ்ஸியர் அல்கபீர்*

ஆகிய நூல்களுடனேயே தோற்றம் பெற்றது. இது இரண்டாம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் நிகழ்ந்தது. இமாம் ஷைபானியுடைய சமகாலத்தில் ஸியர் என்ற கலையில் இமாமவர்கள் தவிர இன்னும் பலருடைய ஈடுபாடு காணப்பட்ட போதிலும் இமாம் ஷைபானியுடைய பங்களிப்பு ஏனையவர்களை விடவும் சிறப்புற்று வெளியில் தெரிந்தமைக்கு அவரது இத்துறை பற்றிய தனித்த நூல்கள் அமைந்தமை ஒரு முக்கியமான காரணமாகும். அத்துடன் பிறரது ஆக்கங்களை விடவும் பிந்திய ஆக்கமாகவும் அவர்களது ஆக்கங்களின் இடைவெளிகளை நிரப்பும் வண்ணம், இதன் சட்டப்பரப்புக்கள் மிகவும் விரிவாகப் பேசப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அவரது காலத்தில் இத்துறையில் ஈடுபட்டவர்களில் இமாம் ஆமிருஷ் ஷஅபி, இமாம் அவ்ஸாஈ, இமாம் சுப்யானுஸ் ஸௌரி, இமாம் அல் பஸாரி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களால் இடப்பட்ட அடிப்படை மீதுதான் இமாம் ஷைபானியவர்கள் ஸியர் என்னும் பாரிய கட்டடத்தை எழுப்பினார்கள். குறிப்பாக இமாம் அல்பஸாரி அவர்களும் அஸ்ஸியர் என்ற பெயரிலேயே ஒரு நூலை எழுதியிருந்தார். இந்த நூல் பற்றி இமாம் ஷாபி அவர்களும் புகழ்ந்து பேசியுள்ளார்கள். ஆனால், இந்த நூலின் முழுமையான பகுதிகள் பிற்பட்ட பரம்பரையினர்க்குக் கிடைக்கப் பெறவில்லை, மொரோக்கோவில் அல்பாஸ் வாசிகசாலையில் இந்த நூலின் ஒரு பகுதி மாத்திரம் கண்டெடுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. (ஸுமைரிய்யா. உ. ஜு. 1999, பக்.245-249) ஆனால், இமாம் ஷைபானியின் நூல்கள் ஆதாரபூர்வமான வழிகள் ஊடாக அடுத்த பரம்பரையினர்க்குக் கிடைக்கப் பெற்றமை இத்துறையில் அவரது பங்களிப்பை ஏனைய அனைவரை விடவும் மேம்பட்டதாக மாற்றியது எனலாம்.

அஸ்ஸியர் என்ற கலையை இமாம்கள் ஆரம்ப நாட்களிலேயே வரைவிலக்கணப்படுத்தவில்லை. பிற்பட்ட கால அறிஞர்கள் ஊடாகவே இது நடைபெற்றது. இமாம் ஷைபானியின் அஸ்ஸியர் அல்கபீருக்கு விரிவுரை எழுதிய இமாம் ஸரக்ஸி அவர்கள் ஸியர் என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார். "அஸ்ஸியர் என்பது ஸீரா என்பதன் பன்மைச் சொல்லாகும், இந்த அடிப்படையில்தான் இமாம் ஷைபானியின் நூலுக்கு அஸ்ஸியர் அஸ்ஸகீர் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இது எதிரிகளுடனான முஸ்லிம்களது உறவையும் உடன்படிக்கை செய்தவர்களான திம்மீக்கள் மற்றும் பாதுகாப்பு வழங்கப் பட்டவர்களுடனான உறவையும் மதம் மாறியவர்களுடனான உறவையும் கலகம் செய்பவர்களுடனான உறவையும் பற்றி விளக்குகிறது" என்கிறார். (ஸுமைரிய்யா. உ.ஜு. 1999, ப.232). நவீன காலத்தில் இமாம் அபூ ஸஹ்ரா அவர்கள் ஸியர் என்பதை வரைவிலக்கணப்படுத்தும் பொழுது, "ஸியர் என்பதன் மூலம் யுத்த சட்டங்களும் அதில் அனுமதிக்கப்பட்டவையும் அனுமதிக்கப்படாதவையும், உடன்படிக்கைகள் பற்றிய சட்டங்களும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் பற்றிய சட்டங்களும் அது யாருக்கு அனுமதிக்கப்படுகிறது என்பவையும், கனீமத், நஷ்டயீடு, அடிமைகள் தொடர்பான சட்டங்களும் இவை தவிரவுள்ள யுத்தம் அதன் விளைவுகள் பற்றியுள்ள அனைத்துப் பரப்புக்களும் நாடப்படுகின்றன" "சுருக்கமாகச் சொன்னால் யுத்தத்திலும்

*சமாதானத்திலும் முஸ்லிம்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையிலான சர்வதேச தொடர்புகளைக் குறிக்கும், இதில் பெரும்பாலான பகுதி யுத்தம் தொடர்பானதாக இருந்த போதிலும்" என்கிறார். (அபூ ஸஹ்ரா.மு. முன்னுரை, ஷரஹுஸ்ஸியர் அல்கபீர், 1997, ப.33) இந்த வரைவிலக்கணங்களிலும் சரி இவை தவிர இமாம்கள் பேசிய பல்வேறு வரைவிலக்கணங்களிலும் அஸ்ஸியர் என்பதன் மூலம் முஸ்லிம் நாடு தனது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முஸ்லிமல்லாதவர்களுடனான உறவுகளில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்தே இங்கு முக்கியமாகப் பேசப்படுகிறது. அது தனிமனித தொடர்பாகவோ அல்லது நாடுகளுடனான தொடர்பாகவோ இருக்கலாம். அத்துடன் இது வெளிநாட்டுத் தொடர்புகளை மாத்திரம் பேசவில்லை, மாற்றமாக உள்நாட்டிலும் முஸ்லிமல்லாதவர்களுடனான உறவின் வடிவம் குறித்துப் பேசியிருக்கிறது. மாத்திரமன்றி முஸ்லிம்களில், இஸ்லாமிய வரம்புகளை மீறியவர்கள் தொடர்பிலும் பேசியுள்ளது. இவையனைத்துப் பரப்புக்களையும் உள்ளடக்கிய ஒரு சட்டப்பரப்பையே இங்கு இல்முஸ் ஸியர் என்று இஸ்லாமிய மரபில் இமாம்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். இது தற்பொழுது பேசப்படும் சர்வதேச சட்டம் என்ற பரப்பை விடவும் விசாலமான ஒன்று என்று கருதலாம்.*

### சர்வதேச சட்டத்தின் பிதாமகன்

*சர்வதேச சட்டத்தின் பிதாமகன் யார் என்ற ஒரு வினா? நவீன காலத்தில் குறிப்பாக இருக்கிறது. கி.பி 1645 ல் மரணித்த தற்போதைய நெதர்லாந்தைச் சேர்ந்த குரோட்டியஸ் என்பவரையே பலரும் குறிப்பிடுவர். கலாநிதி முகம்மத் அத்தஸூகி அவர்கள் இது பற்றிக் இவ்வாறு குறிப்பிடுகிறார், ஐரோப்பியர் இந்தப் பெருமையை தமக்குரியதாகவே கருதுகின்றனர். சர்வதேச சட்டத்தின் ஸ்தாபகர் குரோட்டியஸ் என்றே அவர்களது வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் மாத்திரமன்றி இஸ்லாமிய சட்ட வரலாறு தொடர்பில் பரிச்சயமற்ற முஸ்லிம் ஆய்வாளர்களும் அந்தக் கருத்தையே வலியுறுத்துகின்றனர். 1978 ம் ஆண்டில் ஐக்கிய அறபு அமீரகத்தில் நடைபெற்ற ஆறாவது ராஜதந்திரிகள் மாநாட்டில் கலாநிதி முஸ்தபா காமில் யாசீன் அவர்கள் உரையாற்றும் பொழுது, பாரம்பரிய சர்வதேச சட்டம் ஐரோப்பியர்களின் கண்டுபிடிப்பாகும், இது பற்றிய அடிப்படைகள் முதன் முதலில் பதினாறாம் நூற்றாண்டில், கிறிஸ்தவ பாதிரிகளின் ஆதிக்கத்திலிருந்து நாடுகள் விடுபட்டதன் பின்னரே தோற்றம் பெற்றது, என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றைப் பார்க்கும் பொழுது, சர்வதேச சட்ட வரலாற்றில் முஸ்லிம்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இந்தத் துறையில் ஈடுபடவில்லை என்றும் இஸ்லாம் அதற்கான எந்த வழிகாட்டலையும் வழங்கவில்லை என்றும் சொல்வது போல்தான் இருக்கிறது என்று முகம்மத் தஸூகி குறிப்பிடுகிறார்கள். (அத்தஸூகி. மு. 2013,* https://www.alukah.net/culture/0/57183/*) அவர் தொடர்ந்து கூறுகையில், ஆனால் வரலாற்று உண்மைகளும் நவீன ஆய்வுகளும் இந்தத் துறையில், முன்னோடிகள் முஸ்லிம்களே என்பதைக் குறிப்பிடுகின்றன. ஐரோப்பியர்களின்*

அறிவியல் பாரியளவு விருத்தியடைந்திருந்த பொழுதிலும் அவர்கள் முஸ்லிம்கள் இது பற்றி எழுதியவற்றை விடவும் குறிப்பிடத்தக்க புதியவை எதனையும் முன்வைக்கவில்லை இமாம்களின் இது பற்றிய ஆய்வுகளைப் பார்க்கும் பொழுது, ஏனைய அனைத்தையும் விடவும் மனிதாபிமான உணர்வு மிகைத்த சட்டங்களைக் காணக் கூடியதாக உள்ளது என்று குறிப்பிடுகிறார்கள்.

இஸ்லாமிய உலகில் குரோட்டியஸுக்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி அவர்கள் இந்தத் துறையில் முன்னோடியான அறிஞராக இருந்துள்ளார். இவர் கி.பி 804 ல் மரணமடைந்திருக்கிறார். இவரது அஸ்ஸியர் அல் கபீர் இத்துறையில் எழுதப்பட்ட பிரமாண்டமான படைப்பு என்று சொன்னால் அது மிகையானதல்ல. ஏனெனில் இவர் இந்த நூலை பதினாறு பாகங்களில் எழுதி, அதனை ஒரு வண்டியில் வைத்து, கலீபா ஹாரூன் ரஷீதிடம் கொண்டு வந்தார். அதனைப் பார்த்த கலீபா இமாமவர்களை தனது காலத்தின் பெருமை என்று பாராட்டினார். மாத்திரமன்றி தனது பிள்ளைகளை இந்த நூலைக் கற்பதற்காக இமாமவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். (அஸ்ஸரக்ஸி. மு.அ. 1997, ப.4) கலாநிதி மக்பூல் அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் பொழுது, இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி அவர்கள் இத்துறையில் முதலில் பங்களிப்புச் செய்தவர், அவருக்கு முன்னர் இமாம் அவ்ஸாஈ, இமாம் இப்னுல் முபாரக் போன்றோர் இது பற்றி எழுதியிருந்த போதிலும், இமாம் ஷைபானி அவர்கள் இதற்காகத் தனது வாழ்வில் பெரும் பகுதியைக் செலவழித்திருக்கிறார்கள், ஆரம்பத்தில் அஸ்ஸியர் அஸ்ஸகீர் என்ற நூலை எழுதினார், பின்னர் தனது இறுதிக் காலப்பகுதியில் அஸ்ஸியர் அல்கபீர் என்ற நூலை பல பாகங்களில் எழுதினார். அந்தவகையில் இன்று சர்வதேச சட்டம் என்று அழைக்கப்படுகின்ற துறையின் ஆய்வில் முதன் முதலில் ஈடுபட்டது முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி என்று குறிப்பிட முடியும். அவரது நூலை ஆய்வு செய்கின்றவர்கள் நிச்சயமாக இவர் குறித்த தலைப்பில் முழுமையான ஒரு ஆய்வை முன்வைத்திருக்கிறார் என்ற முடிவுக்கு வருவார் என்பதில் சந்தேகமில்லை' ஐரோப்பியர்களது இத்துறை ஆய்வுகள் பதினாறாம் நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்தது. விடோரியா, சோட்டோ போன்றவர்கள் இதில் பங்களித்தனர். இமாம் ஷைபானியின் ஆய்வுடன் ஒப்பிட முடியுமான ஒரு ஆய்வாக குரோட்டியஸின் யுத்தம் சமாதானம் பற்றிய சட்டங்கள் என்ற நூலை அடையாளம் காணலாம். ஆனால் இது இமாம் ஷைபானிக்கு எட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோற்றம் பெற்றது என்கிறார்கள். (மக்பூல், 1986, https://www.asjp.cerist.dz/en/article/24985)

ஐரோப்பியர்கள் நம்புவது போல், நவீன சர்வதேச சட்டத்தின் முன்னோடி குரோட்டியஸ் அல்ல, மாற்றமாக அது முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி என்பதை சி.ஜி. வீரமந்திரி அவர்களும் குறிப்பிடுகிறார்கள். மாத்திரமன்றி குரோட்டியஸ் முஸ்லிம்களின் சர்வதேச சட்டம் பற்றிய ஆய்வுகளில் இருந்து, குறிப்பாக இமாம் ஷைபானியிடமிருந்து சர்வதேச சட்டம் பற்றிய அடிப்படைச்

சிந்தனையைப் பெற்றிருப்பதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதையும் குறிப்பிடுகிறார்கள். மேற்கத்தைய சர்வதேச சட்டங்கள் பற்றிய எந்த ஓர் ஆய்வும், மேலை நாடுகளே சர்வதேச சட்டங்கள் என்ற ஒரு பிரிவை உருவாக்கின சர்வதேச சட்டங்கள் என்பதே மேற்கத்தேய நாடுகளின் ஒரு படைப்பே என்ற கருதுகோள்களின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. ஆனால் இந்த நம்பிக்கை ஆதாரமற்றது, தவறானது என்பதை பல்வேறு ஆதாரங்கள் உணர்த்துவதாகக் குறிப்பிடுகிறார். (வீரமந்திரி.சி.ஜி. 2009, ப.244) மற்றோர் இடத்தில், இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் கழிவதற்கு முன்னரே இஸ்லாமிய சர்வதேச சட்டங்கள் பற்றி எத்தனையோ விளக்கவுரைகள் தோன்றி விட்டன. நூற்றுக்கணக்கான விரிவுரையாளர்கள் சட்டங்களைப் பற்றி விளக்கவுரைகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய விரிவுரையாளர்களில் ஹனபி மத்ஹபின் இமாம் அபூ ஹனீபா, இஸ்லாமிய சர்வதேச சட்டத்தின் பிதா எனப் போற்றப்படும் அஷ்ஷைபானி, ஷாபி மத்ஹபை அமைத்த சட்டமேதை இமாம் ஷாபி போன்றோர் மிக முக்கியமானோர் ஆவர். இஸ்லாமிய சர்வதேச சட்டத்தினைப் பற்றி எழுதப்பட்ட முதல் ஆழமான ஆய்வாக அஷ்ஷைபானி அவர்களின் ஆக்கமே கருதப்படுகிறது. இமாம் ஷாபி அவர்களால் இயற்றப்பட்ட கிதாபுல் உம் என்ற நூலிலும் இஸ்லாமிய சர்வதேசச் சட்டக் கோட்பாடுகள் பல விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மேற்கத்திய சர்வதேச சட்டம் என்ற ஒன்று உருவாவதற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு இஸ்லாமிய நூல்களும் வெளிவந்து விட்டன, என்பது கவனத்திற்குரியதாகும். நவீன சர்வதேச சட்டத்தின் பிதா எனப் போற்றப்படும் குரோட்டியஸ் தெ ஜுர் பெலி அக் பச்சீஸ் எனும் தனது சர்வதேச சட்ட ஆய்வு நூலை 1625ஆம் ஆண்டில்தான் வெளியிட்டார். நாடுகள் தாம் ஒப்பமிட்ட உடன்படிக்கைகளை மதிக்கும், அவற்றின் ஷரத்துக்களை நிறைவேற்றும் என்ற பலமான எதிர்பார்ப்பை அடித்தளமாகக் கொண்டே சர்வதேச சட்டம் என்னும் கட்டிடத்தை குரோட்டியஸ் எழுப்பினார். இதே எதிர்பார்ப்புதான் இஸ்லாமிய சர்வதேச சட்டத்தின் அடித்தளமாக அதன் தோற்றத்திலிருந்து இருந்து வருகிறது என்கிறார். (மேற்படி, பக். 219-220) பிறிதோர் இடத்தில் இஸ்லாமிய உலகிலே ஏற்பட்ட சட்டக் கலையின் வளர்ச்சி பதினேழாம் நூற்றாண்டிலிருந்து மேற்கத்திய நாடுகளிலே ஆரம்பமான சர்வதேச சட்ட மறுமலர்ச்சியோடு தொடர்புடையதா, தொடர்பற்றதா என்ற வினா எழும்பத்தான் செய்கிறது. வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால், மேற்கத்தேய சர்வதேச சட்ட மறுமலர்ச்சி சுயமாகத் தோன்றிய ஒன்றா அல்லது இஸ்லாமிய சட்ட அறிவுப் பெட்டகங்களில் இருந்து கடனாகப் பெற்ற சட்ட அறிவின் தாக்கத்தினால் உந்தப்பட்ட ஒன்றா என்பதே எழும் கேள்வி என்கிறார். அந்த வகையில் குறிப்பாக குரோட்டியஸ் இஸ்லாமிய சர்வதேச சட்ட ஆய்வுகளினால் தாக்கமடைந்திருக்கும் சாத்தியப்பாடு இருக்கிறது என்பதற்கு தர்க்க ரீதியானதும் வரலாற்று ரீதியானதுமான சுமார் பத்தொன்பது சாத்தியாதாரங்களை முன்வைக்கிறார். (மேற்படி, பக். 246-257) அவை குறித்து இங்கு விரிவாகப் பேசவில்லை ஆனால் ஒவ்வொன்றும் மிகவும் தர்க்கபூர்வமானவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனவே சர்வதேச சட்டத்தின் பிதாமகன் குரோட்டியஸ்

அல்ல. மாற்றமாக இஸ்லாமிய உலகில் வாழ்ந்த மாபெரும் சட்ட மேதை இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

நவீன கால பல ஐரோப்பிய அறிஞர்கள் இந்த உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர். இந்தப் பின்புலத்தில்தான் 1932 ம் ஆண்டு பிரான்ஸில் சர்வதேச சட்டத்திற்கான ஷைபானி அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த முன்மாதிரியைப் பின்பற்றிய ஐரோப்பிய, அரேபிய, பாகிஸ்தானிய அறிஞர்கள் ஒன்றிணைந்து, ஜேர்மனியின் கோட்டிங்கன் நகரில் சர்வதேச சட்டத்திற்கான ஷைபானி அமைப்பு என்னும் மற்றொரு அமைப்பை உருவாக்கினர். இதன் முதலாவது தலைவராக எகிப்தின் சட்ட மேதை அப்துல் ஹமீத் பதவி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த நிறுவனத்தின் அறிமுகக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர் ”ஐரோப்பிய ஆய்வாளர்கள் அஸ்ஸியர் அல் கபீர் என்னும் நூலின் ஆசிரியரான இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி என்ற ஒரு பெயரை அறிந்து கொண்டு விட்டனர். இது 1825 ம் ஆண்டு இந்த நூல் துருக்கி மொழிக்குப் பெயர்க்கப்பட்டதன் பின்னரே நடைபெற்றது. அப்பொழுது, ஒஸ்ட்ரியாவின் பிரபலமான வரலாற்றுத் துறை ஆய்வாளர் ஹமோபன் பெர்க்ஸ்டல் என்பவர் இமாம் ஷைபானியவர்களை முஸ்லிம் குரோட்டியஸ் என்று அழைத்தார். இஸ்லாமிய சட்டவியல் பற்றி தொடர்ந்து வந்த ஆய்வுகள் இவரது கருத்தை மேலும் வலுவூட்டின. அந்தவகையில் இமாம் ஷைபானியவர்கள் சர்வதேச சட்ட முன்னோடிகளுள் முதன்மை இடத்தைப் பெறத் தகுதியானவர் என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டின, அந்தப் பின்னணியில்தான் பலர் இவரது ஆய்வுகளைக் கற்கும் இடமாக ஒரு அமைப்பை உருவாக்குவதன் அவசியத்தை உணர்ந்தனர்” என்று குறிப்பிட்டுள்ளனர். (கவாதிரி.மு. 2015, https://portal.arid.my/en/Publications/Details/16509) பிற்பட்ட காலத்தில் இந்த நிறுவனத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தவராக ஈராக்கின் மஜீத் கதூரி என்ற சட்டவியல் அறிஞர் கருதப்படுகிறார். இதன் தொடராகவே யுனெஸ்கோ நிறுவனமும் இமாம் ஷைபானியுடைய அஸ்ஸியர் அல்கபீர் என்ற நூலை பிரான்ஸ் மொழிக்குப் பெயர்த்ததைக் காணலாம்.

## சர்வதேச சட்டத்தில் இமாம் ஷைபானியின் பங்களிப்பு

### இமாம் ஷைபானியின் சர்வதேச சட்ட ஈடுபாட்டின் பின்புலம்

இமாம் ஷைபானி அவர்கள் சர்வதேச சட்டம் அல்லது அக்காலத்தில் அஸ்ஸியர் என்று அறிமுகமான இந்தத் துறையில் ஈடுபாடு காட்டுவதற்கு சில காரணிகள் பின்புலமாக அமைந்திருந்தன. அவை குறித்து சுருக்கமான ஒரு பார்வையைச் செலுத்துவது இந்தப் பத்தியின் நோக்கமாகும்.

1. அஸ்ஸியர் துறை ஈடுபாடு கொண்ட இமாம் ஷைபானியின் ஆசிரியர்கள் : இமாம் ஷைபானியின் முக்கியமான ஆசிரியர்களாக இமாம் அபூ ஹனீபா, இமாம் அபூ யூசுப், இமாம் அவ்ஸாஈ, இமாம் சுப்யானுஸ் ஸௌரி

போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் இந்தத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாவர். இமாம் அபூ ஹனீபாவிடம் ஸியர் பற்றி தனியாக நூல்கள் இருந்தமைக்கான குறிப்பான ஆதாரங்கள் இல்லை. ஆனால் அவரது சட்ட விளக்கங்களில் இந்தத் துறைக்குத் தனித்த முக்கியத்துவம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. ஏலவே குறிப்பிடப்பட்டது போல் முஸ்லிமல்லாதவர்களுடனான உறாவாடல்கள் பற்றிய சட்டப் பரப்பைக் குறிக்க ஸியர் என்ற பிரயோகம் இமாம் அபூ ஹனீபாவிடமே முதலில் காணப்பட்டிருக்கிறது. அது போல் இமாம் அவ்ஸாஈயும் இது பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார். ஆனால் அந்த நூலும் தனியாக வரலாற்றில் கிடைக்கப் பெறவில்லை, ஆனால் இமாம் அபூ யூசுபின் அர்ரத் அலா ஸியரில் அவ்ஸாஈ என்ற நூலில் அவர் வழங்கும் மறுப்புக்களை வைத்து நோக்குகின்ற பொழுது, இமாம் அபூ ஹனீபாவின் ஸியர் பற்றிய சட்டவிளக்கங்களுக்கு அவர் வழங்கிய மாற்றுக் கருத்துக்களின் தொகுப்பாகவே அது அமைந்திருக்க முடியும் என்று புரிந்து கொள்ள முடிகிறது. அதற்கு ஹனபி பாரம்பரிய அடிப்படைகளில் நின்று இமாம் அபூ யூசுப் மறுப்புச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இமாம் அபூ ஹனீபா, இமாம் அபூ யூசுப், இமாம் அவ்ஸாஈ ஆகிய மூவரினதும் ஸியர் துறை ஈடுபாடு இந்த நூலின் மூலம் வெளிப்படுவதைக் காணலாம். அது போல், இமாம் ஷைபானி ஆரம்பமாக எழுதிய அஸ்ஸியர் அஸ்ஸகீர் என்ற நூல் இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் அபூ யூசுப் ஆகியோரது ஸியர் பற்றிய பத்வாக்களின் தொகுப்பு என்றுதான் இமாம்கள் விளங்கப்படுத்தியுள்ளனர். எனவே இமாம் ஷைபானியடைய ஆசிரியர்களின் ஸியர் துறை சார்ந்த ஈடுபாடு, இமாவர்களிடமும் இந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியிருக்கிறது என்று நம்பலாம். அவர்கள் போட்ட விதையின் மீதுதான் ஷைபானி என்ற விருட்சம் வளர்ந்திருக்கிறது.

2. இமாம் ஷைபானியின் அல்புரூக் என்னும் வேறுபாட்டுக் கலை ஈடுபாடு : அல்புரூக் என்ற பெயரில் பிற்பட்ட காலத்தில் அறிமுகமான இந்தக் கலை, ஆரம்ப நாட்களில் வெளிப் பார்வையில் ஒரே மாதிரியானவையாகத் தெரிகின்ற இரு சட்ட விவகாரங்களுக்கு மத்தியில் உள்ள நுணுக்கமான வேறுபாடுகளைக் கண்டு கொள்ளுதல் என்ற எல்லையில் கையாளப்பட்டது. இதனை அல்புரூக் அல்பிக்ஹிய்யா என்றழைத்தனர். அதனை இமாம்கள் பின்வருமாறு வரையவிலக்கணப்படுத்தினர், ஒரே மாதிரியானவையாக இருக்கும் இரண்டு சட்ட விவகாரங்கள் மத்தியில் உள்ள வேறுபாடுகளை அறிந்து, அதனடிப்படையில் அவற்றின் சட்ட முடிவுகளையும் வேறுபடுத்துதல் என்றனர். (ஸாஇத், 2013, ப.266) பிற்பட்ட காலங்களில் இது பற்றிய தனித்த ஆக்கங்கள் தோற்றம் பெற்றன. இமாம் ஷிஹாபுத் தீன் கராபி இதில் முதன்மையான ஒருவர். இந்தக் கலை சார்ந்த ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இமாம் ஷைபானியையும் அடையாளம் காணலாம். இந்த

ஈடுபாட்டின் விளைவாக, அவரால் சர்வதேச சட்டம் தொடர்பிலான நுணுக்கமான வேறுபாடுகளை இனங்கண்டு கொள்ள முடியுமாக இருந்துள்ளது. இஸ்லாமிய பூமி மற்றும் இஸ்லாமிய பூமியல்லாதவற்றிற்கான சட்ட வேறுபாடு, திம்மிக்களுக்கும் உடன்படிக்கையாளருக்கும் இடையிலான சட்ட வேறுபாடுகள் போன்ற பல இடங்களில் இந்தக் கலையின் பிரயோகத்தை அவதானிக்கலாம். (கவாதிரி. மு. 2015, https://portal.arid.my/en/Publications/Details/16509) எனவே ஏனையவர்களை விடவும் நுணுக்கமான சட்டங்கள் மூலம் சர்வதேச சட்டத்துறையில் இமாம் ஷைபானி வேறுபட்டு நின்றதைக் காணலாம். இது அவரது சிறப்பம்சங்களில் ஒன்று.

3. அஹ்லுல் ஹதீஸ், அஹ்லுர் (u/ap) என்ற இருவகை சட்ட சிந்தனைப் பள்ளிகளுடனும் இருந்த சமநிலையான தொடர்பு : அஹ்லுல் ஹதீஸ் என்போர், சட்ட விவகாரங்களை நேரடியான சட்டவசனங்களை மையப்படுத்தி அணுகியவர்களாவர். அஹ்லுர் (u/ap) என்போர், சட்ட விவகாரங்களை சட்டவசனங்களின் காரணங்கள், நோக்கங்கள், பின்புலங்களில் நின்று அணுகியவர்களாவர். இதில் முதல் வகையினர் ஹிஜாஸ் என்னும் மக்கா, மதீனா போன்ற பகுதிகளில் வாழ்ந்த அறிஞர்கள். இரண்டாம் வகையினர் கூபாவை மையப்படுத்தி வாழ்ந்த அறிஞர்கள். இமாம் ஷைபானியவர்கள் அடிப்படையில் அஹ்லுர் (u/ap) பிரிவைச் சேர்ந்தவர் என்றிருந்த போதிலும் மதீனாவில் சுமார் மூன்று வருடங்கள் இமாம் மாலிகிடமும் அங்கு வாழ்ந்த வேறு பல அறிஞர்களிடமும் கற்றதன் அடிப்படையில் அஹ்லுல் ஹதீஸ்களது அணுகுமுறை குறித்த தெளிவுடனும் காணப்பட்டார்கள். இவற்றிற்கிடையில் அபாரமான சமநிலையை தனது பிக்ஹில் வெளிப்படுத்தியவராகவும் இமாம் ஷைபானியை அடையாளம் காணலாம். இமாம் கத்தாபி அவர்கள் குறிப்பிடுவது போல் இந்த இரண்டு அணுகுமுறைகளும் ஒன்றின் பால் மற்றையது தேவையுடையதாகும். ஒன்றில் மாத்திரம் தனித்து நின்று முடிவுகளை நோக்கிச் செல்வது சிரமமானது. ஏனெனில் ஹதீஸ் என்பது அடிப்படை என்றால் அதனைப் புரிவதற்கான பகுத்தறிவு அணுகுமுறை அதன் மீது கட்டப்படும் கட்டடமாகும். அடிப்படை இன்றி கட்டடம் வீழ்ந்து விடும் அபாயம் உடையது. கட்டடம் இன்றிய அடிப்படையும் காடு வளர்ந்து பாழடைந்து விடும் என்றார்கள். இந்தச் சமநிலையை இமாமவர்கள் சிறந்து பேணினார்கள், இரண்டு பள்ளிகளுக்கிடையிலும் நெருக்கத்தைக் கொண்டு வந்தார்கள் (கவாதிரி.மு, 2015) இந்த அணுகுமுறைதான் அவரை சர்வதேச சட்டம் என்ற ஒரு பரந்த பரப்பிற்குள் தைரியமாய் நுழைய வழியேற்படுத்தியது. ஹதீஸ்கள் இன்றி இந்தக் கலையில் நுழைவதுவே சாத்தியமற்றது, அந்த ஹதீஸ்களில் இருந்து நடைமுறைக்குரிய சட்டங்களைப் பெறுவதற்கு காரண நோக்கத் தேடல் இன்றியமையாதது. இமாமவர்கள் இந்த இரண்டு சிந்தனைப் பள்ளிகளுக்கும் மத்தியில் சமநிலை பேணினார் என்பதற்கான மிகச் சிறந்த உதாரணமாக, இமாமவர்கள் அஸ்ஸியர் அல்கபீர் என்ற அவரது நூலில்,

வேறுபட்ட கருத்துக்களில் ஒன்றைப் பலமானதாகக் கருதுவதற்கு கையாண்ட வழிமுறை முக்கியமானதாகும். அதாவது, ஈராக்வாசிகள், ஷாம் பிரதேசத்தவர்கள், ஹிஜாஸ் பிரதேசத்தவர்கள் இவர்களில் இரண்டு தரப்பினர் ஒரு குறித்த ஹதீஸின் அல்லது கருத்தின் ஆதாரபூர்வத் தன்மையில் உடன்படுகிறார்கள் என்றிருப்பின் அதனை ஆதாரமாகக் கொள்வார். தனித்த ஒரு தரப்பினரது கருத்தை மாத்திரம் எடுப்பதில்லை என்ற நிலைப்பாட்டைக் கடைபிடித்தார். இந்த அணுகுமுறை அடிப்படையில் அஹ்லுர் ர/யியான ஹனபிப் பாரம்பரியத்தில் ஆதாரம் பெறும் முறைமையல்ல, அதாவது பெரும்பானமையை அடிப்படையாக வைத்து ஒரு கருத்தை ஆதாரபூர்வமானதாகக் கருத மாட்டார்கள், அதிலும் குறிப்பாக நபியவர்களது யுத்தங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை அந்த அடிப்படையில் ஏற்க மாட்டார்கள். மாற்றமாக இதற்கு வேறு வகையான சில நிபந்தனைகளை வைத்திருந்தார்கள். இமாம் ஷைபானி இதற்கு மாற்றமாக தனது அணுகுமுறையை அமைத்திருந்தார். (கவாதிரி.மு, 2015) இது அவர் முடிந்தவரை இரண்டு சிந்தனைப் பள்ளிகள் மத்தியிலும் சமநிலை காணுவதற்கு எடுத்த முயற்சி என்று கூறலாம்.

4. இமாம் ஷைபானியின் நீதித்துறை அனுபவமும் கலீபாக்களுடனான நெருக்கமும் : இமாம் ஷைபானியவர்கள் ரிக்கா, கூபா போன்ற நகரங்களின் நீதிபதியாக செயற்பட்டது போல், கலீபா ஹாரூன் ரஷீத் இமாமவர்களை பிரதம நீதியரசராகவும் நியமித்திருந்தார். இந்த அனுபவம் அவரிடத்தில் கோட்பாட்டு அறிவை செயற்பாட்டு அறிவாக பரிமாணம் அடையச் செய்ய உதவியது. அதிகம் செயல் சார்ந்து, நடைமுறை சார்ந்து சிந்திக்கும் புதிய வாயிலை அவரில் திறந்து விட்டது. அத்துடன் கலீபாவுடன் இருந்த நெருக்கமான உறவு காரணமாக நாட்டின் யுத்தம், சமாதானம், உமன்படிக்கைகள் போன்ற விவகாரங்களில் அவருக்கு நேரடி பங்கு பற்றல் இருந்தது. (கவாதிரி.மு, 2015) இவையனைத்தும் அவரில் சர்வதேச சட்டங்கள் குறித்த பிரக்ஞையை அதிகரிப்பதில் பெரும் பங்காற்றியிருக்கின்றன எனலாம்.

### இமாம் ஷைபானியின் சர்வதேச சட்டப் பங்களிப்பு

சர்வதேச சட்டத்தில் இமாம் ஷைபானியின் பங்களிப்புகள் உண்மையில் மிகவும் விசாலமானவை, இவை பற்றி பல கோணங்களில் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆனால் இந்த இடத்தில் முக்கியமான இரண்டு பரப்புக்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது பொருத்தமானது.

1. சர்வதேச சட்டம் தொடர்பான விதிகள்.
2. சட்டங்கள் மற்றும் சட்டப் பரப்புக்களை நுணுக்கமாக வேறுபடுத்தியமை.

## சர்வதேச சட்டம் தொடர்பான விதிகள்

*இமாம் ஷைபானியவர்களது சர்வதேச சட்டம் பற்றிய கருத்தாக்கங்களில் சர்வதேச சட்டங்கள், உறவுகள் குறித்த பல்வேறு விதிகளை அவதானிக்கலாம். அவற்றுள் சில விதிகள் நேரடியாகப் பேசப்பட்டுள்ளன, மற்றும் சில நேரடியாகவன்றி சட்டங்களைப் பேசுகின்ற போக்கில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு விதிகள் என்பது, ஒரே வகையான பல பிரச்சினைகளுக்கான ஒரு பொதுச் சட்டத்தைக் குறிக்கும். இந்தப் பொதுச் சட்டத்தைக் கையாண்டு அதனையொத்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறான விதிகள் சிலவற்றை அடுத்து நோக்குவோம்.*

1. *சர்வதேச தொடர்புகளின் அடிப்படை சமாதானமாகும் யுத்தம் அல்ல : இந்த விதியைத்தான் அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது, "நம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் முழுமையாக சமாதானத்தில் நுழைந்து கொள்ளுங்கள், ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள், அவன் உங்களுக்குத் தெளிவான எதிரியாகும்" (பகரா - 208) என்கிறது. (ஜான் மு.* http://www.tamililquran.com/qurandisp.php?start=2*) இந்தப் பின்புலத்தில் யுத்தம் செய்வதற்கான மூன்று காரணங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒன்று, முஸ்லிம்கள் மீதான அத்துமீறல் நடைபெறுதல். இரண்டு, அநியாயம் இழைக்கப்பட்டவர்களுக்கு உதவுதல், மூன்று, தற்பாதுகாப்பு, இதில் தனது உயிர், மானம், தாயகம் என அனைத்தும் அடங்கும். (பரீதா மி. 2010,* https://www.asjp.cerist.dz/en/article/12751*)*
2. *யுத்த நிர்ப்பந்தம் என்ற விதி : அதாவது யுத்தம் என்பது அடிப்படையானது அல்ல, தவிர்க்க முடியாத ஒரு சூழலில் ஏற்படும் ஒரு நிர்ப்பந்தமாகும். எனவே எதிரியின் மீது ஆதிக்கம் செலுத்தும் எல்லையில்தான் அது அனுமதிக்கப்படுகிறது. அதனைத் தாண்டிய எந்த அழிவுகளையும் செய்ய முடியாது என்பது இந்த விதியின் மூலம் விளங்கப்படுத்தப் படுகிறது. இந்த விதியின் கிளை விதிகளாகவும் மற்றும் சில விதிகளை இமாம் ஷைபானி விளங்கப்படுத்தியுள்ளார்கள். (பூகர்கப் அ.ம.* http://fac-sciences-islamiques-ar.univ-batna.dz/index.php/2019-02-10-11-05-47?layout=edit&id=249*)*
3. *போராளியின் மீது மாத்திரமே யுத்தம் பிரயோகிக்கப்படும் : இது முன்னைய விதியான யுத்த நிர்ப்பந்த விதியின் கிளை விதிகளில் ஒன்றாகும். எதிரிகள் தரப்பில் இருக்கும் சிவிலியன்களைக் கொல்வதற்கான அனுமதி கிடையாது. இங்கு சிவிலியன்கள் என்போர், யுத்தத்தில் நேரடியாகவோ அல்லது சட்ட ரீதியாகவோ பங்கு கொள்ளாதவர்களாவர். சட்ட ரீதியாக பங்கெடுக்காதவர்கள் என்பது, அவர்கள் பணத்தாலோ, பொருளாலோ அல்லது பிரச்சாரத்தாலோ அல்லது யுத்தத்திற்கு ஆதரவாக ஏதேனும் ஒரு வகையில் உதவி செய்யாதவர்களைக் குறிக்கும். அந்தவகையில் பெண்கள், ஊனமுற்றவர்கள், நோயாளிகள், கை, கால்கள் துண்டிக்கப்பட்டவர்கள், மயக்கமுற்றவர்கள், சிறுவர்கள், முதியவர்கள், மடங்களில் வசிக்கும் துறவிகள், விவசாயிகள்*

போன்றவர்கள் எவரையும் கொலை செய்ய முடியாது. ஆனால் இவர்கள் ஏதேனும் ஒரு வடிவில் யுத்தத்தில் பங்கெடுத்தால் இவர்களை கொலை செய்வது யுத்த நிர்ப்பந்தம் என்ற பொதுவிதியில் அனுமதிக்கப்படுகிறது. (பூகர்கப் அ.ம.)

4. சித்திரவதை தடுக்கப்பட்டது என்ற விதி : இதுவும் யுத்த நிர்ப்பந்தம் என்ற விதியின் கிளை விதிகளில் ஒன்றாகும். வழமையான தண்டனையின் எல்லையை மீறிய ஒரு நிலை என இமாம்கள் இதனை விளங்கப்படுத்தினார்கள். அதாவது, தீயினால் எரித்தல், வயிற்றைப் பிளத்தல், காதுகள், மூக்கு, நாவு போன்றவற்றைத் துண்டித்தல், கண்களைப் பிடுங்குதல் போன்ற பல விடயங்களைக் குறிக்கும். இது போன்ற ஒரு விடயம் நேரடி மோதலின் போது நிகழ்வதை இஸ்லாம் தடை செய்யவில்லை, ஆனால் யுத்த முடிவில் அல்லது இடையில் இதனைத் தடைசெய்தது. (பூகர்கப் அ.ம.)

5. யுத்தம் தந்திரம் என்ற விதி : இது ஒரு விடயத்தை மறைத்து வேறொன்றை வெளிப்படுத்துதலாகும். இதன் மூலம் எதிரியை எதிர்பாராத சந்தர்ப்பத்தில் மிகைப்பது அல்லது தமது தரப்பிற்கு நம்பிக்கையூட்டுவது போன்ற நோக்கங்களில் நடைபெறலாம். இதனை யுத்த சமயங்களில் மாத்திரமே பயன்படுத்த முடியும். சமாதான மற்றும் ஒப்பந்த காலங்களில் கையாள முடியாது. (பூகர்கப் அ.ம.)

6. எதிரிகளின் தூதுவர்கள் பாதுகாப்பு என்னும் விதி : யுத்த சமயத்தில் எதிரிகளின் தூதுவர் வந்தால் அவர் தனது பொறுப்பை நிறைவேற்றிச் திரும்பிச் செல்லும் வரையில் அவர் பாதுகாக்கப்படல் வேண்டும். அவர் முன்உடன்பாடுகள் எதுவும் இல்லாத நிலையில் வந்தாலும் அதே பாதுகாப்பும் கௌரவமும் வழங்கப்படல் வேண்டும். (பரீதா மி. 2010)

7. தலைவரின் கட்டளை யுத்த சட்டங்களை மீறுவதற்கு அனுமதிக்காது : ஒரு படை யுத்தத்தில் நுழைந்தால், அவர்களது தளபதியின் கட்டளை பயனுள்ளதாக உள்ள போது கட்டுப்படுவது கட்டாயமானது. ஆனால் தலைவரது கட்டளை அழிவைக் கொண்டு வருகிறது எனின் அதற்குக் கட்டுப்படக் கூடாது. (பூமதீன் ப. 2011, https://www.asjp.cerist.dz/en/article/51553)

## சட்டங்கள் மற்றும் சட்டப் பரப்புக்களை நுணுக்கமாக வேறுபடுத்தியமை

ஏலவே இமாம் ஷைபானியுடைய அல்புரூக் அல்பிக்ஹிய்யா என்னும் சட்ட வேறுபாடுகள் என்ற துறை சம்பந்தமான ஈடுபாட்டை விளக்கியிருந்தோம். இந்தத் துறை அவருக்கு சர்வதேச சட்டங்கள் தொடர்பான விளக்கத்தில் சட்டங்களுக் கிடையில் நுணுக்கமான வேறுபாடுகளைக் கொண்டு வருவதற்குத் துணை செய்திருக்கிறது. சர்வதேச சட்டம் பற்றி இவரது சமகாலத்தவர்களை விடவும் இமாம் ஷைபானியவர்கள் வேறுபட்டு நின்ற இடங்களில் இதுவும் முக்கியமான ஒன்றாகும். இதற்கான சில உதாரணங்களை அடுத்து நோக்குவோம்.

1. யுத்தத்தில் கொல்லப்படுவதற்குரியவர்கள், கொல்லப்பட முடியாதவர்களை வேறுபடுத்தல் : இமாம் ஷைபானியவர்கள் இதனை இரண்டு காரணங்களின் அடிப்படையில் வேறுபடுத்தியிருப்பதைக் காணலாம்.
   - யுத்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கு கொள்பவர் கொல்லப்படுவதற்குரியவர். அவ்வாறில்லாதவர்கள் கொல்லப்பட முடியாதவர்கள். இது குறித்து ஏலவே விதிகளிலும் விளக்கியுள்ளோம்.
   - குப்ர் என்பது அல்லாஹ்விடத்தில் குற்றங்களில் மிகப் பெரியது என்றிருந்த போதிலும், அது அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்கும் இடையில் இருக்கின்ற ஒரு விவகாரம், அதற்கான கூலி மறுமை நாளுக்குரியதாகும், உலகில் ஒரு தண்டனை வழங்கப்படுவதாக இருப்பின் அது மனிதர்களுக்கு ஒரு நலனை அல்லது பயனைக் கொண்டு வரக் கூடியதாக இருக்க வேண்டும். குப்ர் என்ற காரணத்திற்காக எவரும் கொலை செய்யப்பட மாட்டார், மாற்றமாக யுத்தம் என்ற தீங்கை தடுப்பதற்காகவே கொல்லப்பட முடியும். குப்ரில் இருக்கும் ஒருவர் யுத்தத்தில் பங்கு கொள்ளாதவரையில் அவரைக் கொலை செய்ய முடியாது. (பூமதீன் ப. 2011, பக்.70-71) இதன் மூலம் குப்ர் என்ற காரணத்திற்காக மாத்திரம் யுத்த சமயமாக இருப்பினும் ஒருவர் கொல்லப்பட முடியாது என்கிறார்.
2. பேரழிவை ஏற்படுத்தும் வழிமுறைகளை யுத்தத்தில் பயன்படுத்த முடியுமான சந்தர்ப்பங்களும் முடியாத சந்தர்ப்பங்களும் : யுத்தத்தில் எதிரிகளின் எதிர்ப்பை இல்லாமல் செய்வதுதான் நோக்கம் மாற்றமாக எதிரிகளைக் கொல்வது என்பதும் யுத்தத்தில் நோக்கமல்ல, எதிர்ப்பை இல்லாமல் செய்வதற்காக அவர்களது கூடாரங்களைத் தீமூட்டல், நீரில் நஞ்சு கலத்தல் அல்லது அசுத்தப்படுத்தல் போன்ற பேரழிவை ஏற்படுத்தும் வழிமுறைகள் ஊடாக அவர்களது எதிர்பை இல்லாமல் செய்து அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்றிருப்பின் மாத்திரம் அந்த வழிமுறைகளைப் பயன்படுத்தலாம். இந்த விளைவைத் தராது என்றிருக்கின்ற பொழுது, இந்த வழிமுறைகளைப் பயன்படுத்த முடியாது. அதுபோல், பேரழிவு வழிமுறைகள் மூலம் கொல்லப்பட முடியாதவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதுவே அடிப்படை, எனினும் எதிரிகள் அவர்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலை இருப்பின் அவர்கள் பாதிக்கப்படுவது கருத்தில் கொள்ளப்பட மாட்டாது, இதே சட்டம்தான் முஸ்லிம் கைதிகளைக் கேடயமாக பயன்படுத்துகின்ற பொழுதும் கடைபிடிக்கப்படும். (பூமதீன் ப. 2011, பக் 72-73)
3. முஸ்லிம் நாட்டில் வாழும் திம்மீக்கள் எனப்படும் முஸ்லிமல்லாதவர்களுக்கான சட்ட வேறுபாடு : முஸ்லிம் நாட்டில் வாழும் இவர்களுக்கான அடிப்படைச் சட்டம் முஸ்லிம்களுக்குரிய உரிமைகளை அவர்களும் பெறுவர். முஸ்லிம்களுக்குரிய கடமைகள் அவர்களுக்கும் உரியவை என்பதாகும்.

ஆனால் அவர்களது மத நம்பிக்கையின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட அல்லது தடுக்கப்பட்ட ஒன்றில் இந்த விதி செல்லுபடியாக மாட்டாது. இவை மற்றொரு விதியான, அவர்கள் மார்க்கமாகக் கடைபிடிக்கும் விடயங்களை அவர்களிடமே விட்டுவிடப்படல் வேண்டும் என்ற விதியால் ஆளப்படும். அந்த வகையில் அவர்களது மத நம்பிக்கைப் படி பன்றியிறைச்சி சாப்பிடுதல், மதுபானம் அருந்துதல் என்பன ஹலாலாக்கப்பட்டிருப்பின் அவற்றை அவர்கள் மேற்கொள்வது தடுக்கப்படமாட்டாது. அவ்வாறு தடுப்பது அவர்களது மத சுதந்திரத்தில் தலையிடுவதாகும், ஆனால் அவர்கள் முஸ்லிம் ஒருவரை மது அருந்தத் தூண்டினால் அல்லது ஏதேனும் சேதங்கள் விளைவித்தால் அந்தத் தூண்டுதலுக்காகவும் சேதத்திற்காகவும் தண்டிக்கப்படுவர் மது அருந்தியமைக்காக அல்ல. அது போல் ஒரு முஸ்லிம் அவர்களது பன்றியைக் கொலை செய்து, மதுபானத்தைக் கீழே ஊற்றி விட்டால் அதற்கு அவர் நஷ்டயீட்டை வழங்குவது கட்டாயமானதாகும். ஆனால் ஒரு முஸ்லிம் பன்றியை அல்லது மதுபானத்தை வைத்திருந்து, அதனை முஸ்லிம் அல்லாதவர் சேதப்படுத்தினால் அதற்கு அவர் நஷ்டயீடு வழங்க அவசியமில்லை. காரணம் அது முஸ்லிமுக்கு ஹலாலான சொத்து அல்ல என்பதாகும். (மக்பூல், 1986, ப.63)

4. முஸ்லிம் நாட்டுக்கு வரும் முஸ்லிமல்லாத நாட்டைச் சேர்ந்தவருக்கு வழங்கப்படும் பாதுகாப்புச் சட்ட வேறுபாடு : இஸ்லாமிய ஸியர் சட்டத்தில் அக்துல் அமான் என்று இது அழைக்கப்படும். இது, யுத்தம் நடைபெறுகின்ற எதிரி நாட்டில் இருந்து அல்லது வேறு உடன்படிக்கை நாடுகளில் இருந்து வருகின்ற ஒருவருக்கு அவரது பணியை முடித்து திரும்பிச் செல்லும் வரையில் வழங்கும் பாதுகாப்பு ஒப்பந்தமாகும். இவருக்கும் திம்மி எனப்படும் முஸ்லிம் நாட்டில் வாழும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் சட்ட ஏற்பாடுகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன. இவர் அதி கூடிய அளவில் ஒரு வருடம் மாத்திரமே முஸ்லிம் நாட்டில் தங்கலாம். அதற்கு மேலதிகமாகத் தங்கினால் அவர் வெளியேற்றப்பட மாட்டார், மாற்றமாக அவர் மீது திம்மீக்களுக்குரிய சட்டங்கள் பிரயோகிக்கப்படும். இவ்வாறு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் தங்கியிருக்கும் ஒருவர், ஒரு முஸ்லிமைக் கொலை செய்தாலோ அல்லது வழிபறிக் கொள்ளையில் ஈடுபட்டாலோ அல்லது ஒரு முஸ்லிம் பெண்ணையோ திம்மி பெண்ணையோ பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினாலோ அவரது பாதுகாப்பு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட மாட்டாது. அவருக்கு முஸ்லிம் நாட்டுச் சட்டத்தின் படி தண்டனை வழங்கப்படவும் மாட்டாது. மாற்றமாக அவருக்கு அவரது நாட்டுச் சட்டத்தின் படியே தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் வேறு இமாம்களிடம் மாற்றபிப்ராயம் இருக்கின்றது. அதாவது இச்சந்தர்ப்பத்தில் அவரது பாதுகாப்பு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாக மாறிவிடுவதுடன் அவருக்கு முஸ்லிம் நாட்டுச் சட்டத்தின் படி தண்டனை வழங்கப்பட

வேண்டும் என்பர். ஆனால் ஷைபானி தரப்பினர் அவர் திம்மியல்ல, பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இருப்பவர். எனவே திம்மிக்குரிய சட்டங்களை அவர்களில் பிரயோகிக்க முடியாது என்பர். (மக்பூல், 1986, ப.62) அத்துடன் ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாத நாட்டில் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இருக்கும் பொழுது, குற்றமிழைத்தால் முஸ்லிம் சட்டப்படியே அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய சட்ட அறிஞர்களது கருத்தாகும். இந்த சட்டத்துடன் பாதுகாப்பிலிருப்பவரது சட்டத்தை ஒப்பிட்டால் அவரும் அவரது நாட்டு சட்டத்தின் படி தண்டிக்கப்படுவதே நியாயமானது. ஆனால் இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது என்பது உண்மை.

5. தாருல் ஹர்ப்பை வேறுபடுத்தல் : முஸ்லிம் ஆட்சியாளர் இல்லாமையும் முஸ்லிம்களுக்கு அதிகாரம் இல்லாமையும் என்ற காரணத்தினால் மாத்திரம் ஒரு நாடு தாருல் ஹர்ப் என்று அழைக்கப்பட மாட்டாது. மாற்றமாக அதற்கு மூன்று நிபந்தனைகள் காணப்படல் வேண்டும் என்பர். (மக்பூல், 1986, ப.60)

    - இஸ்லாமிய சட்டங்களை அமுல்படுத்தவதற்கான தடை காணப்படல் வேண்டும்.
    - முஸ்லிம் நாட்டின் மீது அத்துமீறும் அபாயம் இருக்கிறது அல்லது முஸ்லிம் நாட்டுக்கு யுத்த அச்சுறுத்தல் இருக்கிறது என்று கருதப்படக் கூடியதாக இருத்தல்.
    - முஸ்லிம்களுக்கு முஸ்லிம் நாடுகள் வழங்கும் பாதுகாப்பை அவர்களது நாடுகளில் வழங்காதிருத்தல்.

இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒரு நாட்டையே தாருல் ஹர்ப் என்ற பட்டியலில் அடக்கப்படும். ஏனெனில் தாருல் ஹர்ப் என்பதன் அடிப்படைப் பொருள் அது எதிரி நாடு என்பதாகும். இஸ்லாத்தின் அதிகாரம் காணப்படாத நாடுகள் அனைத்தும் எதிரி நாடுகள் என்ற வரம்பில் உள்ளடங்க மாட்டாது.

## முடிவுரை

இஸ்லாமிய சர்வதேச சட்டமரபில் அஸ்ஸியர் என்னும் கோட்பாடு, நவீன சர்வதேச சட்டக் கோட்பாட்டை விடவும் விசாலமானதாகும். அஸ்ஸியர் கோட்பாடானது தனித்து வெளித் தொடர்புகளை மாத்திரம் பேசவில்லை. மாற்றமாக உள்நாட்டிலும் முஸ்லிமல்லாதவர்களுடனான தொடர்புகளையும் இணைத்துப் பேசியுள்ளதைக் காணலாம். அந்தவகையில் யுத்தம், சமாதானம், உடன்படிக்கைகள் போன்ற ஏனைய நாடுகளுடனான உறவுகள் பற்றிய சட்டங்களுடன் முஸ்லிமல்லாத சமூகங்கள் மற்றும் தனிமனிதர்களுடனான உறவுகள் பற்றிய சட்டங்களையும் அஸ்ஸியர் கோட்பாடு உள்ளடக்கியுள்ளது. காலத்தால் முந்திய இஸ்லாமிய அஸ்ஸியர் கோட்பாடானது நவீன சர்வதேச சட்டங்களுக்கு அடித்தாளமாக அமைந்தது எனலாம். கி.பி. 804ல் மரணித்த இமாம் முகம்மத் பின் ஹஸன்

அஷ்ஷெய்பானி அவர்கள் சர்வதேச சட்டத்தின் பிதாமகனாகக் கருதப்படுகிறார்கள். இவரால் எழுதப்பட்ட அஸ்ஸியர் அஸ்ஸகீர் மற்றும் அஸ்ஸியர் அல்கபீர் ஆகிய இரு நூல்களும் சர்வதேச சட்டம் தொடர்பில் எழுதப்பட்ட உலகின் மிகப் பழமையான நூல்களாகக் கருப்படுகின்றன. சர்வதேச சட்டத்துறை ஈடுபாடு கொண்ட இமாம் ஷைபானியின் ஆசியரியர்கள், அல்புரூக் அல்பிக்ஹிய்யா என்னும் வேறுபாட்டு பிக்ஹ் கலை பற்றிய அவரது ஈடுபாடு, அஹ்லுர் (u/ap) மற்றும் அஹ்லுல் ஹதீஸ் என்னும் இரு சிந்தனைப் பள்ளிகளுடன் இருந்த அவரது அதீத உறவு மற்றும் பிரதம நீதியரசராகத் தொழிற்பட்டமை போன்ற காரணிகள் சர்வதே சட்டத்துறையுடனான அவரது ஈடுபாட்டுக்குக் காரணங்களாக இருந்திருக்கின்றன. அத்துடன் சர்வதேச சட்டத்துறை தொடர்பான விதிகளை வகுத்தல் மற்றும் சாதாரண சட்டப் பரப்பை விட்டும் சர்வதேச சட்டத்தை வேறுபடுத்தி நோக்கியமை போன்றன சர்வதேச சட்டத்திற்கான இமாம் ஷைபானியுடைய விஷேடமான பங்களிப்புகளாகும். இமாம் ஷைபானிக்கு முன்னரும் பின்னரும் இஸ்லாமிய உலகில் தோன்றிய இத்தகு முயற்சிகள் உண்மையில் நவீன சர்வதேச சட்டத்தின் தந்தை எனப் போற்றப்படும் குரோட்டியஸ் தோற்றம் பெறுவதற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டவையாகும். அந்தவகையில் சர்வதேச சட்டத் துறையில் முஸ்லிம்கள் முன்னோடியானவர்கள் என்பதும் இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி அவர்களுக்கு முதன்மையான ஒரு இடம் இருக்கிறது என்பதும் வரலாற்று ரீதியாக நிரூபணமான ஒரு உண்மையாகும். இது உண்மையில் மனித சமூகத்திற்குப் பயனுள்ள பங்களிப்பை வழங்கியவர்களுக்குரிய நன்மதிப்பையும் கௌரவத்தையும் உரியவர்களுக்கே வழங்க வேண்டும் என்ற அறிவு நேர்மையின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும். அதே சமயம் முஸ்லிம்கள் தொடக்கி வைத்த, இந்த அறிவுப் பாரம்பரியத்தை நவீன உலகில் நவீன உலக சூழலுக்குரிய வடிவில் வளர்த்தெடுத்த குரோட்டியஸ் முதல் கொண்ட மேற்கு அறிவுப் பாரம்பரியத்துக்குரிய நன்மதிப்பும் கௌரவமும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

உசாத்துணைகள்

நூல்கள்


1. *மூமைரிய்யா, உ. ஜ. (1999), உஸூலுல் அலாகாத் அத்துவலிய்யா பீ பிக்ஹில் இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி திராஸா பிக்ஹிய்யா முகாரனா, ஜோர்தான், தாருல் மஆலி.*

2. *அல்கௌஸரி மு, ஸா, ஹ, (1998), புலூகுல் அமானி பீ ஸீரதில் இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி, இ.இ, அல்மக்தபா அல்அஸ்ஹரிய்யா லித்துராஸ்.*

3. *அந்நத்வி அ. அ. (1994), அல்இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி நாபிகதுல் பிக்ஹில் இஸ்லாமி, டமஸ்கஸ், தாருல் கலம்.*

4. அபூஸஹ்ரா மு. (1947), அபூஹனிபா ஹயாதுஹு வஅஸ்ருஹு ஆராஉஹு வபிக்ஹுஹு, இ.இ, தாருல் பிக்ரில் அரபி.

5. ஸைதான் அ.க.(2009), அல்வஜீஸ் பீ உஸூலில் பிக்ஹ், பெய்ரூத், முஅஸ்ஸஸதுர் ரிஸாலா.

6. சுவைதான் மு. இ. அ. (2016), இக்தியாராதில் இமாம் முகம்மத் இப்னில் ஹஸன் அஷ்ஷைபானி அல்பிக்ஹ்ய்யா மின் கிலாலி ரிவாயதிஹி லிமுவத்தா அல் இமாம் மாலிக் பீ கிதாபய் அஸ்ஸியாம் வல் இ/திகாப், காஸா, ஜாமிஅதுல் அஸ்ஹர்.

7. அல்ஹமவி உ. (2009), மபாதிஉஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, டமஸ்கஸ், மன்சூராத் ஜாமிஅது திமிஷ்க்.

8. வீரமன்த்ரி சி.ஜி. (2009), மொ. பெ. ஏ.ஏ.எம். புவாஜி, இஸ்லாமியச் சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை, தமிழ் நாடு, மாற்றுப் பிரதிகள்.

9. ஸாஇத், (2013), ம/லமது ஸாயித் லில்கவாஇத் அல்பிக்ஹிய்யா வல்உஸூலிய்யா, அபூழபி, முஅஸ்ஸஸது ஸாயித் பின் சுல்தான் ஆல்நஹயான் லில் அ/மாலில் கைரிய்யா வல் இன்ஸானிய்யா.

10. அஸ்ஸரக்ஸி மு. அ. (1997), செம்மையாக்கம்: அஷ்ஷாபிஈ முகம்மத் ஹஸன், ஷரஹு கிதாபிஸ் ஸியர் அல்கபீர், பெய்ரூத், தாருல் குத்ப் அல்இல்மிய்யா.

**சஞ்சிகைகள்**

11. மக்பூல், (1986). முஸாஹமதுல் இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி பில் கானூன் அத்துவலி, அல்ஜீரியா, மஜல்லது ஜாமிஅதில் அமீர் அப்தில் காதர் லில்உலூம் அல் இஸ்லாமிய்யா, மலர்.1, இதழ். 1, பக். 56-65, வலைத்தளத்தில் காணப்படுகிறது, https://www.asjp.cerist.dz/en/article/24985.

12. கவாதிரி மு. (2015). முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி ராஇதுல் கானூன் அத்துவலி அல்இன்ஸானி, அல்ஜீரிய்யா, மஜல்லதுல் வஸிய்யா, இதழ் 14, பக்.31-48, வலைத்தளத்தில் காணப்படுகிறது, https://portal.arid.my/en/Publications/Details/16509.

13. பரீதா மி. (2010). தௌரு மபாதிஇல் இமாம் அல்அவ்ஸாஈ வல்இமாம் அஷ்ஷை பானி பில் அலாகாத் அத்துவலிய்யா, அல்ஜிரியா. மஜல்லதுல் இஹ்யா, பக்.633-648, வலைத்தளத்தில் காணப்படுகிறது, https://www.asjp.cerist.dz/en/article/12751.

14. பூகர்கப் அ. ம. (தி.இ). அல்இமாம் முகம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி வதௌருஹு பீ தக்ஈதி கவாஇதில் அலாகாதித் துவலிய்யா ஸமனல் ஹர்ப், இ.இ,

*மஜல்லதுல் உலூம் அல்இஜ்திமாஇய்யா வல் இன்ஸானிய்யா, இதழ். 07, பக். 161-180, வலைத்தளத்தில் காணப்படுகிறது,* http://fac-sciences-islamiques-ar.univ-batna.dz/index.php/2019-02-10-11-05-47? layout = edit&id=249.

15. *பூமதீன் ப. (2011). அசருல் பிக்ஹில் இஸ்லாமி பீ தத்வீரி கவாஇதில் கானூன் அல்ஜினா, அத்துவலி கானூனுல் ஹரப் பீ பிக்ஹில் இமாம் அஷ்ஷைபானி நுமூஸஜன், அல்ஜீரியா. மஜல்லதுல் ஹழாரா அல் இஸ்லாமிய்யா, இதழ் 15, பக்.65-78, வலைத்தளத்தில் காணப்படுகிறது,* https://www.asjp.cerist.dz/en/article/51553.

**இணையத்தளங்கள்**

16. *அத்தஸுகி மு. (2013). அல்முஸ்லிமூன் வல் கானூன் அத்துவலி, ஷபகதுல் ஆலூகா, வலைத்தளத்தில் காணப்படுகிறது,* https://www.alukah.net/culture/0/57183/.

17. *ஜான் மு. (தி.இ). தமிழாக்கம், சென்னை, ஜான் டிரஸ்ட் நிறுவனம், வலைத்தளத்தில் காணப்படுகிறது,* http://www.tamililquran.com/qurandisp.php?start=2.

# வடபுலத்தில் பாரதி

சி.ரமேஷ்

பாரதியின் பொன் நினைவைப் பரிவுடன் போற்றிடுவோம்
பாரதியின் பாவினைநற் பண்புடன் பாடிடுவோம்
பாரதியின் திருநாமம் பார் முழுவதும் இசைத்திடுவோம்
பாரதியின் பொன்னடியைப் பக்குவமாய்ப் பின்தொடர்வோம்

- யாழ்ப்பாணன்

அந்நியராட்சிக்குள் அகப்பட்டு அடிமைத்தளைக்குள் இந்தியா சிக்குண்ட நிலையில் தேசிய வீரனாய் திறன் கொண்ட கவிஞனாய் எழுந்த பாரதி, சாதியத்துக்கு எதிராகப் போர்கொடி தூக்கியவன். தேச எழுச்சிமிக்க பாடல்களையும் தத்துவச் செறிவுமிக்க கவிதைகளையும் எழுதிய பாரதி பெண்விடுதலைக்காகவும் குரல் கொடுத்தவன். பாட்டுக்கு புதுமைநெறிகாட்டி புதிய பாதையை வகுத்த பாரதி சமுதாய உணர்வுமிக்க தன்னெழுச்சிப் பாடல்களைத் தந்தவன். கவிதையின் பேசுபொருள், அதன் நடை, உத்திகளில் மட்டுமில்லாது கவிதையின் வடிவத்திலும் புதுமைகளைப் புகுத்தியவன் பாரதி. தமிழ் மரபுக்கப்பால் மேலைநாட்டிலும் வளர்ந்த புதுமைச் செல்நெறிகளைத் தேடித்தந்தவன் பாரதி.

ஈழத்தமிழர்கள் இலக்கியத்தின் புதிய பாடுபொருள் மற்றும் இலக்கியக் கட்டமைப்புகளை ஏற்பதிலும் அதன் தன்மையை அறிந்து புதியது படைப்பதிலும் நாட்டம் கொண்டிருந்தனர். இலக்கியத்தில் பாரதியாரின் தனித்துவங்களையும் அதேசமயம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவரது வகிபங்கையும் அறிந்த ஈழத்தமிழர்கள் அவரை தம் ஆதர்சக் கவிஞராக ஏற்றுக் கொண்டாடினர். ஆயினும் பாரதியார் உயிரோடு இருந்த காலப்பகுதியில் பாரதி குறித்த அறிவும் அவர் பாடல்கள் குறித்த இரசனை நிலையும் வடபுலத்து தமிழர்களிடத்தில் இருந்துள்ளதா என்பதை அறியமுடியவில்லை. ஏனெனில் பாரதியார் உயிருடன் வாழ்ந்த காலப்பகுதியில் அவர் குறித்த தெளிந்த அறிவும் தூரநோக்கும் தமிழக மக்கள் பலரிடத்தில் காணப்படவில்லை என்றே கூறலாம். பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் "இலங்கை கண்ட பாரதி" என்ற கட்டுரையில் இது குறித்து குறிப்பிடும் போது "பாரதி காலத்தவரான முத்துத்தம்பிப்பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை, ச.கந்தையாப்பிள்ளை, வதிரி சி.தாமோதரம்பிள்ளை முதலியோர் பாரதியாரை பற்றி ஓரளவாகிலும் கேள்விபட்டிருப்பர்" என்றே எண்ணத் தோன்றுகின்றது

என்பார். 1930க்குப் பின்னரே பாரதியாரின் புகழும் சிறப்பும் யாழ்ப்பாணத்தில் பரவியது எனலாம். தேசவிடுதலை மீது மக்கள் கொண்டிருந்த அதீத ஈடுபாட்டாலும் புதுமை மீது மக்கள் கொண்டிருந்த மிகுந்த ஈடுபாட்டாலும் பாரதியை வடபுலத்தார் அறிய வழிவகுத்தது எனலாம். யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை பாரதியாரோடு அவர் இருந்த காலப்பகுதியில் அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராக அருளம்பலசுவாமிகளே காணப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வதிரியில் தோன்றிய அருளம்பல சுவாமிகள் 1942ஆம் ஆண்டு வியாபாரி மூலையில் சமாதி அடைந்தார். "ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்து சுவாமி" என அருளம்பல சுவாமிகளைச் சிறப்பித்த பாரதி

தோழரே! யெந்நாளு மெனக்குப் பார்மேல்
மங்களஞ் சேர் திரு விழியா லருளைப் பெய்யும்
வானவர் கோன், யாழ்ப்பாணத் தீசன் தன்னைச்
சரண டைந்தா லது கண்டீர் சர்வ சித்தி

எனக் கூறி அவரைப் போற்றித் துதிக்கின்றான். 1910ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை விட்டு தமிழகம் சென்ற அருளம்பலசுவாமிகள் நாகையிலும் சிதம்பரத்திலும் புதுச்சேரியிலும் நாடோடியாக அலைந்து திரிந்தார். 1910 - 1914 வரையுள்ள காலப்பகுதியை சுவாமிகள் நிக்ஷ்டையில் இருந்த காலப் பகுதியாகக் கூறலாம். சுவாமி "சந்தேக நிவிர்த்தி", "கற்புநிலை", "சிவதரிசி", "அருவாசவோரம்" எனப் பதினான்கு நூல்களை எழுதினார். நீலலோசினி அம்மன் ஆலயத்தில் இறைதொண்டில் ஈடுபட்டிருந்தபோது நாகபட்டண மௌனச்சுவாமி என மக்களால் அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச்சுவாமிகள் 1914ஆம் ஆண்டுக்குப் பின்னரே புதுவைக்குச் சென்றுள்ளார் என்ற கருத்தை பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் கூறுவார் (04.1962-ஸ்ரீலங்கா). 1908முதல் 1919 வரை ஆங்கிலேயர் பாரதியாரைச் சிறைப்படுத்த தேடியதால் அவர் எட்டயப்புரத்தை விட்டு புதுவையில் தலைமறைவாகினார். அப்பொழுதே பாரதிக்கு யாழ்பாணத்துச் சுவாமியின் அருட்பார்வை கிட்டியது. இதனை பாரதியாரின்

"காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயுங்
கழனிகள் சூழ் புதுவையிலே யவனைக் கண்டேன்"
என்ற பாரதியாரின் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

பாரதியாருக்கு யாழ்ப்பாணத்துச்சுவாமியை அறிமுகப்படுத்தியவராக அவரது நண்பர் குவளைக்கிருக்ஷ்ணமாச்சாரியரே காணப்பட்டார் என "குவளைக் கண்ணன் புகழில்" அவரே கூறுவார். பாரதியாருக்கு ஆத்மீக விளக்கை ஏற்றி வைத்தவர்களில் மாங்கொட்டைச்சாமி என்னும் குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துசாமி என்ற மூவரும் விளங்கினர். இவர்கள் குறித்து பாரதியார் தனது "பாரதி அறுபத்தாறில்" விரிவாக நோக்கியுள்ளார். பாரதியாருக்கு ஆத்மீக அறிவை ஊட்டியவராக இவர்களே காணப்படுகின்றனர்.

சுப்பிரமணிய பாரதியாருக்கு ஞானகுருவாக விளங்கிய யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி "தேவிபதமறவாத தீர ஞானியாகவும் பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி யாகவும் சிதம்பரத்தில் குடிகொண்டிருக்கும் நடராஜ மூர்த்தியாகவும் சங்கரனாகவும் திருவிழியால் அருளைப் பெய்யும் வானவர்கோனாகவும் மனத்தினில் துலங்கினார். ஸ்ரீலங்கா 08.1961இல் "ஞானம் வளர்த்த புதுவை பாரதியின் யாழ்ப்பாணத்து சுவாமி யார்" என்ற தலைப்பில் அ.ந.கந்தசாமி எழுதிய கட்டுரையே அரும்பலசுவாமிகள் குறித்த தேடலுக்கு ஆதாரமாக அமைந்தது எனலாம். இதற்குப் பதிலளிக்கும் முகமாக புலோலிமேற்கு பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் "பாரதியாரின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி" என்ற தலைப்பில் சுவாமி குறித்தான விரிவான தகவல்களை உள்ளடக்கி இக்கட்டுரையை எழுதி இருந்தார். இதன் பின்னர் பாரதியின் ஞானகுரு அல்வாய் அருளம்பலசுவாமி என அறிந்த அ.ந.கந்தசாமியும் ந.சோமகாந்தனும் இணைந்து 1963இல் வியாபாரி மூலையில் விழா எடுத்தனர். இதனை அடுத்து பேராசிரியர் நா.ஞானக்குமாரன் அவர்கள் 1992இல் யாழ்பாணத்து சுவாமிகள் சபை கேட்டுக் கொண்டதற்கமைய "பாரதி போற்றிய அரும்பல சுவாமிகள்" என்ற தலைப்பில் நூலொன்றை எழுதி இருந்தார். இந்நூலில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் "முன்னுரையாக ஒரு குறிப்பு யாழ்ப்பாணத்து சுவாமிகள்" "சித்தர் மரபு வளத்துக்கான ஒரு பலகணி" என்ற தலைப்பில் ஒரு ஆழமான கட்டுரையை எழுதி இருந்தார். இதனைத் தொடர்ந்து "பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துசுவாமி" என்ற பெயரில் தன்குலப்பெருமையை விளக்கும் முகமாக க.குணராசாவும் ஒரு நூலை எழுதியிருந்தார்.

1907ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி இந்தியா இதழில் "கௌரவ ஸ்ரீ ராமநாதரும் இந்தியாவும்" என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய கட்டுரை அக்கால இந்தியா, இலங்கைச் சூழலை அறிவதற்குத் துணைசெய்கிறது என்பார் பேராசிரியர் தில்லைநாதன் (இலங்கைத் தமிழ்இலக்கியம் பக்.164) சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாசபைக்குத் தலைமை வகிக்கச் சென்றிருந்த சேர்.பொன் இராமநாதன் இந்துக்களின் ஆன்ம ஞானத்தையும் மனிதாபிமானத்தையும் பெரிதாகப் புகழ்ந்துரையாற்றினார். அக்கூட்டத்தில் ஐரோப்பிய நாகரீகம் கேவலம் லௌகீக இன்பத்தையும் இகசாதனமாகிய பிரபஞ்ச வாழக்கையின் பேறுகளையும் கொண்டது என்று கூறினார். அத்துடன் நில்லாது இந்துக்கள் ஆன்ம லாபத்தை முதற்குறியாகவும் லோக சம்பந்தமான வெற்றிகளையும் இன்பங்களையும் இரண்டாம் குறியாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட பாரதியாருக்கு சேர்.பொன்னம்பலம் இராமநாதனுடைய கருத்துக்கள் இசைவானதாக இருக்கவில்லை. "இந்தியர்கள் மத ஆராய்ச்சியை முதற்குறிக்கோளாக வைத்துவிட்டமையே அந்நியருக்கு அடிமைப்பட முதற்காரணமாயிற்று எனக் கூறிய பாரதி லௌகீக விக்ஷயங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம் என்றும் லௌகீக தொழில்களை விருத்தி செய்தாலன்றி பிழைக்க முடியாது என்ற கருத்தையும் முன்வைத்தான் இப்பின்னணியை பேராசிரியர் தில்லைநாதன் அவர்களைப் போல பேராசிரியர் க.அருணாசலம் அவர்களின் "பாரதியார் சிந்தனைகள்" என்ற நூலும் ஆராய்கிறது.

இலங்கையில் பாரதி புகழ் கூறிய முதலாவது அறிஞராக விபுலாநந்த அடிகள் என அறியப்பட்டாலும், அவருடைய காலத்திலேயே அவருக்கு முன்னரே புலோலியில் பண்டிதை பத்மாசனி அம்மாள் "பாரதி கவிநயம்" எனும் நூலை எழுதியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. பாரதியாரை வடபுலத்துக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் முக்கியமானவர்களாக இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்து இலக்கியப் பணி செய்த உருத்திர கோடிஸ்வரரையும் எம்.ஆர்.கோவிந்தசாமியையும் சுவாமி விபுலாநந்தரையும் கூறலாம். 1920-1922 காலப்பகுதியில் யாழ்ப்பாண புத்துவாட்டிவீட்டு மண்டபம் மற்றும் ராசா தகரக் கொட்டகைளில் நாடகங்களை அரங்கேற்றிய எம்.ஆர்.கோவிந்தசாமி முதலான இந்தியக் கலைஞர்கள் பாரதி பாடல்களைப் பாடி தேசிய எழுச்சியை மக்கள் மனத்தினில் விதைத்தனர் என ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் அதிபர் ஒரேற்றர் முதலானவர்கள் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது.

1924இல் யாழ்ப்பாண மாணவர் மாநாடு என்ற பெயரில் தொடங்கப்பட்ட இளைஞர் காங்கிரஸ் முழுஇலங்கைக்கும் முழுமையான விடுதலை என்ற தொனிப்பொருளில் தம் போராட்டத்தை முன்னெடுத்தது. ஆங்கிலேயரின் அதிகாரத்தை அகற்றுதல், முழுமையான சுயாட்சி பெறுதல், தேசிய ஒற்றுமை, மது விலக்கல், தீண்டாமை ஒழித்தல் என்ற முற்போக்குக் கொள்கைகளை முன்வைத்து இவர்கள் போராடத் துணிந்தனர். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான வலுவான கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதற்கு பாரதியாரின் பாடல்களும் இவர்களுக்கு உந்துசக்தியாக அமைந்தது. 1922 முதல் 1924வரை சென்னையில் இராமகிருக்ஷ்ணமடத்தில் இருந்து விட்டு 1925இல் இலங்கை திரும்பினார் சுவாமி விபுலாநந்தர். அக்காலப்பகுதியில் புலவர் மு.ந.கந்தசாமிக்கவிராயர், மகாவித்துவான் சோழவந்தான் அரசன் சண்முகனார் முதலானோரூடாக பாரதியார் குறித்து நன்கறிந்த விபுலாநந்தர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொதுவிழாக்களிலும் இலக்கிய மேடைகளிலும் பாரதியார் குறித்து உரை நிகழ்த்தினார். 1925 ஏப்ரல் 28 கீரிமலையில் நடைபெற்ற மாணவர் மாநாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்ட விபுலாநந்தர் "தேசிய இலக்கிய மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவ்வுரையில் "தேசிய இலக்கியமே மகாகவி பாரதியாரிடம் இருந்து தோன்றியதல்லவா?" எனக் கூறி மகாகவி பாரதியையும் அவரின் பாடல்களையும் வடபுலத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சுவாமி விபுலாநந்தர் பொறுப்பிலிருந்த வைதீஸ்வரா முதலான பாடசாலைகளிலும் முதலாம் வகுப்பு தொடக்கம் எட்டாம் வகுப்புவரை தமிழ்ப் பாடத்தில் பாரதி பாடல்களை அடிகளார் சேர்த்திருந்தார். அத்தோடு 1932ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரதி கற்கை வட்டம் எனும் அமைப்பை நிறுவிய விபுலாநந்தர் அங்கு கல்வி பயிலும் மாணவருக்கான பாடத்திட்டத்தில் பாரதி பாடல்களையும் சேர்த்திருந்தார் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

விபுலாநந்தரைப் போலவே பாரதி பாடல்களை அவ்வப்போது கையாண்டவர் சி.வை. தாமோதரம்பிள்ளையின் மகன் பிரான்சிஸ் கிங்ஸ்பரி ஆவார். பல வருடங்கள்

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதிக் குழுவில் பணியாற்றிவிட்டு சிறிது காலம் இங்கிலாந்தில் உள்ள ஏகத்துவத் திருச்சபையில் போதகராக இருந்தார். பின்னர் 1926ஆம் ஆண்டு ஆடி மாதம் கொழும்பு பல்கலைக்கழகம் வந்த இவர் பாரதி பாடல்கள் மீது அதிகளவு விருப்பம் கொண்டு மாணவர்களிடம் அதனைக் கொண்டு சேர்த்தார் எனலாம்.

1923இல் ஆரிய திராவிடபாக்ஷாபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டதை அடுத்து முகாந்திரம் தி.சதாசிவ ஐயர் கல்வி அதிகாரியாக விளங்கினார். பாரதியாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட தி.சதாசிவஐயர் தாம் இயற்றுவித்த பாடநூல்களில் பாரதி பாடல்களை இணைத்துக் கொண்டதுடன் நில்லாது பாரதி பற்றியும் எழுதினார்.

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் பாரதியார் மீது மிகுந்த பற்றுடையவர். பாரதியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். 1930ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற யாழ்ப்பாண வாலிபர் மாநாட்டு தலைமை வகித்ததுடன் நில்லாது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமஆசனம், சமபந்தி ஆகியவற்றையும் வழங்கினார். உயர்குடி மக்களிடம் இந்நடவடிக்கை சலசலப்பை ஏற்படுத்திய போது பாரதியாரை மேற்கோள் காட்டி தொழில் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட வர்ணாச்சரத்தர்மத்தை மேற்கோள் காட்டி தீண்டாமைக்கு இடமில்லை என்றார். இவரால் பாடப்பட்ட பாடலே பாரதி திருநாள் ஆகும்.

> “தாயின் தனிக்கொடி யேற்றி ___ அவள்
> தாவிய சுதந்திரத்தன்மையைக் காட்டி
> கீழான நாய்நிலை ஓட்டி ___ துயர்
> கிட்டா னெநனி நாட்டினான் பாட்டில்
>
> உண்ணுவீர் பெண்ணறச் சொல்லை ___ அன்பு
> மண்ணுவீர் செந்தமிழ் நாடெனும் பாட்டை
> எண்ணி யடித்திடும் முரசை ___ செவிகள்
> நண்ணி விரித்திடும் நாவலன் அவனே’”

1931இல் உருவாக்கப்பட்ட டொனமூர் சீர்திருத்தம் மத்தியதரவர்க்கமொன்றை ஆட்சியின் பங்காளராக மாற்றியது. அதேசமயம் பத்திரிகைதுறையில் ஏற்பட்ட அதீத வளர்ச்சியும் இந்திய மக்களிடம் ஏற்பட்ட தேசவிடுதலைபற்றிய விழிப்புணர்வும் புதிய ஆக்கஇலக்கிய முயற்சிகளுக்கு கால்கோலிட்டன. தமிழ் மக்களிடையே தேசப்பற்றையும் விடுதலை உணர்வையும் சமத்துவ சமரச சிந்தனையையும் விதைக்க சொற்குற்றமும் பொருட்குற்றமுமற்ற பாரதிபாடல்கள் பெரிதும் உதவின. யாழ்ப்பாணத்தில் பாரதிபாடல்கள் செல்வாக்கு பெறுவதற்கும் இவைகளே அடிப்படைகளாகவும் அமைந்தன.

1930ஆம் ஆண்டு யூன் 22இல் நாகமுத்தர் பொன்னையா அவர்களால் தொடங்கப்பட்ட ஈழகேசரிப் பத்திரிகை பாரதி புகழை இலங்கையில் பரப்பியதில் கணிசமான பங்காற்றியது. தேசவிடுதலையின் மீது வேட்கையும் சாதி பேதமில்லா

மனபாங்கும் சமரசக்கொள்கை மீது ஆழ்ந்த பற்றும் கொண்ட பொன்னையா அவர்களைப் பாரதி பாடல்கள் கவர்ந்ததில் வியப்பில்லை என்றே கூறலாம். 1930ஆம் ஆண்டளவில் பாரதி பாடல்களின் பெருமையை அறிந்த ஈழகேசரி பொன்னையா அப்பாடல்கள் முழுவதையும் தமிழ்நாட்டில் இருந்து வரவழைத்து விற்பனை செய்தார். அதற்குரிய தனது விளம்பரத்தை ஈழுகேசரி பத்திரிகையில்

> "முந்துங்கள்! முந்துங்கள்!! புதிய பதிப்பு!
>
> மலிந்த விலை! பாரதி நூல்கள்"

எனக் குறிப்பிட்டு பாரதியாரின் "தேசிய கீதங்கள், தோத்திரப்பாடல்கள், வேதாந்தப் பாடல்கள்" எனப் பதினைந்து நூல்களை அதன் விலைக்குறிப்புகளுடன் வெளியிட்டார். 1936ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டுமலர் வரகவி பாரதியார் என்ற தலைப்பின் கீழ் "அச்சமிகு பேடிமையின் அடிமை வாழ்வில்" என்ற பாடலைப் பிசுரித்தது. அதே போல 1938 ஈழகேசரி ஆண்டு மலரும் பாரதியின் "வந்தே மாதரம்" பாடலைத் தாங்கி வெளிவந்தது. இம்மலரில் வெளிவந்த சிவக்கொழுந்து ஆசிரியரின் "கவி உலகம் பாரதியும் - சொக்கனும்" என்ற கட்டுரை சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளுக்கும் சத்தியாக்கிரகப் போரில் தலை கொடுத்து வேலூர் அரண்மனைச் சிறையில் அரசினரின் விருந்தாளியாக வாழ்ந்த ரா.சொக்கன் பாடல்களுக்கும் இடையலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்கிறது. இருவரினதும் பாடல்களிலுள்ள தேசவிடுதலைக்கருத்துக்களையும் பெண்விடுதலை தொடர்பான சிந்தனைகளையும் ஆராய்ந்த சிவகொழுந்து ஆசிரியர் அவ்விருவரினது பாடல்களிலும் பிரதிபலிக்கும் சாதிக்கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களையும் விரிவாக ஆய்வுக்குட்படுத்துகிறார்.

ஈழகேசரியின் ஆண்டு மலர்களைப் போன்று வாரப் பத்திரிகையிலும் பாரதி பாடல்கள் இடம்பெற்றன. முதலைந்து ஆண்டுகளாக வெளிவந்த ஈழகேசரியில் குறிப்பாக முதலாம் பக்கத்தில் பாரதி பாடல்கள் பிரசுரிக்கப்பட்டன. அதேசமயம் ஈழகேசரியில் வெளிவந்த கட்டுரைகளிலும் பாரதிபாடல்கள் பிரசுரிக்கப்பட்டன. 08.10.1933, 22.10.1933, 12.11.1933, 19.11.1933 ஈழகேசரிப் பத்திரிகைகளில் நா. நாரயணசாமி எழுதிய "தமிழரும் தாய்மொழியும்" என்ற கட்டுரையில் பாரதி பாடல்கள் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. பாரதிபாடல்களைப் பின்பற்றி கவிதை இலக்கியங்களை உருவாக்குகின்ற பண்பு ஈழத்தில் வளர்ச்சி அடைந்திருந்தமைக்கும் ஈழகேசரி சான்றாக அமைகின்றது. 30.04.1933 இதழில் வெளிவந்த "இலங்காதேவி திருப்பள்ளி எழுச்சி" என்ற கவிதை பாரதியாரின் "பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி" என்ற கவிதையை பின்பற்றி எழுதப்பட்டுள்ளதை போல் 23.07.1933 கூத்துமன் எழுதிய ஈழவளநாடு என்ற பாடலும் பாரதியாரின் செந்தமிழ் நாடெனும் போதினிலே என்ற பாடலை நினைவூட்டுவதாக அமைகிறது. ஈழகேசரியில் வெளிவந்த கவிதைகளை ஆழ்ந்து படிக்கும் போது பாரதியைப் போன்று தேசபக்தி, சமூகவிடுதலை, தமிழுணர்வு முதலானவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து எழுதப்பட்ட கவிதைகளாகக் காணப்படுகின்றன.

1943 தொடக்கம் 1946 வரை மறுமலர்ச்சி சங்கம் பெரும் சாதனைகளைச் செய்தது. இக்காலப்பகுதியில் மறுமலர்ச்சி சஞ்சிகையின் உயிர்ப்பு விசையாகச் செயற்பட்டவர். சுவாமி விபுலாநந்தர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்றதன்பின் முதன் முதலாக 03.10.1943 அன்று யாழ்ப்பாணம் வந்த அவரை வரவேற்று அழைத்து அவரது அறிவுரைகளைக் கேட்டு பயனுறவேண்டும் என்ற நோக்கில் மறுமலர்ச்சி சங்கத்தினர் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து நடாத்தினர் மறுமலர்ச்சி சங்கத்தினரைச் சந்தித்து விபுலாநந்தர் ஆற்றிய உரையினைத் தொகுத்து அ.ந.கந்தசாமி "புதிய தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் 17.10.43 ஈழகேசரியில் வெளியிட்டார். இச்சந்திப்பில் தமிழ்ச் சிறுகதைகளின் மொழிநடை குறித்தும் மொழிபெயர்ப்புக்கள் குறித்தும் உரையாற்றிய விபுலாநந்தர் தமிழ்க்கவிதைகள் குறித்தும் பிரஸ்தாபித்தார். அவ்வுரையில் பாரதியாரின் "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்ற பாடலடிகளை மேற்கோள் காட்டி பேசிய விபுலாநந்தர் "கருத்துக்கள் உயர்வுள்ளதாக இருக்கவேண்டும் என்பதையும் அலங்காரச் சொற்குவியல் சிறப்புள்ளதாக அமையாது என்பதையும் எடுத்து விளக்கினார்.

சுவாமியின் வழிகாட்டலுக்கு முன்னரே அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி முதலானோர் பாரதி மீது மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்கினர். அவ்விருவரும் மகாஜனக் கல்லூரியில் கற்கும் காலத்திலே பாரதி குறித்த பின்னூட்டல்களை அவர்களுக்கு கற்பித்த அதிபர் சின்னப்பா மற்றும் சுந்தரம்பிள்ளை, செ.சின்னத்துரை ஆசிரியர்களும் வழங்கி இருந்தனர். இதன் காரணமாக பாரதி மீது பேராபிமானங் கொண்ட அ.ந.கந்தசாமியும் இன்னும் சிலரும் அ.செ.முவுடன் இணைந்து பாரதி வாசிகசாலையை மகாஜனாக் கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் அளவெட்டியில் உருவாக்கி பாரதிக்கு விழாவும் எடுத்தனர். பாரதியை தமிழகம் அறியுமுன்னருக்கு அவருக்கு உரிய மரியாதையை ஈழதேசம் வழங்கி இருந்தமைக்கு இது நல்ல சான்று. ஆரம்பத்தில் "மறுமலர்ச்சி" கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்த காலப்பகுதியில் பாரதி வாசிகசாலை என்னும் அக்கொட்டிலில் இருந்துகொண்டே அதன் பல்வேறு பணிகளை அ.செ.மு. முன்னெடுத்தார் என்பது கண்கூடு.

பாரதியார் மீது மிகுந்த அபிமானமும் பிடிப்பும் கொண்ட மறுமலர்ச்சி சங்கத்தினர் கார்த்திகை 1946ஆம் ஆண்டு மலரை பாரதிக்குரிய மலராக வடிவமைத்தனர். ஓவியர் ஸ்ரீ.கதிரின் பாரதியின் உருவப்படத்தை அட்டைப்படமாகக் கொண்டு இவ்விதழ் வெளிவந்தது. அட்டைப்படத்தில் பாரதியின் உருவப்படத்துக்கு கீழே பாரதி குறித்த,

"கலை யெடுத்த கட லென
ஆற்றல் கொண்ட பாரதிக்
கலைஞனின் கவிதை இக்
காசினி யெலாம் பெரும்
ஒளி கிளர்த்த வேணும் - நாம்
ஒன்று பட்டு நின்று பல்

சிலை செதுக்கி காட்டுவோம்
செந்தமிழ் நாடெல்லாம்

என்ற மஹாகவியின் பாடலும் இடம்பெற்றது. பாரதியின் ஜனன தினத்தை முன்னிட்டு வெளிவந்த இவ்விதழில் பாரதியின் புதிய போக்குகளும் அவர் கொண்டிருந்த சித்தாந்த தத்துவங்களும் கூரிய முறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பாரதியாரின் குழந்தைப்பாடல்களை அறிமுகப்படுத்தும் கட்டுரையாக பொ. கிருக்ஷ்ணனின் "பாரதியும் பாப்பாவும்" காணப்படுகிறது.

பெருமையுறு வாழ்வளிக்கும்
நற்றுணையாம் ஹிந்துமதம்'

எனப்பாடிய பாரதியின் மேற்கோளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட "பாரதியாரின் இந்துமதம்" என்ற பத்தி பாரதியாரின் ஹிந்துமதம் குறித்த வெளிப்பாடுகளை எடுத்துரைக்கிறது. தமிழ் இலக்கியத்தின் புதிய எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவித்த பாரதியாரை நினைவுகூரும் கட்டுரையே "கற்பனையும் பாரதியும்". பாரதியாரின் கற்பனைத்திறனையும் அவரது ஆளுமையின் வெளிப்பாட்டையும் வாசகனுக்குணர்த்தும் கட்டுரையாக இது அமைகிறது.

1947 கார்த்திகை மாதம் வெளிவந்த மறுமலர்ச்சி இதழில் "தமிழ் நாட்டின் கலைக்கோயில் பாரதி மண்டபம்" என்ற தலைப்பில் பாரதி மணிமண்டப திறப்புவிழா குறித்த விரிவான பதிவொன்றும் இடம்பெறுகிறது. விழா தொடங்குவதற்கு முன்னரே 1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினோராம் திகதி தூரன் அவர்கள் பாரதி வீட்டில் கொடியேற்றி வைத்த சம்பவத்தை நினைவு கூரும் இக்கட்டுரை 1947 ஒக்டோபர் பதின்மூன்று, பதினான்காம் திகதிகளில் எட்டயபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின் சிறப்புக்களையும் எடுத்துரைக்கிறது. பொது மக்களின் நன்கொடை நாற்பதாயிரம் பொருட்செலவில் கட்டப்பட்ட இம்மண்டபத்தை பின்னர் தமிழக அரசு சுவீகரித்துக் கொண்டது. அரசு நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பின்னர் மண்டப கட்டுமான பணிகள் ஆரம்பமாயின. அப்போது, மக்களின் நன்கொடையால் கட்டி எழுப்பப்பட்ட பாரதி மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டியது, திறப்பு விழா நடாத்தியது தொடர்பாக நிறுவப்பட்ட கல்வெட்டுக்கள் அகற்றப்பட்டன. இதனைக் கண்டித்து இளசை மணியன் ஒரு விரிவான கட்டுரையை தினமணி பத்திரிகையில் எழுதியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மறுமலர்ச்சி 1948 தைமாத இதழில் அ.செ.முருகானந்தன் "கடல் கடந்து போன கதை" என்ற தலைப்பில் பாரதி மணிமண்டப திறப்பு விழாவில் தான் கலந்து சிறப்பித்த அனுபவத்தை நினைவு கூரும்வகையில் ஒரு பயணக்கட்டுரையை எழுதியிருந்தார். இருக்கும் போது தோசமாக கருதப்பட்டு புறமொதுக்கப்பட்ட பாரதி காலமாகிச் சென்ற போது கொண்டாடப்படுவதை அங்கத உணர்வோடு பதிவு செய்யும் இக்கட்டுரை ஏழைகள் குறித்துப் பாரதி கண்ட கனவு சுதந்திரத்துக்குப் பின்னரும் நிறைவேறாமல் கனவாகவே இருப்பதையும் எடுத்துரைக்கிறது.

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்த பாரதி மெய்யப்ப செட்டியாருடைய கைகளுக்குள் சிக்குண்ட செய்தியை அங்கதத்துடன் பிரஸ்தாபிக்கும் கட்டுரையாக மறுமலர்ச்சி ஆனி 1948 இதழில் வரதர் எழுதிய "பாரதிக்கு விடுதலை"யைக் கூறலாம். நாடகக் கலைஞர்களான டி.கே.எஸ்.சகோதரர்கள் தாம் தயாரித்த பில்ஹணன் படத்தில் பாரதி பாடல்கள் இரண்டினைச் சேர்த்திருந்தனர். பாரதி பாடலுக்கான உரிமத்தை அன்று பெற்றிருந்த மெய்யப்பச் செட்டியார் டி.கே.எஸ். சகோதரர்கள் மீது 50ஆயிரம் நஷ்ட ஈடு கோரி வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இப்பின்னணியில் சென்னை நீதிமன்றத்தில் நடைபெற்ற பாரதி பாடல் உரிமம் தொடர்பான வழக்கை ஆதாரமாகக் கொண்டு வரதரால் எழுதப்பட்ட இக்கட்டுரை பாரதி பாடல்கள் பொதுவுடமையாக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திநிற்கிறது.

ஐப்பசி 1948 மறுமலர்ச்சி இதழ் வ.இராசையா வரைந்த பாரதியின் உருவப்படத்தை தாங்கி வெளிவந்தது. இவ்விதழில் இடம்பெறும் தலைவாயில் பகுதி பாரதி மணிமண்டபத்தில் வ.ரா தலைமையில் நடைபெற்ற பாரதிவிழா குறித்துப் பேசுகிறது. "பண்ணொழுகும் இன்சுவைசேர் பற்பலநற் பாடல்களால்.." எனத் தொடங்கும் யாழ்ப்பாணனின் பாரதி குறித்து எழுதப்பட்ட பாடலைத் தாங்கி வெளிவந்த இவ்விதழ் தமிழ் மக்களுக்கு அருள் உபதேசமாய் - ஆசிச்செய்தியாய் பாரதியால் எழுதப்பட்ட "தமிழனுக்கு" என்ற கட்டுரையையும் தாங்கி வெளிவந்தது.

பாரதி குறித்த ஆய்வுகளை சிறப்பாக முன்னெடுத்த இதழாக கலைச்செல்வியையும் கூறலாம். புரட்டாதி 1958இல் வெளிவந்த கலைச்செல்வி பாரதி இதழாக வெளிவந்தது. இவ்விதழின் ஆசிரியர் தலையங்கம் பாரதி வகுத்த பாதையில் நடக்க வேண்டிய அவசியத்தை கூறிநிற்கிறது.

> "பாரதியின் கனவுகள், கவிதைகள், செயற்கரிய செயல்களைச் செய்யும்
> சக்தியை நமக்கு அளித்துள்ளன. ஆகவே மீண்டும் மீண்டும் அவற்றை
> கற்போம். பாரதியைப் போன்று பண்பட்ட கனவுகளைக் காண்போம்.
> கண்ணியமான கனவு களிதரு செயலின் வித்து"

இம்மலரில் "நினைவலைகள்: பாரதிக்குப் பின்" என்ற கட்டுரையினை அ.செ. முருகானந்தன் எழுதியிருந்தார். "தனிமனிதனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியாரின் கவியடியினை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரை பாரதிக்கு நிஜ வாழ்க்கையில் வறுமை இருந்ததில்லை என்பதை அவருடைய மாமனார் சாம்பசிவ ஐயர், அவருடைய சிற்றன்னையார் இருவரின் கூற்றின் வாயிலாக நிறுவ விழைகிறது. பாரதியின் குடும்பமும் அவருடைய கொள்கைகளை இறுதி வரை கடைப்பிடித்து வாழ்ந்தது என்பதையும் அவரது மகள் சகுந்தலாவின் கூற்றின் ஊடாக அ.செ.மு. இக்கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

அலை 1983 பங்குனி இதழ் பாரதி குறித்த சிறப்பு மலராக வெளிவந்தது. இம்மலர் பாரதி குறித்து 1982 செம்பதாகையில் எழுதப்பட்ட பாரதி பற்றிய மதிப்பீடுகள் கட்டுரையை மறுபிரசுரம் செய்தது. "காலமும் கருத்தும்", "புரட்சியும்

சீர்திருத்தமும்", "தேசியமும் சர்வதேசியமும்", "மதமும் மார்க்ஸியமும்", "பாரதியின் வரலாற்றுப் பங்கு", "பாரதியும் போலிப் புரட்சிவாதிகளும்" என்ற உபதலைப்புக்களுடன் எழுதப்பட்ட இக்கட்டுரை தமிழ் இலக்கியத்துக்கு புத்துயிரளித்த பாரதியின் இலக்கிய சாதனைகளை மதிப்பிடுகிறது. இம்மலரில் வெளிவந்த சு.வில்வரத்தினத்தின் "விடுதலைக் குருவியும் வீட்டு முன்றிலும்" என்ற கவிதை விடுதலைக்கு அவாவிய பாரதியின் சிட்டுக்குருவி கவிஞரின் வீட்டு முன்றலில் வந்து மேயும்போது கவிஞருக்கு ஏற்பட்ட மனவுணர்வுகளை நுண்மையாகச் சித்திரிக்கிறது. பாரதி அன்று கூறிய வார்த்தைகள் இன்றைய இலக்கிய உலகுக்கும் சமூகத்துக்கும் தேவை என்பதை உணர்ந்த அலையின் மலராசிரியர் பாரதியாரால் எழுதப்பட்ட "கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூ ரம்" என்ற கட்டுரையையும் மீள் பிரசுரம் செய்திருந்தார். இலங்கையில் அரசியல்வாதிகளிடம் பாரதி படும் பாட்டை அங்கதமாக விமர்சிக்கும் குறிப்புக்களே "பாரதி படும் பாடு 1", "பாரதி படும் பாடு 2".

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மில்க்வைற் தொழிலகம் ஓர் மலரை 1982ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது. இம்மலர் பாரதியின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்ததுடன் பாரதியின் ஞானகுருவாய் இருந்த அருளம்பலசுவாமி குறித்த சிறுகுறிப்பொன்றையும் உள்ளடக்கி இருந்தது.

1982 வெளிவந்த "கிருதயுகம்" மலர் பாரதியின் பெருமையை உலகறியச் செய்யும் வகையில் இரு கவிதைகளை வெளியிட்டு இருந்தது. பாரதிக்குச் சமர்ப்பணம் என்ற தலைப்பில் இராஜரட்ணம் இரட்ணராஜ் ஓர் கவிதையையும் பண்டிதர் வீரகத்தி க.வீ. என்ற பெயரில் பாரதி தரிசனம் என்ற கவிதையையும் இம்மலரில் எழுதியிருந்தனர்.

1982இல் பாரதியார் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு சிரித்திரன் சஞ்சிகை சிறுகதை, கவிதை, நாடகப் போட்டிகளையும் நடாத்தியது. கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 50 ரூபாவும் இரண்டாம் பரிசாக 25 ரூபாவும் மூன்றாம் பரிசாக 15ரூபாவும் பரிசில்களாக வழங்கப்பட்டன. சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளிக் கேடயங்களும் வெள்ளிக் கிண்ணங்களும் பரிசாக வழங்கப்படும் என அறிவித்தநிலையில் வடகோவை வரதராஜனின் "நிலவு குளிர்ச்சியாக இல்லை" என்ற சிறுகதைக்கு இப்போட்டியில முதற் பரிசு கிடைத்தது. இரண்டாம் பரிசு இரு சிறுகதைகளுக்கு கிடைத்தன. அவ்வகையில் பாலரகுவின் "காக்கை குருவி எங்கள் சாதி" என்ற சிறுகதைக்கும் கே.ஆர்.டேவிட்டின் போலிகள் வென்றதில்லை" என்ற சிறுகதைகளுக்கு இரண்டாம் பரிசில்கள் கிடைத்தன. போட்டியில் மூன்றாம் பரிசும் இரு சிறுகதைகளுக்கு கிடைக்கப்பெற்றன. சிவசக்தியின் "வல்லமை தாராயோ" சிறுகதைக்கும் அன்ரனி மனோகரனின் "தனி ஒருவனுக்கு" சிறுகதைகளுக்கும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டன. பருத்தித்துறையூர் மூர்த்தியின் "சீதனம் வாங்காத சவூதி மாப்பிள்ளை" நாடகத்துக்கு பரிசும் வழங்கப்பட்டது.

சிரித்திரன் பெப்ரவரி இதழ் பாரதி நூற்றாண்டுக்குரிய சஞ்சிகையாக வடிவமைக்கப்பட்டது. இவ்விதழில் பாரதி பற்றிய பற்பல கருத்துக்கள் என்ற கட்டுரையும் அகளங்கனின் "புரட்சிக்கவி பாரதியும் புதுமைக்கவி கண்ணதாசனும் விண்ணுலகச் சந்திப்பு" என்ற பகுதியும் இடம் பெற்றது. அகளங்களின் இப்பகுதி தமிழ் இலக்கியத்துக்கு புதுமையானது. இறந்த இருவர் உரையாடுவது கற்பனை என்றாலும் இருவரினது உரையாடலில் எடுத்தாளப்பட்ட விடயங்கள் அக்கால தமிழக மக்களின் வாழ்வியல் கோலங்களையும் அரசியல் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. சிரித்திரன் 1982 வைகாசி இதழில் பாரதி செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்ப தேன் வந்து காதினிலே என்ற பாடலுக்கான விளக்கத்தை அகளங்கன் இலக்கியச் சிமிழ் பகுதியில் "தேன் வந்து பாயுது" என்ற தலைப்பின் கீழ் கொடுத்திருந்தார். புகழேந்திப் புலவரின் "மல்லிகையே வெண்சங்காய் வண்டூத" என்ற பாடலுடன் ஒப்பிட்டு பாரதி பாடலடிகளுக்கு விளக்கம் கூறும் அகளங்கனின் திறன் பாரட்டத்தக்கது.

பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண காரைநகர் இந்துக்கல்லூரி சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டது. இதில் கவிஞர் முருகையனின் "பாரதி என்றொரு சூரியன்" என்ற கவிதையும் இடம்பெறுகிறது. முருகையனைத் தவிர காரை.சுந்தரம்பிள்ளை, வித்துவான் செல்லம் நாரயணராஜா, சு.தனலட்சுமி, P. அருள்ஆனந்தம், சி.மைதிலி, தேவசெல்வராணி முதலானவர்களின் கவிதைகளும் இடம்பெறுகின்றன. பாரதி என்றொரு சூரியனின் சுடர் பாரில் விழுந்தவுடன் பாழிடங்களில் காணப்பட்ட இருள் விலகிச் செல்ல இன்ப நறும்பதம் எங்கும் சூழ்வதாக முருகையன் பாடுகிறார். திருமதி மௌ.சித்திரலேகா அவர்களால் எழுதப்பட்ட "தொழிலாளர் பற்றி பாரதி", "வித்துவான் க.முருகேசனின் "பாரதி கண்ட சமுதாயம்", செல்வரத்தினத்தின் "பாரதியின் ஒட்பம்", கலாநிதி அருண்மொழியரசியின் "பாரதி இறை உணர்வு", சு.கனகமலரின் "பாரதி கண்ட புதுமைப் பெண்" முதலான கட்டுரைகள் இந்நூலுக்குப் புதுப் பொழிவைத் தருகின்றன.

பாரதியும் அவனது கவிதைகளும் வடபுலத்தில் நிலைகொண்டிருந்த 1940களில் சமூக சீர்திருத்த கருத்துக்கள் முதன்மை பெற்றன. அக்காலப்பகுதியில் தோன்றிய கவிஞர்கள் தேசநலன் மீது அக்கறை கொண்டவராகவும் சமூக விடுதலையின் பாற் தீராத அக்கறை கொண்டவராகவும் காணப்பட்டனர். இதனால் "வந்தே மாதர மென்போம் - எங்கள் மாநிலத் தாயை வணங்குதுமென்போம்" எனப் பாடிய பாரதியை பெரிதும் மதித்தனர். ஆங்கிலேயரின் பிரித்தாளும் தந்திரத்தினால் தமிழ்ச் சிங்கள முரண்பாடுகள் கோலொச்சத் தொடங்கிய நிலையில் தமிழையும் பிறந்த தாய் நாட்டையும் தாயெனப் போற்றிய பாரதி இலங்கைக் கவிஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தான். வடபுலத்தில் மு.நல்லதம்பி, ப.கு.சரவணபவன், வித்துவான் சு.வேந்தனார், அல்வாயூர் செல்லையா, வே.சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்), ஆ.ச.சபாபதி முதலியோர் இவ்வாறே பாரதியின் பாடல்களால் ஈர்க்கப்பட்டவர்கள். பாரதி வகுத்த பாதையிலே தம் பயணத்தைத் தொடர்ந்தவர்கள்.

1950ஆம் ஆண்டுஇலங்கையின் தேசிய கீதத்தை மொழிப்பெயர்த்தவரும் சமுதாயத்தில் காணப்பட்ட ஊழல்களைக் கண்டித்துப் பாடல்கள் பலவற்றை இயற்றியவருமான முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி பாரதியார் பாடல்களில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டவர். இவர் இயற்றிய "ஈழ நாடே கேள்", பொன்னிலங்கை", "இலங்கை" முதலான கவிதைகள் பாரதியின் அருட்டுணர்வினால் தோன்றிய கவிதைகளாகக் கூறலாம். தேச ஒற்றுமையையும் சமூக விடுதலையையும் பாடிய முதுதமிழ்ப்புலவர் பாரதியாரை போற்றியும் துதித்தும் பாடல்களைப் பாடியுள்ளார்.

"பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே ____ அதன்
சீரித பூாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ'"

துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தருகின்றன பாரதியாரின் புகழைப் பாடுகின்ற இக்கவிதை பாரதியாரின் பாடல்களில் காணப்படும் இலக்கிய நலன்களையும் எடுத்துரைக்கின்றன.

"பாரதி பாடி பாடல்களில் இன்றளவும் போற்றப்படுகின்ற பாடலாக அவருடைய "பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி" பாடலைக் கூறலாம். முற்றிலும் இறைவனுக்காகப் பாடற் பெற்ற "திருப்பள்ளி எழுச்சி" வடிவத்தை பாரதத்தின் தேசிய எழுச்சிக்காகப் பயன்படுத்தியவன் பாரதி. பாரதியிடம் மடைமாறிய இவ்வடிவத்தை "ஈழ மாதா திருப்பள்ளியெழுச்சி" யாகப் பாடிவர் ப.கு.சரவணபவன். இன ஒருமைப்பாட்டை விளக்கி எழுந்த ப.கு.சரவணபவனின் ஈழ நாட்டுக் குறம் பாடலிலும் பாரதியின் செல்வாக்குத் தனித்துத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மரபுவழித் தமிழ்ப் புலமையாளர்களுள் ஒருவராகிய வேந்தனார் தமிழறிஞராகவும் தாயகம் போற்றும் தமிழ்ப் பற்றாளனாகவும் தலைசிறந்த ஆசிரியராகவும் தரணி கண்ட கவிஞராகவும் விளங்கியவர். இவர் பாடிய "வீரனெங்கள் பாரதி" என்ற கவிதை பாரதியின் பெருமைகளை விளக்கி நிற்கிறது.

தாய் முலையைத் தழுவுகின்ற குழந்தை தானும்
தலைநிமிர்ந்து சுதந்திரத்தின் உணர்ச்சி கொள்ள
பாநிலையில் உயிரூட்டி உணர்ச்சி ஊட்டிப்
பயன் பெருக்கும் பாரதியைப் பாடி வாழ்வாம்

பாட்டென்றால் பண்டிதருக்கேயுரியது என்ற நிலையை மாற்றியமைத்த பெருமகனாகவும் கொடுமை கண்டு குமுறியெழும் வீரனாகவும் அஞ்சாமை ஆர்த்தெழுந்து விஞ்சு விறல் கொண்டெழும்பும் பாட்டு கவிஞாகவும் பாரதி இக்கவிதையில் சிறப்பிக்கப்படுகிறான். வேந்தனார் பாரதியைப் பாடியதோடு

நில்லாது பாரதியாரின் பாடல்கள் சிலவற்றுக்கு உரையும் எழுதி நூலாக வெளியிட்டிருந்தார். இந்நூல் 1965 ஆம் ஆண்டு பாரதியார் பாடல்கள் விளக்கவுரை என்ற தலைப்பில் ஸ்ரீ லங்கா புத்தகசாலை வெளியீடாக வெளிவந்தது. பாரதியாரின் தேசிய விடுதலைப் பாடல்களை அடியொட்டி வேந்தனார் பாடிய பாடல்கள் தமிழ் எழுச்சிப்பாடல்கள் இன்றளவும் வியந்து போற்றப்படுகிறது. பாரதியாரின் கவித்துவத்தை வியந்து போற்றி 25.03.1951 தினகரன் பத்திரிகையில் இவர் எழுதிய "விடுதலை முரசொலி கொட்டிய வீரக்கவிஞன்" என்ற கட்டுரை பாரதி மீது இவர் கொண்ட தீராத வேட்கையை வெளிப்படுத்தி நிற்கிறது. பாரதியார் கையாண்ட சொற்களின் வழி பாரதி பாடல்களின் பொருளாழத்தை விளக்கும் இக்கட்டுரை பாரதி குறித்து தமிழில் எழுந்த மிகச் சிறந்த கட்டுரைகளில் ஒன்றெனலாம்.

யாழ்ப்பாணம் கோப்பாயூர்க் கவிஞராகச் சிறப்பிக்கப்படும் சாரதா எனப்படும் க.இ.சரவணமுத்து பாரதியாரைச் சிறப்பித்து பாடியவர்களில் ஒருவர். இவருடைய "எங்கள் பாரதி" என்ற கவிதை செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த புதல்வனாய் பாரதியை எண்ணி போற்றிப் பாடுகிறது.

கவிதை வானில் ஒரு வளர்பிறையாக ஜொலித்தவர் அல்வாயூர் மு.செல்லையா. நவநீத கிருக்ஷ்ணபாரதியால் புலவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். திரு வி.க. அவர்களாலும் நாமக்கல் கவிஞராலும் தமிழறிஞர் சு.நடேசப்பிள்ளை அவர்களாலும் திறன் மிகு கவிஞராகப் போற்றப்பட்டவர். இவர் பாடிய "பாட்டுக்கொரு புலவன்" என்ற தேவியின் பாடல் மிகவும் பிரசித்தமானது. பாரதியார் என்பதை பாரதி யார்? என்ற வினாவை எழுப்பி பாரதியானவன் பொற்கொல்லன், வண்ணான், செக்கான், தச்சன், வேடன் என்று கூறி அவரை அடையாளப்படுத்துகிறார்.

> "(தமிழ்த்) தாய்க்கு புதுநகை செய்தணிவித்த
> பொற்கொல்லன் என்று புகல்வோம் – சாதிப்
> புன்மை அழுக்கினைப் போக்கிய வண்ணான் '.
> மோக மரத்தினைச் சீவி ____ சுதந்திர
> தாக மெனும் வண்டி செய்திடும் தச்சன்
> ஓம்சக்தி ஓம்சக்தி என்றே ____ வலி
> ஊட்டும் குழல் இசைத்தே தமிழ் மக்கட்
> பாம்பினை ஆட்டிய வேடன்

எனப் பாடிய இவர் பாடல் இன்றும் மக்களால் விதந்துரைக்கப்படுகிறது.

இலங்கை வானொலிக் கலைஞரும் மரபுவழிக் கவிஞரும், எழுத்தாளருமான கனகசபை செல்லப்பா நடராசா அவர்கள் விபுலாநந்தரைப் போலவே முத்தமிழ் வித்தகராக அறியப்பட்டவர். சிலம்பொலி, உள்ளதான ஓவியம் என்னும் கவிதைத் தொகுப்புகளின் வாயிலாக நன்கறியப்பட்டவர்.

06.10.1963இல் மாத்தளை இலக்கிய வட்டம் புனித தோமையார் கல்லூரியில் பாரதியாருக்கு விழா எடுத்தது. இவ்விழாவில் கவிஞர் கந்தவனம் பாரதி என்ற

தலைப்பில் கவிதை ஒன்றைப் பாடினார். அக்கவிதை அவரது "கவியரங்கில் கந்தவனம்" என்ற தொகுப்பில் இடம் பெறுகிறது. இங்கு பாரதி எளிமையினைப் படைத்தவனாகவும் பொதுவுடமைப் பாதை சமைத்தவனாகவும் காலத்துக் கேற்ற கவி புனைந்தவனாகவும் சித்திரிக்கப்படுகிறான்.

கலைச்செல்வி இதழில் ஆழமான கவிதைகளைத் தந்தவர்களில் ஒருவர் ச.சே. பஞ்சாட்சரம். பாரதியார் பாடல்கள் மீது ஈர்ப்புக் கொண்டு இவர் எழுதிய "பாரதி போற்றி" என்ற கவிதை அந்நியருக்கு எதிராக தமிழ்நாட்டவரை பாரதி வழிப்படுத்திய விதத்தினை எடுத்துரைப்புடன் பெண்விடுதலைக்கு எதிராக பாரதி போராடிய நெஞ்சுரத்தையும் கூறிநிற்கிறது.

அரியாலை தந்த இலக்கியச் செல்வமாகப் போற்றப்படுபவர் கவிஞர் வே.ஐயாத்துரை அவர்கள் கவியரங்குக் கவிஞராகவே வாழ்ந்து மறைந்தவர் பாரதி மீது பேரபிமானமிக்கவர். பாரதி பாதையில் தடம் பதித்த வே.ஐயாத்துரை "பாரெல்லாம் போற்றிடும் பாரதியே" என்ற கவிதையில் பாரதியை "பாரத புண்ணிய பூமியிலே அவதரித்த பாவலனாகவும் காரிருள் மேவிய நாட்டினில் பேரொளி வீசியவனாகவும் செந்தமிழ் ஓங்கிட நல் சீர் கவிதைகளைத் தந்தவனாகவும்" பாரதியைப் புகழ்ந்து பாடுகிறார்.

நெடுந்தீவு க.த.ஞானப்பிரகாசம் அவர்கள் "பாரதி பிள்ளைத்தமிழ்" என்ற நூலை எழுதி பாரதிக்குச் சிறப்புச் சேர்த்தார். பாரதியாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட இந்நூலுக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கம் பரிசில்கள் வழங்கி கௌரவித்தது. பாரதியைப் பத்துப் பருவங்களில் உள்ளடக்கி நூறு பாடல்களால் பாடப்பட்ட இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும் கைவரப்பெற்ற சிந்தனைச் சிறப்புமிக்க நூலாகும். இந்நூலுக்கான அணிந்துரையை பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களும் விதந்துரையை எவ்.எக்ஸ்.ஸி.நடராஜா அவர்களும் வழங்கியுள்ளனர்.

பாரதியாரின் கவிதைகள் மேல் ஈடுபாடு கொண்டவராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களும் காணப்படுகின்றார். 1958இல் வெளிவந்த இளங்கதிர் பத்தாவது ஆண்டு மலரில் சு.வித்தியானந்தன் அவர்களால் எழுதப்பட்ட "பாரதி சபதம்" என்ற கட்டுரை சமுதாய உயர்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாரதியாரின் "பாஞ்சலி சபதம்" கவிதையை ஆய்வுக்குட்படுத்துகிறது. அடிமைப்பட்டிருந்த தமிழ் சமூகத்திற்கு ஆண்மை ஊட்டுவதற்காகவும் வீழ்ந்து கிடக்கும் சமூகத்தைத் தட்டி எழுப்பும் முகமாகவே பாரதியார் இதனை எழுதினார் எனக் கூறும் பேராசிரியர் வித்தியானந்தன் பெண்ணின் பெருமையை விளக்கி நிற்கவும் சமூகத்தில் நிகழும் ஊழல்கள் மற்றும் அரசியலில் காட்சியளிக்கும் கொடுங்கோன்மை முதலானவற்றை வெளிக்கொணரும் இக்கவிதை துணை செய்வதாகவும் கூறுவார். பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் செந்தழல் 1982 ஆம் ஆண்டு இதழில் பாரதியின் ஆளுமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் "பாரதியின் மேதாவிலாசத்தின் அடிப்படைகள்" என்ற கட்டுரையையும் எழுதினார்.

பாரதிக்கு தமிழ்நாட்டில் நிலவி வந்த சித்தர் மரபு எவ்வாறு வழிகாட்டியாக அமைந்தது என்பதை துல்லியமாக எடுத்துரைக்கும் கட்டுரையாக இது அமைந்தது. பாரதி விழாவை சிறப்பிக்கும் வகையில் வெளிவந்த இம்மலரில் பாரதியின் வாழ்க்கை குறிப்புகள், செல்வி சே.கலாநிதியின் பாரதி பார்வையில் பாவையர்" என்ற கட்டுரையும் காணப்படுகிறது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பல்கலைக் கழக ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் விளங்கிய பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்கள் பாரதி குறித்து நிறைவான ஆய்வுகளைச் செய்தவராவார். பாரதியார் மீது ஆழ்ந்த பிடிப்பும் அக்கறையும் கொண்ட பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் பல்கலைக் கழகத்தில் விரிவுரைகளை நிகழ்த்தும்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் பாரதியாரை மேற்கோள் காட்டி ஆணித்தரமாகத் தன் கருத்துக்களை வலியுறுத்துவார். இவருடைய "வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை" என்ற நூலில் இடம்பெறும் "இரு தேசியக் கவிஞர்கள்" என்ற கட்டுரை பாரதத்தின் விடுதலைக்கு தேசபக்திப் பாடல்களைப் பாடி மக்கள் மனத்தில் சுதந்திரத்தீயை மூட்டிய பாரதியின் ஆளுமைகளை தெட்டத் தெளிவாக விளக்கிநிற்கிறது. கண்ணனைத் தேர்ச்சாரதியாகக் கண்டுணர்ந்து பாடியவன் பாரதி அதனை விளக்கமாகவும் நுட்பமாகவும் ஆய்வுக்குட்படுத்தி இவரால் எழுதப்பட்ட கட்டுரையே "பாரதி படைத்த தேர்பாகன்". பாரதியாரின் பாடல்கள் ஏற்படுத்திய தாக்கத்தை முன்னிறுத்தி பேராசிரியரால் எழுதப்பட்ட பிறிதொரு கட்டுரை "அனுபவித்த உணர்வும் அறிந்த உண்மையும்". பாரதியார் குறித்து இளங்கதிர் இதழில் இவர் எழுதிய கவியரசும் புவியரசும் என்ற கட்டுரை பாரதியின் இலக்கிய பங்களிப்புகளை ஆழமாக விளக்கி நிற்பதுடன் பாரதியின் சிந்தனை சமூகப் போக்குகளுக்கு மட்டுமின்றி, அவனது கவிதைகளுக்கும் உந்துசக்தியாக இருந்துள்ளன என்பதை எடுத்துரைக்கிறது. பக்திக்கு புதிய பரிணாமத்தைக் கொடுத்தவர் பாரதியார். பாரதியாரின் பக்தியுணர்வை வெளிப்படுத்தும் வகையில் தில்லைநாதன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளாக "விநாயகரைப் பாடும் பாரதி", "பாரதி கண்ட கண்ணன்" முதலானவற்றைக் கூறலாம். மரபார்ந்த கவித்தொடர்ச்சியில் ஒரு காலையும், மறுமலர்ச்சிக் கால இலட்சியங்களிலும் கற்பனாவாதத்திலும் மற்றொரு காலையும் ஊன்றியவாறே தன் படைப்புகளை எழுதிய பாரதியை தமிழுலகத்துக்கு சரியான முறையில் அடையாளப்படுத்தும் கட்டுரையாக "பண்டைய இலக்கிய மரபுகளும் பாரதியும்" கட்டுரையைக் கூறலாம். ஔவையார் ஏலவே ஆத்திசூடியைப் பாடியிருக்க பாரதியாருக்கு ஆத்திசூடி ஒன்றை பாட என்ன தேவை இருந்தது என்பதை ஆராயும் கட்டுரையே பேராசிரியரின் "புதிய ஆத்திசூடியொன்றினை பாரதி புனைந்ததேன்". மகாகவி பாரதியாரின் சமய, சமூக நோக்கை ஆழமாக வெளியுலகுக்கு வெளிப்படுத்திய ஈழத்தவர்களுள் பேராசிரியர் தில்லைநாதனும் ஒருவர் என்பது கண்கூடு.

பாரதியின் கவிதைகளில் காணப்பட்ட முற்போக்கான உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தன் ஆய்வை முன்னெடுத்தவராக பேராசிரியர்

க.கைலாசபதி அவர்களைக் கூறலாம். பாரதியில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட க.கைலாசபதி அவர்கள் பாரதியியல் என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தி தன் ஆய்வுகளை முன்னெடுத்தார். 1955 முதல் 1982 வரை இவ்வாய்வில் ஈடுப்பட்ட பேராசிரியர் பாரதியின் ஆளுமையையும் அவனின் பரந்த உலக நோக்கையும் வெளிப்படுத்தும் வகையில் 30 கட்டுரைகளை எழுதினார். இக்கட்டுரைகளில் 22 கட்டுரைகள் பாரதி ஆய்வுகள் என்ற தலைப்பில் அவர் மனைவியார் சர்வமங்களம் கைலாசபதியால் தொகுக்கப்பட்டு நூலாக்கம் பெற்றன. 1982இல் பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் வேளையில் பாரதி ஆய்வுகள் என்ற ஒரு நூலை எழுதத் திட்டமிட்டிருந்த க.கைலாசபதி அவர்கள் அதைத் தொடங்காமலேயே மறைந்து விட்டமை தமிழிலக்கியத்துக்குப் பேரிழப்பாகும்.

பாரதிப் பாடல்களை முழுமையாக நோக்கி, தமிழிலக்கிய மரபு, இந்து மதபாரம்பரியம் என்பவற்றின் பகைப்புலத்தில் அவற்றை மதிப்பிடும் முயற்சியை முதலில் மேற்கொண்டவர் சுவாமி விபுலாநந்தர். விபுலாநந்தரால் முன்னெடுக்கப்பட்ட பாரதி ஆய்வுச்சிந்தனைகளைத் தொடர்ந்தும் அவர் வழியில் முன்னெடுத்தவராகப் பேராசிரியர் க.கைலாசபதி காணப்படுகிறார். கைலாசபதி அவர்களின் பாரதி குறித்த முதலாவது எழுத்தாக்கமாக "பாரதியார் பழைமையும் புதுமையும் (Ceylon University Magazine – sept 1955) என்ற கட்டுரையைக் கூறலாம். க.கைலாசபதி அவர்கள் 1950களில் பல்கலைக்கழக மாணவனாகப் பயின்ற காலம் முதல் 1982 டிசம்பரில் இறுதி மூச்சுவிடும் காலம் வரை பாரதி பற்றிச் சிந்தித்தும் உரையாற்றியும் எழுதியும் வந்தார். 1982இல் மரணத் தருவாயில் எஸ்.திருச்செல்வம் எழுதிய "மகாகவி பாரதி" என்ற நூலுக்கு அளித்த முன்னுரையுடன் அவரது பாரதி சிந்தனை நிறைவுக்கு வருகிறது. மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந் நூலை எஸ்.திருச்செல்வம் பேராசிரியருக்கு சமர்ப்பணம் செய்திருந்தார். இதனை திருச்செல்வத்தின் கூற்று தெளிவுபடுத்தி நிற்கிறது.

"மகாகவி பாரதி" என்ற இந்நூலை இந்நூலுக்கு முதலுரையெழுதும் போது சுகவீனமுற்று, ஆஸ்பத்திரியில் படுக்கையிலிருந்தவாறே கடைசிப் பந்திகளையும் சொற்கூட்டிச் சொல்லி, என்னைக் கொண்டே எழுதுவித்து, கடைசியில் தன் எழுத்தையும் பார்க்காது கண்ணயர்ந்துவிட்ட

அன்புப் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுக்கே இது சமர்ப்பணம்"

இந்நூலுக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கிய பிராத்தனை உரை பாரதி மீது பண்டிதமணி கொண்ட ஈடுபாட்டையும் சுட்டிநிற்கிறது.

> "பாடாமல் இருக்க மாட்டாமை, பாரதியாருக்குப் பிறவிச்சொத்து. பாரதியாரின்இருதயம் பரிசுத்தமானது. அதில் ஒரு எண்ணம் உதிக்குமானால், அக்கணமே அவ்வெண்ணம் பாடல்களாய்க் குதிக்கும் பாடல்கள், பாலர் தொடக்கம் பண்டிதர்வரை யாரையும் இனிக்க வைப்பவை. பாடல்களைப் போலவே, வசனங்களும் புத்தம் புதியவை. இந்த ஆண்டு பாரதி நூற்றாண்டு. வானொலியிலும் பத்திரிகைகளிலும் அடிக்கடி பாரதியாரைத் தரிசிக்கின்றோம் இச் சந்தர்ப்பத்தில், அவருக்கு ஒரு வரலாறு எழுதி வெளியிடுவது பொருத்தம்""

பாரதியின் கவிதையை வேதாந்தம், சமூகச்சீர்திருத்தம், தேசிய நோக்கு, பொதுவுடைமை, கவிதைரசனை, மகாகவியாக இனங்காணல் என்ற சட்டகத்துக்குள் உள்ளடக்கி அணுகிய காலகட்டத்தில் அவரை வரலாற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தி அவருடைய ஆளுமையையும் அவருடைய தனித்தன்மைகளையும் வெளிக்கொண்டு வந்தவராகப் பேராசிரியர் கைலாசபதி காணப்படுகிறார். பாரதி குறித்த கைலாசபதி அவர்களின் ஆய்வுகளை பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் "பாரதியின் ஊற்றுக்களை நோக்குதல்", "பாரதி பாடல்களிலும் சிந்தனைகளிலும் புலப்படும் வளர்ச்சி மாற்றம் என்பவற்றை ஆராய்தல்", "கவிதையுலகில் பாரதி நிகழ்த்தியுள்ள தாக்கங்களை இனங் காணல்" என்ற வகையில் நோக்கியிருந்தார்.

"பாரதியார் — பழமையும் புதுமையும்", "பாரதியும் யுகமாற்றமும்", "சிந்துக்குத் தந்தை பாரதியும் சுந்தரம்பிள்ளையும்", "பாரதியும் மேனாட்டுக் கவிஞரும்", "பாரதி வகுத்த தனிப்பாதை", "பாரதிக்கு முன்", "பாரதியும் வேதமரபும்", "பாரதியாரின் கண்ணன் பாட்டும்", "பாரதி நூல்களும் பாட பேத ஆராய்ச்சியும் — சில குறிப்புகள்", "பாரதி நூற்றாண்டை நோக்கி — செய்ய வேண்டியவை — செய்யக் கூடியவை", "பாரதி ஆய்வுகள் — வளர்ச்சியும் வக்கிரங்களும்", "பாரதி நூல் பதிப்புகள், பாரதியார் கவிதையும் தமிழ்ப் புலமையும்", "பாரதியின் சமகாலத்தவரும் பாரதி பரம்பரையினரும்", "இலங்கை கண்ட பாரதி", "ஈழத்துத் தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம் (சில குறிப்புகள்)", "சிறு சஞ்சிகைகளில் பாரதி ஆய்வுகள்", "பாரதியின் புரட்சி", "முற்போக்காளரின் பாரதி ஆய்வுகள்", "பாரதியியலுக்கு ஒரு பங்களிப்பு", "பாரதி கண்ட இயக்கவியல்" என்னும் தலைப்புக்களில் "பாரதி ஆய்வுகள்" நூலில் இடம்பெறும் இக்கட்டுரைகள் பாரதி படைப்புக்களைப் புதிய நோக்கில் புதிய பார்வையில் முன்னெடுக்கவும் சிந்திக்கவும் துணைசெய்தன. கைலாசபதியவர்களின் "பாரதியும் வேதமரபும்" என்ற கட்டுரை அமைந்துள்ளது. நவீன இந்து மத இயக்கங்களான பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் என்பன எந்த அளவுக்கு பாரதியின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளனவென்பதை இது ஆராய்கிறது. இக்கட்டுரையில் ஆரிய சமாஜத்தின் செல்வாக்கே பாரதியிடம் மிகுந்து காணப்பட்டதாகக் கைலாசபதியவர்கள் கூற அக்கருத்தை பெ.சு.மணி மறுப்பார். பாரதி காலத்தில் பிற நவீன இயக்கங்கள் செல்வாக்குச் செலுத்திய அளவுக்கு ஆரிய சமாஜம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை எனக் கூறும் பெ.சு.மணி ஆரிய சமாஜம் பிறமதங்கள் தொடர்பாகக் கொண்டிருந்த நோக்கு, அணுகுமுறை என்பன பாரதிக்கு உடன்பாடானவை அல்ல எனவும் கூறுவார். பாரதியும் மேனாட்டுக் கவிஞரும் என்ற கட்டுரை விட்மனுக்கும் பாரதிக்கும் இடையில் "உள்ளக் கலப்பு" ஏற்படுவதற்குக் காரணங்களைக் கூறுவதுடன் பாரதியின் காதற்பாடல்களில் ஷெல்லியின் சாயல்கள் வெளிப்படுமாற்றையும் ஆராய்கிறது. பாரதி நூல்களும் பாட பேத ஆராய்ச்சியும் — சில குறிப்புகள் என்ற கட்டுரை "பாரதியாரின் கவிதைகளிலே பாடபேதங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வதுடன் அவர் இறந்த பின்னர் அவர் பாடல்கள் முழுமையாகத்

தொகுக்கப்படும்போது ஏற்பட்ட நெருக்கடிகளையும் வரலாற்றுத் தவறுகளையும் சுட்டி நிற்கிறது.

பாரதி நெஞ்சிலே வேரூன்றியிருந்த பழமை எச்சூழ்நிலையில் புதுமைக்கு வித்திட்டது என்பதை ஆராய்வதுடன் பாரதி வகுத்த புதிய பாடுபொருள் குறித்தும் பேசுகிறது. இதன் விரிவே கைலாபதி அவர்களின் "பாரதி வகுத்த தனிப் பாதை". பாரதியாரின் சிந்தனைகளிலும் படைப்பாற்றலிலும் நிகழ்ந்துள்ள வளர்ச்சிப் போக்குகளையும் மாற்றங்களையும் இக்கட்டுரை நுணுகி ஆராய்கின்றது. பாரதியின் தனித்தன்மைகளையும் அவனது இலக்கிய ஆளுமையையும் வெளிப்படுத்தும் கட்டுரையே "பாரதியும் யுக மாற்றமும்". பழைமை, புதுமை ஆகிய இரண்டிலும் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சாத்தியமாக்க முனைந்த பாரதியின் மேதாவிலாசத்தை இக்கட்டுரை உணர்த்தி நிற்கிறது. ஈழத்தவர்கள் பாரதியை எவ்வாறு நோக்கினர் என்பதையும் அவனது பாடல்கள் ஈழத்தில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தியது என்பதையும் ஆராயும் கட்டுரையே கைலாபதி அவர்களின் "இலங்கை கண்ட பாரதி".

1972 இல் கிளிநொச்சியில் இருந்து கரைச்சிப் பிரிவு கலைவிழா மலர் வெளிவந்தது. இம்மலரில் பாரதியாரையும் பாவலர் துரையப்பாபிள்ளையையும் ஒப்பு நோக்கி பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் "பாவலரும் பாரதியும்" என்ற தலைப்பில் ஓர் கட்டுரையை எழுதியுள்ளார். சமூக சீர்திருத்த கருத்துகளில் பாவலரும் பாரதியும் ஒன்றுபடும் இடங்களை ஆய்வுக்குட்படுத்தி இருவரும் சிறந்த கவிஞர்கள் என்பதை இக்கட்டுரையில் நிறுவிச் செல்கிறார். பாரதி ஆய்வுகள் என்ற நூலில் இக்கட்டுரை இடம்பெறவில்லை. அதுபோல பாரதியைக் கற்க வேண்டிய நெறி (இந்து மாணவன் நவராத்திரி சிறப்பிதழ் -1971) என்னும் கட்டுரையும் இந் நூலில் இடம்பெறவில்லை.

இந்தியாவின் இருபெருங் தேசிய கவிகளாக அடையாளங் காணப்பட்ட ரவீந்திரநாத் தாகூரையும் பாரதியாரையும் ஒப்பு நோக்கி க.கைலாசபதியவர்களால் எழுதப்பட்ட பிறிதொரு நூலே "இரு மகாகவிகள்"(1962). இந்திய சமூகம் அதன் அரசியல், பொருளாதாரம், சமயம் முதலிய தளங்களில் இருவரையும் ஒப்பு நோக்கி இவ்வாய்வை பேராசிரியர் முன்னெடுத்தார். க.கைலாசபதி அவர்களைத் தொடர்ந்து இவ்வாய்வை கங்கையும் காவிரியும் என்ற தலைப்பின் கீழ் முன்னெடுத்தவராக தொ.மு.சி.ரகுநாதன் காணப்படுகிறார். ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு மேலாக பாரதியார் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்ட பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தமிழ் மக்கள் பாரதியின் வரலாற்றுப் பாத்திரத்தை உரியவாறு இனங்காணத் துணைசெய்தார் எனக் கூறலாம்.

தினகரனின் பிரதம ஆசிரியராக கலாநிதி க.கைலாசபதி கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் பாரதியார் நினைவு நாளையொட்டி 07.091958 அன்று ஞாயிறு தினகரனில் "சூட்டி வைத்த நாமங்கள் சொல்லுந் தரமாமோ?" என்ற தலைப்பில் சில்லையூர் செல்வராசன் "தான்தோன்றிக் கவிராயர்" என்ற புனை

பெயரில் ஒரு கவிதையை எழுதினார். மேற்குறிப்பிட்ட கவிதையைப் பிரசுரித்ததோடு கைலாசபதி அவர்கள் நின்றுவிடாது முருகையன், மஹாகவி போன்ற பிரபல கவிஞர்கள் பலருடன் தொடர்பு கொண்டு ஒரு கவிதா மோதலையே ஏற்படுத்தினார். கவிஞர்களுக்கிடையில் பாரதி குறித்து எழுந்த இம்மோதல் "பாரதி கவிதைச் சமர்" என்ற பெயரில் தினகரனில் தொடர்ச்சியாக வெளிவந்தது. தான்தோன்றிக் கவிராயருக்குப் பதில் அளிக்கும் நோக்குடன் "நீர் கண்ட தோற்றம் நிசமல்ல, தான்தோன்றீ" என்ற தலைப்பில் கவிஞர் இ.முருகையன் மறுப்புக் கவிதையினை எழுதினார். அதற்கு தான்தோன்றிக் கவிராயர், "ஏலே முருகையா ஏன் உமக்கு இந்தலுவல் ?" என்று பதில் கவிதை எழுத இச்சமரில் மோட்டுக்கவிராயர், நீலாவணன் , மஹாகவி , ராஜபாரதி, மு.பொன்னம்பலம், பாவேந்தர் பட்டிக்காடனார், பரமஹம்சதாசன், பரணன் ஆகிய கவிஞர்கள் இணைந்து கொண்டனர். இக்கவிதைச் சமரை கமலினி செல்வராஜன் தொகுத்து தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக யூன் 2000ஆண்டு வெளிக்கொணர்ந்தார். இக்கவிதைகள் யாவரும் படித்து இன்புறும் வகையில் எளிமையாக பேச்சோசைப் பாங்கில் எழுதப்பட்டவை. அங்கதச்சுவையுடன் எழுதப்பட்ட இக்கவிதைகள் பாரதி கவிதைகளைப் படிக்காது அவருக்கு விழா எடுக்கும் குழுவினரைச் சாடுவதுடன் சமூகத்தின் மீதான விமர்சனங்களாகவும் அமைந்தன. கவிதை விமர்சகர்கள் மீதான கண்டனங்களாகவும் குழு மனோபாவத்துடன் இயங்கும் கவிஞர்கள் மீதான சாடல்களாக அமையும் இக்கவிதைச்சமர் தனிமனிதர்கள் மீதான தாக்குதல்களாக அமையாது ஆரோக்கியமான விவாதங்களுக்கும் வித்திட்டது.

பேராசிரியர் க.அருணாசலத்தின் பாரதியார் சிந்தனைகள் என்ற நூல் ஈழத்தில் பாரதியார் குறித்து வெளிவந்த மிக விரிவான நூலாகும். இந்நூல் "பாரதியாரின் கவிதைகளும் உரைநடை ஆக்கங்களும்", "பாரதியார் ஆஸ்திகன் - முற்போக்காளன்- பொதுவுடைமையாளன்", "பாரதியாரும் அரசியலும் - சாதி ஏற்றத்தாழ்வுகளும் விளைவுகளும்", "தொழிலாளரும் தொழிலும்", "கல்வியும் அறிவியலும்", "சமயமும் வாழ்வும்", "பாரதியாரும் கதை இலக்கியமும்", "தமிழ்சாதி" என்ற ஒன்பது பெரும்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. இந்நூலில் பாரதியாரும் அரசியலும் என்ற பகுதியை பேராசிரியர் அருணாசலம் விரிவாக நோக்குகிறார். இந்திய விடுதலை குறித்து பாரதியார் கொண்டிருந்த எண்ண வெளிப்பாடுகளையும் தேசிய விடுதலை இயக்கம் குறித்து பாரதி கொண்டிருந்த நிலைப்பாடுகளையும் இப்பகுதி இந்தியாவின் அரசியல் நிலைமைகள் பற்றிய கருத்துக்கள், நாட்டுத்தலைவர்கள், உலகநிலமைகள் என்ற மூன்று உபதலைப்பின் கீழ் ஆய்வுக்குட்படுத்துகிறது.

"பாரதியாரும் அரசியலும், சாதி ஏற்றத்தாழ்வுகளும் விளைவுகளும்" என்ற பகுதியில் பேராசிரியர், சாதியால் துண்டாடப்பட்ட தமிழகத்தையும் ஈழத்தையும் ஒப்பிட்டு நோக்குகிறார். இந்தியாவில் புரையேறிப் போயிருக்கும் சாதியத்தை பாரதியார் நோக்கில் இருந்து கூறும் இப்பகுதி சாதியத்துக்கு எதிராக பாரதியார் கொண்டிருந்த மனோபாவத்தையும் நேர்த்தியாகப் பதிவு செய்கிறது.

பாரதியாரின் உள்ளத்தில் சமவுடைமைக் கருத்துக்கள் ஏற்படுத்திய தாக்கத்தையும் தொழிலாளர்மீது பாரதியார் கொண்டிருந்த ஈடுபாட்டையும் தொழிலாளரும் தொழிலும் என்ற பகுதி விளக்கி நிற்கிறது. இதனை கலாநிதி அருணாசலம் அவர்கள் தொழில் என்ற பகுதிக்குள் விரிவாக நோக்குகிறார். கல்வியும் அறிவியலும் என்ற பகுதி பாரதத்தின் வளமிகு எதிர்காலத்துக்கு அறிவியல் துறை எவ்வடிப்படையில் உயரவேண்டும் என்பதை பாரதியாரின் ஆக்கங்களின் ஊடாக எடுத்துரைக்கிறது. நூலில் இடம்பெறும் "சமயமும் வாழ்வும்" என்ற ஏழாவது பகுதி "பாரதியார் விரதம்", "புராணங்கள்", "அன்னை பராசக்தி" என மூன்று பகுதிகளை உடையது. இப்பகுதி பாரதியின் ஆத்மீக ஈடுபாட்டையும் அனுபவங்களையும் விளக்குவதுடன் மதத்தின் பெயரால் பிளவுண்டு இருக்கும் தமிழக, ஈழத்தின் சமூக கட்டமைப்பையும் எடுத்துரைக்கிறது. இப்பகுதியில் பேராசிரியர் அருணாசலம் அவர்கள் "இந்துமதம், ஆத்மீகவாழ்வு" தொடர்பாக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் முன்வைத்த கருத்துக்களைப் பாரதியார் எவ்வாறு நோக்கினார் என்பதையும் எடுத்தாராய்கிறார். "பாரதியாரும் கதை இலக்கியமும்", என்ற எட்டாவது பகுதி சின்ன சங்கரன் கதையுடன் தொடர்படுத்தி பாரதியாரின் புனைவிலக்கிய ஆளுமைப் பரப்பை எடுத்தாராய்கிறது.

இறுதிப்பகுதியான தமிழ்சாதி என்ற பகுதி தமிழ்மொழி, தமிழர் குறித்த விரிவான பார்வையாக அமைகிறது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையும் பழம் பெருமைக்குள் புதையுண்டு இருக்கும் தமிழர்களின் நிலைப்பாட்டைக் கண்டு பாரதி அதிருப்தி அடைந்த நிலைகளையும் அருணாசலம் அவர்கள் தெட்டத் தெளிவாக எடுத்துரைக்கிறார். இப்பகுதிக்குள் இடம்பெறும் "கடல் கடந்த தமிழர்" என்ற உபபகுதி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மையங்கொண்ட பஞ்சத்தினால் இலட்சோ இலட்சம் தமிழர்கள் தமிழகத்தை விட்டு இடம்பெயர்ந்து வாழ்ந்த வாழ்வு பாரதியாரின் உள்ளத்தில் ஏற்படுத்திய வலியை எடுத்துரைக்கிறது. பாரதியாரின் கவிதைகளையும் அதேசமயம் அவருடைய உரைநடைகளையும் எடுத்து ஆராயும் இந்நூல் ஈழத்தில் பாரதி குறித்து வெளிவந்த முக்கிய நூல்களில் ஒன்றாகும்.

பாரதி குறித்த தெளிவான பார்வை கொண்டவராக பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் காணப்படுகிறார். பேராசிரியர் அவர்கள் அ.மாக்ஸூடன் இணைந்து "பாரதி மறைவு முதல் மகாகவி வரை" என்ற விரிவான நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். இந்நூல் பாரதியாரை தமிழ் பண்டிதர்களுக்கு மஹாகவியாக அறிமுகம் செய்யும் பொருட்டு எழுதப்பட்டது எனலாம். பாரதியார் பெண்களைக் குறித்துப் பேசியதால் அவரை மதிப்பற்று நோக்கியநிலையும் தமிழ்நாட்டில் காணப்பட்டது. தேசிய எழுச்சிப் பாடல்களை எழுதியதால் அவரைத் தேசிய கவிஞராகவே சிலர் ஏற்றனர். பாலகங்காதரத் திலகரை பின்பற்றி வேதம். கீதை பற்றி பாடியதால் பாரதியாரை வேதாந்த கவிஞராகவே கருதலாம் என கல்கி, ராஜாஜி முதலானவர்கள் இக்கருத்துக்களை முன்வைத்து பிரச்சாரம் செய்த வேளையில் மணிக்கொடிப்பத்திரிகையும் பாரதியாரை வேதாந்தச் சிமிலுக்குள்

அடைத்து வைத்துப் பார்த்தது. அந்நிலையில் பாரதியாரை மகாகவியாகக் கொண்டாடியவராக வ.ரா, நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர் முதலானோர் காணப்பட்டனர். 1921 - 1949 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழகத்தில் இவ்விரு குழுவினருக்கும் இடையில் நிலவிய வாதப் பிரதிவாதங்களையும் சமூக அரசியல் சூழல்களையும் அவற்றினால் பாதிப்புக்குள்ளான தமிழ் இலக்கியச் சூழலையும் சமூக வரலாற்றாய்வு மற்றும் இலக்கிய வரலாற்றாய்வு அடிப்படையில் விதந்துரைக்கும் நூலே பாரதி - மறைவு முதல் மகாகவி வரை என்ற நூலாகும். இந்நூல் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலத்தில் சமூக சீர்திருத்த கருத்துக்களைப் பாரதி எவ்வாறு முன்னெடுத்தார் என்பதையும் பாரதியார் பாடல்களை நாட்டுடமையாக்கியதில் ஜீவாவின் பணி எத்தகையது என்பதையும் ஆழமாகப் பேசுகிறது. "தமிழில் சிறுகதையின் தேற்றமும் வளாச்சியும்", "தமிழ் இலக்கியத்தில் "மதமும் மானுடமும்" ஆகிய நூல்களின் வாயிலாகவும் பாரதி பற்றிய பேராசிரியரின் கருத்துநிலைகளைக் கண்டு கொள்ளலாம்.

பாரதியை கவிஞனாக மட்டும் கருத்தாது சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, வசனகவிதை, இதழியல் துறைகளிலும் ஈடுபட்டு, தமிழ் இலக்கியத்திற்குத் தனது பங்களிப்பினை நல்கிய ஒருவனாகவே பேராசிரியர் கருதுகிறார். பாரதியின் சிறுகதை முயற்சி பற்றி பேராசிரியர் சிவத்தம்பி அவரகள் கூறும்போது

> "சுப்பிரமணியபாரதியார் பல சிறிய கதைகளை எழுதியுள்ளார். ஆனால், அவற்றைச் சிறுகதைகள் என்று கூறிவிடமுடியாது. சிறுகதை வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள சிறந்த சேவை தாகூர் கதைகள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தமையேயாகும். மொழிபெயர்க்கப்பட்டுள்ள கதைகளை வாசிக்கும் பொழுது சிறுகதைக்குரிய " உணர்வுக் கவிதாநிலை" நன்கு புலப்படுகிறது. மொழிபெயர்ப்பில் தமது உரைநடையால் எம்மைக் கவரும் பாரதியார், தாம் எழுதிய கதைகளை அந்த உருவ அமைதியுடன் எழுதாமற் போனது துரதிட்டமே. பாரதியார் எழுதிய சிறிய கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிப்பனவாக இருக்கின்றனவேயன்றிச் சம்பவங்களின் உணர்வு நிலையைக் காட்டு வனவாக இல்லை. (தமிழில் சிறுகதையின் தேற்றமும் வளாச்சியும்: 1980 - 23).

இக்கூற்றினை பொருத்தமில்லை எனக் கூறி மறுப்பாருமுளர். இன்று தமிழ்சிறுகதையின் முன்னோடி யாகப் பாரதியைக் கொள்வாருமுளர். பாரதியினுடைய சிறுகதைகளில் ரயில்வே ஸ்தானம் என்ற சிறுகதையை ஜெயமோகன் தமிழின் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகக் கருதுகிறார். பாரதியின் சிறுகதை நடையை வேகம் நிறைந்த நேரான நடையாகக் கொள்வாருமுளர். "அந்தரடிச்சான் சாஹிப்", "கிளிக்கதை", "காக்காய் பார்லிமெண்ட்", "குதிரைக் கொம்பு", "ஆறில் ஒரு பங்கு" முதலான கதைகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. பாரதியின் "காக்காய் பார்லிமெண்ட் கதை"யை இன்றும் சிலாகித்துப் பேசுவோர் உளர்.

பேராசிரியரின் "பாரதியின் மகாவித்துவச் சாதனை தமிழிலக்கியத்தில் பாரதி பெறும் முக்கியத்துவம் பற்றிய ஒரு குறிப்பு" என்ற கட்டுரை குறிப்பிட்டதோர் இலக்கியப் பாரம்பரியத்தில் இருந்து வரும் கவிஞன் இலக்கியத்தில் எவ்வாறு தொழிற்படுகிறான் என்பதையும் அத்தொழிற்பாடு அவனை எவ்வாறு

மகாகவியாக்குகிறது என்பதையும் விவரிக்கும் கட்டுரையே இதுவாகும். தமிழிலக்கியத்தில் பாரதி ஏற்படுத்திய தாக்கத்தால் விளைந்த புதுமையை விபரிக்கும் இக்கட்டுரை பாரதியின் அரசியல் இயக்கப்பாடும் கருத்துநிலையும் அவனை எவ்வாறு மகாகவியாக்க உதவியது என்பதையும் கூறிநிற்கிறது.

பேராசிரியரின் "மதமும் கவிதையும் - தமிழ் அநுபவம்" என்ற நூலில் பாரதி குறித்துப் பேசப்படும் விடயங்கள் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. பாரதியின் கவிதைகளில் வெளிப்படும் பக்தி உணர்வை பேராசிரியர் தமிழ் இலக்கியத்தின் புதிய வெளிப்பாடாக நோக்குகிறார்.

> "சுப்பிரமணிய பாரதியிடம் மத அநுபவம் ஒரு புதிய பரிமாணத்தை அடைகின்றது. சக்தி உபாசகராகிய பாரதி தேவியின் உருவில் நாட்டையும் மொழியையும் காண்கின்றான். இதனால் இந்தியத் தாய் தாய்த்தமிழ் என்ற கருத்துக்கள் உருவாகின்றன". பாரதி தன்னை சித்த மரபினனாகவே பார்க்கிறான். பாரதியின் பக்தி அவனது சமூக உருமைப் பாட்டுணர்வினதும் பொதுவுணர்வுப் போக்கினதும் வெளிப் பாடாகவும் அமைகின்றது"
>
> (மதமும் கவிதையும் - தமிழ் அநுபவம் -30)

பேராசிரியர் கூறும் கூற்று ஏற்புடையனவாகும். இவைமாத்திரமன்றி சி.பார்த்திபராஜாவின் "பாரதி கடந்த நூற்றாண்டுக் கவிஞன் பற்றிய மதிப்பீடு" என்ற நூலுக்கு வழங்கிய மதிப்பீட்டில் இருந்தும் பாரதியியல் நூலுக்குப் பேராசிரியர் வழங்கிய பின்னுரையில் இருந்தும் பாரதி குறித்த பேராசிரியரின் நோக்குநிலையை அறியலாம்.

பேராசிரியர் கா.சிவத்தம்பியைப் போன்று பேராசிரியர் பொ. பூலோகசிங்கமும் பாரதியின் ஆளுமைகளைப் போற்றிய ஒருவராகக் காணப்படுகின்றார். பாரதியாரின் உரைநடை குறித்தும் பாரதியாரின் படைப்புக்கள் எவ்வாறு வெளிவரவேண்டும் என்பது குறித்தும் பேசும் "சுப்பிரமணிய பாரதியாரின் உரைநடை" என்ற இவருடைய கட்டுரை பாரதியார் புனைகதை, கட்டுரை, நாடகம் முதலானவற்றில் கையாண்ட பல்வேறு உரைநடைகள் வகைகள் பற்றியும் பேசுகிறது. இக்கட்டுரை பாரதியாரின் தெளிவான நடையமைப்பை எடுத்துக் கூறுவதுடன் நின்றுவிடாது பாரதியின் வசன இலக்கியத்தில் மிளிரும் கவித்துவத்தையும் எடுத்துரைக்கிறது.

1982இல் யாழ்ப்பாணத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையால் பாரதி நூற்றாண்டு விழா கருத்தரங்கு தொடர் ஒன்று இடம் பெற்றது. மாதந்தோறும் நடைபெற்ற இவ்விழாவில் கருத்தரங்கு கட்டுரைகள் பல படிக்கப்பட்டு 1984இல் அக்கட்டுரைகள் பாரதி பன்முகப் பார்வை என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. இத்தொடரில் பாரதி குறித்து கட்டுரை படித்தவர்களாக இ.முருகையன், கே.செந்தில்வேல், அ.ஜெயரத்தினம், பேராசிரியர் மௌ.சித்திரலேகா, பேராசிரியர் மா.சின்னத்தம்பி, கலாநிதி ந.இரவீந்திரன், பேராசிரியர் சி.மௌனகுரு, சிவ.இராஜேந்திரன், பேராசிரியர் எம்.ஏ.நு/மான், பேராசிரியர் சி.தில்லைநாதன் போன்றவர்கள் காணப்படுகின்றனர். இவர்களால் முறையே "காலமாற்றங்களும் பாரதியும்", "தேசிய இயக்க நெறிகளும் பாரதியும்", "பொருளியல் சிந்தனைகளும்

பாரதியும்", "பாரதியும் பெண்விடுதலையும்", "வர்க்கங்களும் பாரதியும்", "அரசியல் இலக்கியமும் பாரதியும்", "கலைகளும் பாரதியும்", "கல்வியில் சிந்தனைகளும் பாரதியும்", "பாரதியும் நவீனத்துவமும்", "பாரதியும் இலங்கையும்" போன்ற கட்டுரைகள் படிக்கப்பட்டன. பாரதி குறித்து இலங்கையில் வெளிவந்த சிறந்த கட்டுரைத் தொகுப்புகளில் இதுவுமொன்று. இக்கருத்தரங்கிலே பாரதியை ஆன்மீகக் கண்ணோட்டத்தில் யாருமே நோக்காததைக் கண்டறிந்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் ந.இரவீந்திரனைக் கேட்டுக்கொண்டமைக்கிணங்க இவரால் எழுதப்பட்ட நூலே பாரதியின் மெய்ஞ்ஞானம் ஆகும். இந்நூல் பாரதியின் சிந்தனையை தெளிவாக எடுத்துரைப்பதுடன் வரலாற்றில் பாரதிக்கு வழங்கப்படவேண்டிய இடம் எதுவென்பதையும் சுட்டி நிற்கிறது.

பேராசிரியர் க.கைலாசபதி அவர்களைப் போலவே பல்கலைக் கழக வாழ்வில் முதல் கட்டுரையாக பாரதி குறித்து எழுதியவர்களாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களையும் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் அவர்களையும் கூறலாம். இந்துதர்மம் இதழில் "பராசக்தியும் பாரதியும்" என்னும் கட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் எழுதியிருக்க பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் "பாரதி கண்ட கண்ணன்" என்ற தலைப்பில் பிறிதொரு கட்டுரையை எழுதியிருந்தார். இத்தலைப்பில் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களும் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். பாரதியாரின் இலக்கிய வெளிப்பாட்டு மொழி குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட ஈழத்துப் பேராசிரியர்களான எம்.ஏ.நுஃமான், அ.சண்முகதாஸ் போன்றவர்களைக் கூறலாம். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் 1984களில் பணியாற்றிய காலப்பகுதியிலேயே பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் "பாரதியின் மொழிச் சிந்தனைகள்: ஒரு மொழியியல் நோக்கு" என்ற நூல் வெளிவந்தது. "பாரதியின் மொழி உணர்வு", "பாரதியும் தமிழ் இலக்கணமும்", "மொழி மாற்றமும் பாரதியும்", "மொழி வளர்ச்சியும் பாரதியும்", "இந்தியாவுக்குப் பொதுப் பாஷை" என்னும் அதிகாரங்கள் வழி பாரதியின் மொழிச் சிந்தனையை ஆராயும் நூலே இதுவாகும்.

பாரதியின் உலகியல் நோக்கை பேராசிரியர் க.கைலாசபதி வழியில் முன்னெடுத்தவராக முனைவர் மனோன்மணி சண்முகதாஸைக் கூறலாம். இவரால் பட்டக்கற்கை மாணவர்களை மனத்திற் கொபண்டு எழுதப்பட்ட நூலே "பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப்பாட்டு". இவர் எழுதிய "பாரதியின் புலமைத்துவம்" என்ற நூல் "விநாயகர் நான்மணிமாலை" முதல் "கற்பு —— சங்கச் சான்றோர் முதல் பாரதி வரை" ஈறாக பன்னிரண்டு கட்டுரைகளை உள்ளடக்கியது. பாரதியின் பாடல்களில் விஞ்சிநிற்கும் தெய்வ பக்தியை இவருடைய "விநாயகர் நான்மணிமாலை", "பாரதியும் பராசக்தியும்", "நான் விரும்பிய காளி தருவாள்", "பாரதியும் முருகனும்", "பாரதியின் கண்ணன் பாட்டு —— ஒரு நோக்கு", "கண்ணன் பாட்டில் அணிநயம்", "பாரதியின் தெய்வீகமும் மானிடமும்" முதலான கட்டுரைகளை எடுத்துரைக்கின்றன. பெண்மைக்கு முதலிடம் கொடுத்துப் பாடிய பாரதியின் பாடல்களை "மனமென்னும்

பெண்ணே", "பாரதியார் கவிதைகளில் பெண்மை மரபு நிலையும் புரட்சி நிலையும்", "பாரதியின் பெண்கள் விடுதலைக் கும்மி — ஒரு நோக்கு", "கற்பு — சங்கச் சான்றோர் முதல் பாரதி வரை" முதலான கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. பாரதி குழந்தைகளுக்குப் பாடிய பாடலான பாப்பாப்பாட்டை சிறுவர்களின் விளையாட்டு, பறவைகள், விலங்குகளோடு அவர்கள் கொண்டுள்ள உறவுநிலை என்பனவற்றின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தும் கட்டுரையே "பாரதியின் பாப்பாப்பாட்டு". சமூகத்தளத்தில் பாரதியின் ஆளுமையை பன்முகநோக்கில் ஆராயும் கட்டுரைகளாக இவைகள் காணப்படுகின்றன. மனோன்மணி சண்முகதாஸ் அவர்களைப் போலவே பாரதியாரின் குழந்தைப் பாடல்களை ஆய்வுக்குட்படுத்தியவர் மயிலங்கூடலூர் பி.நடராசன். "பாரதியாரும் சிறுவர்களும்" என்ற இவருடைய கட்டுரை பாரதியாரிடம் குழந்தைக் கவிதைகள் தோன்றியமைக்கான பிற்புலத்தை ஆராய்கிறது. நிஜமும் மயிலங்கூடலாரின் கற்பனையும் ஒன்றிணைந்து படைக்கப்பட்ட சுவையான கட்டுரை இதுவாகும்.

க.கைலாசபதி அவர்களின் ஆளுமைமிக்க மாணவர்களில் ஒருவரான கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்களும் பாரதியை பன்முக நோக்கில் அணுகியவர். இவருடைய திறானாய்வு நோக்கில் பாரதி என்ற கட்டுரை பாரதியின் அறிவுத்தளம் புலப்படுத்தி நிற்கும் படைப்புக்களையும் அவை குறித்து எழும் முரண்பாடுகளையும் விமர்சன நோக்கில் அணுகுகிறது. "பாரதியும் உமாபதியும் சில பொதுமைக் கூறுகள்" என்ற இவரின் கட்டுரை பதினான்காம் நூற்றாண்டில் தத்துவ தளத்தில் இயங்கிய உமாபதி சிவாச்சாரியரையும் மனிதநேயத்துடன் அரசியல், பத்திரிகைத் தளத்தில் இயங்கிய பாரதியையும் காலஉணர்வு, வருணதர்மம் என்றடிப்படையில் ஒன்றிணைத்து ஆராயும் கட்டுரையாகும்.

கலாநிதி நா.சுப்பிரமணியனைப் போல பாரதியை ஒப்பியல் நோக்கில் ஆய்வுக்குட்படுத்திய பிறிதொருவர் மயிலங்கூடலூர் பி.நடராசன். பாவலரும் பாரதியாரும் என்ற இவருடைய கட்டுரை பாரதிக்கு பல வழிகளில் முன்னோடியாகத் திகழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளையின் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கிறது. இவருடைய பிறிதொரு கட்டுரையான "மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் மஹாகவி உருத்திரமூர்த்தியும்" என்ற கட்டுரை துரையப்பாபிள்ளை, பாரதி வழியில் தோன்றிய மஹாகவி உருத்திரமூர்த்தி பாடலுக்கும் பாரதி பாடலுக்கும் இடையில் நிலவும் ஒற்றுமைகளை ஆய்வுக்குட்படுத்துகிறது. இருவரும் சமூகத்தைப் பாடியதாலும் தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்தமையாலும் சுயசரிதை, காவியங்களைப் பாடியமையாலும் ஒன்றுபடுவதாகக் கூறும் நடராசன் இருவரினது வரவாலும் தமிழ் இலக்கியத்தில் தோன்றிய புதிய ஊற்றுகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்களும் பாரதியார் மீது அதீத அன்பும் ஈடுபாடும் கொண்டவர். இவரும் அவ்வப்போது பாரதியார் குறித்து உரையாற்றியும் எழுதியும் வந்துள்ளார். அவ்வகையில் இலங்கை வானொலி கலைப்பூங்கா நிகழ்ச்சியில் இவர் எழுதி படிக்கப்பட்ட கட்டுரையே "இருநோக்கு : குயிற்பாட்டு, பத்மாவதி சரித்திரம்". வாழ்க்கையின் துன்பங்களில் இருந்து விடுபடவே பாரதி

குயிற் பாட்டை படைத்தான் என்ற கண்ணோட்டத்தில் பாரதியின் குயிற்பாட்டை ஆய்வுக்குட்படுத்தும் பேராசிரியர் இந்தியப் பண்பாட்டில் வேர்கொண்ட நம்பிக்கைகளோடும் மரபுகளோடும் அதனைப் பொருத்தியும் பார்க்கிறார்.

பாரதியாரை சிந்து இசையின் தந்தையாக பாரதிதாசன். பேராசிரியர் க.கைலாசபதி முதலானோர் வலியுறுத்தி வந்த காலப்பகுதியில் இதனை மறுத்து புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் சிந்து இசையின் தந்தை பாரதி அல்ல என்பார். சிந்து எனும் இசை மிகப்பழமையானது என்பதை தேவாரங்களை ஆதாரமாகக் கொண்டு நிரூபிப்பதுடன் பாரதி சிந்து இசைக்கு உயிரூட்டினாரேயன்றி அதன் தந்தையல்ல என்பார்.

பாரதியார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையைக் கூட மாற்றிப்பபோட்டமைக்கு உதாரணமாக மல்லிகை ஜீவாவின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தைக் கூறலாம். கம்யூனிஸ்ட் கட்சியை தமிழகத்தில் உருவாக்கப் பாடுபட்ட ஜீவானந்தம் அவர்கள், அக்கட்சி தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டபோது, இலங்கை வந்து தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். அக்காலகட்டத்தில் பாரதியின் பாடல்களையும் சிந்தனைகளையும் இலங்கையில் இலக்கிய மேடைகளில் முழங்கினார் ஜீவா. அவரின் ஆளுமையால் கவரப்பட்ட மல்லிகை ஆசிரியர் ஆவுறாம்பிள்ளை டொமினிக் தனது பெயரை டொமினிக்ஜீவா என மாற்றிக்கொண்டார். இறக்கும் வரைக்கும் அப்பெயரினூடாகவே அறியப்பட்டார்.

இலங்கையில் வேறெங்கிலும் இல்லாதவாறு அதிகளவு சனசமூக நிலையங்கள் பாரதி பெயரால் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றன. அவ்வகையில் மானிப்பாய்க் கிழக்கு சனசமூக நிலையம், நாவற்குழி பாரதி சனசமூக நிலையம், அல்வாய் மேற்கு மாறம் புலம் சனசமூக நிலையம் நாயன்மார் கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையம், இருபாலை பாரதி கலாமன்ற சனசமூக நிலையம், கம்பர்மலை பாரதி சனசமூகநிலையம், அனலைதீவு துறைமுகப்பகுதியில் அமைந்திருக்கும் பாரதி சனசமூகநிலையம், என்று அடுக்கிக் கொண்டே போகலாம். 1970களில் கிளிநொச்சியில் பாரதியாரின் பெயரில் பாரதிபுரம் என்ற கிராமம் உருவாக்கப்பட்டதுடன் அங்கு பாரதிபுரம் மகா வித்தியாலயம் என்ற பாடசாலையும் உருவாக்கப்பட்டது. யாழ்.மயிலிட்டி வடக்கு கலை மகள் வித்தியாலயம் 1980களில் இருந்து “பாரதி” என்ற பெயரில் தம் கல்லூரி நூலைத் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் 1977இல் வைமன் வீதியில் பாரதியாருக்கு சிலை ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது. ஈழத்தில் பாரதி மரபானது தொடர்ந்து விரிவுபடுத்தி வந்துள்ளமையை மேற்குறித்த காரணிகள் விளக்கி நிற்கின்றன. சிறுசஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இன்று பாரதி பாடல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதுடன் அவர் குறித்து எழுதப்பட்ட கட்டுரைகளையும் பிரசுரித்து வருகின்றன. இலங்கையின் வடபுலத்தில் வெவ்வேறு முறையில் அவர் குறித்த ஆய்வுகள் நடந்த வண்ணமேயுள்ளன. தொடர்ந்து இப்பணியை முன்னெடுத்துச் செல்வது நம் அனைவரினதும் தலையாய பணியாகும்.

# கிழக்கிலங்கையில் பாரதியின் செல்வாக்கு

- கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்,

இந்தியாவில் தேசிய விடுதலைப் போராட்டமும், சமூக சீர்திருத்த சிந்தனைகளும் எழுச்சி பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவர் பாரதி. இத்தகையதொரு சூழலில் அவர் தமிழ் இலக்கிய ஓட்டத்தில் பெருமாற்றமொன்றினை ஏற்படுத்தினார். நவீன தமிழ்க் கவிதையைத் தோற்றுவித்து ஒரு பாய்ச்சலை ஏற்படுத்திய அவர் அக்கவிதைகளை சமூக, அரசியல் விடுதலைக்கான ஆயுதமாகவும் கருதினார். இந்நிலையில் பாரதியின் பாடல்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் பிரபலமடைந்து அனைவரையும் கவர்ந்தன.

இலங்கையில் விபுலாநந்தர், மீனாட்சியம்மாள் நடேசையர் முதலானோர் பாரதியின் பாடல்களின்பால் கவரப்பட்டு பாரதியின் புகழைப் பரப்பிக் கொண்டிருந்தனர். பல கவிஞர்கள் அவரது கவிதையின்பால் ஈர்க்கப்பட்டுக் கவிதைகள் பாடினர். ஈழகேசரி, மறுமலர்ச்சி, பாரதி முதலான சஞ்சிகைகள் பாரதியின் தேசியவாதக் கருத்துக்களையும் நவீன சிந்தனைகளையும் உள்வாங்கி வெளிவந்தன. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத் தாக்கம், ஈழத்து அறிஞர்களின் தமிழகத் தொடர்பு, சனசமூக நிலையங்களின் உருவாக்கம் முதலானவை ஈழத்தில் பாரதியின் புகழ் பரவக் காரணங்களாயின.

இத்தகைய சூழலில் கிழக்கிலங்கையிலும் பாரதியின் செல்வாக்கு வலுப்பெறத் தொடங்கியது. 1920 களில் இருந்து இந்தத் தாக்கத்தைச் சுவாமி விபுலாநந்தரின் வழி அறிய முடிகின்றது. இராமகிருஷ்ண மடத் தொடர்பினால் அனைத்து உயிர்களையும் சமனாகக் காணுகின்ற வேதாந்த ஞானத்தைப் பெற்றிருந்தவர் விபுலாநந்தர். இத்தகைய ஞானம் பாரதியின் கொள்கையின் மீது அவருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பாரதியின் கருத்து வளத்தினாலும் நவீன சிந்தனைகளாலும் கவித்துவத்தினாலும் கவரப்பட்ட விபுலாநந்தர் அவரை ஒரு மகா கவியாக, புதுமைக் கவியாகக் கருதினார்.

தமிழகத்திலேயே பாரதியின் புகழைப் பரப்பிய மூலவராக விளங்கிய அவர் அதற்குமுன் 1920 களிலேயே கிழக்கிலங்கை உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் பாரதி பாடல்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

அவர் கிழக்கிலங்கையில் ஆசிரியராகவும், அதிபராகவும், பாடசாலைகளின் முகாமையாளராகவும் பணியாற்றியபோது பாரதி பாடல்களைக் குறிப்பாகச்

சிறுவர்களுக்கு சுவைபட ஊட்டினார். 1920 களின் நடுப்பகுதியில் திருகோணமலை இந்துக்கல்லூரியில் பணியாற்றியபோது பாரதி பாடல்களைப் பிள்ளைகளுக்கு ஊட்டிய விதத்தினை சி. தண்டாயுதபாணி தனது அனுபவக் குறிப்பாகப் பின்வருமாறு கூறுகின்றார்:

> "சுவாமி விபுலாநந்தரின் கையில் எப்போதும் பாரதி பாடல்கள் புத்தகம் இருக்கும். கீழ் வகுப்புப் பின்ளைகளை ஒன்றாகச் சேர்த்து வைத்து அவர் பாரதி பாடல்களைப் பாடுவார். அவரைத் தொடர்ந்து பிள்ளைகள் பாடுவார்கள். தீராத விளையாட்டுப் பிள்ளை, ஓடி விளையாடு பாப்பா, அச்சமில்லை அச்சமில்லை, உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி போன்ற பாடல்கள், சுவாமி அவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து அடிக்கடி பாடுகின்ற பாடல்களாக இருந்தன" (2017:95).

என்று கூறுவது பாரதியின் பாடல்கள் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது. பாரதியின் சிந்தனைகளையும் அவரது பாடலின் சுவையினையும் குழந்தைப் பராயத்திலேயே ஊட்டி அவற்றை மக்கள் மயப்படுத்த சுவாமி முனைந்திருக்கின்றார். அவர் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமையாளராக இருந்தபோது கிழக்கிலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் போதும் சிறுவர்களுக்குப் பாரதி பாடல்களை நயமோடு ஊட்டியதாகவும் அறியமுடிகின்றது.

விபுலாநந்தர் தனது சொற்பொழிவுகள் மூலமாகவும் பாரதி பாடல்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றார். முக்கியமாக பாரதியின் பாடல்களைப் பாடியும் ரசனையோடு அவற்றை விளக்கியும் பாரதியின் கவிதைகளை ரசிக்கத் தூண்டினார். அந்தவகையில் கிழக்கிலங்கையில் பாரதி பற்றிய பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார். உதாரணமாக மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியில் 1933 இல் நடைபெற்ற ஆசிரியர்கள் மாநாட்டில் பாரதியின் பாடல்கள் பற்றி ரசனைமுறையில் ஆற்றிய ஒன்றரை மணித்தியாலச் சொற்பொழிவு இதற்கு எடுத்துக்காட்டு.

அந்த உரையைக் கேட்ட டாக்டர் வே. பஞ்சாட்சரம் என்பவர் "அன்றைய தினத்துக்குப் பின் பாரதியாரின் கவிதைகள் கற்றோரினதும், மற்றோரினதும் மனங்களில் மறையா திரவியமாயிற்று" என்று கூறுவதும் (2017:225), அக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய கல்விப் பணிப்பாளர் றொபிசன் என்ற ஆங்கிலேயர் "அடிகளார் அபிநயத்துடன் பாடும்போதும், பேசும்போதும் சபையோர் தங்கள் வாய்களைத் திறந்தவண்ணம் செவிக்கூடாக மட்டுமன்றி வாய்க்கூடாகவும் கண்களைச் சிமிட்டாமல் கண்களாலும் ரசித்தார்கள் என்பதை நான் கவனித்தேன்" என்று கூறுவதும் (மேற்கோள்: பஞ்சாட்சரம், வே., 2017: 225) விபுலாநந்தர் பாரதியார் பாடல்களை மக்கள் மத்தியில் செல்வாக்குறச் செய்த விதத்தைக் காட்டுகின்றன. இவை தவிர விபுலாநந்தர் பாடசாலை மட்டங்களில் பாரதி பற்றிப் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கின்றார்.

**பாரதியார் கவிநயம், பாரதி பாடல்** முதலான கட்டுரைகள் மூலமாகவும் பாரதியின் பெருமையினையும் கவிதா ஆற்றலையும் விபுலாநந்தர் பலவாறு

அறிமுகம் செய்திருக்கின்றார். இத்தகைய கட்டுரைகளும் கிழக்கிலங்கை அறிஞர் மத்தியில் பாரதியின் பெருமையை உணர்த்தியிருக்க வேண்டும். 1932 இல் அண்ணமலைப் பல்கலைக்கழகச் சஞ்சிகையில் எழுதிய The Development of Tamil Religious thought என்ற ஆங்கிலக் கட்டுரையில்,

> "பெருமைமிகு நாகரிகத்தின் வாரிசுகளாகிய தமிழ்மக்கள் தமது புதுமைக் கவியின் பார்வை கொண்டு உலகை நோக்கி குறுகிய மத சமூக சம்பிரதாயங்களை ஒதுக்கிவிட்டு செம்மை, அழகு, உண்மை என்ற ஊற்றிலிருந்து கிளம்பி தெய்வீகத்திற்கு இட்டுச் செல்லும் பாதையிலே வீறுநடை போடுவார்களாக" (மேற்கோள்: சண்முகதாஸ், 2017: 141)

என்று பாரதியின் சிந்தனைகளைப் பின்பற்றுமாறு நம்மையும் அழைப்பது அவர் பாரதியின் கொள்கைமீது கொண்ட பற்றைக் காட்டுகின்றது. பாரதியின் பல கொள்கைகளைத் தன் வாழ்விலும் அவர் கடைப்பிடித்தார்.

விபுலாநந்தர் பாரதியின் சிந்தனைகளை, கவிதைகளைப் பரப்புரை செய்தவராக விளங்க, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பாரதியின் தாக்கத்தைக் கவிதைகளில் வெளிப்படுத்திய கிழக்கிலங்கையின் ஆரம்பகாலப் புலவராக விளங்குகின்றார். புலவர்மணி விபுலாநந்தருடன் கொண்ட உறவும், அதனூடாக இராமகிருஷ்ண சங்கத் தத்துவத்தினால் அவர் கவரப்பட்டமையும், 1920 களில் இந்தியாவில் பசுமலையில் வாழ்ந்தபோது தேசிய விடுதலைப் போராட்ட நிகழ்வுகளால் பெற்ற அனுபவங்களும் அவருக்குப் பாரதியின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்தின. சமத்துவ நோக்கும், சாதிய எதிர்ப்புணர்வும், சாதாரண மக்கள் மீதான நாட்டமும் அவரது கவிதைகளில் விரவி வருகின்றன.

புலவர்மணி பாரதியை தேசியக் கவிஞனாக, மகா கவிஞனாக, புதுமைசெய் ஞானக் கவிஞனாகப் பார்க்கின்றார்.

> தீயைப் பிழிந்துகவி செய்தானோ —— வீறு
> சேர்ந்த வீரக்கனலைப் பெய்தானோ
> மாயப் பகைகளெல்லாம் பொடிபடுமே —— மானம்
> வளரும் தேசியக் கவி வெம்மையிலே

பாரதியின் கவிதா ஆற்றலை வியந்து போற்றுகின்றார். பாரதிக்கு அஞ்சலி என்ற கவிதையில் பாரதியின் கவிதைகளின் இனிமை, உள்ளத்தை உருக்கும் தன்மை என்பவற்றைப் பலவாறு ஏற்றிப் புகழ்கின்றார். இறுதியிலே "பரவசமாகி கூடி நம்முட் கலந்த பாரதியை" என்று பாரதி புலவர்மணியினதும் நமதும் மனங்களில் நிறைந்துவிட்ட தன்மையைப் பாடுகின்றார்.

புலவர்மணி பாரதியின் தேசியப் பாடல்களில் அதிகம் கவரப்பட்டிருந்தார். அவரது தேசியக் கவிதைகள் பல பாரதியாரின் கவிகளின் சாயலைக் கொண்டிருந்தன.

> இலங்கை மணித்திருநா டெங்கள்நாடே - இந்த
> இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே

என்று தொடங்கும் "இலங்கை மணித் திருநாடு" என்ற தலைப்பில் அமைந்த கவிதையைத் தனது முதலாவது தேசிய கீதம் என்று கூறுகின்றார். அவரது தேசப்பற்றின் சிகரமாக அமையும் இப்பாடல் "எங்கள் நாடு" என்ற பாரதியின் பாடல் வழி வருவதாகும். இலங்கை சுதந்திரம் அடைந்தபோது அவர் பாடிய "சுதந்திர கீதம்" என்ற பாடல் "தமிழ்மொழி வாழ்த்து" என்ற பாரதி பாடலின் மெட்டில் அமைவது என்று அவரே குறிப்பிடுகின்றார்.

அடுத்து, 1930 களில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த "கிழக்குத் தபால்" என்ற பத்திரிகை வழியாகவும் இக்காலத்தில் கிழக்கிலங்கையில் பாரதியின் செல்வாக்கை ஓரளவு அறிய முடிகின்றது. இதற்கு புலவர்மணியும் ஆசிரியராக இருந்தார். இப்பத்திரிகை,

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்ற பாரதியின் வாக்கை மகுட வாக்கியமாகத் தாங்கியிருந்தமை அது பாரதியின் சிந்தனைகளுக்கு ஆட்பட்டிருந்ததைக் காட்டுகின்றது. இப்பத்திரிகையில் பாரதி பற்றிய கட்டுரைகளும் கவிதைகளும் அதிகம் வெளிவந்தன. எனினும் அதன் ஒரு பிரதியைத் தவிர ஏனைய பிரதிகள் கிடைக்கப் பெறாமையால் பாரதியின் தாக்கத்தைச் சரியாக அறிய முடியாதுள்ளது.

1940 களில் இலங்கையில் பாரதியின் தாக்கத்துக்குட்பட்டு மறுமலர்ச்சி, கொழும்பு பாரதி முதலான சஞ்சிகைகள் வெளிவந்த சூழலில் மட்டக்களப்பில் மண்டூர் என்ற கிராமத்தில் இருந்து வெளிவந்த "பாரதி" என்ற முற்போக்குச் சஞ்சிகை பாரதியின் நவீன சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட செபரெத்தினம், தட்சணாமூர்த்தி, நாகலிங்கம் ஆகிய இளைஞர்களால் 1948—1950 வரை வெளியிடப்பட்டது. இக்காலத்தில் கிழக்கிலங்கைக் கிராமங்களில்கூட பாரதியின் சிந்தனைகள் தாக்கம் செலுத்தியிருந்ததை அச்சஞ்சிகை உணர்த்துகின்றது.

சாதிச் சண்டை போச்சோ —— உங்கள்
சமயச் சண்டை போச்சோ

என்ற பாரதியின் கவிதை அடிகளை மகுட வாக்கியமாகக் கொண்டு பாரதி சஞ்சிகை வெளிவந்ததோடு அதன் உப பிரிவுகளான மங்கையர் மன்றம், பாலர் பகுதி ஆகியனவும் பாரதியின் கவிதையடிகளை மகுட வாக்கியங்களாகக் கொண்டு வெளிவந்தமை குறிப்பிடத் தக்கது. பாரதியின் சீர்திருத்த, நவீன சிந்தனைகளை மக்கள் மயப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இச்சஞ்சிகை செயற்பட்டிருக்கின்றது. அந்தவகையில் இவ்விதழில் பாரதியின் தாக்கத்தை இரு வகைகளிலே நாம் தரிசிக்கலாம்.

ஒன்று பாரதியின் நவீன சிந்தனைகளை உள்வாங்கிய படைப்புகளுக்கு அவர்கள் முன்னுரிமை கொடுத்திருக்கின்றனர். அந்தவகையில் சாதிய வேறுபாடுகளை விமர்சித்தல், பெண் விடுதலைக் கருத்துக்கள், வர்க்க வேறுபாடுகளுக்கு எதிரான

குரல், தேசிய மற்றும் மொழியுணர்வு முதலான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல பாரதி சஞ்சிகை முனைந்திருக்கின்றது.

அடுத்தது பாரதியின் படைப்புகளைப் பற்றிப் பெருமை பாடுகின்ற கட்டுரைகளையும், கவிதைகளையும் பாரதி சஞ்சிகை அதிகம் வெளியிட்டது. இதனால் கிராமிய மட்டங்களிலும் பாரதியின் கவிதைள் பிரபலமானதை அறியமுடிகிறது.

பாரதி சஞ்சிகை முன்னுரிமைப்படுத்திய பாரதியின் சிந்தனைகளில் சாதியத்துக்கு எதிரான குரல் முதன்மையானது. அதன் மகுட வாக்கியமும் இதனையே காட்டுகின்றது. சாதி இறுக்கம் மிக்க கிராமமொன்றில் இருந்துகொண்டு சாதியத்துக்கு எதிரான குரலைக் கடுமையாக அது எழுப்பியது. ஆலயங்களை மையப்படுத்திய சாதிய வேறுபாட்டைச் சாடும் "தீண்டாமையின் திருநடனம்" என்ற கட்டுரையின் முடிவு இவ்வாறு அமைகின்றது:

> "பார்ப்பாரை ஐயரென்ற காலமும் போச்சே என்றார் பாரதி' ஆண்டவன் சந்நிதியில் அவைரும் சமம். பாரதியின் கனவு இலங்கையிலும் நனவாக வேண்டும். உலகத்திற்கு முழுமுதலாய் விளங்கும் ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் சமமென்று அறைகூவ வேண்டும். அப்போதுதான் நம் பாரதியின் மணி வாக்கியமான ஒன்றே குலம். ஒருவனே தெய்வம் என்ற வாக்குப் பலிக்கும்" (2016: 69).

அவ்வாறே ஏழையின் பொங்கல், இதுவா பொங்கல், சக்தி எங்கே முதலான கவிதைகளும், புதுயுகம், அவள், நடைப்பயணம் முதலான சிறுகதைகளும் சாதிய, வர்க்க வேறுபாடுகளை- ஏழையின் துயரங்களைப் பேசுவன.

சமூக விழிப்புணர்ச்சியை நோக்காகக் கொண்டு பாரதி சஞ்சிகை முன்வைத்த முற்போக்குக் கருத்துக்களில் பெண்களின் முன்னேற்றம் பற்றியவை முக்கியமானவை. "மங்கையர் மன்றம்" என் தனிப் பகுதியை அமைத்து பெண்விடுதலை சார்ந்த தீவிரமான கருத்துக்கள் அதில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் மகுட வாக்கியமாக

> மாதர் தம்மை இழிவு செய்யும்
> மடமையைக் கொழுத்துவோம்

என்ற பாரதியின் கவிதையடிகள் இடம்பெறுவது இத்தகைய தீவிரமான கருத்துக்கள் பாரதி வழி வந்தவை என்பதை உணர்த்துகின்றன. எடுத்துக்காட்டாக "கிராமியப் பெண்களே விழித்தெழுங்கள்" என்ற கட்டுரை பெண்கள் மீதான அடக்குமுறைகள், மூடத்தனங்களை விமர்சிக்கிறது. கல்வி கற்று சமூகத்தை மாற்றியமைக்குமாறு கிராமியப் பெண்களிடம் அறைகூவல் விடுகிறது. பெண்பிறவி, கூறையும் தாலியும் ஆகிய கட்டுரைகளும் பெண்களி மீதான ஒடுக்குமுறைகளை விமர்சிக்கின்றன.

இச்சஞ்சகையில் ஒரு பெண் எழுத்தாளர் "பாஞ்சாலி" என்ற புனைபெயரில் எழுதியுள்ளார். பாரதி படைத்த பாஞ்சாலி என்ற புதுமைப் பெண்ணின் ஈர்ப்பி னூடாகவே அவர் இப்புனைபெயரில் எழுதியிருக்கின்றார் என்பதை அவரது முற்போக்குக் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. தலைமுறை தலைமுறையாய்

என்ற அவரது உரையாடல் ஆக்கம் சமகாலத்தில் பெண்களின் விடுதலை பற்றி விவாதிக்கின்றது.

பாரதியில் வெளிவந்த கணிசமான ஆக்கங்கள் பாரதி பற்றியவை. அவரது கவிதைகளை, முற்போக்குச் சிற்தனைகளை அறிமுகம் செய்வன் போற்றிப் புகழ்வன. பல கட்டுரைகள் ரசனை முறையில் அவரது கவிதைகளை அணுகுகின்றன. வி.சீ. கந்தையாவின் "விதியும் மதியும் - பாரதி" என்ற கட்டுரை "அழகுத் தெய்வம்" என்ற கவிதையில் பாரதியின் கற்பனைத் தறன், அவரது எண்ண வெளிப்பாடு என்பன பற்றி விதந்துரைக்கின்றது.

அதேவேளை பாரதியின் கவிதைகள் போற்றிப் புகழப்பட்ட, அவை பற்றிய ஆய்வுகள் ஆரம்ப நிலையில் இருந்த சூழலில் அவற்றை ஆழமாகப் பார்ப்பதற்கும் பாரதி சஞ்சிகை தளம் அமைத்தது. "20 ஆம் நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும்", "பாரதியின் திறமை என்ன" ஆகிய கட்டுரைகள் இதற்கு உதாரணங்கள். முதல் கட்டுரையில் பாரதியின் முற்போக்குச் சிந்தனைகளும், அவரது கவிதைகளின் புதியபோக்குகள், அழகியல் என்பனவும் விரிவாக நோக்கப்படுகின்றன ___ ப. சந்திரசேகரம்

இளைஞர் பகுதியில் இடம்பெறும் பாரதி ஆவோம், பாரதியார் முதலான கட்டுரைகள் இளைஞர்கள் மத்தியில் பாரதியின் சிந்தனைகளைப் பரப்புவதை நோக்காகக் கொண்டுள்ளன. இப்பகுதியின் ஆசிரியர் அறிமுகம் பின்வருமாறு அமைகின்றது:

> "இளைஞர்களே சற்று யோசியுங்கள் பாரதி காட்டிய பாதை நல்லதுதானா என்று. நல்லதென்று சபையோர்முன் கூறிவிட்டால் போதாது. கைக்கொள்ளவும் தயாரா என்று பாருங்கள்" (2016: 226).

என்று கூறுவது இதழின் நோக்கைக் காட்டுகின்றது. பாரதி ஆவோம் என்ற தலைப்பும் இதனையே காட்டுகின்றது.

பாரதியில் வெளிவந்த கவிதைகள் அக்காலக் கவிஞர்களில் பாரதியார் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. பாரதிச் சுடர், வாழிய பாரதி நாமம், வாழ்க பாரதி, நீடு வாழ்க கவிக்குயில் வாழ்கவே, பாரதி வாழ்த்து, பாரதி வாழ்க நீ முதலான கவிதைகள் பாரதியைப் போற்றியும் வாழ்த்தியும் பாடப்பட்டவை. இவை தவிர தேசிய உணர்வுக் கவிதைகளிலும், தொழிலாளர்கள் பற்றிய கவிதைகளிலும் பாரதியின் தாக்கம் தெரிகின்றது. "இன்னும் உறங்குவதா" என்ற கவிதையின் முடிவு இவ்வாறு அமைகின்றது:

> "தித்திக்கும் தமிழினால் எத்திக்கும் உணர்வுத் தேன்
> செழித்திடப் பாய்ச்சிய எழிற்கவி பாரதி
> சக்திக் கனல் நம்முள் சந்ததம் உறைவதைத்
> தமிழா நீ மறந்ததேன் தயக்கம்விட் டெழுந்திராய்"

என்று பாரதியின் உணர்வுத் தாக்கத்தை வெளிப்படையாகக் கூறுகின்றார். பாரதியார், தொழில் என்ற கவிதையில் தொழிலாளர்களை, கலைஞர்களை, கவிஞர்களைத்

தெய்வமாகக் காண்கின்றார். பாரதி இதழில் வெளிவந்த "சக்தி எங்கே" என்ற கவிதை அதே பாணியிலே அமைந்தது.

ஓங்கிய கையினாலே ஓம் எனும் ஓசை கொண்டு
பாங்குடன் சலவை பண்ணும் பாட்டாளி கையிலுள்ளாள்
பூங்கரம் தனிலுலக்கை பூண்டிடும் மங்கை கையில்
நாங்கள் காணாதவாறு நன்னடன் ஆடுகின்றாள்.

என்று தொழிலாளிகளை, மக்களுக்கான கலைஞர்களை, சலவைத் தொழிலாளரை, சமூகக் குறைகளைப் பாடும் கவிஞர்களை சக்தி நடனம் புரியும் ஆலயமாகக் காண்கின்றார் கவிஞர்.

இவற்றுக்கும் மேலாக இச்சஞ்சிகைக் குழுவினர் பாரதிக்குச் சிறப்பு மலரொன்றையும் வெளியிட்டுப் பாரதிக்கு அஞ்சலி செலுத்தினர். பாரதியின் உருவப்படத்தையும், பாரதி பற்றிய பாரதிதாசனின் கவிதையினையும் அட்டைப்படமாகக் கொண்டு வெளிவந்த இவ்விதழின் ஆசிரியர் பக்கம் பின்வருமாறு கூறுகிறது:

> அமரகவி பாரதியே! இதோ அர்ப்பணிக்கின்றோம் எங்கள் சிறிய காணிக்கையை. தமிழ்க் குலத்தின் தன்மானத்தைக் காத்து அழிந்துபோன தமிழன்னையின் மணிமுடியை மீண்டும் சூட்டி மங்கிவந்த புகழை நாநிலமெங்கும் பரப்பிய எங்கள் மகாகவி பாரதிக்கு எத்தனை நினைவு மலர்கள் கடாலயங்கள் ஆக்கிவைக்கவேண்டிய கடமை எங்களுக்குண்டு. கட்டாயம் செய்துதான் ஆகவேண்டும்" (2016: 307-308)

என்று தம் பேரபிமானத்தை வெளிப்படுத்துகின்றனர். பாரதியை மகா கவிஞனாக ஏற்றுவதையும், பெருமைப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு இவ்விதழின் ஆக்கங்கள் அமைந்திருந்தன. பாரதி பற்றிய கவிதைகளோடு அவரது வசன கவிதைப் பாணியில் அமைந்த "கற்பனைக் காதலிக்குக் கலைக்கடிதம்" என்ற வசன கவிதையும் இவ்விதழில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

பாரதியின் செல்வாக்கு கிழக்கிலங்கையில் பரவிய ஆரம்ப காலத்திலேயே இப்பிரதேச மக்கள் பாரதிக்கு விழாக்களை எடுத்தும் அவரைக் கொண்டாடினர். 1920 களின் நடுப்பகுதியில் திருகோணமலை இந்துக்கல்லூரியில் விபுலாநந்தர் பணியாற்றியபோது அக்கல்லூரியால் பாரதி விழாவொன்று நடாத்தப்பட்டமை பற்றி டி.ரி. செல்வநாயகம் குறிப்பிடுவது இதற்கு எடுத்துக் காட்டாகும்.

ஆகவே பாரதியின் புகழைப் பரப்புவதில் முன்னோடியாக இருந்தும், பாரதியின் தாக்கத்தைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியும், பாரதியின் பெயரிலே முற்போக்குச் சஞ்சிகை ஒன்றினை நடாத்தியும், பாரதிக்கு விழாக்களை எடுத்தும் கிழக்கிலங்கை மக்கள் பாரதியின்பாலுள்ள பேரபிமானத்தையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியுள்ளனர். (குறிப்பு: இக்கட்டுரை 1950 வரையான காலப்பகுதியை மையப்படுத்தியது. பின்னைய விடயங்கள் இனி விரிவாக ஆராயப்படவேண்டும்.)

உசாத்துணை:


1. கமலநாதன்,சா. இ., சிவசுப்பிரமணியம்,வ., (தொகு), 1997, சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி 2, திருகோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம்.

2. சந்திரசேகரம்,சி., (தொகு), 2016, பாரதி: மண்டூரிலிருந்து வெளிவந்த "பாரதி" சஞ்சிகைத் தொகுப்பு, மண்டூர்: கலை இலக்கிய அவை.

3. சண்முகதாஸ்.அ., 2017, "சுவாமி விபுலாநந்தரின் ஆய்வுத் திறனும் நவீன நோக்கும்", யோகராசா,செ., (தொகு), பன்முகப் பார்வையில் சுவாமி விபுலாநந்தர், மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை.

4. தண்டாயுதபாணி,சி., 2017, "இந்துக் கல்லூரியின் வரலாற்றில் சுவாமி விபுலாநந்தர் யோகராசா, செ., (தொகு), பன்முகப் பார்வையில் சுவாமி விபுலாநந்தர், மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை.

5. பஞ்சாட்சரம், வே., 2017, "என் சிந்தனையில் பதிந்தவை", யோகராசா,செ., (தொகு), பன்முகப் பார்வையில் சுவாமி விபுலாநந்தர், மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை.

6. பெரியதம்பிப்பிள்ளை,ஏ., 2005, புலவர்மணி கவிதைகள், மட்டக்களப்பு: புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம்.

# தாராண்மைவாதக் கருத்தியலின் தத்துவார்த்த அடிப்படைகளும் அதன் வகைப்பாடும்: ஒரு விமர்சன ரீதியான மதிப்பீடு

எஸ். பாஸ்கரன்

## அறிமுகம்

தாராண்மைவாதச் சிந்தனைகள் வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன. 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமானிய சமூகத்தின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக முறைகளை எதிர்ப்பதற்காக தோற்றம் பெற்ற கருத்தியலே தாராண்மைவாதம் ஆகும். இது பழம் அரசியல் கருத்தியல்களுள் முதன்மையானதாகவும் ஜனநாயக தத்துவத்தின் அடிநாதமாகவும் குறிப்பிடப் படுகின்றது. இத் தாராண்மைவாதக் கருத்தியல் சுதந்திரம், நீதி, சமத்துவம், பகுத்தறிவு, சகிப்புத்தன்மை, அரசியலமைப்புவாதம் போன்ற அடிப்படை அம்சங்களினால் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. தாராண்மைவாத சிந்தனைகள் கால மாற்றங்களுக்கேற்ப வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்த வளர்ச்சிப்போக்கை ஆய்வாளர்கள் மூன்றாக வகைப்படுத்தி நோக்குவர். அவையாவன மரபுரீதியான தாராண்மைவாதம் (Classical Liberalism), நவீன தாராண்மைவாதம்/புதிய தாராண்மைவாதம் (Modern Liberalism/ New Liberalism), மற்றும் நவ தாராண்மைவாதம் (Neo Liberalism) என்பனவாகும். இவை காலமாற்றத்திற்கேற்ப வேறுபட்ட அரச முறைகளையும் பண்புகளையும் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது.

## தாராண்மைவாதம் என்பதன் கருத்து

தாராண்மைவாதம் மற்றும் தாராளம் போன்ற சொற்கள் 14ம் நூற்றாண்டில் இருந்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது டுடைநச என்ற இலத்தீன் பதத்திலிருந்து தோன்றியதாகும். இதிலிருந்தே "Leberal" என்ற ஆங்கிலப் பதம் வந்தது. இதன் கருத்து "சுதந்திரம்" என்பதாகும். ஆயினும் 19ம் நூற்றாண்டு வரைக்கும் இது ஒரு அரசியற் கருத்தியலாக எழுச்சி பெற்றிருக்கவில்லை. முதன்முதலில் ஸ்பெயினில் தான் அரசியல் கருத்துக்களைப் பிரதிபலிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1840களில் ஐரோப்பா முழுவதும் அரசியற் கருத்துக்களைப் பிரதிபலிக்க இச்சொல் பயன்பட்டது. தாராண்மைவாத கருத்தியலில் "சுதந்திரம்" என்பது அரசாங்கத்தின் தேவையற்ற தலையீட்டிலிருந்து சுதந்திரமடைதல் என்பதாகும். (Freedom from undue government interference) இத்தகைய சுதந்திரத்தின்

நோக்கம் குடியுரிமையாளர்களின் தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். அவர்கள் தமது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் இது அவசியமானதாகும். சமுதாயத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டை கொண்டிருந்த ஐரோப்பிய எதேச்சதிகார முடியாட்சி அரசாங்கங்கள் நிலவிய சூழலில் தாராண்மைவாதம் வலியுறுத்திய சுதந்திரத்தின் பெறுமதி மிகவும் முக்கியமானதாக கருதப்பட்டது.

### தாராண்மைவாத சிந்தனையின் அபிவிருத்தி

தாராண்மைவாதம் ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் வாழ்ந்த பல்வேறு அறிஞர்களின் பங்களிப்பைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. கிரேக்க அறிஞரான அரிஸ்டோட்டல், பதினேழாம் நூற்றாண்டில் ஜோன் லொக், பதினெட்டாம் நூற்றாண்டில் ரூசோ, மல்தூஸ், ஸ்பென்ஷர், ஜெரமி பென்தம், ஜோன் ஸ்ரூவெட் மில், கெயின்ஸ், ரீ.எச். கிறீன், இம்மானுவேல் கான்ட் போன்ற அறிஞர்களின் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளது. ஆயினும் தாராண்மைவாத சிந்தனையின் தோற்றம் பற்றி பொதுவான கருத்தொன்று காணப்படவில்லை. அறிஞர்களிடையே வேறுபட்ட விவாதங்கள் காணப்படுகின்றன. ஒரு சிலர் தேசிய அரசுகளின் தோற்றத்துடனேயே தாராண்மைவாதம் தோற்றம் பெற்றதாக குறிப்பிடுகின்றனர். ஐரோப்பிய தாராண்மைவாதிகள் ஐரோப்பாவில் இருந்துதான் தாராண்மைவாதம் தோற்றம் பெற்றது என்கிறார்கள். இன்னொரு சிலர் பொருளாதார அபிவிருத்தியில் இருந்துதான் தாராண்மைவாதம் தோற்றம் பெற்றது என குறிப்பிடுகின்றார்கள். எவ்வாறாயினும் தாராண்மைவாதத்தின் எழுச்சி தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த வரம்பற்ற முடியாட்சிக்கு சவாலாக அமைந்தது. இதன் பின்னர் தாராண்மைவாதம் அரசியலமைப்பின் அடிப்படையிலான பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் வருகைக்கும் வழிகாட்டியது. இது பின்னர் மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியையும் பிரதிபலித்தது. ஆங்கிலப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி மற்றும் பிரான்சியப் புரட்சி என்பன தாராண்மைவாத சிந்தனைகளைக் கொண்டிருந்ததுடன் அவை தாராண்மைவாத கருத்தியலின் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக அமைந்தன.

### தாராண்மைவாத சிந்தனையின் தத்துவார்த்த அடிப்படைகள்

வரலாற்று ரீதியாக அபிவிருத்தியடைந்த முக்கியமான எண்ணக்கருக்களின் அடிப்படையில் தாராண்மைவாத கருத்தியல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த அடிப்படை எண்ணக்கருக்கள் மக்களின் நல்வாழ்வை மேம்படுத்த உதவுவனவாக காணப்படுகின்றன. அரசியல் விவாதங்களில் புதிய நம்பிக்கைகளையும் மற்றும் பெறுமதிகளையும் தோற்றுவிக்கின்றன. தாராண்மைவாத கருத்தியலை வடிவமைப்பதில் இவற்றின் பங்கு அளப்பரியது. அவையாவன சுதந்திரம் (Freedom), தனிமனிதவாதம் (Individualism), பகுத்தறிவு (Reason), சமத்துவம் (Equality), சகிப்புத்தன்மை (Toleration), ஏற்புடமை (Consent), அரசியலமைப்புவாதம் (Constitutionalism) மற்றும் நீதி (Justice) என்பனவாகும்.

சுதந்திரம் (Freedom)

தாராண்மைவாத சிந்தனை அபிவிருத்தி அடைவதற்கு சுதந்திரம் என்ற எண்ணக்கருவே அடிப்படையாகக் காணப்படுகின்றது. ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமானிய அரசானது சுதந்திரம் அற்ற கொடுமையான அரசாங்க முறையை கொண்டிருந்தது. ஐரோப்பிய மன்னராட்சியில் அரசும் அதனுடைய நிறுவனங்களும் குடியுரிமையாளர்களின் சுதந்திரத்தை தடை செய்கின்ற கருவிகளாக காணப்பட்டன. தாராண்மைவாத அரசியல் சிந்தனையாளர்கள் அரசாங்கங்கள் சர்வாதிகாரப் போக்குடனும் அடக்குமுறையோடும் செயற்படுவதனை தடை செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அரசு அடக்குமுறையை பயன்படுத்தலாம் என்பதனால் தாராளவாதிகள் எப்பொழுதும் அரசின் மீது சந்தேகம் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். இதனால் தாராளவாத அரசியல் சிந்தனையாளர்கள் அரசினதும் ஆட்சியாளர்களினதும் தன்னிச்சையான அதிகாரத்திலிருந்து குடியுரிமையாளர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளைப் பற்றி வாதிட்டனர். இவர்கள் சட்டத்தின் ஆட்சி, அடிப்படை உரிமைகள், அரசியலமைப்புவாதம், வரையறைக்குட்பட்ட அரசாங்கம், அதிகாரப் பிரிவினைத் தத்துவம் என்பனவற்றை தன்னிச்சையான அரசிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான பொறிமுறைகளாகக் குறிப்பிடுகின்றனர். இதனாலேதான் தாராண்மைவாதம் தனிமனித சுதந்திரத்தை தனது மூலக் கொள்கையாக வகுத்து கொண்டது. இது அரசனுடைய தன்னிச்சையான அதிகாரங்களை எதிர்த்ததோடு வர்த்தகம் மற்றும் வரி விதிப்பு போன்ற பொருளாதார விடயங்களில் அரசு தலையீடு செய்வதையும் கட்டுப்படுத்தியது. தாராள சுதந்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட தாராண்மைவாதம் புதிதாக தோற்றம் பெற்ற வணிக வர்க்கத்தினுடைய நலன்களை பூர்த்தி செய்வதையும் மன்னனின் தன்னிச்சையான அரசியல் பொருளாதார கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடுவதையும் நோக்காகக் கொண்டிருந்தது. தாராளவாத சிந்தனையான சுதந்திரம் அரசியல் ரீதியான மற்றும் தத்துவ ரீதியான கருத்துக்களைக் கொண்டுள்ளது.

தத்துவார்த்த அடிப்படையில் தாராள சுதந்திரம் என்பது "தனிநபர் சுயாட்சி" ஆகும். இக் கருத்து தாராளவாதிகளின் தத்துவ அடிப்படையான "எதிர்மறை சுதந்திர" எண்ணக்கரு முன்வைக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது. "எதிர்மறை சுதந்திரம்" என்பது அரசாங்கத்திலிருந்து அல்லது வெளியார் தலையீடுகளிலிருந்து பெறப்படும் சுதந்திரமாகும். எதிர்மறை சுதந்திரத்திற்கு உதாரணமாக தன்னிச்சையான கைதிலிருந்து சுதந்திரம், அரசாங்கத்தின் தன்னிச்சையான வரிவிதிப்பில் இருந்து சுதந்திரம், சித்திரவதையில் இருந்து சுதந்திரம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். தாராள சுதந்திரம் என்பதன் அரசியற் கருத்தாக தலையிடாக் கொள்கை (Laissez fairism) காணப்படுகின்றது. அரசாங்கம் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்களில் தலையிடக்கூடாது என்பது இதன் கருத்தாகும். இது சுதந்திர சந்தை தொடர்பான பொருளாதார கோட்பாட்டிலிருந்து தோற்றம் பெற்று சமூகத்தில் அரசாங்கத்தின் வகிபங்கு தொடர்பாக குறிப்பிடுகின்றது. தனிமனிதர்களின் சுயாட்சியையும் மக்களின் பொது வாழ்வின் மீதான சுயாட்சியையும் பாதுகாக்கின்ற

எண்ணக்கருவாகவும் இது கருதப்படுகின்றது. தாராளவாதிகளின் தத்துவ அடிப்படையான "எதிர்மறை சுதந்திர" எண்ணக்கரு விரிவடைந்து அரசியல் நோக்கில் அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும், தடைகள் மற்றும் சமன்பாடுகள், வரையறைக்குட்பட்ட அரசாங்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன வருவதற்கும் வழிவகுத்துள்ளது.

**தனிமனித சுதந்திரம்** (Individual Freedom)

தாராண்மைவாதம் வலியுறுத்துகின்ற அடிப்படைப் பெறுமதியாகவும் மரபுரீதியான தாராளவாத கருத்தியலின் அடிப்படைத் தத்துவமாகவும் தற்கால தாராளவாத அரசியற் கோட்பாட்டின் முக்கிய எண்ணக்கருவாகவும் தனிமனித சுதந்திரம் காணப்படுகின்றது. சமத்துவம் மற்றும் நீதி போன்ற ஏனைய பெறுமதிகளை விட தாராண்மைவாதம் தனிமனித சுதந்திரத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. இது தனிமனிதர்களின் மிகச் சிறந்த விருப்பமாகவும் தனிமனிதர்கள் தமது சுதந்திரமான தெரிவை மேற்கொள்வதற்கான சிறந்த அடிப்படையாகவும் காணப்படும். ஆயினும் தாராண்மைவாதம் சட்டத்திற்குட்பட்ட சுதந்திரத்தினையே வலியுறுத்துகின்றது. ஒருவரின் சுதந்திரம் மற்றவர்களின் சுதந்திரத்திற்கு தடையாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் இது சட்டத்திற்குட்பட்ட கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தினையே வலியுறுத்துகின்றது. இந்த தனிமனித சுதந்திரக் கோட்பாடு பின்வரும் முன்நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப் பட்டுள்ளது. அவையாவன (1) தனிமனித குடியுரிமையாளர்களால் சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆகவே சமூகம் என்பது தனிமனிதர்களின் கூட்டாகும். (2) சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதர்களும் சுதந்திரமாகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க கூடியவர்களாக காணப்படுகின்றனர். (3) சுதந்திரமானதும் பகுத்தறிவுமுள்ள தனிமனிதர்கள் குறிப்பாக அரசின் தலையீடு போன்ற வெளிவாரியான கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடும்போது மட்டுமே அவர்களின் திறனை முழுமையாக பூர்த்தி செய்ய முடியும். (4) தனிநபர்கள் நல்ல வாழ்க்கையினை வாழ்வதற்காக தங்கள் சுதந்திரத்தையும் திறன்களையும் முழுமையாகப் பயன்படுத்த உதவும் சூழலை உருவாக்கி பாதுகாப்பதே அரசாங்கத்தின் கடமையாகும். (5) இத்தகைய சூழலை சட்டத்தின் ஆட்சி, அடிப்படை உரிமைகள், பொருளாதார மற்றும் சமூக விடயங்களில் குறைந்தபட்ச அரசாங்க தலையீடு என்பவற்றின் மூலம் உருவாக்க முடியும். அத்தகைய அரசாங்கம் "தாராளவாத அரசாங்கம்" என்று அழைக்கப்படுகிறது.

**தனிமனிதவாதம்** (Individualism)

தாராண்மைவாதத்தின் பிரதான அம்சமாக தனிமனிதவாதம் காணப்படுகின்றது. குழுக்களைக் காட்டிலும் தனிமனிதர்கள் மீதே இது அதிக நம்பிக்கை கொண்டுள்ளது. இங்கு தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் சமமானவர்களாகவும் தனித்தனியான அடையாளங்களைக் கொண்டவர்களாகவும் நோக்கப்படுகின்றார்கள். எனவே தாராண்மைவாதத்தின் நோக்கம் நல்ல மற்றும் திறமையான தனிமனிதர்களினுடைய

வளர்ச்சியின் மூலம் ஒரு சிறந்த சமூகத்தினைக் கட்டமைத்தலாகும். இது தாராண்மைவாதம் ஒழுக்கத்தைப் பேணுகின்ற ஒரு நடுநிலையான கருத்தியல் என்ற எண்ணம் வருவதற்கு பங்களித்துள்ளது.

பகுத்தறிவு (Reason)

தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்துகின்ற தாராண்மைவாதம் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் மூலமே எல்லா தனிமனிதர்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த முடியும் என குறிப்பிடுகின்றது. ஆனால், தாராண்மைவாதம் வெளியார் கட்டுப்பாட்டினை அனுமதிக்கவில்லை. அது அரசின் தலையீடுகள் அற்ற சுதந்திரத்தையே வலியுறுத்துகின்றது. ஆகவே வெளியார் கட்டுப்பாடொன்று இல்லாமல் எவ்வாறு கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் காணப்படமுடியும் என்ற கேள்வி எழுகின்ற போது ஒரு தனிமனிதனுக்கு இருக்கக்கூடிய சிறந்த பண்பாக பகுத்தறிவை தாராண்மைவாதம் குறிப்பிடுகின்றது. பகுத்தறிவின் மூலமே ஒரு தனிமனிதன் தன்னைக் கட்டுப்படுத்தி கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தினை அடைந்துகொள்கின்றான் என தாராண்மைவாதம் வலியுறுத்துகின்றது.

சமத்துவம் (Equality)

தாராண்மைவாதம் குறிப்பிடும் தனிமனிதவாதம் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தனிமனிதர்கள் பிறப்பில் சமமானவர்கள். ஆதலால் அவர்கள் சமத்துவ உரிமையை அனுபவிக்க உரித்துடையவர்கள். ஆகவே அவர்கள் சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற சட்ட சமத்துவத்தையும் ஒவ்வொருவருக்கும் சம பெறுமதியுடைய ஒவ்வொரு வாக்குகள் காணப்படும் என்ற அரசியல் சமத்துவத்தையும் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தாராண்மைவாதம் சமூக சமத்துவம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சமூக சமத்துவம் என்பது ஒவ்வொருவருக்கும் சமசந்தர்ப்பமான வாய்ப்பு என்பது மட்டுமன்றி கிடைக்கின்ற பெறுபேறும் சமமாக காணப்பட வேண்டும் என்பதாகும். தாராண்மைவாதம் எல்லோருக்கும் சமசந்தர்ப்பமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. ஆனால் அது சோசலிசம் போன்று கிடைக்கின்ற பெறுபேறுகள் எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுவதில்லை. தனிமனிதர்கள் தமக்கு கிடைக்கின்ற சமசந்தர்ப்பமான வாய்ப்பினைப் பயன்படுத்தி திறமையடிப்படையில் வளர்வதற்கும் அவர்களது பெறுபேறுகள் சமமற்ற வகையில் காணப்படுவதற்கும் தாராண்மைவாதம் அனுமதிக்கின்றது.

சகிப்புத்தன்மை (Toleration)

தாராண்மைவாதிகள் சமூகத்தினை வலுப்படுத்துவதற்கும் மற்றும் தனிமனித சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்குமான வழியாக சகிப்புத்தன்மை காணப்படுவதாக நம்புகின்றார்கள். எவராவது ஒருவரைப் பற்றி விமர்சிக்க மற்றவருக்கும் உரிமையுண்டு என்ற அடிப்படையில் சகிப்புத்தன்மையை

தாராண்மைவாதம் வலியுறுத்துகின்றது. இதனடிப்படையில் தாராண்மைவாதம் பன்மைத்துவ கலாச்சார சமூகங்களில் வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணுவதற்கான வழிவகைகளையும் ஊக்குவிக்கின்றது.

ஏற்புடமை (Consent)

அதிகாரத்துவமும் சமூக உறவுகளும் எப்பொழுதும் ஏற்புடமை அடிப்படையிலேயே காணப்படுகின்றது என தாராளவாதிகள் நம்புகின்றனர். இதனால் அரசாங்கம் மக்களின் ஏற்புடமை அடிப்படையிலேயே ஆட்சி புரியவேண்டும் என தாராண்மைவாதம் குறிப்பிடுகின்றது. இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை அடிப்படையாகக் கொண்ட தாராள ஜனநாயக எண்ணக்கருவை வலியுறுத்துகின்றது. இதன்படி தாராள ஜனநாயகத்தில் அதிகாரத்துவம் என்பது சட்டத்துவத்திற்கு உட்பட்டதாக காணப்படுகின்றது.

அரசியலமைப்புவாதம் (Constitutionalism)

அரசாங்கம் சமூகத்தின் பாதுகாப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் உத்தரவாதம் கொண்டதாக இருக்கின்றது என தாராளவாதிகள் குறிப்பிடுகின்ற போதும் அவர்கள் அதே அரசாங்கம் சர்வாதிகாரத் தன்மையுடையதாக மாறக்கூடும் என்பதிலும் விழிப்புடையவர்களாக இருக்கின்றனர். ஆகையால் அவர்கள் வரையறுக்கப்பட்ட அரசாங்க எண்ணக்கருவில் நம்பிக்கையுடையவர்களாக காணப்படுகின்றனர். இது தடைகள் மற்றும் சமன்பாடுகள் ஊடாக அரசாங்க நிறுவனங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி அரசாங்க அதிகாரங்களை வரையறுத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றது. இச்செயற்பாடு எழுதப்பட்ட அரசியலமைப்பொன்றினால் அரசுக்கும் மற்றும் மக்களுக்கும் இடையிலான அதிகாரங்களை வரையறுப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

நீதி (Justice)

தாராண்மைவாதம் சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்டே நீதி பற்றிய விளக்கத்தை முன்வைத்துள்ளது. ஒவ்வொரு தனிமனிதர்களுக்கும் சமத்துவமான உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் ஒவ்வொரு குடியுரிமையாளர்களும் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்றும் தாராண்மைவாதம் வலியுறுத்துகின்றது. இதனால் அவர்களுக்கு சமூக சமத்துவம், சட்ட சமத்துவம் மற்றும் அரசியல் சமத்துவம் என்பன காணப்பட வேண்டும் என்றும் இத்தகைய சமத்துவம் காணப்படுகின்ற போதே சமூகத்தில் நீதி நிலவும் எனவும் தாராண்மைவாதம் குறிப்பிடுகின்றது.

### தாராண்மைவாதத்தின் வகைகள்

#### மரபுரீதியான தாராண்மைவாதம் (Classical Liberalism)

தாராண்மைவாதத்தின் ஆரம்பகால நிலையாக மரபுரீதியான தாராண்மைவாதம் குறிப்பிடப்படுகின்றது. நிலமானிய முறையில் இருந்து முதலாளித்துவ முறைக்கான நிலைமாற்றம் இடம்பெற்ற காலப்பகுதியிலேயே மரபுரீதியான தாராண்மைவாதம் தோற்றம் பெற்றது. மரபுரீதியான தாராண்மைவாதம் சில பொதுவான பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவையாவன

1. மரபு ரீதியான தாராண்மைவாதத்தின் அடிப்படைக் கருத்து தீவிரமான தனிமனிதவாதமாக காணப்படுகின்றமை: தனிமனிதர்கள் மிக அதிகமாக சுயநலன் உடையவர்களாக காணப்பட்டனர். அவர்கள் சமூகம் பற்றியோ அல்லது ஏனைய தனிமனிதர்களைப் பற்றியோ எவ்விதமான அக்கறையும் கொண்டவர்களாக காணப்படவில்லை.
2. "எதிர்மறை சுதந்திர எண்ணக்கரு தொடர்பான நம்பிக்கையுடையவர்களாக காணப்பட்டனர். அதாவது கட்டுப்பாடற்ற சுதந்திரத்தினைக் கொண்ட தலையிடாமைக் கொள்கை அங்கு காணப்பட்டது. தனிமனிதர்கள் மீதான வெளியார் தலையீடுகள் அனுமதிக்கப்படவில்லை. அரசு மற்றும் அரசாங்கத்தின் தேவையற்ற தலையீடுகள் கட்டுப்படுத்தப்பட்டன.
3. தோமஸ் பெயினுடைய கருத்துப்படி தாராண்மைவாதம் அரசினை "அவசியமான பிசாசு" (Necessary evil) என வர்ணித்தது. அதாவது மிகக் குறைந்தளவில் பாதுகாப்பினையும் உறுதிப்பாட்டையும் பேணுவதில் மட்டும் அரசுகள் செயற்பட்டன. ஆயினும் அரசு சமூகத்திற்கு பொதுவான விடயங்களை மக்களின் மீது திணிப்பதனாலும் அது தனிமனித சுதந்திரத்திற்கு பாதகமாக அமைவதனாலும் "பிசாசு" எனவும் வர்ணிக்கப்பட்டது. இதனால் மரபு ரீதியான தாராண்மைவாதம் குறிப்பிடும் தலையிடா அரசு "இரவு நேரக் காவலாளி" (Nightwatchman) போன்று பணிபுரிவதாக குறிப்பிடப்படுகின்றது.
4. சிவில் சமூகம் தொடர்பான பரந்த நேர்மறைக் கருத்து காணப்பட்டமை: இங்கு சிவில் சமூகம் சுதந்திரத்தினை மட்டும் வலியுறுத்தியதாக காணப்படாமல் அரசுடன் இணைந்து அரசினைக் கட்டுப்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை நோக்காக கொண்டு செயற்படுவதன் மூலம் அரசுக்கு மிகப் பெரிய பங்களிப்பினையும் வழங்குகின்றது. எனவே அரசினை ஒழுங்குபடுத்துகின்ற மற்றும் அரசுக்கு பங்களிக்கின்ற பணியை சிவில் சமூகம் மேற்கொள்கின்றது.
5. மரபுரீதியான தாராண்மைவாதம் முக்கியமான சில எண்ணக்கருக்களையும் அவற்றின் இயல்புகளையும் கொண்டிருக்கின்றது. அவையாவன; இயற்கை உரிமைகள் (Natural Rights), பயனுடமைவாதம் (Utilitarianism), பொருளாதார தாராண்மைவாதம் (Economic Liberalism) மற்றும் சமூக டார்வின்வாதம் (Social Darwinism) என்பனவாகும்.

## நவீன தாராண்மைவாதம் / புதிய தாராண்மைவாதம்

(Modern Liberalism/ New Liberalism)

கைத்தொழில் புரட்சியுடன் ஏற்பட்ட முதலாளித்துவத்தின் வளர்ச்சி மரபு ரீதியான தாராண்மைவாதத்தை ஊக்குவித்ததோடு சமூகத்தில் ஏற்றத்தாழ்வினையும் ஏற்படுத்தியது. இந்த சமூக ஏற்றத்தாழ்வினை ஜே.எஸ்.மில் மற்றும் ரீ.எச்.கிரீன் போன்றவர்கள் தமது எழுத்துக்களில் பிரதிபலித்தார்கள். ஜே.ஏ.ஹொப்சன் என்பவர் நேர்மறை சுதந்திரம் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார். பொது நன்மைக்காக தனிமனிதர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம் என்ற கருத்து வலுப்பெற்றது. இந்தக்கருத்துக்கள் சமூக அல்லது நலன் பேணும் தாராண்மைவாத எண்ணக்கருவினைத் தோற்றுவித்தது. இதுவே நவீன தாராண்மைவாதம் என அழைக்கப்பட்டது. இதில் அரசின் தலையீடு தொடர்பான விடயத்தில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. பொதுமக்களின் நலனுக்காக அரசு தனிமனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடலாம் என்ற விடயம் முதன்மை பெற்றது. தலையிடா அரசு தொடர்பான முதலாளித்துவ நம்பிக்கை இல்லாது போய் ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாளித்துவ அரசொன்றின் மூலமே பொருளாதார அபிவிருத்தி அடையப்பட முடியும் என்ற கெயின்சினுடைய கருத்து வலியுறுத்தப்பட்டது. ஜோன் ரோல்ஸ் போன்ற நவீன தாராண்மைவாதிகள் பொது நன்மைக்காக தனிமனிதர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம் என்பதை ஏற்றுக்கொண்ட போதும் பொதுநல அரசின் தலையீடு எப்பொழுதும் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றார்கள். இவ்வாறு நவீன தாராண்மைவாதம் பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மரபு ரீதியான தாரண்மைவாதிகள் இது தாராண்மைவாத அடிப்படைகளையே சிதைத்துவிட்டது எனக் குறை கூறினர். ஆனால் நவீன தாரண்மைவாதிகள் கால சூழ்நிலைக்கேற்ற மாற்றங்களைச் செய்து தாராண்மைவாத எண்ணக்கருவை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் சென்ற முக்கியமான பணியை நவீன தாராண்மைவாதம் செய்துள்ளது எனக் குறிப்பிடுகின்றனர். நவீன தாராண்மைவாதத்தின் முக்கிய மூலக் கொள்கைகளாக தனித்துவம் (Individuality), நேர்மறை சுதந்திரம் (Positive Freedom), சமூக தாராண்மைவாதம் (Social Liberalism) மற்றும் பொருளாதார முகாமைத்துவம் (Economic Management) என்பன குறிப்பிடப்படுகின்றன.

## நவ தாராண்மைவாதம் (Neo-Liberalism)

நவீன தாராண்மைவாதம் அரசின் தலையீட்டை வலியுறுத்தி பொதுநல அரசாக எழுச்சி பெற்ற போது 1950களில் பொருளாதார செழிப்பு நிலை கானப்பட்டதாயினும் பின்னர் 1970களில் மீண்டும் உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியொன்று ஏற்பட்டது. இதனால் நவீன தாராண்மைவாத கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. புதிய தாராண்மைவாதக் கருத்தியல் வடிவமாக நவதாராண்மைவாதம் எழுச்சியடைந்தது. நவதாராண்மைவாதம் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக புதிய கருத்துக்களை முன்வைத்தது. இவை மரபு ரீதியான தாராண்மைவாதக்

கருத்துக்களின் மறுமலர்ச்சியாகவும் கருதப்பட்டன. நவீன தாராண்மைவாதத்தில் முதன்மை பெற்ற கேயீன்சின் கருத்துக்களுக்குப் பதிலாக நவதாராண்மைவாதம் மில்ரன் ப்ரீட்மேனின் (Milton Friedman) நிதியியல் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது. நிதியியல் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த பேரினப் பொருளாதாரம் அரச கட்டுப்பாடுகளைக் குறைத்தது. பொருளாதாரத்தின் மீதான அரச கட்டுப்பாட்டுக் குறைப்பு உறுதியான பொருளாதார கொள்கைகள் அமைவதற்கு வழிவகுத்தது. சந்தை சக்திகளின் வளர்ச்சி, உலகமயமாக்கத்தின் வருகை மற்றும் பொருளாதார தங்கியிருத்தல் தன்மையின் எழுச்சி என்பவற்றின் காரணமாக அரசு தனது முகாமைத்துவப் பணிகளைக் குறைத்துக் கொண்டபோது "குறைந்தபட்ச அரசு" தோற்றம் பெற்றது. இதன் காரணமாக அரசின் சேவைகள் குறைக்கப்பட்ட "குறைந்தபட்ச அரசுக் கொள்கை" முக்கியம் பெற்றது. இங்கும் மரபு ரீதியான தாராண்மைவாதம் போன்று திறந்த சந்தை சக்திகளே பொருளாதாரத்தை தீர்மானிக்கின்ற முக்கியமான முன்நிபந்தனைகளாக காணப்பட்டன. அரசுக்கு பதிலாக திறந்த சந்தை சக்திகள் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. இவ்வாறு நவ தாராண்மைவாதத்தின் வளர்ச்சிக்கு மில்ரன் ப்ரீட்மேன் (Milton Friedman), ரொபேர்ட் நோசிக் (Robert Nozick) மற்றும் பிரடெரிக் கையேக் (Friedrich Hayek) போன்றோர் பங்களிப்பாற்றியுள்ளார்கள்.

### நவதாராண்மைவாதத்தின் அபிவிருத்தி

1980களில் உலகளாவிய ரீதியில் சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. 1978ல் ஆசியப் பிராந்தியத்தில் சீன அதிபர் டெங் சியோவ் பிங் (Deng Xiaoping) சீனப் பொருளாதாரத்தை கம்யூனிச பொருளாதார முறையில் இருந்து தாராள பொருளாதாரத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். 1979ல் பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த பௌல் வோல்கர் (Paul Volcker) நிதியியல் கொள்கைகளை மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். 1979ல் அத்திலாந்திக் பிராந்தியத்தில் பிரித்தானியப் பிரதமர் மார்கிரட் தச்சர் (Margaret Thatcher) தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி பணவீக்க நிலையை முற்றாக ஒழிக்க முயற்சிகளை மேற்கொண்டார். 1980ல் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் (Ronald Reagan) தொழிலாளர் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி கைத்தொழில் மற்றும் விவசாயத்துறையினை மேம்படுத்த முயற்சி செய்தார். உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட இந்த முயற்சிகளும் மாற்றங்களும் நவ தாராண்மைவாதத்தின் அபிவிருத்தியை ஊக்குவித்தது.

### நவதாராண்மைவாதத்தின் இயல்பு

நவதாராண்மைவாதம் சுதந்திர வர்த்தகம் (Free Trade), சுதந்திர சந்தை (Free Market), தனியார் சொத்துரிமை (Private Property) என்பவற்றின் மூலம் தனிமனித சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இங்கு நிறுவன ரீதியான சுதந்திர சந்தைக் கட்டமைப்பை உருவாக்குதலும் பலப்படுத்தலும் அவற்றைப்

பாதுகாத்தலுமே அரசாங்கத்தின் வகிபங்காகும். அத்துடன் பாதுகாப்பு, இராணுவம், சட்டரீதியான விடயங்கள் மற்றும் நிதியியல் கொள்கைகள் என்பனவற்றுக்கும் அரசாங்கமே பொறுப்புடையதாகும். இவ்விடயங்கள் தவிர ஏனையவை எவற்றிலும் அரசு தலையிடமுடியாது. இவ்வாறு நவதாராண்மைவாதத்தில் குறைந்தபட்சமான பணிகளையே அரசு செய்வதால் அது "குறைந்தபட்ச அரசு" (minimal state) என அழைக்கப்படுகின்றது.

## குறைந்தபட்ச அரசு

நவ தாராண்மைவாதத்தில் காணப்படுகின்ற அரசின் இயல்பு "குறைந்தபட்ச அரசு" என அழைக்கப்படுகின்றது. இது பொருளாதார நடவடிக்கைகளில் அரசினுடைய பணிகள் வரையறுக்கப்பட்டிருத்தலையே குறித்து நிற்கின்றது. ஆயினும் மரபு ரீதியான தாராண்மைவாதம் குறிப்பிடுகின்ற "தலையிடா அரசும்" நவ தாராண்மைவாதம் குறிப்பிடுகின்ற "குறைந்தபட்ச அரசும்" ஒன்றல்ல. தலையிடா அரசு பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாமல் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. இதனால் அங்கு தனிமனிதர்களுக்கு முழுமையான சுதந்திரம் காணப்படுகின்றது. குறைந்தபட்ச அரசும் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாமல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றின் பணிகளை அரசு சாராத செயற்பாட்டாளர்கள் மேற்கொள்வதானால் இங்கு தனிமனிதர்களுக்கு முழுமையான சுதந்திரம் காணப்படவில்லை. எனவே குறைந்த பட்ச அரசு கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதிலும் பார்க்க அது தனது பணிகளைக் குறைத்துக் கொண்டது அல்லது அரசு சாராத செயற்பாட்டாளர்கள் அதன் பணிகளை எடுத்துக் கொண்டார்கள் என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

றொபேர்ட் நோசிக் (Robert Nozick) தனது நூலான "அராஜகம், அரசு மற்றும் கற்பனாவாதம்" (Anarchy, State and Utopia) என்பதில் "குறைந்தபட்ச அரசுக்" கொள்கையை அறிமுகப்படுத்தினார். தனிமனித அராஜகத்தை கடுமையாக விமர்சித்த றொபேர்ட் நோசிக் நீதியான அரசாங்க வடிவமாக "குறைந்தபட்ச அரசுக்" கொள்கையைக் குறிப்பிடுகின்றார். தனிமனிதர்களுடைய உரிமைகள் முக்கியமானவை. ஆனால் அதைவிட முக்கியமானது அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுதல் ஆகும். தனிமனித உரிமைகள் வெளியார் தலையீடுகளினாலும் சக தனிமனிதர்களின் அச்சுறுத்தல்களினாலும் மீறப்படுகின்றது. இந்த தனிமனித அராஜக நிலையிலிருந்து தனிமனிதர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதே "குறைந்த பட்ச அரசின்" வகிபங்கு என றொபேர்ட் நோசிக் குறிப்பிடுகின்றார்.

## தாராண்மைவாத அரசுகளும் தனிமனித சுதந்திரமும்

தாராண்மைவாத கருத்தியல் மூன்று வகையான அரசுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவையாவன தலையிடா அரசு, பொதுநல அரசு மற்றும் குறைந்தபட்ச அரசு என்பனவாகும். மரபு ரீதியான தாராண்மைவாதம் தலையிடா அரசினையும் நவீன தாராண்மைவாதம் பொதுநல அரசினையும் நவதாராண்மைவாதம் குறைந்தபட்ச

அரசினையும் வலியுறுத்துகின்றது. தாராண்மைவாத அரசுகளின் இயல்புக்கும் தனிமனித சுதந்திரத்தின் தன்மைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. இவையிரண்டும் ஒன்றையொன்று தீர்மானிக்கும் காரணிகளாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக மரபு ரீதியான தாராண்மைவாதத்தில் தலையிடா அரசுக் கொள்கை காணப்படுகின்றது. இங்கு பொருளாதார செயற்பாடுகளில் அரசின் வகிபங்கு கட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுவதனால் தனிமனிதர்களுடைய சுதந்திரம் அதிகமாக இருக்கிறது. எனவே தலையிடா அரசுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் இடையிலான தொடர்பு எதிர்க்கணியத் தொடர்பாக உள்ளது. அதேபோன்று நவீன தாராண்மைவாதத்தில் பொதுநல அரசுக் கொள்கை காணப்படுகின்றது. இங்கு பொருளாதார செயற்பாடுகளில் அரசின் தலையீடு காணப்படுகிறது. பொது நலனிற்காக அரசினால் தனிமனித சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் அரசின் தலையீடு அதிகரிக்கின்ற போது தனிமனித சுதந்திரம் குறைகின்றது. எனவே இங்கும் பொதுநல அரசுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் இடையிலான தொடர்பு எதிர்க்கணியதஉ தொடர்பாகவே இருக்கிறது. நவதாராண்மைவாதத்தில் குறைந்தபட்ச அரசுக் கொள்கை காணப்படுகின்றது. இங்கு பொருளாதார செயற்பாடுகளில் அரசின் தலையீடு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அரசு குறைந்த பட்சமான பணிகளையே மேற்கொள்கின்றது. ஆகவே அரசின் தலையீடு குறைவாக இருக்கின்ற போது தனிமனித சுதந்திரம் கூடுதலாக காணப்பட வேண்டும். ஆனால் இங்கு தனிமனித சுதந்திரம் கூடுதலாக காணப்படவில்லை. மாறாக குறைந்தபட்ச அரசுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் இடையிலான தொடர்பு நேர்க்கணியத் தொடர்பாகவே இருக்கிறது. அரசின் தலையீடு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற போது தனிமனித சுதந்திரமும் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. மரபு ரீதியான தாராண்மைவாதத்தில் காணப்படுகின்ற தலையிடா அரசு பொருளாதார செயற்பாடுகளில் தலையிட அனுமதிக்கப்படவில்லை. இதனால் தனிமனிதர்களின் சுதந்திரம் அதிகரித்தது. ஆனால், நவதாராண்மைவாதத்தில் குறைந்தபட்ச அரசு தனது பணிகளைக் குறைத்துக் கொண்டது. அவ்வாறாயின் திறந்த சந்தை சக்திகள், சர்வதேச ஒழுங்கமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் போன்றன அரசு குறைத்துக்கொண்ட பணிகளை மேற்கொண்டன. இதனால் அரசு சாராத இவ் அமைப்புகள் பொருளாதார செயற்பாடுகளில் தலையீடு செய்தமையினால் தனிமனிதர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்திருக்கிறது. இவ்வாறு தாராண்மைவாத அரசுகளுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

### தாராண்மைவாத கருத்தியலின் பங்களிப்பு

பிற்கால நவீன உலகத்தின் சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் அரசியல் கருத்துக்களின் வளர்ச்சிக்கு தாராண்மைவாத கருத்தியல் முக்கிய பங்களிப்பாற்றியுள்ளது. அவையாவன;

1. சமூக ரீதியில் மதச்சார்பின்மைக் கருத்துக்கள் தோன்றுவதற்கும், மத ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கும் பகுத்தறிவுச் சிந்தனை தோன்றுவதற்கும் வழிவகுத்துள்ளது.
2. பொருளாதார ரீதியில் சொத்துரிமை, சுதந்திர வர்த்தகம், திறந்த சந்தைப் பொருளாதாரம் என்பன தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.
3. உளவியல் ரீதியாக சகிப்புத்தன்மை மற்றும் சிந்தனைச் சுதந்திரம் போன்றன வருவதற்கு வழிகாட்டியுள்ளது.
4. அரசியல் ரீதியாக பாராளுமன்றம், அரசியல் கட்சிகள், ஊடகங்கள், நீதித்துறை சுதந்திரம், அரசியலமைப்புவாதம், நலன் பேணும் அரசாங்கம் மற்றும் வரையறைக்குட்பட்ட அரசாங்கம் போன்ற பல அரசியல் நிறுவனங்களை வடிவமைப்பதற்கு உதவியுள்ளது.
5. அரசியல் கொள்கைகளான தனிமனித சுதந்திரம், அதிகாரப் பிரிவினைத் தத்துவம், சட்டத்தின் ஆட்சி, தடைகள் மற்றும் சமன்பாடுகள், அடிப்படை உரிமைகள் மற்றும் தனியார் சொத்துரிமை என்பன வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்துள்ளது.
6. அரசியல் செயன்முறைகளான நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள், குடியுரிமையாளர்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்தல், பொருளாதார தனியார்மயமாக்கம், அரசியல் செயற்பாடுகளில் இருந்து மதத்தினைப் பிரித்தல் மற்றும் அரசியல் அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தல் போன்றன இடம்பெறுவதற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

### தாராண்மைவாத கருத்தியலின் பிற்கால அபிவிருத்தி

பிற்காலத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களின் விளைவாக தாராண்மைவாத கருத்தியல் பல்வேறுவிதமான மாற்றங்களுக்குட்பட்டு அபிவிருத்தியடைந்துள்ளது. உலகமயமாக்கம் மற்றும் கம்யூனிசத்தின் வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக "தாராளவாத ஜனநாயக" (Liberal Democracy) எண்ணக்கரு தோற்றம் பெற்றுள்ளது. இது மேற்கத்தைய அரசியல் எண்ணக்கரு என்பதையும் தாண்டி உலகளாவிய ரீதியில் அரசாங்க முறைகளைத் தீர்மானிக்கும் சக்தியாக எழுச்சியடைந்துள்ளது. தாராளவாத சிந்தனையாளரான பிரான்சிஸ் பூக்கயாமா (Francis Fukuyama) தனது நூலான "வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும்" (The end of history and the last man) என்பதில் "மனித குலத்தின் இறுதி அரசாங்க வடிவமாக தாராள ஜனநாயகம் காணப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். உலகமயமாக்கத்தின் காரணமாக "உலகளாவிய தாராண்மைவாத" (Global Liberalism) எண்ணக்கருவும் வளர்ச்சியடைந்துள்ளது. தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக உலகளாவிய ரீதியில் நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பும் எல்லை கடந்த செயற்பாடுகளும் உலகளாவிய தாராண்மைவாதத்தை ஊக்குவித்துள்ளது. இது மனித உரிமைத் தத்துவத்தினடிப்படையில் இன, மத, மொழிகளுக்கு

அப்பாற்பட்ட உலகளாவிய நீதியையும் வலியுறுத்துகின்றது. இவ்வாறு தாராண்மைவாதத்தின் வகைப்பாடு காலமாற்றத்திற்கேற்ப மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது.

### தாராண்மைவாதக் கருத்தியல் எதிர்நோக்கும் சவால்கள்

தற்காலத்தில் தாராண்மைவாத கருத்தியல் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. முதலாளித்துவ அரசியல் முறையினால் ஏற்பட்ட சமத்துவமின்மை, தனியார்மயமாக்கம், சந்தை சக்திகளின் ஆதிக்கம் போன்ற தாக்கங்கள் தாராண்மைவாத கருத்தியலின் இருப்புக்கு சவாலாக மாறியுள்ளது. சோஷலிச மற்றும் மார்க்சிச கருத்தியலாளர்கள் சமூக சமத்துவமின்மைக்கும் வர்க்க வேறுபாட்டுக்கும் தாராண்மைவாத கருத்தியலே காரணமாக இருக்கின்றது என விமர்சிக்கின்றனர். கலாச்சார பன்மைத்துவத்தினை தாராண்மைவாதம் கவனத்திற் கொள்ளவில்லை எனவும் குறை கூறப்படுகின்றது. பன்மைத்துவ கலாச்சாரவாதியான பிறையின் பேரி (Brain Barry) தனது நூலான "கலாச்சாரமும் சமத்துவமும்" (Culture and Equality) என்பதில் பல்லின சமூகத்தவர்களினுடைய கலாச்சார அடையாளத்தையும் சமத்துவத்தையும் தாராண்மைவாதம் பிரதிபலிக்க தவறிவிட்டது என குறிப்பிடுகின்றார். மேற்கத்தைய நாடுகளுக்கு வெளியிலும் கிழக்கு ஐரோப்பிய மற்றும் ஆசியாவில் எழுச்சி பெற்ற கன்பூசியவாதம், இஸ்லாமியவாதம் மற்றும் சர்வாதிகார தேசியவாதம் போன்ற தேசியவாத சிந்தனைகளிலும் தாராண்மைவாதத்திற்கு எதிரான விமர்சனங்கள் காணப்பட்டன. இவ்வாறு அண்மைக்காலமாக தாராண்மைவாதம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.

### தாராண்மைவாத கருத்தியல் பற்றிய மதிப்பீடு

தாராண்மைவாத கருத்தியலின் நோக்கம் தனிமனித சுதந்திரத்தை அடைதல் ஆகும். அரசின் தலையீடுகளில் இருந்து விடுபட்டு பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்காக தலையிடா அரசை இது வலியுறுத்துகின்றது. எனினும் காலப்போக்கில் தாராண்மைவாத சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி தலையிடா அரசுக் கொள்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு அரசு வரையறுக்கப்பட்ட அளவில் தலையிடலாம் என்ற கருத்து வலுப்பெற்று பொதுநல அரசு தோற்றம் பெற்றது. தற்காலத்தில் சந்தை சக்திகளின் வளர்ச்சி, உலகமயமாக்கத்தின் வருகை, பொருளாதார தங்கியிருத்தல் தன்மையின் எழுச்சி என்பவற்றின் காரணமாக அரசு தனது முகாமைத்துவ பணிகளை குறைத்துக் கொண்டு குறைந்த பட்ச அரசாக மாற்றம் பெற்றிருக்கிறது. இவ்வாறு மரபுரீதியான தாராண்மைவாத கருத்துக்களில் காணப்பட்ட சில அம்சங்கள் நடைமுறைக்கு பொருந்தாமல் போனபோது அவை விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு நவீன மற்றும் நவ தாராண்மைவாத கருத்துக்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அண்மைக்காலத்திலும் சோவியத் ரஷ்யாவின் வீழ்சிக்கு பின்னர் கம்யூனிச

கருத்தியலில் ஏற்பட்ட தளர்ச்சி நிலை உலகமயமாக்கத்தினை தீவிரப்படுத்தியதன் காரணமாக தாராள ஜனநாயகம் மற்றும் உலகளாவிய தாராண்மைவாதம் போன்ற எண்ணக்கருக்கள் தாராண்மைவாத கருத்தியலில் வளர்ச்சியடைந்துள்ளன. கருத்தியலின் இறுதி வடிவமாக தாராண்மைவாதமே காணப்படும் என்ற கருத்து பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்ட போதும் தற்கால உலகின் பெரும்பகுதி தாராண்மைவாத கருத்தியலைப் பின்பற்றுகின்ற அரசாங்க முறைகளையே கொண்டிருப்பதானது இதனது முக்கியத்துவத்தினையே எடுத்துக் காட்டுகின்றது.

### உசாத்துணை நூல்கள்


*1.* Amable, B., 2011. Morals and politics in the ideology of neo-liberalism. Socio-economic review, 9(1), pp.3-30.

2. Bedau, H. A. (ed.), (1971) Justice and Equality. Englewood Cliffs, NJ: Prentice-Hall.

3. Bell, D., (2016. 3. What Is Liberalism?. In Reordering the World (pp. 62-90). Princeton University Press.

4. Bellamy, R. and Mason, M. (eds), (2003) Political Concepts. Manchester University Press.

5. Buchanan, J.M., (2000) The soul of classical liberalism, The independent review, 5(1), pp.111-119.

6. Freeden, M., (2012) Liberalism. In The Routledge Companion to Social and Political Philosophy (pp. 255-266). Routledge.

7. Heywood, A, 2003. Political Ideologies: An Introduction, 3rd edn. Basingstoke and NewYork: Palgrave Macmillan.

8. Kelly, P., (2005) Liberalism (Vol. 1). Polity.

9. McClelland, J.S., (2005) A history of western political thought, Routledge.

10. Moore, M., (1993) Foundations of Liberalism, Oxford University Press.

11. Stirk, P. and Weigall, D. (eds), (1995) An Introduction to Political Ideas, London: Pinter.

12. Voegelin, E., Algozin, M. and Algozin, K., 1974. Liberalism and its History, The Review of Politics, 36(4), pp.504-520.

# நகுலேஸ்வரம் பற்றிய ஐதீகங்களும் வரலாற்று உண்மைகளும்: ஆய்வுச் சுருக்கம்

திருமதி. சிவரூபி சயிதரன்

---

ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னரான தென்னாசியா நாடுகளின் வரலாற்று மரபானது பெரிதும் ஐதீகங்கள், செவிவழி கதைகள், புராண, இதிகாச மரபுகளை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றிருந்தது. இலங்கையிலும் இத்தகைய பண்புகளையே வரலாற்று மரபின் தோற்றத்தில் காணமுடிகின்றது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்துடன் தொல்லியல் ஆய்வுகள் தோற்றம் பெற்றிருந்தாலும் கூட அவை பெரிதும் ஐதீகங்கள், செவிவழிக் கதைகள் என்பவற்றை தழுவி எழுந்த பாளிஇலக்கிய செய்திகளை உறுதிப்படுத்தும் விதமாகவே அமைந்திருந்தது. தொடக்ககால வரலாற்று நூல்களில் கூறப்பட்ட ஐதீகங்கள், செவிவழி மரபு செய்திகள் பலவற்றினை அண்மைக்கால விஞ்ஞான பூர்வமான தொல்லியல் ஆய்வுகள் நிராகரித்து வருகின்றன. இவ்வாறாக ஐதீகங்கள், மரபுவழிக் கதைகளினை அடிப்படையாகக் கொண்ட வரலாறுகள் நிராகரிக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் மிகைப்படுத்தப்பட்ட, கற்பனையான, நம்பமுடியாத நிகழ்வுகள், சம்பவங்கள், செய்திகள் பல இடம்பெற்றாலும் கூட ஐதீகங்கள் நீண்ட காலமாக மக்களுடைய வாழ்வியலிருந்து பிரிக்கமுடியாதவாறு செல்வாக்கு பெற்று வருகின்றது. இதற்கு இவ்வாறான ஐதீகங்கள் குறிப்பிடும் பிரதேசங்கள் ஏதோவொரு வகையில் தொன்மையான முக்கியத்துவம் பெற்றுள்ளதனை தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

அந்தவகையில் நகுலேஸ்வரத்தின் தோற்றம், வளர்ச்சியுடன் தொடர்பு படுத்தப்பட்ட வகையிலும் பல ஐதீக, மரபு வழிக்கதைகள் காணப்படுகின்றன. இக் கதைகள் நீண்ட காலமாக மக்களுடைய வாழ்வியலில் செல்வாக்கு பெற்று வருவதுடன், வட இலங்கையின் வரலாற்று மரபிலும் ஏதோவெரு வகையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதனையும் காணமுடிகின்றது. வட இலங்கையின் வரலாற்று மரபு மற்றும் நகுலேஸ்வரத்துடன் இணைந்த வகையில் இவ் ஐதீக கதைகள் தோன்றுவதற்கு இவ்வாலயத்தின் தொன்மை ஒரு காரணமாகும். வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொட்டு இற்றைவரை தொடர்ச்சியான வரலாற்றினை உடைய தொன்மையான ஆலயமாக நகுலேஸ்வரத்தினை தொல்லியல், வரலாற்று சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. வட இலங்கையின் முக்கிய ஐதீகங்கள், மக்களின் ஆன்மீக நம்பிக்கைகள் (Intangible Heritage) என்பவற்றின் மையக்கருவாக நகுலேஸ்வரத்தின் தோற்றம், வளர்ச்சி அமைந்திருந்தாலும் அவற்றில் வட

இலங்கையின் தொன்மை வரலாறும் உள்ளடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இவ் மரபுரிமை மையம் முறையான ஆவணப்படுத்தலுக்கும், விரிவான ஆராய்ச்சிக்கும் இற்றைவரை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாய்வின் நோக்கங்களாக வட இலங்கையின் தொன்மையான வரலாற்றில், நகுலேஸ்வரத்தினை மையப்படுத்தி தோற்றம் பெற்ற ஐதீகங்களின் வகிபாகத்தினை தெளிவுபடுத்துவதும், நகுலேஸ்வரம் சார்ந்த ஐதீகங்கள், நம்பிக்கைகள் மற்றும் கலாசார, இயற்கைசார் மரபுரிமை (Intangible, Tangible Cultural Heritage and Natural Heritage) என்பனவற்றினை ஆவணப்படுத்தலூடாக எதிர்கால தொல்லியல் ஆய்வுகளுக்கும், கலாசார சுற்றுலாவுக்கும் வழிவகுத்தல் என்பன அமைகின்றன.

திறவுச்சொற்கள் - ஐதீகங்கள், நகுலேஸ்வரம், ஆன்மீக மரபுரிமை, கலாசார மரபுரிமை.

## ஆய்வு அறிமுகமும், வரலாற்றுப் பின்னணியும்

யாழ்ப்பாண நகரிலிருந்து கிட்டத்தட்ட 25ஆம் தூரத்தில் கீரிமலை என்னும் இடத்தில் அமையப்பெற்ற புராதனமான சிவன் ஆலயமானது, கீரிமலை சிவன் கோயில், திருத்தம்பலேஸ்வரம், நகுலேஸ்வரம் என பல பெயர்களால் அறியப்படுகின்றது. நகுலேஸ்வரத்தின் தோற்றத்தினையும், தலச் சிறப்பினையும் விளக்கும் வகையில் எழுந்த புராண, இதிகாச கதைகள் பல உள்ளன. அந்த வகையில் நகுலேஸ்வரம் மாகாபாரத, இதிகாச கதைகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையிலும், மதஸ்ய புராணம், தஷிணகைலாய மான்மியம் போன்ற வட மொழி இலக்கியங்களிலும், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், ஆறுமுக நாவலர் சரித்திரம், நகுலாச புராணம், நகுலேஸ்வரமான்மியம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலேஸ்வர பூங்கொத்து, நகுலேஸ்வரர் சாதகம், நகுலேஸ்வரர் ஊஞ்சல் ஆகிய இலக்கியங்களாலும் அறியப்படுகின்றது.

போல்.இ.பீரிஸ் என்பவர் விஜயனின் இலங்கை வருகைக்கு அதிக காலத்துக்கு முன்னரே இங்கு சிறப்பு பெற்ற ஐந்து சிவாலயங்களில் ஒன்றாக நகுலேஸ்வரத்தினை குறிப்பிட்டிருந்தார். "விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரே இலங்கையிற் கருத்திற் கொள்ளத்தக்கனவும் முழு இந்தியாவின் வழிபாட்டிற் குரியனவுமாகிய ஐந்து சிவாலயங்கள் இருந்தன. "காங்கேசன்துறைக்கு அண்மையுள்ள நகுலேஸ்வரம் என்பவையாகும். இவை வெறும் புகழ்ச்சி அல்ல" (Pieris.p.1917:17-18). இக்கருத்தினை உறுதிப்படுத்தும் விதமாக அதாவது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்து மதம் பெற்ற செல்வாக்கானது கந்தரோடை, கட்டுக்கரை, பூநகரி, அநுராதபுரம், பொம்பரிப்பு போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களில் அடையாளப்படுத்தப்பட்ட இந்துமதம் தொடர்பான சான்றுகளுடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

நகுலேஸ்வரத்தின் அமைவிடம் சார்ந்த பின்னணியும் புராதன குடியேற்றம், பண்பாட்டு உருவாக்கம் என்பவற்றுக்கான சாதகத் தன்மைகளை கொண்டிருந்தது. நகுலேஸ்வர பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வுகள் இதுவரை இடம்பெறாத

போதிலும் அதனை அண்டிய பிரதேசமாகிய கந்தரோடை இலங்கையின் மிக முக்கிய தொல்லியல் தளமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பெருங்கற்காலம் தொட்டு அனைத்து வகை மட்பாண்டங்களும் இங்கு கிடைக்கப்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதிகாச, ஐதீக மரபு வழி கதைகளில் நகுலேஸ்வரம் மற்றும் இந்து மதத்தின் தொன்மை எடுத்துக்காட்டப்பட்டிருப்பதனை பெருங்கற்கால தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தப்படுத்துகின்றன. இதிகாசங்கள், புராணங்களைத் தொடர்ந்து உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதையுடன் சோழவரலாற்றுடன் இணைத்து பார்க்கப்படுவதும் நகுலேஸ்வரத்தின் தொன்மைக்கு இன்னொரு சான்றாகும். தொடர்ந்து ஆரியச்சக்கரவர்த்திகால அரசுடனும், பின்னர் ஐரோப்பியர் வருகையுடன் முற்றாக அழிக்கப்பட்டு, ஐரோப்பியர் ஆட்சியின் பிற்கால பகுதியில் மீளமைக்கப்பட்ட ஆலயமாகவும் காணப்படுவது இலங்கையின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்புடைய சிவன் ஆலயமாக நகுலேஸ்வரத்தினை அடையாளப்படுத்தியுள்ளதெனலாம். இவ்வாலயம் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொட்டு இற்றைவரை இந்துக்களுடைய வாழ்வியலுடன், ஆன்மிக நம்பிக்கைகளுடனும் இரண்டறக் கலத்துள்ளதெனலாம்.

வட இலங்கையின் வரலாற்றில் முக்கியம் பெற்ற பெரும்பாலான ஐதீக கதைகள் நகுலேஸ்வரத்துடன் தொடர்ப்புபடுத்தப்பட்டிருப்பதும், அவை இன்றுவரை மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுக்கொண்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இவ் ஐதீகங்கள் நகுலேஸ்வரத்தினை மையப்படுத்தி தோற்றம் பெறுவதற்கு இவ்வாலயத்தின் தொன்மை ஓர் காரணமாகும். இங்கு நகுலேஸ்வரத்தின் தொன்மையென்பது வட இலங்கையில் இந்து சமயத்தின் தொன்மையான வரலாற்றினையும் சுட்டிநிற்கின்றது. ஆகையால் வட இலங்கையின் இந்து சமய வரலாற்றுப் பின்னணியினையும், ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்ட நூல்கள் தோற்றம் பெறுவதற்குமான வரலாற்று பின்னணியினையும் நோக்குவது அவசியமானதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொட்டு தொடர்ச்சியாக வட இலங்கையின் பாரம்பரிய பண்பாடுகளும், வாழ்க்கை முறைகளும், சடங்குகளும் பெரிதும் இந்து சமயம் சார்ந்த நம்பிகைகளுடன் ஒன்றாக இணைந்த வகையிலேயே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக இந்து சமயம் சார்ந்த பண்பாட்டு அம்சங்கள் பெருங்கற்காலம் தொட்டு அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், ஈழத்தின் இந்து சமயத்தின் தொன்மையினை இடைக்கற்காலம் தொட்டு ஆராயும் பண்பும் காணப்படுகின்றது. இந்நியாவைப் போன்று ஈழத்தின் தொன்மையான வழிபாட்டு நெறியாகிய யக்ஷ, நாக வழிபாடியற்றிவர்கள் இடைக்கற்கால மக்களாகிய ஒஸ்ரலோயிட் இனமக்களே என்பதனை அண்மைக்காலங்களில் இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கற்காலக் கருவிகளும், சவ அடக்கங்களும் உறுதிப்படுத்துகின்றன (சிற்றம்பலம். சி.க. 1996: 35).

அண்மைக்கால ஆய்வுகள் பல இந்துப் பண்பாட்டின் தொன்மை பற்றிய சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளன.

இவற்றின் ஈமச்சின்னங்களும், அவற்றுடன் தொடர்புள்ள பெருங்கற்களும் இந்து ஆலயங்களின் தோற்றத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக அறிஞர் கொள்வர். ஈமச்சின்னங்களுக்கும் குளத்திற்கும் இடையிலான தொடர்பு பிற்கால இந்து ஆலயத்திற்கும் கேணிக்கும் இடையிலான தொடர்புடன் ஒப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் இப் பண்பாட்டில் காணப்பட்ட சுடுமண் சிற்பங்கள், உலோகச் சிலைகள் அக்காலத் தெய்வச் சிலைகளாகக் கருதப்படுகின்றன. பெருங்கற்கால பண்பாட்டம்சங்களுடன் சுடுமண் உருவங்களின் உடைந்த பாகங்கள், இலிங்கவடிவில் அமைந்த மண் உருவங்கள், இரும்பிலான வேல் சின்னம், சுடுமண்ணிலான விளக்குகள், நாக உருவங்கள் என்பன பெருங்கற்காலப் பண்பாட்டின் தொன்மையான வழிபாட்டுச் சின்னங்களென கருத முடியும் (புஸ்பரட்ணம். ப. 1993, 2017).

பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய மட்பாண்டத் துண்டங்களிலே சிவ சின்னமாகிய திரிசூலம் காணப்படுவதனால் சிவனை வழிபடும் வழக்கம் பெருங்கற்கால பண்பாட்டின் செல்வாக்கு இலங்கையில் பரவியதன் காரணமாகவே இருக்கலாம். இலங்கையில் இந்து சமயம் தொடர்பான வழிபாட்டு நெறிகள் புராதன காலம் தொட்டு சிறப்பு பெற்றதனையும், இலங்கையின் பல பாகங்களிலும், சமுதாயத்தில் வெவ்வேறு நிலைகளில் உள்ளவர்களின் மத்தியிலும் அவை பரவியிருந்தமையினை ஈழத்து பாளி நூல்களில் அங்குமிங்கும் பரவி காணப்படும் குறிப்புகளும், பிராமிக் கல்வெட்டுக்களும், நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் இருந்து கிடைக்கப்பெற்ற 60க்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்களிற் காணப்படும் சிவனைக் குறிக்கும் “சிவ” என்னும் பெயர் காணப்படுகின்றது. அரசர், இளவரசர், வணிகர், கிராமவாசிகள், கிராமிய மட்டத்திலுள்ள தலைவர், கஹபதி என்னும் குடும்பத் தலைவர் முதலானோர் சிவ என்னும் பெயரைத் தனியாகவும் முன்னொட்டுச் சொல்லாகவும் கொண்டிருந்தனர். மேலும், இந்துசமயச் சின்னங்களான திரிசூலம், இலிங்கம், மழு, இடபம், வேல், மயில், திருமகளின் வடிவமும் கொற்றவையின் கோலமும் லக்ஷ்மி வடிவம் என்பன இலங்கையின் புராதன நாணயங்களில் அமைக்கப்பட்டுள்ளதால் அவற்றை வெளியிடும் அதிகாரம் உடைய மன்னர்களும், குறுநில மன்னர்களும், பெரு வணிகரும் இந்துக்களாக விளங்கினர் என்பதை அறிய முடிகின்றது.

எனினும் இலங்கையின் இந்து சமய வழிபாட்டு அம்சங்கள் புராதன காலம் தொட்டு அடையாளப்படுத்தப்பட்டாலும் ஆரம்ப கால கலைப்படைப்புக்கள், வழிபாட்டு இடங்கள் எனும் போது பௌத்த சமயம் சார்ந்தாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் அழியாத பொருட்களைக் கொண்டு கட்டிடங்கள், சிற்பங்கள் அமைக்கும் மரபு பௌத்தத்திற் காணப்பட்டது போன்று இந்து சமயத்தில் பெருமளவில் காணப்படவில்லை. இந்து சமய வரலாற்றில் வட இந்தியாவில் குப்த வம்சத்தவரது காலமும், தென்னிந்தியாவில் பல்லவரது எழுச்சியுமே அழியாத பொருட்களைக் கொண்டு சிற்பங்கள், வழிபாட்டிடங்கள் அமைக்கும் மரபிற்கு வழிவகுத்தது எனலாம்.

தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக்காலம் இந்துசமய வளர்ச்சி மற்றும் திராவிட கோயிற் கட்டிடக்கலையைப் பொறுத்தமட்டில் திருப்புமுனையான காலப்பகுதியாகும். இலங்கையுடனான பல்லவர் தொடர்பில் அரசியல், வர்த்தகம், மொழி, எழுத்து, மதம், கட்டிடம், சிற்பம் போன்றனவற்றில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிகின்றது. அக் காலத்தில் தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற பௌத்த, சமண சமயங்களுக்கு எதிராக நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி பக்தி இயக்கத்தினை முன்னெடுத்து இந்து சமயத்தினை முன்னிலைக்கு கொண்டு வந்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கு இலங்கையிலும் எதிரொலித்ததனை கண்டுகொள்ளலாம். இக் காலத்திலே தமிழகத்தைப் போல் இலங்கையிலும் கோயில்கள், வேதங்கள், ஆகமங்கள் என்பன இந்து மதத்தின் கருவூலங்களாக அமைந்து கொண்டன. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்றன பாடல் பெற்ற திருத்தலங்களாக விளங்கியிருந்தன. எனினும், அக் கற்றளிகளின் எச்சங்கள் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. திராவிடக் கட்டிடக்கலையின் புராதன எச்சங்களாக அநுராதபுரத்திற்கு வடக்கே அகழ்வாய்வுகளின் போது ஐந்து புராதன இந்துக் கோயில்களின் அழிபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் அளவிற் சிறிய கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்த மண்டபம் என்பனவும் அடையாளம் காணப்பட்டுள்ளன (பத்மநாதன்.சி. 2005. 122). அத்துடன், அநுராதபுர கால பௌத்தம் தொடர்பான கட்டிடங்களான நாலந்தா கெடிகே, தெவிநுவர உபுல்வன் கோயிலான கல்கே, இசுருமுனியாச் சிற்பங்கள் போன்றவற்றில் தென்னிந்திய திராவிட கட்டிட கலைப்பாணியின் செல்வாக்கினை காணமுடிகின்றது. இவ்வாறாக தமிழகத்தைப் போன்று இலங்கையிலும் பல்லவர் ஆட்சிக்காலம் இந்துசமயம் சார்ந்த வழிபாட்டம்சங்கள், கலைகள் போற்றி வளர்க்கப்பட்ட காலமாகவே திகழ்ந்திருந்தது.

இலங்கையில் சோழராட்சிக் காலமானது இந்து சமயத்துறையைப் பொறுத்தமட்டில் பொற்காலமாகும். தமிழகத்தைப்போன்று இலங்கையிலும் திராவிடக் கட்டிட கலைப்பாணியிலான புதிய பல கோயில்கள் உருவாக்கப்பட்டன. வேறு எந்த காலப்பகுதியிலும் ஏற்படுத்தப்படாத அளவில் இந்து சமய கலாசார அம்சங்கள் சோழரட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியான வளர்ச்சியினையும், தாக்கத்தினையும் பின்வந்த சிங்கள மன்னர்கள் காலத்திலும் காணமுடிகின்றது. 1215இல் 24000 தமிழ், சோழ, கேரளப்படை வீரர்களின் உதவியுடன் கலிங்கமாகன் இலங்கை மீது படையெடுத்து பொலனறுவை அரசைக் கைப்பற்றிக் கொண்டான். கலிங்கமாகனின் 40 ஆண்டு கால ஆட்சியில் இந்துக் கோயில்கள் நிறுவன ரீதியில் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டதனை அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி தொடங்குவதற்கு முன்னர் வட இலங்கையில் இருந்த தமிழ் அரசான சாவகன் அரசும் அவனது மைந்தனின் ஆட்சிக் காலமும் இந்து மதம் சிறப்பு பெற்ற காலமாகும்.

13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் இந்து மத வரலாற்றைப் பொறுத்தவரையில் ஒரு திருப்புமுனைக் காலமாகும். இக்கால தமிழரசில் இந்துமதம் அரசமதம் என்ற அந்தஸ்தை பெற்றுக் கொண்டதுடன், திருக் கோயில்கள் பலவும் தோற்றம் பெற்று இந்துமதம் நன்னிலையினை அடைந்து கொண்டமையினை வரலாற்று, தொல்லியல் மூலகங்களும் உறுதிப்படுத்துகின்றன. இத்தகையதோர் நிலமையே அந்நிய இனத்தவரான போர்த்துக்கேயர் 1619 இல் நல்லூரை கைப்பற்றும் வரை நீடித்திருந்திருந்தமையினை காண்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் (1619 ___ 1658), தொடர்ந்து ஒல்லாந்தர் (1658 ___ 1796) இனத்தவரது ஆட்சி 170 ஆண்டுகளுக்கு மேல் இடம்பெற்ற போது தமது சமயம் தவிர்ந்த பிற மத நடவடிக்கைகளை தடைசெய்தனர். ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த மதக் கொள்கையினால் 500க்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டு அவற்றின் எச்சங்களைக் கொண்டு கோட்டைகள், தேவாலாயங்கள் அமைக்கப்பட்டன என்பதனை ஐரோப்பிர் கால ஆவணங்களும், தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. எனினும் கி.பி 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மதச்சுதந்திரம் பற்றிய கருதுகோளானது அவர்களது ஆட்சிக்குட்பட்ட கீழ் நாடுகளிலும் மதச்சுதந்திரம் அளிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிகொடுத்தது. இதனால் ஐரோப்பியரால் அழிக்கப்பட்ட ஆலயங்கள் மீள அமைக்கப்பட்டன. ஒல்லாந்தரை தொடர்ந்து ஆட்சி செய்த பிரித்தானியரும் (1796 ___ 1948) மதச்சுதந்திரத்தை கடைப்பிடித்ததனால் பல கோயில்கள் புதியனவும், பழையனவுமாய் தோற்றம் பெற்றன.

மேற்கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணியினைச் சுருக்கமாக நோக்குவேமாயின், இலங்கை மக்களிடையே நிலவிய இந்து சமய நம்பிக்கைகள், கிராமிய வழிபாட்டம்சங்கள் போன்றவற்றின் வளர்ச்சி நிலை, பல்லவர்கால இந்து கலாசார மறுமலர்ச்சியின் தாக்கம், சோழராட்சியில் முதன்மைபெற்ற இந்துமத வளர்ச்சிநிலை, சோழராட்சி முடிவுற்றதன் பின்னர் சிங்கள மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் கூட இந்துமதத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், கலிங்கமாகனின் 40 ஆண்டுகால ஆட்சியில் முதன்மை பெற்ற இந்துமதம், சாவகனும், அவனது மைந்தனின் ஆட்சிக் காலத்திலும் இந்து மதம் பெற்ற செல்வாக்கு, ஆரியச் சக்கரவர்த்தி காலம் இந்து மதமும் அவை சார்ந்த பண்பாடுகள் பொறுத்தும் பொற்காலமாக விளங்கியமை போன்ற வரலாற்று பின்னணியானது தொடர்ந்து இந்துமதம் முதல் நிலை வகிக்க காரணமாகியது.

வட இலங்கையில் தொடர்ந்து இந்துமதம் பெற்ற முதன்மை நிலையினால் ஆலயங்களின் உருவாக்கம், பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், கிரியை, வழிபாட்டு நெறிகள், இந்து மத நம்பிக்கைகள் என்பன மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றன. மேலும், செவிவழிக் கதைகள், ஐதீகங்கள் என்பன செல்வாக்கு பெறுவதற்குமான வரலாற்றுச் சூழலையும் தோற்றுவித்திருந்தது. இவ்வாறானதொரு நிலையில் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலத்தில் கி.பி

1621 இல் போர்த்துக்கேயர் வட இலங்கையினைக் கைப்பற்றிக் கொண்டனர். போர்த்துக்கேயர் தமது மதமான கத்தோலிக்க மதத்தினைப் பரப்பும் பொருட்டு இந்து மத நடவடிக்கைகளை தகர்த்தெறிந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய பிலிப்டி ஒலிவீரா என்ற போர்த்துக்கேயத் தளபதி இங்குள்ள ஐந்நூறு ஆலயங்களை அழித்ததில் பெருமை கொண்டான் என்பதை போர்த்துக்கேய ஆவணங்களே உறுதி செய்கின்றன (சிற்றம்பலம்.சி.க, 2006). இவ்வாறானதொரு நிலையே ஒல்லாந்தர் ஆட்சியின் முதல் பகுதி வரை தொடர்ந்தமையினால் இதுவரை காலமும் மக்களிடையே ஐதீகங்களாக எஞ்சிய கதைகளை அடிப்படையாகக் கொண்டு இந்துமதத்தின் தொன்மையினை எடுத்துக் கூற வேண்டிய தேவை அக்கால ஆசிரியர்களுக்கு இருந்தது. தொடர்ந்து ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலும், ஆங்கிலேயர் ஆட்சியிலும் கொடுக்கப்பட்ட மதச்சுதந்திரம் பற்றிய கருதுகோள்களானவை இந்துமத மறுமலர்ச்சியினையும், மதமாற்றத்திற்கு எதிரான இந்துமத விழிப்புணர்வை ஏற்படுத்தும் சூழ்நிலையினை சுதேசிகளுக்கு வழங்கியிருந்தது. இப்பின்னணியிலேயே அக்கால ஆசிரியர்கள் செவிவழி மரபாகவும், ஐதீகங்களாகவும் எஞ்சிய கதைகளை அடிப்படையாகக் கொண்டு கைலாயமாலை, யாழ்ப்பாணவைபவமாலை, வையாபாடல் போன்ற தமிழிலக்கியங்களைப் படைத்திருந்தனர். மற்றும் இந்து ஆலயங்களில் ஐதீகக்கதைகள் பலவும் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் தோற்றம் பெற்றிருந்தன. இக்கதைகள் தமிழிலக்கியங்களில் கூறப்பட்டுள்ளமையானது அக்கால மக்கள் இவ்வரலாற்றுக் கருவூலங்களை அறிந்து வைத்திருந்தனர் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது. அத்துடன், இற்றைவரை அவை மக்கள் மத்தியில் தொடர்ந்து செல்வாக்குப் பெறவும் காரணமாகியது.

### ஆய்வுப் பிரச்சனை

வட இலங்கையின் முக்கிய ஐதீகங்கள், மக்களின் ஆன்மீக நம்பிக்கைகள் (Intangible Heritage) என்பவற்றின் மையக்கருவாக நகுலேஸ்வரத்தின் தோற்றம், வளர்ச்சி அமைந்திருந்தாலும் அவற்றில் வட இலங்கையின் தொன்மை வரலாறும் உள்ளடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இவ் மரபுரிமை மையம் முறையான ஆவணப்படுத்தலுக்கும், விரிவான ஆராய்ச்சிக்கும் இற்றைவரை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதே இவ்வாய்வு எதிர்நோக்கும் பிரச்சனையாகும்.

### ஆய்வின் நோக்கம்

நகுலேஸ்வரத்தின் தோற்றம், வளர்ச்சியில் ஐதீகங்கள் எனும் இவ்வாய்வின் நோக்கங்களாக,

1. வட இலங்கையின் தொன்மையான வரலாற்றில், நகுலேஸ்வரத்தினை மையப்படுத்தி தோற்றம் பெற்ற ஐதீகங்களின் வகிபாகத்தினை தெளிவுபடுத்தல்.
2. நகுலேஸ்வரம் சார்ந்த ஐதீகங்கள், நம்பிக்கைகள் மற்றும் கலாசார, இயற்கைசார் மரபுரிமை (Intangible,Tangible Cultural Heritage and Natural Heritage)

என்பனவற்றினை ஆவணப்படுத்தலூடாக எதிர்கால தொல்லியல் ஆய்வுகளுக்கும், கலாசார சுற்றுலாவுக்கும் வழிவகுத்தல் என்பன அமைகின்றன.

### ஆய்வு முறையியல்

தொல்லியல் கள ஆய்வே இவ்வாய்வின் பிரதானமான ஆய்வு முறையாகும். மற்றும் வரலாற்று நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் பலவும் இவ்வாய்வில் இரண்டாம்தர தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்லியல் களப்பயணத்தினூடாக ஐதீகங்கள், நம்பிக்கைகள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டெழுந்த கட்டிட, சிற்பக் கலைகள் (Tangible Heritage) அவதானிப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன், புகைப்பட ஆவணப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டது. நேரடி நேர்காணல் ஊடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டு, வரலாற்று இலக்கியங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. இவற்றின் தொகுப்பாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

### ஐதீகங்களும், வரலாற்று உண்மைகளும்

தமிழிலக்கியங்கள் கூறும் ஐதீக கதைகளில் பெரும்பாலானவை புராதன சிவனாலயமான நகுலேஸ்வரத்தினை மையப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஐதீகங்களை மையப்படுத்திய வகையில் நகுலேஸ்வரத்தின் தோற்றம், தொன்மை என்பன கூறப்பட்டிருந்த போதிலும் அவ்வாலயத்தின் அமைவிடப் பின்னணியும் அதன் வரலாற்றுச் சூழலை தீர்மானித்ததெனலாம். இவ்வமைவிடமானது கரையோரப்பிரதேசம் சார்ந்திருப்பதோடு, புராதன இயற்கை துறைமுக நகரமாகிய ஜம்புகோளப்பட்டினத்தினையும் (காங்கேசன்துறை) அண்டியுள்ளமையும் சமுத்திரவழித் தொடர்புகளின் மையமாக உருவாக்கியிருந்தது. மற்றும் புராதன குடியிருப்புக்களின் தோற்றம், நாகரிகங்களின் உருவாக்கம், காலத்திற்கு காலம் பண்பாட்டுப் பரவல் என்பனவற்றுக்கும் சாதகமாகவே அமைந்திருந்தது. இவ்வாறாக நகுலேஸ்வரத்தின் அமைவிடப் பின்னணியானது புராதன நாகரிக உருவாக்கம் ஒன்றிற்கான சாதக தன்மைகளை கொண்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். மாதோட்டப் பரப்பின் திருக்கேதீஸ்வரம், கோகண்னப் பரப்பின் திருக்கோணேஸ்வரம் போன்று ஜம்புகோளப்பட்டினம் - காங்கேசன்துறைப் பரப்பில் நகுலேஸ்வரத்தினையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். இலங்கையின் புராதன நாகரிக உருவாக்கம், வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல் என்பவற்றில் மாதோட்டம், கோகண்ன போன்ற மையங்கள் பெற்ற செல்வாக்கினை நகுலேஸ்வர ஆலயப்பரப்பும் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் விரிவான தொல்லியல் மேலாய்வு, அகழ்வாய்வு மற்றும் நீரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் இக்கருத்து உறுதிப்படுத்தப்படலாம்.

கடற்கரை சார்ந்து புராதன குடியிருப்புக்களின் தோற்றம், பண்பாட்டுப் பரவல் மற்றும் வளர்ச்சி, சமுத்திர தீர்த்தத்தினை மையப்படுத்திய சிவாலயம் என்பனவற்றினை

அடிப்படையாகக் கொண்டு பல்வேறான ஐதீகங்கள், செவிவழிக் கதைகள், மரபுவழி வரலாற்றுச் செய்திகள் நகுலேஸ்வரத்தின் தோற்றம், வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதுடன் அதன் தொன்மையையும் சுட்டிநிற்கின்றது. சுருக்கமாக சொன்னால் இவ்ஐதீகங்கள் தோற்றம் பெறுவதற்கு நகுலேஸ்வரத்தின் தொன்மையே முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இந்த வகையில் நகுலேஸ்வரத்தினை மையப்படுத்திய ஐதீகங்கள், வரலாற்றுத் தகவல்களாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த (ஒல்லாந்தர் ஆட்சிக்காலம்) மயில்வாகனப் புலவரால் படைக்கப்பட்ட தமிழ் இலக்கியமான யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்படும் ஐதீகங்களாகவே இவை அமைகின்றன.

1. **விஜயன் கதை:** இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியமான மாகாவம்சம் இலங்கையின் முதல் மன்னனாக விஜயனை குறிப்பிடுவதுடன் அவனது வருகையுடனேயே நாகரிகம் தோற்றம் பெற்றதாகவும் கூறுகின்றது. யாழ்ப்பாண வைபமாலையில் விஜயன் தன் அரசாட்சிக்கு பாதுகாப்பாக நான்கு திசைக்கும் நான்கு சிவாலயங்களை அமைத்தான் எனவும் அவற்றில் வட திசையில் கீரிமலைச்சாரலில் அமைக்கப்பட்ட சிவாலயமாக திருத்தம்பலேச்சுரன், திருதம்பலேசுவரி (நகுலேஸ்வரம்) ஆலயத்தினைக் குறிப்பிடுகின்றது (யாழ்ப்பாண வைபவமாலை, 1949, ப. 6-7). இலங்கையின் பழமைவாய்ந்த சிவாலயங்களினை விஜயனின் ஐதீகத்துடன் இணைத்து கூறப்பட்டுள்ளமை அவற்றின் தொன்மையான பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

யாழ்ப்பாணவைபவமாலைக் குறிப்பினை நோக்கும் போது,

"அரசாட்சியை ஆரம்பிக்க முன்னரே விஜயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலுசிவாலயங்களையெழுப்பிக் கொண்டான். கீழ் திசைக்குத் தம்பலகாமத்துத் கோணேசர் கோவிலை நிறுவி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேச்சரச் சிவாலயத்தை புதுப்பித்து, தென்றிசைக்கு மாத்தறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலை எழுப்பி, வட திசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலையெனும் பதியிலே திருத்தம்பலேச்சுரன், திருத்தம்பலேசுவரி கோவில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்து' - யாழ்ப்பாணவைபவமாலை. கீரிமலைப் பகுதியிலமைந்த ஆலயங்களுக்குச் சமீபமாகக் கதிரையாண்டவர் ஆலயம் ஒன்று இருந்தது பற்றிக் கூறும் செய்தியானது தற்கால மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலையே குறித்து நிற்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

இவ்யாழ்ப்பாண வைபமாலைச் செய்தியினை ஒத்ததாகவே போல்.இ.பீரிஸினுடைய குறிப்பும் அமைகின்றது. அவரது குறிப்பிலிருந்து விஜயன் வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் நகுலேஸ்வரம் உட்பட ஐந்து சிவாலயங்கள் சிறப்பு பெற்றிருந்த செய்தியினை அறிய முடிகின்றது. இவ்விரு செய்திகளையும் உறுதிப்படுத்தும் வகையிலேயே இலங்கையின் இந்துமதத்தின் தொன்மை பற்றிய

சான்றுகள் பெரிதும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இருப்பதனை தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றது. ஐதீகங்களுடாக அறியப்படும் இந்து மதத்தின் தொன்மையினை வரலாற்றுக்கு முற்பட்டகால தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றதெனலாம். பாளிஇலக்கியங்கள் இலங்கை நாகரிகத்தின் தோற்றத்தினை விஜயன் வருகையுடன் ஆரம்பித்ததாக கூறுகின்றன. விஜயன் கதை ஐதீகமாக இருந்தாலும் கூட அவற்றில் குறிப்பிடப்படும் இடங்கள் பலவும் புராதன நாகரிக உருவாக்க மையங்களாக திகழ்ந்ததனை அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் புலப்படுத்தி நிற்கின்றன. அவ்விடங்களில் இடம்பெற்ற புராதன நாகரிகத்தின் தோற்றத்தினை விஜயன் வருகையுடனான ஐதீகங்களோடு இணைத்து பாளி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. அந்தவகையில் நகுலேஸ்வரம் அமைந்துள்ள இடமும் குறிப்பிடத்தக்கதாகும். பாளி இலக்கியங்களின் விஜயன் ஐதீகத்தினை ஒத்ததாக தமிழிலக்கியங்களில் மருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் ஐதீகம் தமிழர் பிரதேசங்களின் தென்மையான வரலாற்றினைக் கூற பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தவகையில் கதிரைமலை, கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற புராதன நாகரிக உருவாக்கம் மாருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் கதையூடாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இதுவரை கீரிமலை, மாவிட்டபுர, ஜம்புகோள பகுதிகளில் முறையான தொல்லியல் ஆய்வுகள் இடம்பெறாத போதும் இதனை இப்பிரதேசங்களுக்கு மிக அருகிலுள்ள கந்தரோடையின் தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண வரலாற்றிலக்கியங்களில் வலிகாமப் பிரதேசத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ள மருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் கதை கிழக்கிலங்கையில் அப்பிரதேசத்திற்கு ஏற்றவாறு மாற்று வடிவம் பெற்றுள்ளதனை திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் போன்ற இலக்கியங்களுடாக காணமுடிகின்றது (சி.க.சிற்றம்பலம், 1993). இவ்விலக்கியங்களில் பெயர்கள், வம்சம், நாடு, தலைநகர் அமைந்த இடம் என்பன வேறுபாடு கொண்டவையாக அமைந்திருந்தன.

2. **மாருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்க மன்னன் கதை:** திசையுக்கிர சோழ மன்னனின் மகளாகிய மாருதப்புரவீகவல்லி தீராத நோயினால் அவஸ்தைப்பட்ட பொழுது சந்நியாசி ஒருவரால் வழிநடத்தப்பட்டு கீரிமலையில் வந்திறங்கி, நகுல முனிவரிடம் ஆசிர்வாதம் பெற்று, அங்குள்ள புனித தீர்த்தத்தில் நீராடி சிவாலய தரிசனம் செய்தமையால் குன்ம நோயும் தீர்ந்து, குதிரை முகமும் மாறி பேரழகியாக திகழ்ந்தாள். கதிரைமலையிலிருந்து நகுலேஸ்வரர் ஆலயத்தினை தரிசிக்க வந்த உக்கிரசிங்க மகாராசன் அவள் பேரழகில் மயங்கி மணம்முடித்தமை (யா.வை., 1949, ப.15-18). நகுலேஸ்வரத்தில் இவ்ஐதீக கதைகளை அடிப்படையாகக் கொண்டு சிற்பங்கள், சிலைகள், ஓவியங்கள் படைக்கப்பட்டிருப்பது மக்களின்

பாரம்பரிய நம்பிக்கைகளில் இக்கதைமரபு பெற்ற செல்வாக்கினை மேலும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

மாருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் கதையானது தமிழிலக்கியங்களிலேயே வேறுபட்ட கதை வடிவங்களாக மாற்றப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிவதுடன், பாளி இலக்கிய விஜயன் கதையின் சாயலையும் காணமுடிகின்றது.

மாருதப்புரவீகவல்லி உக்கிரசிங்கன் கதையில் சோழர் வருகையுடன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட தமிழரசு சிங்கைநகருக்கு மாற்றப்பட்ட செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது. கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னான உக்கிரசிங்கனே சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லியை மணம் முடித்ததாகவும் அறியமுடிகின்றது. இங்கு கதிரமலை, சிங்கைநகர் எதுவென்பதையிட்டு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் கூட இக்கதை இடம்பெற்ற காலப்பகுதியில் பராந்தக சோழனின் படையெடுப்பு ஒன்று வட இலங்கை மீது ஏற்பட்டதனை தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் சோழரின் வரலாற்றுப் பெருமைகள் கல்வெட்டுக்கள், நாணயங்கள் மற்றும் இலக்கியங்களுடாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரே வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. இக்காலப்பகுதிக்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் கூறும் ஐதீகங்களில் சோழர்களுடான தொடர்பு கூறப்பட்டுள்ளமையானது சோழர் தொடர்பு பற்றிய வரலாற்று சம்பவங்களை சோழருடைய வரலாறு வெளிச்சத்திற்கு வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இப்பிரதேச மக்கள் அறிந்து வைத்திருந்ததமையை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறாக ஐதீகங்களில் குறிப்பிடப்படும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் தொல்லியல் ஆய்வுகளில் பல இடங்களில் நிராகரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் ஒரு சில வரலாற்று உண்மைகள் ஒளிந்திருப்பதனையும் தொல்லியல் ஆய்வுகளே உறுதிப்படுத்தி நிற்கின்றன.

3. நல்லூர் இராசதானியுடனான தொடர்பு: நல்லூர் இராசதானி மன்னனாகிய சிங்கையாரியனும், புவனேகவாகு மந்திரியும் கீரிமலைக்கு சென்று, தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்ததுடன் அவ்வாலய விவகாரங்களை விசாரித்து அறிந்து கொண்டமை (யா.வை.,1949, ப 80-81). நல்லூரைத் தலைநகராக கொண்ட தமிழரசில் இந்து மதம் அரசமதம் என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டதுடன், அவைசார்ந்த வழிபாட்டு அம்சங்கள் முதன்மை பெற்றிருந்தது. இராசதானிக்கு நான்கு பக்கங்களிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களுடைய ஆட்சிப் பிரதேசங்களிலும் ஆலயங்கள் பல செல்வாக்குப் பெற்றிருந்தன. இவ்இராசதானி கால இந்து மத செல்வாக்கினை நாணயங்கள், சாசனங்கள், இலக்கியங்கள் போன்ற வரலாற்று, தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இந்தவகையில் நல்லூர் இராசதானி மன்னர்களின் செல்வாக்கிற்குட்பட்ட ஆலயங்களில் ஒன்றாக நகுலேஸ்வரமும் விளங்கியிருந்ததெனலாம்.

4. நகுலமுனி கதை:- நகுலமுனிவர் கீரிமலை மலைச்சாரலில் தங்கி, அங்குள்ள புனித தீர்த்தத்திலே நீராடி கீரிமுகம் நீங்கப்பெற்றமை (யா. வைபவமாலை, 1949, ப. 7-8).

5. **கைலாச புராணத்தில் குறிப்பிடும் யாழ்ப்பாணத்தின் தோற்றம் பற்றிய கதை:** இராவணனை இராமபாணம் தாக்கியபோது, அவன் கையிலிருந்து யாழ் நழுவி விழ சுசங்கீதன் அதனைப் பற்றிக் கொண்டான். பின்னர் கீரிமலையிலே யாழ்வாசித்து பரமேஸ்வரனைத் தொழுதான். பார்வதி சமேதராகக் காட்சி கொடுத்த மகேஸ்வரன் காடுகொன்று நாடாக்கி நகரமைத்து அதனை வீணாபணம் என்னும் பெயரோடு ஆட்சிபுரிவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார் (தஷிணகைலாச புராணம், 1887, ப.15-18).

6. தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள நளன் தமயந்தி கதை ___ இக் கதை இடம்பெற்றுள்ள துவாபரயுகத்திலே நளன் சனிஸ்வரனால் பீடிக்கப்பட்டு நிடத நாட்டை இழந்த வேளையில் திருக்கோணேஸ்வரம் வந்து வழிபட்டு, அங்கிருந்த ஞானி ஒருவரின் வழிகாட்டலில் நகுலேஸ்வரம் வந்து வழிபட்டு சிவனருள் பெற்று திரும்பிச் செல்லும் போது இடம்பெற்ற சம்பவம் (குமாரசுவாமிப்பிள்ளை.அ. 2012, ப. 84.85).

7. மகாபாரத கதைகள் - அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் போது கண்டகி தீர்த்தத்தில் நீராடி சிவனிடம் வரங்கள் பெற்றதான குறிப்பு, அருச்சுனன், பீலிவளை கதை - அருச்சுனன், நாகவம்சத்து அரசனொருவனுடைய மகளான பீலிவளையை நாகதீவிலிருந்து வரவழைத்து திருமணம் செய்து கொண்டமை (கிருஸ்ணராசா.செ, அம்பிகைபாகன்.வே,.2012.ப .27, 86-87).

8. நகுலேச பாசுபதர்களின் செல்வாக்கு (கிருஸ்ணராசா.செ, 2012, ப. 27-28).

இவ்வாறான ஐதீக, புராண, இதிகாச கதைகள் பலவற்றில் நகுலேஸ்வரம் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருப்பது இவ்வாலயத்தின் தொன்மையினையையும், இலங்கையில் இந்துமதமும், அவை சார்ந்த வழிபாட்டு மரபுகளும் பெற்ற செல்வாக்கினையும் வெளிப்படுத்தி நிற்கின்றதெனலாம். மேலும் ஐதீக கதை மரபுகள் வட இலங்கையின் வரலாற்று உண்மைகள் சிலவற்றினையும் வெளிப்படுத்தியிருப்பதனையும் மேற்கண்டோம். நகுலேஸ்வரத்துடன் தொடர்புபட்ட ஐதீகங்களும், செவிவழிகதைகளும் வட இலங்கை வரலாற்றில் முக்கியம் பெற்றிருப்ப தோடல்லாமல், இற்றைவரை இம் மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த நம்பிக்கைகளாகவும் (Spiritual Heritage), பெறுமதிமிக்க தொட்டுணர முடியாத கலாசார (Intangible Heritage) மரபுரிமைகளாகவும் முக்கியம் பெறுகின்றன. இவை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்படுக்கப்படும் பெறுமதி கொண்ட மரபுரிமைச் சொத்துக்களாகவும் விளங்குகின்றன.

ஆய்வுப் பெறுபேறுகள்

ஒரு நாட்டு அல்லது பிரதேச மக்கள் இனம், மதம், மொழி, பாரம்பரிய பழக்கவழக்கங்கள், வரலாற்று மரபு, அரசியல் கருதுகோள், பாரம்பரிய பிரதேசம் என்பன இருக்குமானால் தம்மை தேசிய இனமாக சுய அரசை அமைக்க தகுதி உள்ளவர்களாக அடையாளப்படுத்தி கொள்ளலாம். இவற்றுள் ஒன்றோ சிலவே குறிப்பிட்ட மக்களிடம் இல்லாது விடின் ஏனைய தனித்துவமான அம்சங்களை அடிப்படையாக கொண்டு உரிமைக்குரல் எழுப்புவதன் மூலம் அவர்களும் விரைவாக ஒரு தேசிய இனமாக சுயநிர்ணய அரசை அமைத்துக் கொள்ளலாம் என்பது தேசியவாதத்தின் அடிப்படை அம்சமாகும். தென்னாசியாவில் தேசியவாதக் கருதுகோள்கள் செல்வாக்கு பெற்றதன் பின்னணியில் பாரம்பரிய வரலாற்று மரபினை எடுத்துகாட்டுவதற்கு ஐதீகம், கட்டுக் கதைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று இலக்கியங்களே பெரிதும் பயன்படுத்தப் பட்டது. அதாவது, தொல்லியல் ஆய்வுகள் வளர்ச்சி பெறாத காலகட்டத்தில் பாரம்பரிய தொன்மை வரலாற்றினை எடுத்துக்காட்டுவதற்கு மக்களிடையே பாரம்பரியமாகத் தொடர்ந்து வந்த ஐதீகக் கதைகளினை மையப்படுத்திய வரலாற்று இலக்கியங்களே ஆதாரங்களாக விளங்கின. அவ்விலக்கியங்கள் காவிய அலங்கார அமைப்பு முறையினை பின்பற்றி அமைக்கப்பட்டனவாகவே இருந்தன. தென்கிழக்காசியா, தென்னாசியா நாடுகளில் இத்தகைய பண்பு பொதுவாக காணப்பட்டிருந்தது. உதாரணமாக மகாபாரத, இராமாயண கதைகள், கௌடில்யன் கதைகள், விஜயன் கதைகள், மாருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் கதைகள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

தொல்லியல் ஆய்வுகள் வளர்ச்சியடைந்ததனை தொடர்ந்து இத்தகைய ஐதீகங்கள் நிராகரிக்கப்பட்டதோடு, இக் கதைகளினை அடிப்படையாகக் கொண்ட வரலாறும் மீளுருவாக்கம் செய்யப்பட்டது. தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டறியப்பட்ட புராதன மையங்கள் பல ஏற்கனவே ஐதீகங்களில் வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களாக கூறப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. ஆகையால் புராதன குடியேற்றம் இடம்பெற்ற மையங்களின் தொன்மையான வரலாறானது ஐதீகக் கதைகளினை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றிலக்கியங்கள் படைக்கப்பட்ட காலத்து சூழ்நிலைக்கேற்ப, அக்கால சமுதாய தேவைக்கேற்ப மாற்றப்பட்டிருந்தது. அதனுடன் மக்களிடையே பாரம்பரியமாக தொடர்ந்து வந்த நம்பிக்கைகளும், செவிவழி மரபுகளும் சூழ்நிலைக் கேற்ப பல கதைவடிங்களாக செல்வாக்குப் பெற்றிருந்தன. அவை காலவரையற்ற வரலாற்று நிகழ்வுகளாகவும் கதைவடிவில் படைக்கப்பட்டிருந்தன.

வட இலங்கை மக்களிடையே பாரம்பரியமாக தொடர்ந்து வந்த செவிவழிக்கதைகள், ஐதீகங்கள் பலவும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலேயே நூ லுருவாக்கம் பெற்றிருந்தது. இந்நூல் உருவாக்கத்திற்கு ஐரோப்பியர் ஆட்சியால் ஏற்பட்ட தாக்கங்களே முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. தொல்லியல் ஆய்வுகள் தோற்றம் பெறாத காலகட்டத்தில் இந்துமத தொன்மையினை

எடுத்துக்காட்டுவதற்கு மக்களிடையே பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த ஐதீக கதை மரபுகள், நம்பிக்கைகள் என்பனவே அடிப்படையாக அமைந்து கொண்டன. இலங்கையின் முதலாவது அரசன் என கருதப்படும் விஜயன் நகுலேஸ்வரத்தினை கட்டுவித்தான் என்பதிலிருந்தும், விஜயன் கதையின் சாயல்களை மருதப்புரவீகவல்லி, உக்கிரசிங்கன் கதைகளில் காணமுடிவதனூடாக வடக்கு, கிழக்கு இலங்கையின் தென்மையான வரலாற்றை கூற முற்பட்டிருப்பதும், யாழ்ப்பாணம் என்ற பெயரின் உருவாக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையிலும் (சுசாங்கீதன் என்ற யாழ்பாடியினுடைய கதை), யாழ்ப்பாண அரச உருவாக்கத்தில் முக்கியம் பெற்ற ஒரு காலகட்டத்தை குறிப்பதிலிருந்தும் (உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி) அதாவது யாழ்ப்பாண வரலாற்றின் முக்கியம் பெற்ற சம்பவங்கள் பெரும்பாலனவற்றுடன் நகுலேஸ்வரம் தொடர்ப்புபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான ஐதீக கதைகளில் கூறப்பட்ட செய்திகள் மிகைப்படுத்தப்பட்ட வகையில் காணப்பட்டாலும் அவற்றினை முற்றுமுழுதாக ஒதுக்கிவிடாது அவற்றில் ஏதோவெரு வகையில் அப்பிரதேசம் சார் தொன்மைக்கான சான்றுகள் இருப்பதனையும் இவ்வாய்வினூடாக காணமுடிகின்றது.

தொன்மையான வரலாற்றினையும், ஐதீக சிறப்பினையும் கொண்டு விளங்குகின்ற நகுலேஸ்வரம் வட இலங்கையின் முக்கிய சிவனாலயமாகவும், கலாசார மரபுரிமை சொத்தாகவும் விளங்குகின்ற தன்மையினை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. **ஐதீக மரபின் அடிப்படையிலான தொன்மைச் சிறப்பு:** ஐதீகங்களின் அடிப்படையில் வட இலங்கையின் வரலாற்றினை தெளிவுபடுத்துதல்.
2. **இந்து சமயத்தின் தொன்மை:** ஐதீகங்கள் ஊடாக நகுலேஸ்வரத்தின் தொன்மைச் சிறப்பும் இந்து சமய தொன்மையும் கூறப்பட்டுள்ளது. இத் தொன்மைச் சிறப்பினை தொல்லியல் ஆய்வுகள் பலவும் உறுதிப்படுத்துகின்றன.
3. **அமைவிடச் சிறப்பு:** புராதன குடியிருப்புகள், நாகரிக உருவாக்கம் மற்றும் பண்பாட்டு பரவல் என்பவற்றுக்கான சாதக தன்மை.
4. **ஆன்மீக நம்பிக்கைகள் (Spiritual heritage):** இற்றை வரை இந்துக்களது வாழ்வியல் நம்பிக்கைகளுடன் இணைந்த வகையில் முக்கிய கலாசார மரபுரிமைகளாக (Intangible Cultural Heritage) விளங்குகின்ற தன்மை. இங்கு காலம் காலமாக அந்தியேஷ்டி சிரார்த்தம் முதலிய கிரியைகள் இடம்பெற்றுவருதனையும், ஆடி ஆமாவாசை, சித்திரைப் பௌணர்மி தினங்களில் கிரியைகளுக்காக (Rituals) கூடும் பெருந்தொகையான மக்கள் கூட்டத்தினையும் உதாரணமாக குறிப்பிடலாம்.
5. **மடப்பாரம்பரியம்:** தொன்மையான மடப்பராம்பரியத்தினை உறுதிப்படுத்தும் வகையில் இங்கு காணப்படும் சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், செகராசசிங்கம் மடம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். அந்நியேட்டி, சிரார்த்த கிரியைகள் மேற்கொள்பவர்களுக்கும்,

நகுலேஸ்வத்தினை தரிசிக்க வரும் உள்நாட்டு, வெளிநாட்டு அடியவர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் இவ் மடங்களினுடைய பயன்பாடு இன்றியமையதாகின்றது.

6. **சமாதிகோயிற் பாரம்பரியம்:** நகுலேஸ்வரர் கோயிலுக்கு வட மேற்கு திசையிலும், வடக்கு மற்றும் வட கிழக்கு திசையிலும் எண்ணிக்கையில் அதிகமான சமாதி கோயில்கள் காணப்படுகின்றது. இச் சமாதி கோயில்களில் பல பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இவ் மடங்களின் வரலாற்று தொடர்ச்சியினையும், முக்கியத்துவத்தினையும் இலிங்க வழிபாட்டு மரபு, நடுகல் வழிபாட்டு மரபு என்பவற்றின் பின்னணியில் ஆராய வேண்டிய தேவையுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

7. **இயற்கைசார் மரபுரிமை மையம்:** கீரிமலை புண்ணிய தீர்த்தப் பகுதி ஆன்மிக மரபுரிமை மையமாக விளங்குகின்ற அதேநேரம் இயற்கை வளம் பொருந்திய கடற்கரை, கேணிப்பகுதி, நகுலேஸ்வரத்தின் புராதன அமைவிடப் பகுதி என்பன இயற்கை மரபுரிமை மையமாகவும் (Natural Heritage site) சிறப்பு பெறுகின்றது. கீரிமலைக் கேணியானது இலங்கை தொல்பொருட் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

8. **கட்டிட, சிற்பக் கலைமரபுகள்:** நகுலேஸ்வரத்தின் கடற்கரையில் உள்ள மலைமீது இருந்த மிகத்தொன்மையான முதல் கோயில் கடலினுள் அமிழ்ந்துவிட்டதனால் அக் கோயில் பற்றி எதுவும் அறியமுடியாத நிலையில், இரண்டாவது கோயில் மூன்று பிரகாரங்களும், ஐந்து கோபுரங்களையும் கொண்டிருந்ததாக அறிய முடிவதுடன் கி.பி 1621 இல் யாழ்ப்பாண இராச்சியத்தினை கைப்பற்றிய போர்த்துக்கேயர் நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் போன்றவற்றினை இடித்தழித்தனர். "பரராசசிங்கமுதலி இறந்த பின் பறங்கிக்காரர் தாங்கள் இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாம் இடிப்பித்தார்கள். அப்பொழுது பரசுபாணி ஐயரென்னும் பிராமணன் கீரிமலைச் சாரலிலுள்ள ஆலயங்களின் தட்டு முட்டுக்களையும், விக்கிரகங்களையும் கிணறுகளிற் போட்டு மூடி வைத்தான்" (பத்மநாதன்.சி, 2012). எனினும் கீரிமலைக் கோயிலுக்குரிய தொல்பொருட்சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்காத நிலையில், எதிர்காலத்தில் திட்டமிட்ட வகையிலான அகழ்வாய்வுகள், நீரடி அகழ்வாய்வுகள் (Underwater Excavation) இடம்பெற வேண்டும் என்பது அவசியமானதாகும். மூன்றாவது கோயில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி 1878 ஆம் ஆண்டில் ஆறுமுக நாவலரின் வழிகாட்டலில் பின் அமைக்கப்பட அவ்வாலயம் 1990 இல் உள்நாட்டு போர்ச் சூழ்நிலையினால் அழிவிற்க்குட்பட, மீண்டும் 2012ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட நான்காவது ஆலயமே தற்போதைய நகுலேஸ்வரமாகும். கர்ப்பக் கிரகம்,

அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், கோபுர வாயில், பரிவார தேவர் கோயில்கள், பிராகாரம் போன்ற திராவிட கட்டிடக் கலைக்கூறுகளை கொண்டதான இவ்வாலயமும், சிறாப்பர் மடமும் தேசிய மரபுரிமைச் சொத்துக்களாக தொல்லியத்திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது (Gazette No – 1739/2011 -12-30). நகுலேஸ்வரர் ஆலயத்தினை தவிர, சிறாப்பர் மட கட்டிடத் தொகுதி, அவற்றில் காணப்படும் சிற்ப கலைமரபுகள், ஐதீக, வரலாற்று மரபுகளை வெளிப்படுத்தி நிற்கும் சிற்ப கலைமரபுகள் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இவை கலாசார மரபுரிமை பெறுமானங்களை (Cultural heritage Value) கொண்டவையாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. *ஞானப்பிரகாசர்,சுவாமி, (1928), யாழ்ப்பாணவைபவவிமர்சனம், அச்சுவேலி.*
2. *(யாழ்ப்பாண வைபவமாலை, (1949), குல.சபாநாதன் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.)*
3. *தஷிணகைலாச புராணம்., 1887, கா.சிவசிதம்பர ஐயர் பதிப்பு, கலாரத்நகர அச்சுக்கூடம், சென்னை.*
4. *நகுலகிரிப் புராணம், 1980, கீரிமலைச் சிவநெறிக் கழகம்.*
5. *சிற்றம்பலம், சி.க, 1996, ஈழத்து இந்து சமய வரலாறு ___ பாகம் - 01, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு.*
6. *சிற்றம்பலம், சி.க, 1996, யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு.*
7. *புஸ்பரட்ணம்,ப, 1993, பூநகரித் தொல்பொருளாய்வு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு.*
8. Pathmanathan, S, (edi), 1999, Temples of Siva in Sri Lanka, Chinmaya Mission of Sri Lanka.
9. *கிருஸ்ணராசா செ., சிவ மஹாலிங்கம், குமாரசுவாமிப்பிள்ளை, அ., அம்பிகைபாகன், வே,. 2012, நகுலநாதம் - நகுலேஸ்வரம் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர், ஸ்ரீ நகுலாம்பிக சமேத நகுலேஸ்வர சுவாமி தேவஸ்தானம், கீரிமலை.*

# மலையகத்தில் பாரதியின் செல்வாக்கு

எம்.எம். ஜெயசீலன்

நவீன தமிழ்ச் சமுதாயத்தின் சமூக அரசியல் இயங்கு தளத்திலும் கலை இலக்கியப் போக்கிலும் பாரதியின் செல்வாக்கு, நேரடியாகவும் மறைமுகமாகவும் இற்றைவரை தாக்கம் செலுத்தியே வருகிறது. பாரதியின் எழுத்துக்களினதும் செயற்பாடுகளினதும் மைய இழையாகத் தேசபக்தி, தேசவிடுதலை என்பன விளங்கியுள்ளபோதும் அவை அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற தளத்தில் மட்டும் குறுகிப்போகாமல் ஒட்டுமொத்த மானுட விடுதலையை அழுத்தமாகப் பற்றியிருப்பதைக் காணலாம். அதனாலேயே இந்திய தேசம் விடுதலைபெற்று ஏழு தசாப்தங்கள் கடந்த பின்பும், பாரதி மறைந்து ஒரு நூற்றாண்டு நிறைவடைந்த பின்பும் இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியேயும் பாரதியின் தாக்கம் இன்னும் மங்காமல் மேலோங்கிக் காணப்படுகின்றது.

தமிழகத்திலும் தமிழ்நாட்டுக்கு வெளியேயும் தமிழின் மறுமலர்ச்சிக்கும் தமிழ்ச் சமூக விடுதலைக்கும் பாரதியே ஆதர்சனமாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளார்; தமிழ்ச் சூழலில் தேசபக்தி, சமூக விடுதலை, சமூக சீர்திருத்தம், சமூக சமத்துவம், பொதுவுடைமை, பெண்விடுதலை முதலான தளங்களில் செயற்பட்டவர்கள் பெரிதும் பாரதியின் தாக்கத்துக்குட்பட்டவர்களாகவே விளங்கியுள்ளனர்; அத்தகைய செயற்பாட்டாளர்கள் தமது கருத்துக்களை மக்கள்மத்தியில் கொண்டு சேர்க்கும் வலுவான கருவியாகப் பாரதியையும் கைக்கொண்டுள்ளனர். இவற்றின் தாக்கங்கள் மலையகத்திலும் பிரதிபலித்துள்ளன. பிரித்தானிய ஏகாதிபத்திய காலத்தில் உருவாக்கம்பெற்ற சமூகம் என்ற அடிப்படையிலும் தீவிர ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகிவந்த சமூகம் என்ற வகையிலும் மலையகத் தமிழரின் சமூக அரசியல் எழுச்சி மற்றும் கலை இலக்கிய மறுமலர்ச்சியில் பாரதியின் செல்வாக்கு மேலானதாக விளங்கிவந்துள்ளதைக் காணமுடிகின்றது.

பெருந்தோட்டத் தொழிற்துறைக்காகப் புலம்பெயர்ந்தவர்களின் இன்னல்மிக்க வாழ்வை, பாரதி நன்கு அறிந்திருந்துள்ளதோடு அந்த இன்னல்கள் களையப்படவேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்திவந்துள்ளார். தென்னாபிரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்துப் பாரதி எழுதியுள்ள குறிப்புக்கள், இவற்றுக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, தென்னாபிரிக்காவுக்குக் கூலியாட்களை ஏற்றுவதைத் தடுக்கும் தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டுவர வேண்டும் என்று கோக்கலே அவர்கள் கேட்டுக்கொண்டபோது அது தொடர்பானதொரு குறிப்பினைப் பாரதி, "தென்

ஆபிரிக்காவுக்குப் போகும் கூலிகளைத் தடுத்தல்" என்ற தலைப்பில் விஜயா பத்திரிகையில் எழுதியுள்ளார். அக்குறிப்பில், கூலிகளாகச் செல்பவர்களைத் தடுத்தல் என்பது மட்டுமல்ல தென்னாபிரிக்காவில் நம்மவர்க்குச் சமவுரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். (வேங்கடாசலபதி, 2020: 150,151). அவ்வாறே "தென் ஆபிரிக்கா ஐக்கிய மசோதாவும் அம்மாகாணத்துத் தமிழர்களும்" (இந்தியா, 21.08.1909) என்ற கட்டுரையில், இங்கிலாந்துச் சட்டசபைக்குக் கொண்டுவரப்பட்ட தென்ஆபிரிக்கா ஐக்கிய மசோதாவில், தென்னாபிரிக்காவில் குடியேறியுள்ள வெள்ளைக்காரர்களுக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கி, அங்கு குடியேறியுள்ள தமிழர்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டதைக் கண்டித்துள்ளதோடு அவ்வுரிமையைப் போராடிப்பெற வேண்டும் என்பதை அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதியின் "கரும்புத்தோட்டத்திலே" என்ற பாடல், புலம்பெயர்ந்த இந்தியத் தொழிலாளர்கள் பற்றிய அவரது உருக்கமான பதிவாக அமைந்துள்ளமை யாவரும் அறிந்ததே. அப்பாடலின் உருவாக்கம் பற்றிய உரையாடலின்போது, "இனி ஏற்றுமதி ஆகும் ஜனங்களைத் தடுக்கலாமே ஒழிய அந்தத் தீவில் அகப்பட்டவர்களை ஒன்றும் செய்ய முடியாது" எனப் பாரதி கூறியதாக யதுகிரி அம்மாள் குறிப்பிட்டுள்ளார் (யதுகிரி அம்மாள், 2019: 39). பாரதியின் சமூக அரசியல் பார்வையின் ஆழத்தையும் சர்வதேச நிலவரங்கள் குறித்த அவரது கூர்ந்த நோக்கினையும் இக்கூற்று வெளிப்படுத்திநிற்கின்றது. பாரதி கூறியது போலவே புலம்பெயர்ந்து சென்றவர்களில் பெரும்பாலானோர் புலம்பெயர்ந்த நாடுகளிலேயே நிலைகுடிகளாகியுள்ளனர். அதிலும் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தவர்கள், இலங்கையின் தேசிய சிறுபான்மை இனங்களுள் ஒன்றாக மேற்கிளம்பியுள்ளனர். அவ்வாறு மேற்கிளம்பியவர்களிடையே 1960வரை பாரதியின் செல்வாக்கு வியாபகம் பெற்றவாற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பாரதி பற்றிய அறிதலானது தொடக்க காலத்தில் தேசபக்தியுடன் இணைந்ததாகவே விளங்கியுள்ளது. தேசபக்தி, தேசபக்தி இயக்கம் முதலியவற்றின் வளர்ச்சியோடு இணைந்ததாகப் பாரதியின் பாடல்கள் பரந்தளவில் வியாபகம் பெற்றவாற்றையும் தேசபக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாரதியின் பாடல்கள் பிரதான சாதனமாக விளங்கியவாற்றையும் ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர் (சிவத்தம்பி, மார்க்ஸ், 2008, 64). மலையகத்தில் பாரதியின் செல்வாக்கு மேலோங்குவதற்கும் தேசபக்தியே அடிப்படையாக விளங்கியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலுக்காக இலங்கை வந்தவர்கள், இந்தியத் தேசியத்திலிருந்து தம்மை அந்நியப்படுத்திக்கொள்ளவில்லை. இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி நடவடிக்கைகளும் சுதேசியரின் அரசியல் நிலைப்பாடுகளும் அவர்களை இந்தியர்களாகவே உணரச்செய்தன. அம்மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே நெருக்கமான உறவினைப் பேணக்கூடிய சூழலும் நிலவியுள்ளது. அத்துடன் இலங்கைத் தமிழர் மத்தியிலும் இந்தியத் தேசியத்தின் தாக்கமே மேலோங்கிக் காணப்பட்டுள்ளது. இத்தகைய சூழலினால் மலையக மக்கள், தம்மை இந்தியத்

தேசியத்துடன் அழுத்தமாகப் பிணைத்துக்கொண்டனர். தேசபக்தியின் செல்வாக்கினால் தேசபக்திப் பாடல்கள் பரவலாகப் புழக்கத்தில் இருந்துள்ளன. இதற்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- பிரிட்டிஸ் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தேசபக்திப் பாடல்கள் அடங்கிய நூல்கள், இலங்கையின் பெருந்தோட்டங்களுக்குக் கூலியாகச் செல்பவர்களிடமிருந்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. இலங்கைக்கும் பிற தென்னாசிய நாடுகளுக்கும் தமிழகத்திலிருந்து சென்றவர்களைச் சோதனை செய்தபோது காலனிய அரசு தடைசெய்திருந்த ஏராளமான புத்தகங்கள் கைப்பற்றப்பட்டதை 1932ஆம் ஆண்டு அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு சுட்டிக்காட்டுகிறார், ஆ.இரா. வேங்கடாசலபதி (வேங்கடாசலபதி, 2012, 107 - 109). அந்த அறிக்கையின்படி பெருந்தோட்டங்களுக்குக் கூலியாக வந்தவர்கள் முதல் கொழும்பில் கணக்கு எழுத வந்தவர்கள் வரை அத்தகைய புத்தகங்களை வைத்திருந்துள்ளனர்.
- மஸ்கெலியாவில் இயங்கிய ஆ. ஷேக் அப்துல்காதர் சாகிப் புத்தக வியாபார நிலையத்தின் 1932ஆம் ஆண்டுக்கான புத்தக விளம்பரப் பட்டியலொன்றில் சுதந்தரமுரசு, சுதந்தரப்பறை, விடுதலைப்பறை, சுதேசகீதம், விடுதலைமுரசு, பகவத்சிங் பரிதாபக்கீதம் முதலிய தேசவிடுதலை நூல்களும் அடங்கியுள்ளன (பெரியாம்பிள்ளை: 1932).
- பிரிட்டிஸ் இந்தியா தடைசெய்திருந்த புத்தகங்கள், இலங்கையில் தாராளமாகக் கிடைத்ததாகக் கே.கணேஷ் தன்னுடைய நேர்காணலொன்றில் பதிவுசெய்துள்ளார் (கணேஷ், 2002: 47).
- உக்கிரமான தேசவிரோதக் கருத்துக்களைக் கொண்ட வெளியீடுகள் தமிழில் கொழும்பில் அச்சிடப்பட்டு இலங்கையிலிருந்து பிரிட்டிஸ் இந்தியாவுக்குள் வந்துநுழைகின்றன என்று இந்திய காலனிய அரசு கடிதமொன்றில் அறிவித்துள்ளது (மேற்கோள்: சாரல்நாடன், 1998: 179).

ஆ. ஷேக் அப்துல்காதர் சாகிப் புத்தக வியாபார நிலையத்தின் புத்தக விளம்பரப் பட்டியலில் இடம்பெற்றுள்ள “சுதேசகீதம்”, பாரதியின் சுதேசகீதமா என்பது குறித்து அறியமுடியவில்லை. ஆனால், மேற்கூறியவாறான தேசபக்திப் பாடல்களின் புழக்கத்தில் பாரதி பாடல்களும் உள்ளடங்கியிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மலையகத்தில் பாரதியின் செல்வாக்கு எக்காலம் முதல் ஏற்படத்தொடங்கியது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. “இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிக அடிப்படையான கல்வி அறிவு (எழுதுதல் - வாசித்தல்) உடைய கணிசமான அளவான தொழிலாளர்கள் தோட்டங்களில் உருவாக்கம் பெற்றிருந்தனர். அவர்கள் உள்நாட்டு அரசியல் விடயங்களைத் தமிழ்ப் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டதோடு பிறருக்கும் அவை பற்றித் தெரிவித்தனர். தோட்டங்களில் இந்தியப் பத்திரிகைகளுக்கும் நல்ல சந்தை வாய்ப்புக் கிட்டியது. தேச விடுதலைக்

கருத்துக்கள் அவை மூலம் பரவின. இலங்கை அரசியலில் மட்டுமல்லாது இந்தியாவின் தேச விடுதலை இயக்கத்திலும் தோட்டத் தொழிலாளர் அக்கறை செலுத்தினர். காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற தலைவர்கள் பற்றியும் அவர்கள் அறிந்துகொண்டனர்" (ஜயவர்தன மற்றும் குரியன், 2016: 23) என்று கூறப்படுவதால் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பாரதி குறித்த அறிதலும் மலையகத்தில் ஏற்பட்டிருக்கும் எனலாம்.

பாரதி உயிருடன் வாழ்ந்த காலத்திலும் பாரதி மறைந்த பின்னரும் - பாரதியின் புகழ் மெல்ல மெல்ல வியாபகமடைந்து மஹாகவியென பரந்த ஏற்புடைமையைப் பெற்றுக்கொண்ட காலத்திலும் - பெருந்தோட்டத் தொழில்துறையை நாடி பெருந்தொகையான தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளனர். அக்காலப்பகுதியில் வந்தவர்களுள் சிலராவது பாரதி பற்றிய அறிதலுடனே வந்திருப்பர் எனலாம். இரத்தினபுரியிலிருந்து 1940ஆம் ஆண்டு வெளிவந்துள்ள G.S.M. ஸாமுவேலின் "கண்ணனின் காதலி" என்ற நாவலில், தமிழ்நாட்டிலிருந்து இலங்கை பெருந்தோட்டத்துக்குப் புலம்பெயரும் தனது காதலிக்குக் கதைத்தலைவன், பாரதியார் கவிதை நூலைப் பரிசளிக்கின்ற காட்சியொன்று வருகின்றமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது (விரிவுக்கு: நித்தியானந்தன், 2014).

தென்னிந்தியாவிலிருந்து கதிர்காமம், சிவனொளிபாதமலை முதலானவற்றுக்கு யாத்திரை வந்தவர்களும் இலங்கையில் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கு வந்தவர்களும் தோட்டங்களிலுள்ள பெரியகங்காணி வீடுகளில் தங்கி, கலை நிகழ்வுகளை நடத்தியுள்ளனர். அத்தகையோரால் பாரதியார் பாடல்களும் பாடப்பட்டதாக ஸி.வி. வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார் (வேலுப்பிள்ளை, 1974: 96). அதன்வழியும் தோட்ட மக்கள் மத்தியில் பாரதியார் பாடல்கள் பரவலாக்கம் பெற்றிருக்கலாம். இவ்வாறு பாரதியாரின் பாடல்கள் உதிரியாக மலையக மக்களிடையே பரவலாக்கம் பெற்றுவந்தபோது அவற்றைத் திட்டமிட்ட அடிப்படையில் சமூக அரசியல் களத்தில் கோ.நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினர் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

மலையகத் தமிழரின் சமூக அரசியல் எழுச்சியை இலக்காகக் கொண்டு தொழிற்சங்க அரசியற் களத்திலும் இதழியல் தளத்திலும் வீச்சுடன் இயங்கிய கோ. நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினரே மலையக மக்கள் மத்தியில் பாரதியின் புகழ்பரப்பிய முன்னோடிகளாக விளங்குகின்றனர். தொழிற்சங்க அரசியற் செயற்பாடுகளுக்காகத் தோட்டம்தோட்டமாகச் சென்று மக்களை அணிதிரட்டவும் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாரதியாரின் பாடல்களையும் பாரதியார் பாடல்களின் மெட்டில் அமைந்த பாடல்களையும் அவர்கள் கருவியாகப் பயன்படுத்தியுள்ளதோடு தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் துணையாகப் பாரதியாரின் சிந்தனைகளைக் கைக்கொண்டுள்ளனர். அவர்களின் செயற்பாடுகளின் வழியேதான் பாரதியின் புகழ், மலையக மக்களிடையே பரவலாக வியாபகமடையத் தொடங்கியது எனலாம்.

தமிழகத்திலும் இலங்கையிலும் நடேசய்யர் முன்னெடுத்துள்ள இதழியல் செயற்பாடுகளையும் சமூக அரசியல் செயற்பாடுகளையும் அவதானிக்கும்போது, நடேசய்யருக்குமுன் இதழியல் களத்திலும் சமூக அரசியல் தளத்திலும் தீவிரமாக இயங்கிய பாரதியின் தாக்கத்துக்கு அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்ளாகியிருப்பதைக் கண்டுகொள்ளமுடிகின்றது. பாரதி உயிருடன் வாழ்ந்த காலத்தில் தனது இளமைக் காலத்தைத் தமிழகத்தில் கழித்த கோ.நடேசய்யர், அக்காலத்திலேயே காலனித்துவ எதிர்ப்பாளராகவும் பத்திரிகை மற்றும் நூல் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபடுபவராகவும் விளங்கியுள்ளார். அதனால் தமிழ்நாட்டில் இருக்கும்போதே நடேசய்யர் பாரதியின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்திருப்பார் எனலாம்.

கோ.நடேசய்யர் தனது பத்திரிகைகளிலும் எழுத்துக்களிலும் பாரதியின் பாடல்களையும் சிந்தனைகளையும் பயன்படுத்தி வந்துள்ளதைக் காணமுடிகின்றது. உதாரணமாக, தனது பத்திரிகைகளில் திருக்குறட் பாக்களையும் ஔவையின் ஆத்திசூடி வரிகளையும் மகுடவாசகங்களாகப் பயன்படுத்திவந்த நடேசய்யர், தேசபக்தனின் மூன்றாவது இதழிலிருந்து (08.09.1924) வலது பக்க மேல் மூலையில்,

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே - அன்றி
வேறுகுலத்தின ராயினு மொன்றே

என்ற பாடலையும் இடது பக்க மேல் மூலையில்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்ற பாடலையும் பிரசுரித்துள்ளதோடு அப்பாடல்களின்கீழ் சி.சு. பாரதி என இரண்டு பக்கங்களிலும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தேசபக்தன் இரண்டாம் ஆண்டில் காலடி வைத்தபோது, "இராஜீய விஷயங்களிலோ பக்தன் தாய்நாட்டுப் பொதுமக்கள் கழகமான காங்கிரஸ் மகாசபையைப் பின்பற்றி நிற்பவன். சமூகச் சீர்திருத்தத்திலோவெனின் அவனது கொள்கைகள் மிகவும் முற்போக்கானவை. பிறப்பினால் மனித வர்க்கத்துள் ஏற்றத்தாழ்வுகளுளவெனக் கற்பிக்கும் மூடவைதீகர்களுக்குப் பக்தன் வைரி. சமத்துவம், சகோதரத்துவம் என்பதே அவனுடைய மணி மந்திரம். எம்மதத்தினராயினும் எச்சாதியினராயினும் எக்கட்சியினராயினும் யாவரும் பாரதத் தாயின் புதல்வர்களென்றே பக்தன் நினைத்துத் தொண்டியற்றுபவன்" (தேசபக்தன் - 02.09.1925) என்று கூறியுள்ளதோடு "ஜாதி மதங்களைப் பாரோம்" என்ற பாடலைக் குறிப்பிட்டு அதன்கீழ், "என்ற பாரதியாரின் அரியமொழிகளைத் தன்னிதயத்திறுத்தியுள்ளான்" எனத் தேசபக்தனின் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார், நடேசய்யர். இக்கொள்கை பிரகடனம்,

பாரதியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டையும் பாரதியின் தாக்கத்துக்குத் தேசபக்தன் உட்பட்டிருந்தமையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

நடேசய்யர் தனது தோட்டத்தொழிலாளி என்ற பத்திரிகையின் மகுட வாசகங்களில் ஒன்றாக "அச்சம் தவிர்" என்ற பாரதியின் புதிய ஆத்திசூடி வரியினைப் பயன்படுத்தியுள்ளார் (விரிவுக்கு, சாரல்நாடன், 1998). அத்துடன் பாரதி குறித்துத் தேசபக்தனில் ஆசிரிய தலையங்கமொன்றை எழுதியுள்ளமையையும் வாசுதேவ சர்மா என்பவர் "பாரதியாரின் கவிநய மாண்பு" என்றொரு கட்டுரையை எழுதியுள்ளமையையும் சாரல்நாடனின் குறிப்புக்களின்வழி அறியமுடிகின்றது (மேலது: 161). கோ.நடேசய்யரின் தேசபக்தன் இதழினை விரிவாக ஆராய்ந்துள்ள சாரல்நாடன், "சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை இலங்கையில் பரப்பிய பெருமையில் பெரும்பங்கு நியாயமாக "தேசபக்தன்" ஏட்டையும் அய்யர் (நடேசய்யர்) அவர்களையும் சேரவேண்டும்" (சாரல்நாடன்: 1991) எனக் குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

நடேசய்யர், வெற்றியுனதே (1934) என்ற அகஎழுச்சி நூலில் "பொருளொன்றல்ல வாழ்க்கையின் நோக்கம்" என்பதை இளைஞர்களுக்கு உணர்த்துவதற்கு, வெவ்வேறு துறைகளைக் குறிப்பிட்டு அத்துறைகளில் விசாலப்பட விரும்புகிறீர்களா எனக் கேட்டுள்ளார். அவற்றுள், "கம்பன், காளிதாசன், ரவீந்திரநாத்தாகூர், பாரதி போன்ற கவிஞர்களாகத் தோன்ற நோக்கமா" (நடேசய்யர், 1934: 03) எனக் கவிதைத்துறையையும் குறிப்பிட்டுள்ளார். பாரதி மஹாகவியா, இல்லையா என்ற வாதம் தமிழ்நாட்டில் தொடங்கும்முன்பே இந்தியாவின் உன்னதமான கவிஞர்களுடன் பாரதியையும் இணைத்து நடேசய்யர் பேசியிருப்பது, பாரதி குறித்து அவர் கொண்டிருந்த உயர்ந்த மதிப்பீட்டினை வெளிக்காட்டுகிறது. அத்துடன் அந்நூலில் சாதிப்பதற்கு வறுமையொன்றும் தடையல்ல என்பதை உணர்த்துவதற்கு, "நமது தென்னாட்டு வீரகவி சுப்பிரமணிய பாரதி தரித்திரக்கடலில் மூழ்கி இறந்தபொழுதிலும் அவருடைய பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துயிர் கொடுக்கவில்லையா" (மேலது: 07) எனப் பாரதியின் வரலாற்றைச் சான்றுகாட்டியுள்ளார், நடேசய்யர். மேலும், அந்நூலின் அத்தியாயம் ஒன்றுக்கே, "அச்ச மென்பதில்லையே" எனப் பாரதியின் பாடலடியைத் தலைப்பாக இட்டுள்ளார் (மேலது: 11).

நடேசய்யரின் நீ மயங்குவதேன் (1931) என்ற நூலுக்குத் தந்துரை வழங்கியுள்ள திரு.சி. சரவணனார், அந்நூலினைப் "பாரதப் போரிடை யோதிய கீதையோ? சீரிய பாரதி கூறிய நூலோ? தமிழ ருறுதி யமிழ்தக் குறளோ? எனவெனத் தியங்க, எழுந்தது இந்நூல்" எனப் புகழ்ந்துள்ளதோடு "இந்நூலிலுள்ள கட்டளைகள் பரந்தாமன் பார்த்தனுக்கருளிய கீதையிலே தோன்றி, வள்ளுவர் வழங்கிய திருக்குறட் பரப்பிலே தவழ்ந்து, தமிழ்நாட்டின் வீரத்தெய்வமாகிய பாரதியின் பாக்களுடன் தோழமைபூண்டு இந்நூல் விடிவினிற் பெயர்ந்து வருதலைச் சிந்தை செய்வார் கண்டு மகிழ்வார்" என்று விரித்துரைத்துள்ளார். அத்துடன் "பாரதியை இழந்த தமிழ்நாடு இந்நாள் வேண்டி நிற்கும் நூற்கள் எவையோ? அவைகள் இந்நூலின்கண்

கட்டளைகளாக உயிர் பெற்றிருத்தலைப் புலவர்கள் கண்டு வாழ்த்துவர்" எனவும் குறிப்பிட்டுள்ளார். இப்பதிவுகள், நடேசய்யரின் சிந்தனையிலும் எழுத்துக்களிலும் பாரதி செலுத்திவந்துள்ள தாக்கத்திற்குச் சான்றாக அமைகின்றன.

இலங்கை வரலாற்றில் ஹன்சாட்டில் பாரதியின் பெயரை முதன்முதல் பதிவு செய்தவராக நடேசய்யரே விளங்குகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரேஸ்கிரேடில் பற்றிய பிரேரணைக்கான சட்டமன்ற விவாதத்தின்போது நடேசய்யர், "ஐயரின் (பாரதியின்) பாடல்களை வைத்திருந்தார் என்பதற்காக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்" என்ற செய்தியையும் பதிவுசெய்துள்ளார் (தீர்த்தக்கரை, இதழ் 4: 43).

நடேசய்யருக்கு ஏற்ற துணைவியாகவும் தொழிற்சங்க அரசியல் களச் செயற்பாட்டாளராகவும் இருந்து நடேசய்யரின் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக விளங்கியுள்ள மீனாட்சியம்மாள், இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர் விடுதலையுடன் பெண்விடுதலை குறித்தும் அக்கறையுடன் செயற்பட்டுள்ளார். மீனாட்சியம்மாளின் வாழ்க்கை பற்றி கிடைக்கின்ற குறிப்புக்களை அவதானிக்கும்போது அம்மா அவர்கள், பாரதி விரும்பிய புதுமைப்பெண்ணின் அம்சங்கள் நிறைந்தவராக விளங்கியுள்ளதைக் கண்டுகொள்ளமுடிகின்றது.

தொழிற்சங்க அரசியற் செயற்பாடுகளுக்காகத் தோட்டம்தோட்டமாக நடேசய்யருடன் சென்றும், நடேசய்யரின் கூட்டங்களின்போது மேடைகளிலும் பாரதியின் பாடல்களையும் பாரதி பாடல்களின் மெட்டில் அமைந்த பாடல்களையும் மீனாட்சியம்மாள் பாடியுள்ளதாக அறியமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, எ.எம்.எ. அஸீஸ் அவர்களின் பதிவொன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

> "தேயிலைத் தோட்டத்தை நினைத்தால் என் மனதில் பளிச்சிடும் விஷயம் யூனியன் ஹாஸ்டலில் என் சக மாணவன் ஒருவன் அடிக்கடி முணுமுணுக்கும் "தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாடலாகும். பாரதியின் கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதையைப் பின்பற்றி ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் என்பவர் இந்தப் பாடலை இயற்றினாராம். "தந்திர முதலாளிகள், தரகர், கங்காணிகள், தன்னலங் கருதுதல் குறைத்திடுவோம்" என்ற பாணியிலமைந்த இந்தப் பாடலை, மீனாட்சியம்மாள் தமது கணவரும் தோட்டத்தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்க இயக்கம் கிளைத்துப் படர வழிவகுத்தவர்களில் ஒருவருமான நடேசய்யரின் கூட்டங்கள் துவங்கும் முன்னர் பாடுவாராம்" (1967, 86).

மீனாட்சியம்மாள் "தேயிலைத் தோட்டத்திலே" என்ற பாடலைப் பாடும்போது தோட்டத்தொழிலாளர்கள் பலரும் விம்மி விம்மி அழுது புலம்புவார்கள் என்று சிலர் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது (சாரல்நாடன், 2015: 22).

மக்களை அணிதிரட்டவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாரதியார் பாடல்களைப் பாடும் வழக்கம் தமிழ்நாட்டுச் செல்வாக்கினால் மலையகத்தில் ஏற்பட்டுள்ளது எனலாம். தமிழகத்தில் அரசியற் கூட்டங்கள் உட்பட பொதுநிகழ்ச்சிகளிற் பாரதியாரின் பாடல்களைப் பாடுவது பொதுவான நிகழ்வாக ஏற்பட்டுவிட்டது என்பதைப் பாரதியார் பாடல்களுக்கு விதிக்கப்பட்ட தடையை

எதிர்த்து, சென்னை மாகாண சட்டமன்றத்தில் 1928ஆம் ஆண்டில் இடம்பெற்ற விவாதங்களின் மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது (மார்க்ஸ்: 2008). அத்துடன் பாரதி வாழ்ந்தபோதே அவரது பாடல்களை மேடைகளில் பாடும் வழமை ஏற்பட்டுவிட்டது என்பதும் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். "அமர கலா விலாசினி சபையார்" ஒழுங்குசெய்த நிகழ்வுகளில் பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே அவரது பாடல்கள் பாடப்பட்டுள்ளதை ய.மணிகண்டன் அவர்கள் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார் (மணிகண்டன்: 2021). மேலும், சுப்பிரமணிய சிவா முதலியோர் 1922ஆம் ஆண்டிலேயே பாரதி பாடல்களைப்பாடி தேச சேவைப் பிரசங்கங்களைச் செய்யத் தொடங்கிவிட்டதோடு நாடக மேடைகளிலும் பாரதியார் பாடல்கள் பாடப்பட்டுவந்துள்ளன (சிவத்தம்பி, மார்க்ஸ், 2008: 59). இந்நிகழ்வுகள் வீச்சாக இடம்பெறத்தொடங்கிய காலத்தில், 1925ஆம் ஆண்டு மீனாட்சியம்மாள் இலங்கை வந்துள்ளார். மீனாட்சியம்மாளே நடேசய்யரின் கூட்டங்களிலும் நடேசய்யருடன் சென்ற தோட்டங்களிலும் பாரதியார் பாடல்களைப் பாடியுள்ளார். அதனால் நடேசய்யரின் தொழிற்சங்க அரசியற் செயற்பாட்டில் பாரதியார் பாடல்களைப் பாடுவதை உத்தியாகக் கையாள்வதானது, தமிழகச் செல்வாக்கின் விளைவால் மீனாட்சியம்மாவால் தொடக்கிவைத்த முயற்சியாகவே இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. அக்காலத்தில் மிகவும் பின்தங்கிய கல்விச்சூழலில் வாழ்ந்த தொழிலாளர்களிடத்தில் சமூக விடுதலைக் கருத்துக்களைக் கொண்டு செல்லவும் சமூக எழுச்சியை ஏற்படுத்தவும் சிறந்த சாதனமாகப் பாரதியார் கவிதைகளைப் பாடலாகப் பாடும் முறை விளங்கியுள்ளது எனலாம். "பிரசாரம் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிக பயனளிக்கும்" என்ற பதிவை மீனாட்சியம்மாளே, "இந்தியத் தொழிலாளர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை" என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது (மீனாட்சியம்மாள்,ஐஏ). இந்நூலில் உள்ள பாடல்களில் மீனாட்சியம்மாள், இந்தியாவைப் பாரததேவி (பாரத தேவியைப் பாடிப் பாடியே கொண்டாடுவோம்) என்பதும் பராசக்தியைப் பாரததேவியாகக் கொள்வதும் (பராசக்தி நம் பாரததேவியைப் பணிந்து நித்தம் பாடுவோம்) பாரதியினுடைய செல்வாக்கின் வெளிப்பாடுகளாகவே அமைகின்றன. அத்துடன் பாரதி, பாரத மாதா எனப்பாடியது போலவே மீனாட்சியம்மாளும், "லங்கா மாதா நம்ம தாய் தான் இந்த நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய் தான்" (மேலது: 02) எனப் பாடியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

மீனாட்சியம்மாள் தேசபக்தன் இதழின் ஆசிரியராக இருந்தபோது வாணிதாசன், உடுமலை முத்துசாமிக் கவிராயர் முதலியோரின் பாடல்களைப் பிரசுரித்துள்ளதோடு பாரதி குறித்தும் எழுதியுள்ளார். சாரல்நாடன் தரும் குறிப்புக்களிலிருந்து, தேசபக்தனின் 10.7.1929ஆம் திகதிக்குரிய வெளியீட்டில் "பாரதியார் நூல்கள்" என்ற தலைப்பில், மன்னார்குடி தாலுகா பாரதியார் பாடல்களை ஏற்க மறுத்ததைக் கண்டித்தும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்குப் பாரதியாரின் பாடல்கள் எவ்வளவு அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டியும் மீனாட்சியம்மாள் குறிப்புரையொன்றை எழுதியுள்ளமையை அறியமுடிகின்றது (சாரல்நாடன், 2015, 37,38).

இலங்கையின் முன்னோடி பெண்விடுதலைச் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான மீனாட்சியம்மாள், பெண்களுக்குச் சமவுரிமை வழங்கப்படவேண்டும் என்பதில் தீவிர அக்கறை காட்டியுள்ளார். பாரதியிடத்தில் மீனாட்சியம்மாளுக்கு இருந்த ஈடுபாடு அவரது பெண்விடுதலைசார் செயற்பாடுகளுக்குக் காரணமெனலாம். பெருந்தோட்டத் தொழிலாளப் பெண்களின் விடுதலைக்காய் குரல்கொடுத்துவந்த மீனாட்சியம்மாள், வாக்குரிமை தொடர்பான வாதங்கள் இலங்கையில் இடம்பெற்றபோது பெண்கள் அனைவருக்கும் பேதமற்று வாக்குரிமை வழங்க வேண்டும் என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்திவந்துள்ளார். இலங்கையில் பெண்களின் வாக்குரிமை போராட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ள அல்விஸ் மற்றும் குமாரி ஜயவர்தன அவர்களும் (2001) நல்லம்மா அவர்களின் அரசியல் வாக்குரிமைச் சிந்தனைகள் தொர்பான சிறு நூலொன்றினை வெளியிட்டுள்ள சாரல்நாடனும் (1999) தேசபக்தன் பத்திரிகையிலிருந்து மேற்கோள் காட்டும் மீனாட்சியம்மாளின் பின்வரும் கருத்துக்கள் மிகுந்த கவனிப்புக்குரியவையாகும்:

> "மேற்படி சங்கத்துக்கு (இலங்கைவாழ் மகளிர் வாக்குரிமைச் சங்கம்) வருஷ சந்தா ரூபாய் ஐம்பது ஆக வைத்திருக்கின்ற படியால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இதில் சேர்ந்துழைக்க வசதியிராது. பணம் படைத்தவர்கள் மாத்திரம் தங்கள் காரியத்தைச் செய்து முடிப்பது போதுமானதாகாது. எல்லா சகோதரிகளும் கலந்துழைக்க வேண்டிய வேளையில் பணம் படைத்தவர்கள் மாத்திரம் தலையிடுவதைக் கொண்டு அதிக பலன் கிடைக்காது. ஆகவே, சகோதரிகள் தாங்கள் கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால் ஆங்கிலம் தெரியாத சகோதரிகளிடத்தும் பிரசார வேலையைத் துவக்க வேண்டும்" (சாரல்நாடன், 1999: 14, 15, Alwish & Jawardena: 2001: 58)

பெண்களின் வாக்குரிமையை மறுப்போருக்கு எதிராக மட்டுமல்ல பெண்களின் வாக்குரிமைக்காக இயங்கும் அமைப்பின் போதாமைகளையும் மீனாட்சியம்மாள் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பதற்கு மேற்படி மேற்கோள் சான்றாக அமைகின்றது. "இலங்கைவாழ் மகளிர் வாக்குரிமைச் சங்கத்தில்" வீச்சாக இயங்கிவந்த நல்லம்மா அவர்களின் செயற்பாடுகள், ஆங்கிலம் தெரியாத பெண்களையும் தொழிலாளப் பெண்களையும் கவனத்தில் கொண்டதாக மாற்றமடைவதற்கு மீனாட்சியம்மையாரின் செல்வாக்கும் காரணமெனப்படுகின்றது (சாரல்நாடன்: 1999).

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து வைத்தியராகக் கடமையாற்றிய நல்லம்மா அவர்கள், பெண் விடுதலையிலும் பெருந்தோட்டத் தொழிலாளப் பெண்களின் முன்னேற்றத்திலும் அக்கறையுடன் செயற்பட்ட முன்னோடிகளுள் ஒருவராவார். அவரது எழுத்துக்களில் ஆண்-பெண் சமத்துவம், பெண் கல்வியின் முக்கியத்துவம், தமிழ்மொழியில் கல்வி பயில்வதன் அவசியம், தேசமுன்னேற்றத்துக்குப் பெண் கல்வியின் முக்கியத்துவம் முதலியன வலிறுத்தப்பட்டுள்ளன (விரிவுக்கு: சாரல்நாடன்: 1999). இவற்றில் பாரதியின் சிந்தனைகளுடைய தாக்கம் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

பாரதியின் மேதாவிலாசமும் சமூக பங்களிப்பும் பரவலாக உணரப்படாத காலத்திலேயே நடேசய்யர் தம்பதியினர் தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் சமூக விழிப்புணர்வுக்கும் சமூக அணிதிரட்டலுக்கும் பாரதியாரின் பாடல்களை, பாரதியின் வாழ்க்கை வரலாற்றைக் கருவியாகக் கொண்டியங்கியுள்ளனர். இச்செயற்பாட்டின்வழி அவர்களின் அமைப்பு ரீதியான செயற்பாடுகள் வளர்ச்சிபெற்றுள்ளதோடு அவ்வளர்ச்சியோடு இணைந்து பாரதியார் புகழும் பரவலாக்கம் பெற்றுள்ளது எனலாம்.

பெருந்தோட்டத்துறை சாராது கொழும்பு, கண்டி முதலிய நகரங்களை மையமாகக் கொண்டு இந்திய வம்சாவளியினர் பெருந்தொகையாக வாழ்ந்துவந்துள்ளனர். வர்த்தகத்திலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுவந்த அவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் போல இறுக்கமாகக் கட்டுப்படுத்தப்பட்ட குழுவினராக விளங்கவில்லை; கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேல்நிலையடைந்த அவர்களுள் ஒருசாரார் அரசியல் பொருளாதார துறைகளில் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கியுள்ளனர். தொடக்க காலத்தில் இந்தியர்சார்பில் அரசியல் பிரதிநிதித்துவத்தை வகித்துவந்தவர்களும் இக்குழுவினரே என்பது குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்டத் தொழிலாளர்களைவிட இவர்களே இந்திய தொடர்பினை அதிகமாகக் கொண்டிருந்துள்ளனர்.

பெருந்தோட்டத்துறையோடு தொடர்பில்லாமல் பெரிதும் வணிகத்தில் ஈடுபட்ட மேற்படி குழுவினரை, "மலையகத் தமிழர்கள்" என அடையாளப்படுத்தலாமா என்பது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருசாரார் இவர்களையும் மலையகத் தமிழர் என்ற அடையாளத்துக்குள்ளேயே உள்ளடக்குகின்றனர். பி.ஏ.காதர் (1981), இ.தம்பையா (1995) போன்றோர் இக்கருத்தினையே கொண்டுள்ளனர். இன்னுமொருசாரார் இக்குழுவினரிலிருந்து மலையகத் தமிழரை வேறுபடுத்தி, இலங்கையில் பெருந்தோட்டத்துறை எனும் புதிய பொருளாதாரத் துறையை உருவாக்கிய தொழிலாளர்களையும் அத்தொழிலாளர் சமூகத்தை அடியொற்றி தோன்றிய புதிய வர்க்க அமைப்புக்களையும் மலையகத் தமிழராக அடையாளப்படுத்துகின்றனர். எல்.சாந்திகுமாரும் அவரது அமைப்பினைச் சார்ந்தோரும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர் (1980). இத்தகைய வாதங்கள் இன்னும் ஒரு தீர்க்கமான முடிவினை எட்டவில்லை என்பதும் இலங்கையில் வாழ்ந்த-வாழ்கின்ற இந்தியவம்சாவழியினர் அனைவரையும் மலையகத் தமிழர் என்ற அடையாளத்துக்குள் உள்ளடக்க முடியாது, உள்ளடக்குவது பொருத்தமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர் என்ற அடிப்படையில் அவர்களின் செயற்பாடுகளில் பாரதியின் செல்வாக்குக் காணப்பட்ட விதமும் இங்கு சுருக்கமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கைவாழ் இந்தியர்களின் நலவுரிமைகளைப் பாதுகாத்தல் பொருட்டு அமைப்புக்கள் பலவற்றை உருவாக்கி இயங்கியுள்ள அக்குழுவினர், தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகளையும் வெளியிட்டுள்ளனர். இந்தியாவுடனான நெருக்கமான தொடர்பு, இலங்கையிலும் இந்தியாவிலும் அரசியல் தளத்தில்

கொண்டிருந்த உறவு, கல்வி வளர்ச்சி முதலிய பல காரணங்களால் இந்தியத் தேசியத்தின் தாக்கம் இவர்களிடம் மேலாக வெளிப்பட்டுள்ளது. அத்தேசிய உணர்வெழுச்சியினால் பாரதியின் செல்வாக்கும் மேலோங்கியிருந்துள்ளது. எடுத்துக்காட்டாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

இந்தியாவிலிருந்து இலங்கை வந்து சட்டத்தரணியாகப் பதவிவகித்த சத்தியவாகீஸ்வரய்யர் (நல்லம்மா அவர்களின் கணவர்), இலங்கைவாழ் இந்தியரின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்பட்டுள்ளார். அவர் "இலங்கை இந்தியன்" என்ற பெயரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகை வெளியிட்டுள்ளார். அப்பத்திரிகையில் பாரதி குறித்த பல பதிவுகளைக் காணமுடிகின்றது. உதாரணமாக, இலங்கை இந்தியனின் மகுட வாசகங்களில் ஒன்றாக "சாதி மதங்களைப் பாரோம்" என்ற பாரதியின் கவி வரியும் இடம்பெற்றுள்ளது. டிசம்பர 05, 1928 அன்று வெளிவந்துள்ள இலங்கை இந்தியனில், "பாரதியார் பாடல்" என்று தலைப்பிடப்பட்ட செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் சென்னை மாகாண அரசு பாரதியார் பாடல்களைத் தடைசெய்தமைக்கான எதிர்ப்பு இடம்பெற்றுள்ளது. பர்மாவில் பாரதியார் பாடல்கள் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து சென்னை அரசாங்கமும் பாரதியார் பாடல்களைப் பறிமுதல் செய்த தகவலும் அதனை எதிர்த்து திரு. சத்தியமூர்த்தி அவர்கள் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியதும் அதற்குக் கிருஷ்ணநாயர் அளித்த பதிலின் சாரம்சமும் அதில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் சென்னை சட்டமன்றம் பர்மாவின் ஆணையை ஏற்று பாரதியார் பாடல்களைத் தடைசெய்தமையானது, "சீமையிலுள்ள அரசாங்கத்திற்கு இந்தியா அரசாங்கம் கீழ்ப் பட்டது. அதற்குக் கீழ்ப்பட்டது பர்மா அரசாங்கம். அதற்கும் கீழ்ப்பட்டதாகயிருக்கிறது சென்னை அரசாங்கம்" எனப் பரிகசிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு வாரம் கழித்து டிசம்பர் 19ஆம் திகதி வெளிவந்துள்ள இலங்கை இந்தியனில் அ.ந.மகரபூஷணம் எழுதிய "பாரதியின் குயில்பாட்டு: ஒரு மதிப்புரை" என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. உதயபாரதி இதழில் 1926ஆம் ஆண்டு வெளிவந்த கட்டுரையின் மறுபிரசுரமாக இக்கட்டுரை அமைந்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது (உதயபாரதியில் வெளிவந்த கட்டுரையின் மறுபிரசுரம் என்று பத்திரிகையில் குறிப்பிடப்பட்டில்லை. அவ்வாறு குறிப்பிடும் வழக்கம் அக்காலத்தில் அரிதாகவே இடம்பெற்றுள்ளது). இம்மறுபிரசுரத்தைப் பாரதியார் பாடல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்கான எதிர்வினையாகக் கொள்ளலாம்.

பர்மாவில் 07.08.1928 அன்று பாரதியார் பாடல்களுக்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 11.09.1928 அன்று சென்னை மாகாண அரசும் பாரதியார் பாடல்களுக்குத் தடைவிதித்தது. அத்தடையை எதிர்த்தே சத்தியமூர்த்தி முதலியோர் சட்டமன்றத்தில் பிரேரணை கொண்டுவந்து விவாதித்துள்ளனர். அந்நிலையில் அத்தடைக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையிலும் சத்தியமூர்த்தி முதலியோருக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையிலும் அக்காலத்தில் இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரால் நடத்தப்பட்ட பல பத்திரிகைகளில் பாரதியாருக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது எனலாம். தேசபக்தன், இலங்கை இந்தியன் முதலிய பத்திரிகைகள் 1928, 1929

காலப்பகுதியில் பாரதி குறித்த பதிவுகளுக்கு முன்னுரிமையளித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையிலும் இந்தியாவிலும் சமூக சீர்திருத்தத்தை, சமூக சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இலங்கைவாழ் இந்தியவம்சாவளியினரிடையே இயங்கிய குழுவினரும் தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசேர்க்கும் கருவியாகப் பாரதியைக் கொண்டியங்கியுள்ளனர். உதாரணமாக, கே. சுப்பையா என்பவரை ஆசிரியராகக் கொண்டு, அல்லுலுவ ரோட் கண்டி, ஆதிதிராவிடன் பிரஸில் அச்சிடப்பட்டுள்ள "ஆதிதிராவிடன்" என்ற பத்திரிகை, இலங்கை, இந்திய ஆதிதிராவிடர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்துள்ளது. அப்பத்திரிகையின் செடி 01, கொடி 01 என்ற 01.08.1934ஆம் திகதிக்குரிய வெளியீட்டில் மாத்திரம் பல இடங்களில் பாரதி குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. அவை வருமாறு:

- ஏ.ராஜமாணிக்கம், "தாழ்த்தப்பட்ட சோதரா விழி" என்ற கட்டுரையில், இனியொரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம் என்ற பாரதியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அதற்கென முயற்சியுடன் உழைத்தல் வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளதோடு "எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் குலம்" என்ற பாரதி பாடலையும் கையாண்டுள்ளார்.
- திருச்சி திரு. விசுவநாதம் என்பவர் "பகுத்தறிவு" என்ற தலைப்பில் காந்தி, சுவாமி விவேகானந்தர், சுவாமி சிரத்தானந்தர், சுவாமி நாராயணகுரு, திரு. வி.க. முதலிய பலரது பகுத்தறிவு குறித்த வாசகங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அத்தொகுப்பில் பாரதியின் பெயரில் "தீண்டாதாரைக் கடவுள் படைக்கவில்லை, மிருகங்களினும் கேவலமான மனிதரே படைத்தனர்" என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.
- பத்திரிகையின் எட்டாம் பக்கத்தில் "ஒரே ஒரு கடவுள்" என்ற தலைப்பிலான பாரதியின் பாடல் இடம்பெற்றுள்ளது.
- "தமிழருக்கு" என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய கட்டுரை, ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது என்ற குறிப்புடன் 12 மற்றும் 13ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இயங்கிய "இலங்கை இந்திய சங்கமும்" இலங்கை, இந்திய ஆதிதிராவிடர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு ஆதிதிராவிடன் என்ற பத்திரிகையை 1919ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் நடத்தியுள்ளது. அவ்விதழின் இரண்டாம் ஆண்டு தொகுப்பை இரா. பாவேந்தன், ஆதிதிராவிடன் இதழ்த் தொகுப்பு (2008) என வெளியிட்டுள்ளார். எஸ்.பி. கோபாலசாமியை ஆசிரியராகவும் பெ. கனகசபையைத் துணையாசிரியராகவும் கொண்டு வெளிவந்துள்ள அப்பத்திரிகை, கொழும்பு பார்பரஸ்ட்ரீட் ராபட் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டுள்ளது (பாவேந்தன், 2008: 38). தொகுக்கப்பட்டுள்ள இரண்டாம் ஆண்டு இதழில் பாரதி குறித்த எந்தப் பதிவும் இடம்பெற்றில்லை. அத்துடன் இந்தியத் தேசியம், அந்நிய

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பனவும் இப்பத்திரிகையில் அழுத்தம் பெற்றுமில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

பாரதி ஆய்வாளர்கள், 1935ஆம் ஆண்டுடன் பாரதியியலின் அடுத்தகட்ட நகர்வு இடம்பெற்றது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். தேசபக்தி, சமூக சீர்திருத்தம், சமூக சமத்துவம் முதலிய தளங்களில் செயற்பட்டவர்கள், தமக்கான கருவியாகப் பாரதியைக் கொண்டியங்கிய தளத்திலிருந்து விரிந்து, பாரதி மஹாகவியா, இல்லையா என்ற வாதம் இக்காலத்தில் ஆரம்பமாகின்றது. வ.ரா. குழுவினருக்கும் கல்கி குழுவினருக்கும் இடையே இடம்பெற்ற அவ்வாதமும் அதனையொட்டி முன்வைக்கப்பட்ட கருத்துக்களும் பாரதியியலினை அடுத்தகட்ட நகர்வுக்குக் கொண்டுசென்றன எனலாம்.

தமிழகத்தில் அத்தகைய வாதம் முளைவிடுகின்ற காலத்திலேயே பாரதியின் மேதாவிலாசத்தைச் சுட்டிக்காட்டும் குறிப்புகள் கொண்ட கட்டுரையொன்றை ஸ ி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் 1935ஆம் ஆண்டு வீரகேசரியில் எழுதியுள்ளார். “பாரதி தினத்தைத் தேசிய தினமாகக் கொண்டாட வேண்டும்” என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ள அக்கட்டுரையில், பாரதியை மஹாகவி என்ற தளத்திலேயே அணுகியுள்ளார், ஸி.வி. வேலுப்பிள்ளை. எடுத்துக்காட்டாக, “தாகூர், பாரதி முதலான மாபெரும் கலைஞர்கள் ஒரு காலத்துக்கோ ஒரு தேசத்துக்கோ உரியவர்கள் அல்லர். கவிச்சக்கரவர்த்திகளான தாகூரும் பாரதியும் இணையற்ற இரு திலகங்கள் போன்றவர்கள்’ நவீன காலத்துத் தமிழ் இலக்கியங்களுக்குள் பாரதியின் கவிதைகளுக்கு இணையாகச் சொல்லக்கூடியது ஒன்றுகூட இல்லை. பாரதியாருடைய கவிகள் தான் தமிழுக்கு மறுமலர்ச்சியை அளித்தன” எனப் பலவாறு பாரதியை ஸி.வி. வேலுப்பிள்ளை மதிப்பிட்டுள்ளார். இவை பாரதி மஹாகவி என்பதற்கு அரணாக அமைவதைக் காணலாம். தாகூரின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த ஸி.வி. வேலுப்பிள்ளை, தாகூரின் பெயரில் 1935ஆம் ஆண்டு பூண்டுலோயாவில் ஒரு பாடசாலையை நிறுவியுள்ளது போலவே அவரது பிறந்த ஊரான வட்டகொடையில் பாரதி என்ற பெயரில் இளைஞர் சங்கமொன்றையும் அமைத்ததாகக் கூறப்படுகின்றது (அந்தனிஜீவா, 1998: 52).

பாரதி மஹாகவியா, இல்லையா என்ற வாதங்களுடனேயே பாரதியை ஒரு படைப்பாளியாகக் கொண்டு மதிப்பிடும் போக்கும் மேலோங்கியது எனலாம். பாரதியாரின் எழுத்துக்கள் தொகுக்கப்பட்டமையும் பாரதி குறித்த சர்ச்சைகளும் (வ.ரா குழு X கல்கி குழு, புதுமைப்பித்தன் X கு.ப.ரா, க.நா.சு. குழு X மகராசன், சுந்தா முதலானோர்) பாரதியின் பன்முகத்தன்மையை வெளிக்காட்டுவதாக அமைந்தன. பத்திரிகைகளும் பாரதி குறித்த சிறப்பு மலர்களை வெளியிடத் தொடங்கின: பாரதி பற்றி ஆய்வுகள் பெருகியதோடு பாரதி வழியில் படைப்பிலக்கியம் செய்பவர்களும் பெருகினர்; படைப்பாளர்கள் தம் படைப்புக்களில் பாரதி பாடல்களைக் கையாள்வது அதிகரிக்கத்தொடங்கியது. அரசியல் மேடைகள் தொடங்கி சகல மேடைப் பேச்சுக்களிலும் பாரதியின் பாடல்கள் மேற்கோளாகக் காட்டுதல் அதிகரித்ததோடு வானொலியிலும் பாரதி பற்றிய நிகழ்ச்சிகள்

இடம்பெறத்தொடங்கின (விரிவுக்கு: சிவத்தம்பி, மார்க்ஸ், 2008). மலையகத்திலிலும் இவற்றின் தாக்கங்கள் ஆங்காங்கு வெளிப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக G.S.M. ஸாமுவேலின் கண்ணனின் காதலியைக் (1940) குறிப்பிடலாம். இந்நாவலில் பல இடங்களில் பாரதியாரின் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதுகுறித்து அதன் முன்னுரையில் பி.எஸ்.வரதராஜுலு நாயுடு அவர்கள்,

"கதாநாயகன் சண்முகநாதன், கண்ணன் என்னும் பெயராலே அழைக்கப் படுகின்றான். அவனது காதலியின் பெயர் கண்ணம்மாள். எனவே கண்ணனின் காதலி என்ற பெயர் மிகப் பொருத்தமுடையதே. இதனுள் இவர் எடுத்தாண்டுள்ள வரகவி ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் வாசகர்களுக்கு ஒருவிதப் புதிய சோகத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை" (மேற்கோள்: நித்தியானந்தன், 2014, 146) எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரதியியலின் வளர்ச்சியில் தனித்து சுட்டிக்காட்ட வேண்டியது, இடதுசாரிகளின் பாரதியலுக்கு ஆற்றிய பங்களிப்பாகும். பாரதியின் மேதாவிலாசமும் சமூக பங்களிப்பும் இடதுசாரிகளாலேயே ஆழமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ப. ஜீவானந்தம், தொ.மு.சி. ரகுநாதன் போன்றவர்கள் அந்தத் தளத்தில் தொடக்கநிலை முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். தமிழகத்தில் அத்தகையதொரு சூழல் உருப்பெற்றபோது அவற்றின் தாக்கங்கள் இலங்கையிலும் வெளிப்பட்டன. அதன் தொடக்க முயற்சிகளைக் கே.கணேஷ், பி. இராமநாதன் முதலியோர் முன்னெடுத்துள்ளனர். அவர்கள் இணைந்து வெளியிட்ட "பாரதி" சஞ்சிகை இதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

பாரதியின் வழியில் தமிழுக்குப் புதுவழிகாட்ட முனைந்த கணேஷ் முதலியோர், முதலாவது பாரதி இதழிலே தமது நோக்கையும் போக்கையும் வெளிப்படையாக அறிவித்துள்ளனர். "தமிழ் தமிழுக்காகவே என்று தம் கூட்டத்திற்குள்ளேயே மொழியைச் சிறைப்படுத்திக்கொண்ட பண்டிதர்களின் இரும்புப் பிடியினின்று அதனை மீட்டு மக்கள் சொத்தாக்கினான் பாரதி. பாரதி பரம்பரை நாங்கள் என்று ஜம்பமடிக்கும் எழுத்தாளர் கோஷ்டி கலை கலைக்காகவே என்று அதே பல்லவியை வேறு இராகத்தில் பாடுகிறது. தமிழைச் சிறைமீட்ட பாரதியார் செய்த சேவையே இந்தப் பாரதியின் இலட்சியமும்", "ஏகாதிபத்தியத்தை அழிக்கக் கவிபாடிய பாரதியார் முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமையான ஒப்பில்லா சமுதாயத்தை ஆக்கவும் கவி பாடினார். அவர் காட்டிய அந்தப் பாதையில் பாரதி யாத்திரை தொடங்குகிறது" (மேற்கோள்: தெளிவத்தை ஜோசப், 2002: 57,58) முதலான கொள்கைப் பிரகடனங்கள், அத்தகைய இதழொன்றின் வருகைக்கான காரணத்தையும் அதன் நோக்கையும் தெளிவாக வரையறுத்துள்ளதைக் காணலாம். தமிழில் வெளிவந்த முதலாவது முற்போக்குச் சஞ்சிகையாகக் கூறப்படும் "பாரதி", முற்போக்கு சிந்தனைக்கு ஏற்ப சமூக நோக்கை முன்னிலைப்படுத்தியுள்ளதோடு அந்தச் சமூக நோக்குக்குப் பாரதியாரை ஆதர்சனமாக வரித்துக்கொண்டுள்ளதை மேற்படி பிரகடனங்கள் வெளிப்படுத்திநிற்கின்றன. முதலாவது இதழிலே கே. கணேஷ், "பாரதியார்" என்ற தலைப்பில் எழுதிய,

'தாய்மொழி என்றொரு
மொழியும் உண்டோ என்று
தமிழ் மக்கள் ஐய
முற்றிருந்த காலம்
பேயரசர் கொடுஞ்செயல்கள்
தமை எதிர்த்துப்
பேசுவதற்கும் ஆண்மையற்றிருந்த காலம்
இப்படி இருந்த தமிழ்
மக்களையும் புலவர்களையும்
உரிமை உணர்வளித்தவரை
விழிக்கச் செய்து
போர் செய்யும் திற
னளித்து ஊக்குவித்த
புலவர் பிரான்
பாரதியார் நாமம் வாழி' (மேலது: 60)

என்ற கவிதையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரதியின் சமூக நோக்கை முதன்மைப்படுத்திய ப.ஜீவானந்தம் அவர்கள், இலங்கையில் சில காலம் வாழ்ந்தமையும் முற்போக்குச் செயற்பாட்டாளர் மத்தியில் பாரதியின் செல்வாக்கு மிகுவதற்கொரு காரணமெனலாம். இலங்கை முற்போக்கு இயக்கத்தினர் பாரதியின் சிந்தனைகளை ஆழமாகப் பற்றிக்கொண்டுள்ளதோடு நாடு முழுதும் பாரதி விழாக்களை ஒழுங்கு செய்து பாரதியை மக்கள்மயப்படுத்த முனைந்துள்ளனர்; பதுளை, ஹட்டன், பேராதனை முதலிய மலையகத்தின் பல பாகங்களிலும் முற்போக்கு இயக்கத்தின் பாரதி விழாக்கள் இடம்பெற்றுள்ளன. அவ்விழாக்களில் தொ.மு.சி. ரகுநாதன் உள்ளிட்ட தமிழகத்தின் முன்னணி பாரதி ஆய்வாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரதி குறித்த கனதியான ஆய்வுகளை இலங்கை முற்போக்கு இயக்கம் சார்ந்தோர் மேற்கொண்டுள்ளனர். இளங்கீரன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி முதலியோரின் ஆய்வுகள் அவ்வகையில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டத்தக்கன. முற்போக்கு சக்திகள் நடத்திய இதழ்களிலும் பத்திரிகைகளிலும் பாரதியின் தாக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது. இவை யாவற்றுக்கும் கே.கணேஷ் மற்றும் பி.இராமநாதன் தொடக்கி வைத்த பாரதி இதழ் முன்னோடியாக விளங்குகின்றது எனலாம்.

காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றமையும் பாரதியாரின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டமையும் (1949) பாரதியாரின் எழுத்துக்களை இன்னும் பரவலாக மக்கள் மத்தியில் சென்றடையச் செய்தன. பாரதி விழாக்களை

நடாத்துவதென்பது பொதுவான நிகழ்வாக இடம்பெறத் தொடங்கியது. அரசியல் அமைப்புக்கள், கலை இலக்கியச் சங்கங்கள், பாடசாலைகள், கிராம சபைகள் என யாவும் பாரதி விழாக்களை ஒழுங்குசெய்ததோடு அரச அமைப்புக்களும் பாரதி விழாக்களை நடத்தத்தொடங்கின. இலங்கையிலும் இத்தகைய நிகழ்வுகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. மலையகப் பிரதேசங்களிலும் பாரதி விழாக்களை முன்னெடுக்கும் போக்கு மேலோங்கத்தொடங்கியது. மலையகத்தின் கல்வி நிலையில் ஏற்பட்டு வந்த வளர்ச்சியும் மத்தியதரவர்க்கத்தின் எழுச்சியும் பாரதி விழாக்கள் வேகமாக அதிகரிக்கத் துணையாக அமைந்தன எனலாம்.

கி.வா. ஜகந்நாதன், தனது இலங்கைக் காட்சிகள் (1956) என்ற நூலில், கே. கணேஷின் அழைப்பினால் 1951ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து, கண்டியில் இடம்பெற்ற பாரதி விழாவொன்றில் தலைமையேற்றமையைப் பதிவு செய்துள்ளார். அப்பதிவில் கனகரத்தினம், தொண்டமான் ஆகிய இரு அரசியல்வாதிகளும் "தனியொருவனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் கவிவரிக்குச் சமகாலப் பின்னணியில் வெவ்வேறு வகைகளில் வியாக்கியாணம் செய்துள்ளமை சுவாரஸ்யமாக விவரிக்கப்பட்டுள்ளது (ஜகந்நாதன், 1956: 59-62).

மலையகத்தின் பல பாகங்களிலும் உருவாக்கம்பெற்ற கலை இலக்கிய மன்றங்களும் சமூக அரசியல் அமைப்புக்களும் பாரதி விழாக்களை முன்னெடுத்துள்ளன. உதாரணமாக, பதுளை திருக்குறள் மன்றம் 11.09.1954 அன்று பதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் பாரதி விழா ஒன்றினை நடாத்தியுள்ளமையைக் குறிப்பிடலாம். இவ்விழாவின் அழைப்பிதழை ஆவணகாப்பாளர் ஹுணுகலை ஸ்ரீ அவர்கள், "பாரதியை நினைவுகூருதலில் பதுளை பாரதி வித்தியாலயத்தின் வரலாற்றை மீட்டிப்பார்த்தல்" என்ற தலைப்பில் நிகழ்த்திய இணையவழி உரையாடலில் காட்சிப்படுத்தினார். அந்த அழைப்பிதழின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு அமைந்துள்ளது:

தலைமை : திரு.G.K. சுந்தரசாஸ்திரி

வள்ளுவரும் பாரதியும் : திரு.S.தில்லன்

பாரதியும் கண்ணனும் : செல்வி M. நம்ஜம்பி

ஏன் பிறந்தேன் : K. இராமசாமி

பாரதியும் பெண்களும் : செல்வி G.K.S. மீனாட்சி

பாரதியும் தமிழ் பண்பாடும் : திரு. C.B. இராஜசிங்கம்

பாரதி பாடல்கள்

பாரதி விழா மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டுள்ளதை இந்த அழைப்பிதழ் காட்டுவதோடு உரைப்பொருண்மைகள், பாரதி குறித்த பரவலான புரிதல் நிலவியுள்ளமையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளன.

லுனுகலை ஸ்ரீ அவர்கள் காட்சிப்படுத்திய மற்றுமொரு அழைப்பிதழின்படி பதுளை திருக்குறள் மன்றமே 24.10.1956 அன்று பாரதி விழா ஒன்றினை நடாத்தியிருக்கிறது. பதுளை ஊவாக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றுள்ள அவ்விழாவுக்குப் பதுளை சென்பீட்டர் கல்லூரியின் ஆசிரியர் திரு. விஜயன் விக்டோரியா அவர்கள் தலைமை தாங்கவுள்ளதாகவும் "பாரதி கூறும் பொதுவுடைமை" என்ற தலைப்பில் இளங்கீரன் அவர்களும் "வள்ளுவரும் பாரதியும்" என்ற தலைப்பில் சிதம்பர ரகுநாதன் அவர்களும் உரைநிகழ்த்த உள்ளதாகவும் இலங்கை வானொலிப் பாடகி திருமதி சரஸ்வதி திருச்சிற்றம்பலம் அவர்கள் பாரதி பாடல்களை வீணையுடன் பாடவுள்ளதாகவும் அவ்வழைப்பிதழில் அச்சிடப்பட்டுள்ளன. லுணுகலை ஸ்ரீ அவர்கள் சேகரித்துள்ள தெளிவத்தை வள்ளுவர் மன்றம் 5.10.1958 அன்று நடாத்திய காந்தி விழா அழைப்பிதழிலும் "காந்தியும் பாரதியும்" என்ற தலைப்பில் பதுளை பாரதி கல்லூரியின் தலைமை ஆசிரியர் திரு. க. இராமசாமி உரைநிகழ்த்த உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை மலையகத்தில் பாரதியார் பரவலான செல்வாக்கைப் பெற்றுவிட்டதன் வெளிப்பாடாகும்.

மலையகத்தில் பெருகிவந்த பாரதியாருடைய செல்வாக்கின் உயர்ந்த வெளிப்பாடுகளுள் ஒன்றாக அமைவது , பாரதியின் பெயரில் 1957ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டமையாகும். திரு. கருப்பையா இராமசாமி அவர்கள் தனது நண்பர்களுடன் ஒன்றிணைந்து பிள்ளையார் கோவில் ஒன்றைப் பாடசாலையாக மாற்றி, அதற்குப் "பாரதி பாடசாலை" எனப் பெயரிட்டுள்ளார். "பாரதி கல்விக்காக நிறைய பாடியுள்ளதாலும் அவர் ஒரு உந்துசக்தியாக விளங்குவதாலும் நண்பர்களுடன் ஒன்றிணைந்து பாரதியின் பெயரில் பாடசாலை உருவாக்கியதாக" நேர்காணலொன்றில் கருப்பையா இராமசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (http://aavanaham.org/islandora/object/noolaham%3A15810). அத்துடன் பாரதி என்ற பெயரில் பாடசாலையின் ஆண்டு மலரையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். 1958ஆம் ஆண்டு வெளிவந்த அதன் முதலாவது இதழில் பாரதியின் நண்பர் பரலி சு. நெல்லையப்பரின் வாழ்த்துச் செய்தி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அம்மலரிலிருந்து, குன்றக்குடி அடிகளார் 30.03.1957 அன்று அக்கல்லூரியில் "பாரதி கண்ட சமயம்" என்னும் பொருளில் உரையாற்றியுள்ளதையும் கண்டுகொள்ளமுடிகின்றது. இக்கல்லூரியின் பத்தாவது ஆண்டு விழாவில் பாரதியின் பேர்த்தி விஜயபாரதி தனது கணவர் சுந்தரராஜனுடன் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத்தில் 1960கள் வரை பாரதியின் செல்வாக்கு வியாபகமடைந்ததை உற்றுநோக்கும்போது, தமிழ்நாட்டில் காலத்துக்குக் காலம் பாரதியின் செல்வாக்கில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்களின் தாக்கங்கள் மலையகத்தில் நேரடியாகப் பிரதிபலித்துள்ளதைக் காண முடிகின்றது. அதனைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

- தொடக்க காலத்தில் தேசபக்திக்கும் பின்னர் சமூக விடுதலை, சமூக சீர்திருத்தம் முதலானவற்றுக்குப் பாரதியின் பாடல்களைத் துணையாகக்

கொள்ளலே தமிழ்நாட்டில் பெருவழக்காக இருந்துள்ளது. அதனையே மலையகத்திலும் தொடக்க காலத்தில் காணமுடிகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே கோ.நடேசய்யர், மீனாட்சியம்மாள் முதலியோர் முன்னெடுத்த செயற்பாடுகளிலும் பெருந்தோட்டத்துறைசாராது கொழும்பு முதலிய நகரங்களில் செயற்பட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளிலும் தேசவிடுதலைக்கும் சமூக விடுதலைக்கும் சமூக சீர்திருத்தத்துக்கும் கருவியாகவே பாரதி பயன்படுத்தப்பட்டுள்ளார். இவற்றுள் தொழிலாளர்களை அணிதிரட்ட, விழிப்புணர்வு செய்ய பாரதி பாடல்களைப் பயன்படுத்தியமை தனித்துவம் மிக்கதெனலாம். தொழிலாளர் மத்தியில், அவர்களின் எழுச்சிக்குப் பாரதி பாடல்களைப் பயன்படுத்தியமையில் நடேசய்யர் தம்பதியினரே முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

- பாரதி தேசபக்திக் கவிஞன் என்ற எல்லையைக் கடந்து, அவரை ஒரு மஹாகவியென முன்னிறுத்தம் வாதங்கள் தமிழகத்தில் 1935இல் இடம்பெறத் தொடங்கின. அக்காலத்திலேயே ஸி.வி. வேலுப்பிள்ளை, பாரதி மஹாகவியே என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையிலான கருத்துக்களைக் கொண்ட கட்டுரையினை எழுதியுள்ளார். பாரதியை ஒரு படைப்பாளியாகக் கொண்டு தேசபக்திக்கு அப்பால் பாரதி பாடிய பாடல்கள் பரந்தளவில் கவனிப்பைப் பெற்றுவந்தபோது ஸாமுவேல் அவர்கள் தனது நாவலில் பாரதியின் காதல் பாடல்களை அதிகமாகக் கையாண்டுள்ளார்.
- பாரதியின் மேதாவிலாசத்தையும் சமூக நோக்கையும் ஆழமாக வெளிப்படுத்தும் முயற்சிகளைத் தமிழகத்தில் இடதுசாரி சார்புடையோர் முன்னெடுத்தபோது, இலங்கையில் அதற்கான முன்னோடி முயற்சிகளைக் கே.கணேஷ் முதலானோர் முன்னெடுத்துள்ளனர்.
- பாரதி விழாக்கள் நடாத்துதல், பாரதி மன்றங்களை நிறுவுதல் என்பன பரவலாக இடம்பெற்று வருகின்ற காலத்தில் மலையகத்திலும் பாரதி விழாக்களை முன்னெடுக்கும் போக்கு அதிகரித்துள்ளதோடு தமிழகத்துப் பாரதி ஆய்வாளர்களும் அவ்விழாக்களில் கலந்து சிறப்பித்துள்ளனர். பாரதி மன்றங்களின் எண்ணிக்கையும் மெல்ல மெல்ல பெருகத் தொடங்கியுள்ளதோடு வெவ்வேறு அமைப்பினரும் பாரதி விழாக்களை ஒழுங்கு செய்துள்ளனர். அத்துடன் பாரதி பெயரிலேயே பாடசாலை நிறுவுதலும் மலையகத்தில் நிகழ்ந்துள்ளது.

இவற்றின் தொடர்ச்சியாக 1960களின் பின்னர் பாரதியின் செல்வாக்கு மேலும் அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது. அக்காலத்தில் மலையகத்தில் ஏற்பட்ட இளந்தலைமுறையினரின் எழுச்சியினால் சமூக விழிப்புணர்வும் கலை கலாசார மறுமலர்ச்சியும் பெருகத்தொடங்கின; இடதுசாரி அமைப்புக்களின் செயற்பாடுகள்

மலையகத்திலும் விரிவுபெறத் தொடங்கின. இத்தகைய மாற்றங்களுக்குப் பாரதியும் ஒரு வழிகாட்டியாக, ஒரு உந்துசக்தியாக விளங்கியுள்ளார். பாரதி மன்றங்களின் எண்ணிக்கை பெருகத்தொடங்கியுள்ளது. மலையகப் படைப்பிலக்கியங்கள் மற்றும் இதழியலில் பாரதியின் தாக்கம் வெவ்வேறு அளவுகளில் வெளிப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் கலை இலக்கிய அமைப்புக்களிலும் பாரதி விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளனளு பாரதி சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன; அவற்றின் தொடர்ச்சியை இன்றும் காணமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாரதி நூற்றாண்டையொட்டி மலையகத்தின் பல பாகங்களிலும் நினைவு நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதோடு நூற்றாண்டு மலர்களும் வெளியிடப்பட்டுள்ளன. பதுளை சிந்தனை ஒன்றியம் வெளியிட்ட பாரதி நூற்றாண்டு விழா மலர் சி.தில்லைநாதன், எம்.ஏ.நுஃமான் முதலானோரின் கட்டுரைகளையும் தாங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழரின் சமூக அரசியல் விடுதலையில் ஆழமாகச் செயற்பட்டவர்கள், பாரதியின் தாக்கத்துக்கு உட்டபட்டவர்களாகவும் பாரதியை ஆதர்சனமாகக் கொள்பவர்களாகவும் விளங்கியுள்ளனர். உதாரணத்துக்கு, திரு. சாந்திகுமார் தலைமையில் இயங்கிய மலையக மக்கள் இயக்கம் பாரதியையும் தமக்குரிய ஆதர்சனமாகக் கொண்டியங்கியுள்ளதோடு அவர்கள் வெளியிட்ட சஞ்சிகைக்கும் தீர்த்தக்கரை (1980) எனப் பாரதியின் கவிவரியையே பெயராக இட்டுள்ளனர். மலையக மக்கள் இயக்கத்தில் செயற்பட்டவர்களால் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நந்தலாலா வட்டத்தினரும் (1992) பாரதியைப் பிரதான ஆதர்சனமாகக் கொண்டியங்கி வருகின்றனர். பாரதியின் கவி வரியே அந்த வட்டத்தின் பெயராகவும் அவர்கள் வெளியிட்டுவரும் இதழின் பெயராகவும் (நந்தலாலா) அமைந்துள்ளது. நந்தலாலா இதழில் இடம்பெற்றுள்ள நேர்காணல்கள் ஒவ்வொன்றிலும் பாரதி குறித்தும் உரையாடப்பட்டுள்ளன என்பதும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். இதுவரை வெளிவந்துள்ள எந்த இதழிலும் இடம்பெறாத சிறப்பாக இதனைக்கூறலாம். நந்தலாலா இதழொன்றில், “காக்கைச் சிறகினிலும் பச்சைத் தளிர்களிலும்” என்ற தலைப்பில் நந்தலாலா நேர்காணல்களில் கோமல் சுவாமிநாதன், ஜெயமோகன், மீரா, இன்குலாப், வல்லிக்கண்ணன், தி.க.சி. ஆகியோர் பாரதி குறித்துக் கூறிய கருத்துக்கள் தொகுத்து ஒரே பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன (மார்ச் - ஆகஸ்ட் 1995, 17). அந்தனிஜீவா நடத்திய கொழுந்து (1988) இதழும் தனது மகுட வாசகமாக பாரதியின் கவிவரியினையே கொண்டுள்ளது. மலையக ஆசிரியர் ஒன்றியம் வெளியிடும் ஆசிரியன் பத்திரிகையிலும் பத்திரிகையின் முன்பக்க மேற்பகுதிலும் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப் பகுதியிலும் பாரதியின் கவிவரிகள் தொடர்ந்தும் பிரசுரிக்கப்பட்டே வருகின்றன.

பாரதியின் நினைவு நூற்றாண்டை ஒட்டி தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கிளை, ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி, ஹட்டனில் இயங்கும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம், நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் முதலியன பாரதி நினைவு நூற்றாண்டு நிகழ்வுகளை இணையவழியில் ஒழுங்குசெய்திருந்தமையும்

குறிப்பிடத்தக்கது. இவையாவும் மலையகத்தில் பாரதியின் செல்வாக்கின் தொடர்ச்சியைக் காட்டுகின்றன.

## உசாத்துணை நூல்கள்


*அந்தனிஜீவா, (1998) மலையக மாணிக்கங்கள், கொழும்பு: துரைவி.*

*அஸீஸ், எ.எம்.எ., (1967) கிழக்காபிரிக்கக் காட்சிகள், சென்னை: பாரிநிலையம்.*

*கணேஷ், கே., (2002) நேர்காணல், ஞானம் 31: கே. கணேஷ் சிறப்பிதழ்.*

*காதர், பி.ஏ., (1981) பெருந்தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம்?, கொழும்புளூ தொழிலாளர் கல்வி வெளியீடு.*

*குமாரி ஜயவர்தன மற்றும் குரியன், ரஷேல் (2016) தொழிலாளர் தலைவர் நடேசய்யரும் பெண்ணியவாதி மீனாட்சியம்மாளும், சண்முகலிங்கம், க. (மொ.பெ), கொழும்புளூ குமரன் அச்சகம்.*

*சாந்திகுமார், (க.ஆ), (1980) "மலையகம் - சில குறிப்புக்கள்", தீர்த்தக்கரை, ஜுன் - ஆகஸ்ட்.*

*சாரல்நாடன், (1998) பத்திரிகையாளர் நடேசய்யர், கண்டி: மலையக வெளியீட்டகம்.*

*....., (1999) இன்னொரு நூற்றாண்டுக்காய் : 1920களில் இலங்கையில் வாழ்ந்த ஒர தமிழ்ப் பெண்ணின் அரசியல், வாக்குரிமைச் சிந்தனை, கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.*

*"""" (2015) மலையக விடிவெள்ளி கோ.ந. மீனாட்சியம்மாள், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.*

*........ (க.ஆ), (1991) "பாரதியாரும் நடேசய்யரும்", பாரதி விழா மலர், மலையக ஆன்மீக கலை இலக்கிய அபிவிருத்தி மன்றம்.*

*சிவத்தம்பி, கார்த்திகேசு மற்றும் மார்க்ஸ், அ., (2008) பாரதி மறைவு முதல் மகாகவி வரை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*

*தம்பையா, இ., (1995) மலையக மக்கள் என்போர் யார்?, சென்னை: புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.*

*தெளிவத்தை ஜோசப், (க.ஆ.) (2002) "ஈழத்து முற்போக்கு இலக்கியப் பரம்பரைக்கு வித்திட்ட பாரதி", டொமினிக் ஜீவா (தொ.ஆ.), நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், கொழும்பு: மல்லிகைப் பந்தல்.*

*நடேசய்யர், கோ., (1931) நீ மயங்குவதேன், ஹட்டன்: சகோதரி பிரஸ்.*

*நடேசய்யர், கோ., (1934) வெற்றியுனதே, கொழும்பு: தினத்தபால் பிரஸ்.*

*நித்தியானந்தன், மு., (2014) கூலித்தமிழ், சென்னை: க்ரியா.*

*பாவேந்தன், இரா., (2008) ஆதி திராவிடன் இதழ்த் தொகுப்பு, சென்னை: சந்தியா பதிப்பகம்.*

*பெரியாம்பிள்ளை, ஆர்.எஸ்., (1932) ஜீவகாருண்யக்கீதம், மதராஸ்: ஸ்ரீ மயில்வாகனன் பிரஸ்.*

*மணிகண்டன், ய., (க.ஆ.) (11.09.2021) "மகாகவிக்கு மகத்தான அஞ்சலி", தினமணி.*

*மார்க்ஸ், அ., (2008) பாரதி பாடல்களுக்குத் தடை, சென்னை: புலம்.*

*மீனாட்சியம்மாள், கோ. ந., இந்தியத் தொழிலாளர் இலங்கையின் வாழ்க்கை நிலைமை (மறுபதிப்பு), கொழும்பு: றுநுசுஊ.*

*யதுகிரி அம்மாள் (2019) பாரதி நினைவுகள் (நான்காம் அச்சு), சென்னை: பாரதி புத்தகாலயம்.*

*வேங்கடாசலபதி, ஆ.இரா., (2012) முச்சந்தி இலக்கியம் (மூன்றாம் பதிப்பு), நாகர்கோவில்: காலச்சுவடு.*

*...., (தொ.ஆ.) (2020) பாரதி விஜயா கட்டுரைகள் (ஏழாம் பதிப்பு), நாகர்கோவில்: காலச்சுவடு.*

*வேலுப்பிள்ளை, ஸி.வி., (க.ஆ.) (1974) "மலையகத்தார் புதுமைத் தமிழ் இலக்கியம் படைத்த வரலாறு", யாழ்ப்பாணம்: நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு நினவு மலர்.*

*...., (க.ஆ.) (17.01.1982) "பாரதி தினத்தை தேசிய தினமாகக் கொண்டாட வேண்டும்" (மறுபிரசுரம்), வீரகேசரி.*

*ஜெகந்நாதன், கி.வா., (1956) இலங்கைக் காட்சிகள், சென்னை: நாஷனல் ஆர்ட் பிரஸ்.*

De Alwis, Malathi and Kumari Jayawardena (2001) Casting Pearls: The women's Franchise Movement in Sri Lanka, Colombo: Social Scientists; Association.

பத்திரிகைகள் மற்றும் இதழ்கள்

*ஆதித்திராவிடன், ஆகஸ்ட் 01, 1934.*

*இலங்கை இந்தியன், டிசம்பர் 05, 1928 மற்றும் டிசம்பர் 19, 1928.*

*தீர்த்தக்கரை இதழ் 04, ஜனவரி ___ மார்ச், 1982.*

*தேசபக்தன் - 08.09.1924, 02.09.1925.*

*நந்தலாலா, மார்ச் - ஆகஸ்ட் 1995.*

*பாரதி, 1958 (பாரதி பாடசாலையின் முதலாவது ஆண்டு மலர்)*

# இரு சமய உடலாக இறந்தவரின் உடல்: காலனிய ஈழத்தில் அபரக் கிரியைக் கண்டனம்

கலாநிதி செல்லத்துரை சுதர்சன்

---

## 1. அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், கிறிஸ்தவ மதக்காலனியத்தின் விளைவால், ஈழத்தில் பெருமளவான கண்டன நூல்களும் கண்டனப் பிரசுரங்களும் தோன்றின. ஈழத்துக்கே உரித்தான கண்டன மரபு ஒன்று தோன்றி வளர்ந்த இக்காலத்தை, "கண்டன நூல்களின் எழுச்சிக் காலம்" எனக் குறிப்பது பொருத்தமானது. காலனிய காலத்தில் கண்டன நூல்களின் எழுகை, மதங்களை மறுகட்டமைப்புச் செய்யவதில் முக்கிய பங்காற்றியது. சமயம், தத்துவம், மொழி முதலாய துறைகளின் புலமை அடையாளத்தைக் கண்டனப் பிரதிகள் வெளிப்படுத்தின. "இரு சமய உடலாக இறந்தவரின் உடல்: காலனிய ஈழத்தில் அபரக் கிரியைசார் கண்டனம்" தலைப்பில் அமையும் இந்த ஆய்வானது, கிறிஸ்தவ மதக் காலனிய ஈழத்தில், சைவத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறிய ஒருவரின் இறப்பின் பின்னான சமயஞ்சார் கிரியைகள் தொடர்பான கருத்துநிலைசார் உரையாடலாக அமைகிறது. அந்தவகையில் "வல்வைச் சிவன் கோயிற் சபிண்டி நாடக சங்காரம்" என்ற அபரக்கிரியைசார் கண்டனப்பிரதியை, சைவ-கிறிஸ்தவ மதக் கருத்தியற் போராட்டக் களரியின் பின்புலத்தில் வைத்து வாசிக்க இந்த ஆய்வு முயலுகிறது. கண்டனம் என்பது யாது? கிறிஸ்தவ மதக் காலனிய எதிர்ப்பில் ஈழத்துக் கண்டன மரபு எவ்வாறு முகிழ்த்தது? கிறிஸ்தவ மதக் காலனிய யாழ்ப்பாணத்தில் அபரக்கிரியைப் பயில்வு எவ்வாறு கிறிஸ்தவ மத எதிர்ப்புணர்வுடனும் சைவ சிரார்த்த விதிகளின் கட்டுக்கோப்புடனும் நிகழ்ந்தது? அந்தியேட்டியும் சபிண்டீகரணமும் சைவம் - கிறிஸ்தவம் என்ற இருசமய முரண் வெளியில் எவ்வாறு நோக்கப்பட்டன? போன்ற புலமைசார் வினாக்களை எழுப்புவதனூடாக, கண்டனமும் எதிர்கண்டனமும் ஒருங்கே அமையப்பெற்ற "வல்வைச் சிவன் கோயிற் சபிண்டி நாடக சங்காரம்" என்ற கண்டனப் பிரதியின் வரலாற்று வகிபாகத்தை நிறுவ முயலுகிறது.

## 2. கண்டனம் - ஓர் அறிமுகம்

"கண்டனம்" எனும் பதத்தைப் பெயர்ச்சொல் எனக் கூறும் தமிழ் லெக்ஸிகன், அதற்கு "மறுப்பு" எனப் பொருள் தருவதுடன், Confutation, Refutation ஆகிய பதங்களையும் ஆங்கிலத்தில் தருகிறது. (Ta.Lex:688) கண்டனம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி, "உதறல்", "கண்டனை", "பொலி நூற்றல்" ஆகிய மூன்று

பொருள்களைத் தருகிறது.(ம.த.பே:486) கண்டனம் என்பதற்கு, வின்சுலோவின் தமிழ் - ஆங்கில அகராதி, "கண்டனை", "கண்டிக்கை" ஆகிய இரு பொருள்களையும் Confutation, Refutation, Rejection ஆகிய மூன்று ஆங்கிலப் பதங்களையும் தருகிறது (வி.த.ஆ.அ:235) கண்டனம் என்பதற்குக் கழகத் தமிழ் அகராதி "மறுப்பு" என்று பொருள் தருகிறது.(க.த.அ:272) க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "ஒரு நிகழ்வை, செயல்பாட்டை, கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வன்மையாகத் தெரிவிக்கும் நிலைப்பாடு" (க்ரி.த.அ:296) எனக் குறிப்பிடுகிறது.

மேற்குறித்த அகராதிப் பொருள்களின்வழி "கண்டனம்" என்பதை "ஒரு கருத்துநிலைச் செயற்பாட்டுக்கு எதிராகவும், மறுப்பாகவும், விமர்சனமாகவும் நிகழ்த்தப்படும் மிகவும் வன்மையான எதிர்க்கருத்துநிலைச் செயற்பாடு" என வரையறைசெய்ய முடியும்.

கண்டனம் உரைநடையிலும் செய்யுள் நடையிலும் மேற்கொள்ளப்படும். கண்டனம் எந்த ஊடகத்தில் நிகழ்த்தப்படுகிறதோ அதற்குரிய எதிர்க் கண்டனமும் அதே ஊடகத்தில் நிகழ்த்தப்பெறும். கண்டனம் மிகவும் வன்மைமிக்க கருத்தியல் ஊடகமாகும். சமூக சமய பண்பாட்டுத் தளங்களில், வழமைக்கு மாறான நிகழ்வுகள் இடம்பெறும்போதும் அல்லது செய்திகள் மேலெழும்போதும் அதற்கு எதிராகக் கண்டனங்கள் எழுதப்படும். கண்டன எழுத்தின் உள்ளடக்கத்தைப் பொறுத்து சமயக் கண்டனம், சமூகக் கண்டனம், இலக்கணக் கண்டனம், இலக்கியக் கண்டனம் எனப் பலவாறு அது வகைப்படுத்தப்படும்.

கண்டனம் என்பது "புலமை மோதல்" என்ற கணிப்பு உள்ளது. கண்டனம் எழுதுவதற்குக் குறித்த விடயம் தொடர்பான புலமைத்துவம் அவசியம். தமிழ்ச் சூழலில் வெளிவந்த கண்டனங்கள் பலவும் புலமைத்துவத்தின் வெளிப்பாடுகளாய் அமைந்ததை வரலாறு காட்டிநிற்கிறது. [1]

கண்டனமானது தருக்கத்தைத் துணையாகக்கொண்டது. "தருக்கம்" கண்டனத்தின் மிகப் பெரிய அறிவுசார் அடிப்படை. தருக்கம் மெய்யியலின் ஒரு பிரிவு. ஒரு செய்தியைச் சீர்தூக்கிப் பார்த்து, விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்தவற்கும் காரணகாரிய அடிப்படையில் செய்தியை அணுகுவதற்கும் "பிறர்மதம்" மறுத்துத் "தம்மதம்" நிறுவுவதற்கும் தருக்கம் என்பது அடிப்படையான அறிவுத்துறையாக தமிழில் நிலைபெற்றுள்ளது. தமிழில் நடைபெற்ற விவாதங்கள் தருக்கத்தை அடியொற்றிப் பிறந்தவை. தமிழ்ச்சூழலில் தருக்க அறிவானது, கண்டன நூல்களின் தரத்திற்கும், கருத்தியல்சார் செழுமையான உரையாடலுக்கும் வழிவகுத்தது. [2]

கண்டனம் ஓர் அரசியற் செயற்பாடாகவே சமூக, பண்பாட்டுத் தளத்தில் நிகழ்த்தப்பெறுகிறது. அறிவுக்கூர்மைமிக்க கருத்தாடல்கள் ஒரு சமூகத்தில் நிகழ்ந்தேறியதைக் கண்டன நூல்களின்வழி வாசிக்கமுடியும்.[3]

### 3. கிறிஸ்தவ மதக் காலனிய எதிர்ப்பும் ஈழத்துக் கண்டன மரபும்

இலங்கைத் தமிழ்ச் சூழலில், கண்டன மரபானது காலனிய காலத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. அச்சியந்திர வருகையுடனான நவீன உரைநடையின் எழுகை, கண்டனமரபின் முளைகொள்ளலில் செல்வாக்குச் செலுத்திய முக்கியமான அடிப்படை ஆகும். இவ்விடத்தில் பின்வரும் கூற்று நோக்கத்தக்கது.

> *"சமய உலகைப் பொறுத்தவரை விவாதங்களும் கண்டனங்களும் ஐரோப்பியர் வருகைக்குப் பின் புறச் சமயங்களோடான மோதலாக உருவெடுத்தன. ஆனால், கிறிஸ்தவத்தின் வருகை தமிழகச் சமயச் சூழலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது வெள்ளிடைமலை. ஒரு புனித நூலை அடிப்படையாகக் கொண்டதும்* (Religion of the book) *மற்றவரைத் தன் மதத்தவராக ஆக்க* (Proselytizing) *விழைந்ததும், ஐரோப்பியக் காலனியாதிக்கத்தைப் பின்புலமாகக் கொண்டதுமான கிறிஸ்தவம் உள்நாட்டுச் சமயங்களுக்கு ஓர் அறைகூவலாக அமைந்ததில் வியப்பில்லை." (வேங்கடாசலபதி, ஆ.இரா., 2014:19)*

மேற்படிகூற்று பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்ச்சூழலுக்கும் பொருத்தமானது. காலனியகாலத்தில், ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில்தான் கண்டனப் பிரதிகள் அதிகம் தோன்றின. சைவ, கிறிஸ்தவப் புலமையாளர் பலரும் கண்டன நூல்களையும் கண்டன ரீதியான பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தில் தோன்றிய கண்டனங்களில் அதிகமானவை சமயச் சார்பானவையே என்பதைச் சலபதி பின்வருமாறு குறிப்பிடுவார்.

> *"கிறிஸ்தவ சமயப்பணி வேகமாகச் செயல்பட்டு, ஆன்மாக்களை ஈடேற்றுவதில் கணிசமான வெற்றியும் கண்ட இடம் யாழ்ப்பாணமாகும். பதினாறாம் நூற்றாண்டின் முடிவில் புதிய ஏற்பாட்டின் தமிழாக்கம் செய்யப்படத்தொடங்கிய இடம் என்ற பெருமையும் யாழ்ப்பாணத்திற்கு உண்டு. கல்விப் பெருமையும் சமய ஈடுபாடும் மிக்க யாழ் சைவ வேளாளர் கிறிஸ்தவத்திற்குக் கடுமையாக எதிர்வினையாற்றியது எதிர்பார்க்கக்கூடியதே. கிறிஸ்தவத் துண்டறிக்கைகளுக்கு எதிராகச் சைவக் கண்டன அம்புகள் ஏராளமாய் எய்யப்பட்டிருக்கின்றன." (வேங்கடாசலபதி, ஆ.இரா., 2014:26)*

யாழ்ப்பாணத்தில் அறிமுகமான ஆங்கில வழிவந்த நவீன கல்வியும், அதனைப்பெற்ற மத்தியதரவர்க்க உருவாக்கமும் காரணமாகச் சமூக அமைப்பின் புலமைமட்டத்தில் பலமாறுதல்கள் உருவாகின. அச்சு ஊடகத்தினைச் சுதேசிகள் கையாள முனைந்தது, அவற்றுள் ஒன்றாகவும் முக்கியமானதாகவும் அமைந்தது. மதப்போராட்டக் களரியில், அச்சு ஊடகம் பெரும் விசையாகத் தொழிற்பட்டது. அச்சிடப்பட்ட கண்டனப் பிரதிகளால், மதக் காலனித்துவ உரையாடல் வெளி, போராட்டச் சூழலாக மாறியது. சைவசமயத்தை நிலைநிறுத்தும்பொருட்டு நாவலர் முன்னெடுத்த சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் இயங்குவிசையில், சைவத்தரப்பிலிருந்து கண்டனங்கள் வீறுடன் வெளிவந்தன. கிறிஸ்தவமதத்தினைக் கேள்விக்குள்ளாக்கவும், சைவசமயிகள் பின்பற்றிய சைவாகமவிதிக்கு ஒவ்வாத நடைமுறைகளை விமர்சித்துப் புறமொதுக்கவும் சைவமறுமலர்ச்சி இயக்கக்காரரின் கருத்தியல் வெளியில், கண்டனம் பெரும் ஆயுதமாகத் தொழிற்பட்டது. சமயம், சைவசமயி, சைவசமய

வழிபாடு, சைவசமய வாழ்வு முதலியவை குறித்த ஆழமான உரையாடல்களை, எதிரும் புதிருமாகக் கண்டனங்கள் முன்வைத்தன.

காலனிய எதிர்ப்புக் காலத்தில் சுதேசிகள் முன்வைத்த கண்டனங்கள் பெரும்பாலும் காலனிய ஆதிக்கக்காரருடன் ஊடாடித் தமது கருத்துநிலையை மீள வலியுறுத்துவனவாகவே அமைந்தன. பிறமத கண்டனம் செய்யும் ஒருவர் தான்சார்ந்த மதத்தின் தலைமை அந்தஸ்தினை எய்தக்கூடியநிலை, இருந்தது. அந்த அளவிற்குச் சமய இயக்கமொன்றின் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் சக்தியாகக் கண்டனங்கள் விளங்கின. அந்தவகையில், ஆறுமுகநாவலர் எழுதிய கண்டனப் பிரதிகளே சைவமறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைத்துவ அந்தஸ்தினை அவருக்கு வழங்கின என்று கொள்வது பொருத்தமானது.

> "கருத்து விவாதங்களுக்கான அமைப்புகளும் கருவிகளும் பெரிதும் நகரம் சார்ந்தனவாகவும், கோட்பாட்டளவிலேனும் அனைவரும் பங்குபற்றக் கூடியதாகவும் இருந்தன. பாரம்பரியமான அதிகாரங்களும் தகுதிகளும் அற்றவர்களும்கூடக் காலனியாதிக்கம் ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்புகளினூடே செயலாற்றமுடிந்தது. புனிதப் பனுவல்கள் பொது இடங்களில் விவாதப் பொருளாயின. திருமுழுக்கோ தீக்கையோ முத்திரையோ பெறாதவர்களும் அவற்றின் பொருளை விவாதிக்க முடிந்தது. நவீன காலத்திற்கு ஏற்ற புதிய வரையறைகளும் பொருத்தப்பாடுகளும் இவற்றின்வழி உருவாயின." (வேங்கடாசலபதி, ஆ.இரா., 2014:22)

சலபதியின் மேற்படிகூற்று, யாழ்ப்பாணத்துக் காலனியகாலச் சூழலில் எழுந்த கண்டனங்களின் தன்மைக்கும் ஏற்றதாக அமைகிறது. எனவே புனிதப் பனுவல்களை முன்னிறுத்திய விவாதங்கள் கண்டனங்களாக வெளிப்பட்ட சூழலில், ஈழத்தில் கண்டனமரபு வளம்பெறத் தொடங்கியது எனத் துணியலாம்.

நாவலரது கண்டனங்கள், அவரைக் காலனித்துவத்துக்கு எதிரான சைவத்தமிழ் இயக்கத்தின் தலைமைக்கு உரியவராகக் கட்டமைத்தன. காலனிய மதத்திற்கு மாத்திரமன்றி, சைவத்துக்கும் அதிகார பூர்வமான எடுத்துரைப்பாளராக நாவலரை உருவாக்கியவை, நாவலரது கண்டனங்களே எனலாம்.[4]

சிவசம்புப்புலவருடைய தந்தையாரான அருளம்பலமுதலியார் தருக்க சூடாமணியைப் பரிசோதித்துப் பதிப்பித்ததும் நாவலர் தருக்கசங்கிரகம், அதன் உரையாகிய தருக்கசங்கிரக தீபிகை ஆகியவற்றைப் பரிசோதித்துப் பதிப்பித்ததும் இக்காலக் கண்டனமரபின் தருக்க ரீதியான புலமைவளத்தைச் செழுமைப்படுத்தின எனலாம்.

### 4. ஈழத்தில் கண்டன மரபின் உதயம்

சுதேச மதத்தினருக்கும் விதேச மதத்தினருக்குமான சமயக் கருத்தியல்சார் மோதலே கண்டனப் பிரதிகளுக்கான தோற்றம் என்பதை மதக்காலனித்துவத்தை முன்னிறுத்திப் புரிந்துகொள்ளமுடிகிறது. ஈழத்தின் முதன்மை வரலாற்றாசிரியரான குமாரி ஜயவர்த்தனா The rise of Labour Movement in Ceylon (1972) என்ற தமது நூலில் கிறிஸ்தவர்களுக்கும் பௌத்த மறுமலர்ச்சியாளர்களுக்கும் பொதுமக்கள்

முன்னிலையில் விவாதம் நடைபெற்றதைச் சுட்டிக்காட்டுகிறார். அவரது நூலில் வரும் "பாணந்துறை விவாதம்" எனும் பகுதியிலிருந்து (ஜெயவர்த்தனா, குமாரி., 1972:42-44) ஈழத்தில் சமயப் போட்டிக்களத்தில்தான் கண்டனப் புலமைமரபு உதயமானது எனத் துணியமுடிகிறது.

யோகேஸ்வரி கணேசலிங்கம் என்பார், "பிரசங்கமரபு" பிற்காலத்தில் கண்டன மரபாக மாறியது எனக்குறிப்பிடுகிறார்.(2000:78) ஆனால், பிரசங்கமரபு வீறுகொண்டு எழுவதற்கு முன்னரேயே துண்டுப் பிரசுரங்கள்மூலம் மதம்சார் கண்டனங்கள் நிகழ்ந்துள்ளமையை அறியமுடிகிறது.[5] ஈழத்தில் அச்சியந்திரத்தை முதன்முதலில் பயன்படுத்திய ஐரோப்பியர் தமது சமய உண்மைகளை மக்கள் மத்தியில் பரப்ப வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்களே கண்டனமரபின் தொடக்கம் எனத் துணியமுடிகிறது. பிரசங்கமரபு, ஆற்றுகை (Vocal Peformance) சார்ந்தது. கண்டனமரபு எழுத்துநிலை சார்ந்தது. பிரசங்கத்தில் "கண்டனப் பிரசங்கம்" என்ற ஒன்று உண்டு எனினும், அது வாய்மொழி ஆற்றுகையின்பாற்பட்டது. இங்கு கண்டனம் எனக் குறிப்பது அச்சுவழிப் பிரதிகளையே ஆகும்.

> "நாவலரவர்கள் தமது அச்சியந்திரசாலையிலிருந்து 1852இல் சைவதூஷணபரிகாரம் எனும் நூலினை முதன்முதலில் எழுதி வெளியிட்டார். இந் நூல் தமிழில் எழுந்த முதல் கண்டன நூலெனலாம்." (கனகரத்தினம், இரா.வை., 2017:60)

மேற்குறித்த கணிப்புத் தவறானது. சுதேசிகள், கிறிஸ்தவத்தைப்பற்றி முன்வைத்த கருத்துக்களுக்கு இராபேர்ட் டி.நொபிலி எழுதிய "தூஷணத்திக்காரம்" என்ற கண்டனமே தமிழின் முதலாவது கண்டன நூலாகும். இது 1641இல் வெளியானது. 17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வெளிவந்த இந்தக் கண்டனநூல், நாவலரது "சைவதூஷண பரிகாரம்" எனும் கண்டனநூலுக்கு முன்னோடியும் அடிப்படையுமாயிற்று. கிறிஸ்தவ மிஷனரிப் பாதிரிமார் சைவசமயம் தொடர்பாக எழுதிவெளியிட்ட கண்டனப் பிரசுரங்களே, சைவ மறுமலர்ச்சி இயக்கத்தாரின் கண்டனங்களுக்கு மாதிரிகளாக (Models) அமைந்தன. சைவசமயக் கருத்தியலையும் பயின்முறைகளையும் விமர்சித்து, கிறிஸ்தவ மிஷனரிகள் எழுதிய கண்டனப் பிரசுரங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கவே நாவலர் சைவதூஷண பரிகாரத்தை எழுதினாராகையால், ஈழத்தில் சமயம்சார் கண்டன இலக்கியத்தின் மூலவர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளே என்பது தெளிவாகிறது.

காலனியகால யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிகள் சைவத்தைத் தூஷ ணம் செய்தலும் சைவப்பிரசாரகர்கள் கிறிஸ்தவத்தைத் தூஷணம் செய்தலும் நிகழ்ந்தன. இன்னும், கிறிஸ்தவ மிஷனரிகள் சைவத்தின்மீது தூஷணம் செய்ததை மறுக்கும்வகையில் சைவப்பிரசாரகர்கள் சைவதூஷண பரிகாரம் செய்தலும், சைவப் பிரசாரகர்கள் கிறிஸ்தவத்தின்மீது தூஷணம் செய்ததை மறுக்கும்வகையில் கிறிஸ்தவ மிஷனரிகள் கிறிஸ்தவதூஷண பரிகாரம் செய்தலும் நிகழ்ந்தன. இந்தச் சமயப்போர் வரலாற்றையே, ஆறுமுகநாவலர் எழுதிய "சைவதூஷண பரிகாரம்" (1852) என்ற நூலின் பெயர் விளக்கிநிற்கிறது.[6]

ஆயினும், நாவலரது "சைவதூஷண பரிகாரம்" சைவசமயம் சார்ந்த நிலைப்பாட்டைக் கொண்டமையாலும் கிறிஸ்தவத்துக்கு எதிராக எழுதப்பட்ட முதலாவது கண்டனநூல் எனும் வகையிலும் முக்கியமானது. நாவலர் தமது சைவதூஷண பரிகாரம் எனும் நூலில், பாயிரமாக அமையும் "உபோற்காதம்" என்னும் பகுதியில், தாம் நூல் எழுதிய நோக்கத்தினைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "அநாதி பகவானாகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமாம். இச் சற்சமயம் வழங்கும் நமது ஆசிய கண்டத்திலே மிலேச்சர்களாகிய பாதிரிகள் புகுந்து, இச்சைவத்தை விளக்கும் சிவ சாத்திரங்களைச் சிறிதும் அறியாமையினாலும், தாங்கள் முன்னே தழுவிக்கொண்ட துர்ச்சமயமாகிய கிறிஸ்துமதத்தின்மேல் வைத்த துரபிமானத்தினாலும், அப்புன்மதத்தைப் பிரசாரித்தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும் வழியாய் இருத்தலாலும் இச்சைவத்தை வாய்மொழியாலும் குருட்டுவழி முதலிய பல புத்தகங்களாலும் அநியாயமாகவே தூஷிக்கிறார்கள்.
>
> நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும் அப் பாதிரிகளது பொய்ந் நூலாகிய விவிலிய நூலை, வாசியாதவர்களும் தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் அத்தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறிஸ்துசமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள்.
>
> யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்படுத்தப்படும் தூஷணங்களாலே ஒருவரும் கெடாது சைவத்தின் வழியே நின்று உய்யும் பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து, மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரம சிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே செய்தோம்" (சைவதூஷண பரிகாரம் - உபோற்காதம்., 1852:1-2)

நாவலரது மேற்குறித்த "உபோற்காதம்" எனும் பகுதி சைவம்சார் கண்டனங்களின் அடிப்படையைத் தெளிவாகக் காட்டுகிறது. நாவலரது உபோற்காதத்திலிருந்து சைவம்சார் கண்டனங்களின் முக்கியமான கருத்துநிலைப்பாடுகளைப் பின்வருமாறு குறித்துக்கொள்ளலாம்.

1. சைவமே உண்மைச் சமயம் என்ற திடமான கருத்தைக் கொண்டிருத்தல்.
2. சைவம் சற்சமயம், கிறிஸ்தவம் துர்ச்சமயம் எனும் நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.
3. பொருளீட்டுதலுக்காகவே சைவத்தை இகழும் செயற்பாடு கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்டிருத்தலால் கிறிஸ்தவர் எழுதிய கண்டனங்கள் மதப்பற்றுடன் எழுதப்படவில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.
4. பாதிரிமார் வாய்மொழியாகவும் புத்தகவழியாகவும் சைவத்தைச் தூஷணம் செய்திருப்பதால் அதனை மறுக்கவேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டிருத்தல்.
5. சிவசாத்திர நூல்கள், விவிலியம், தருக்கநூல் ஆகிய நூல்களின் புலமைசார் அறிவுவை, கண்டன எழுத்தாக்கத்தின் அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

6. சைவத்தின் வழியில் மக்கள் ஈடேறும் பொருட்டு கிறிஸ்தவ தூஷணத்திற்கு எதிரான தூஷண பரிகாரம் செய்யும் நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.
7. சைவம்பற்றிய உண்மை அறிவைச் சைவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஏற்படுத்தவேண்டும் எனும் நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.

நாவலரது சைவதூஷண பரிகாரம் கிறிஸ்தவ மிஷனரிகளைத் திணறச் செய்தது. 1855ஆம் ஆண்டு முக்கியமான கிறிஸ்தவ பிரசாரசபைகளில் ஒன்றான வெஸ்லியன் மெதடிஸ் சபையின் அறிக்கையில் அத்திணறல் பிரதிபலித்தது. அவ்வறிக்கையில் சைவதூஷண பரிகாரம்பற்றி விரிவாகப் பதிவானது. அவ்வறிக்கையில் வரும் முக்கியமான பகுதி ஒன்று வருமாறு.

> "இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவதூஷண பரிகாரம் என்ற தமிழ் நூல். அது, அசாதாரணமான இலக்கியம். கிறிஸ்து மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகச் சைவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது, முற்றிலும் புதிய தந்திரத்தைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகின்றது. அது, கிறிஸ்தவ சமயம் முறையற்றது, பயனற்றது என்று சொல்லவில்லை. சைவத்தின் சடங்குகளையும் தூக்கிப்பேசவில்லை. கிறிஸ்து ஆகமத்துக்குச் சரியான ஆகமங்களைக் காட்டி சைவத்தைவிடக் கிறிஸ்துமதத்தில் என்ன விஷேடமிருக்கிறது என்பதை அறியத் தருகின்றது" (கனகரத்தினம், இரா. வை., மேற்கோள். 2013:81)

மிஷனரிகள் எழுதிய மேற்குறித்த பகுதி சைவச்சார்பான கண்டனங்களின் வலிமையைப் புலப்படுத்துகிறது.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ நிறுவனங்களும் சைவ நிறுவனங்களும் தத்தமது சமயம்சார் பிரசாரங்களை முன்னெடுத்தன. இந்நிறுவனங்களே சமயக் கண்டனங்களைப் பிரசங்கம் மூலமும் எழுத்து மூலமும் முன்வைத்தன. நாவலர் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்த வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை மையமாகக்கொண்டு, 1864ஆம் ஆண்டு "பரமத கண்டனஞ் சுயமத ஸ்தாபன சங்கம்" எனும் பெயரில், கண்டனச் சங்கம் ஒன்றினைச் சங்கரபண்டிதர் ஆரம்பித்தார். இச்சங்கத்தில் சைவத்தமிழ்ப் புலமையாளர்கள் பலரும் அங்கம்வகித்தனர். இவர்கள், ஒரு வாரம் பிறமத கண்டனமும் அடுத்த வாரம் சுயமதஸ்தாபனமுஞ் செய்யும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டனர். "சம்பளக் கிறிஸ்தவர்", "பதுங்கினர் பாதிரிமார்" முதலாய தொடர்களைப் பயன்படுத்தி கிறிஸ்தவர்களைக் கண்டித்தனர்.

ஈழத்துக் கண்டனப் புலமையாளர்களில் ஆறுமுகநாவலர் சைவதூஷண பரிகாரம், சுப்பிரபோதம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் 1ம் 2ம் பத்திரிகை, விவிலிய குற்சிதம், கிறித்துவப் பல பிரிவினை, விவிலிய நூல் வரலாறு, மித்தியாவாத நிரசனம் முதலாய பல கண்டன நூல்களை எழுதினார். கரோல்ட் விசுவநாதபிள்ளை எழுதிய சுப்பிரதீபம், முத்துக்குமார கவிராஜர் எழுதிய ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், சி.வை.தாமோதரம்பிள்ளை சைவ மகத்துவம், சைவ மகத்துவ திக்கார மகத்துவம், குமாரசுவாமிப் புலவர் எழுதிய சைவகண்டன பரிகரணம், சங்கர பண்டிதர் எழுதிய கிறிஸ்தவ மத கண்டனம், மிலேச்ச மத விகற்பம், சிவ தூஷண கண்டனம், வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை எழுதிய சைவ மகத்துவ பானு,

சைவமகத்துவ திக்கார நிக்கரகம், சிலம்புநாதபிள்ளை எழுதிய அஞ்ஞானக் கும்மி மறுப்பு, சபாபதி நாவலர் எழுதிய யேசுமத சங்கற்ப நிராகரணம், அருளப்ப முதலியார் எழுதிய சைவ மகத்துவ திக்காரம், காசிவாசி செந்திநாதையர் எழுதிய சிவனுந்தேவனோ என்ற தீய நாவுக்கு ஆப்பு, விவிலிய குற்சித கண்டன திக்காரம், விவிலிய குற்சிதக் குறிப்பு, வச்சிரடங்கம்,

நல்லூர் ஓ.எம்.ஐ. ஞானப்பிரகாசர் மறுப்பு ஆட்சேபம், சைவர் ஆட்சேப சமாதானம், புதுச்சைவம், சைவமும் மச்சமாமிசமும், சமய ஆராய்ச்சியும் நேர்மையும், மிருகபலி ஆராய்ச்சி, பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி, சுப்பிரமணிய சரித்திர ஆராய்ச்சி ஆகிய கண்டன நூல்களையும் எழுதினார். நாவலரின் அருட்பா மருட்பா கண்டனமும் அது தொடர்பான வழக்கும் பிரசித்தமானது.

திருகோணமலை, மட்டக்களப்பு முதலாய இடங்களில் யாழ்ப்பாணம் போன்று கண்டன சபைகள் அமைக்கப்பட்டன. உதாரணமாகத் திருகோணமலையில் இந்துமத கண்டன சபை ஒன்று 1811ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். அது "நிகார நிகாரண நிக்கிரகம்" என்ற கண்டன நூலை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.[7]

ஈழத்தில் சமயம்சார் கண்டன இலக்கியம்பற்றிய இத்தகைய ஒரு வரலாற்றுப் புரிதலின் பின்னணியில், சிவசம்புப்புலவர் எழுதி, வெளியிட்ட "சபிண்டி நாடக சங்காரம்" எனும் பெயரிலான சிறிய கண்டன நூலை ஆராயலாம். எனினும் புலவரது கண்டன நூலின் பொருள் அபரக்கிரியை பற்றியதாக அமைவதால், பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தில், அபரக்கிரியையின் சமூக முக்கியத்துவத்தைச் சிறிது ஆராய்வது பயனுடையது.

## 5. காலனிய யாழ்ப்பாணத்தில் அபரக்கிரியை: அந்தியேட்டியும் சபிண்டீகரணமும்

மதமாற்றம் நிறைந்த காலனியகால யாழ்ப்பாணத்தில் மதம் மாறியவரது இறப்பின் பின்னான கிரியைகள் பெரும் விவாதங்களை ஏற்படுத்தின. கிறிஸ்தவத்துக்கு மதம்மாறிய ஒருவர் இறந்த பின்னர், அவரது சிரார்த்தக் கிரியைகளை எந்த மதமுறையின் பிரகாரம் நிகழ்த்துவது? சைவ முறையிலா? கிறிஸ்தவ முறையிலா? சிரார்த்தக் கடனை மேற்கொள்பவர் யார்? இறந்தவரின் பிள்ளைகள் சைவராயின் அதனை மேற்கொள்வது சரியா? இவ்வகையிலான வினாக்கள் எழுப்பப்பட்டு விவாதங்கள் நடைபெற்றன.

> யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய சிரார்த்த தீபிகை, சைவ சிரார்த்த விதி ஆகிய நூல்களும் நீர்வேலிச் சங்கரபண்டிதர் எழுதிய சபிண்டீகரணச் சிரார்த்த விதி என்ற நூலும் இத்தகையதொரு விவாதச்சூழலில் பெரும் செல்வாக்குப்பெற்றவையாயின. இன்னும் இத்தகைய நூல்களின் எழுச்சியை கிறிஸ்தவ மதமாற்றச் சூழலில் சைவத்தமிழ்ப் புலமையாளர்களின் எதிர்வினையாகவும் கொள்ளல் தகும். காலனியகாலத்தில் அந்தியேட்டி, சபிண்டி, முதலாய கிரியைகளின் சமூக நிலவரத்தை அறிதற்கு முன்பு, அவை தொடர்பான பொருள் விளக்கத்தை அறிந்துகொள்வது பயனுடையது.[8]

அபரக்கிரியை என்பது இறப்பிற்குப் பிந்திய கிரியை எனப் பொருள்படும்.

"அபரக்கிரியையாவது ஒருவர் இறந்த பின்னர், அவருடைய நன்மைக்காக அவருடைய பிள்ளைகள் முதலியோராற் செய்யப்படுங் கிரியை. அபரம் - பிந்தியது" (சிவபாதசுந்தரம், சு., 1978:59)

இக்கிரியை சிரார்த்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். சிரார்த்தம் என்பது சிரத்தையோடு செய்யப்படுவது.

அபரக்கிரியைகள் மரணக்கிரியையிலிருந்து சபிண்டீகரணம்வரை பல வகைப்படும். எனினும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கண்டனப் பிரதியை அலசுவதன் தேவைகருதி அந்தியேட்டி, சபிண்டீகரணம் ஆகிய இரு கிரியைகள் பற்றிச் சற்று விரிவாக நோக்கலாம்.

அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் அந்தியேட்டிபற்றிச் சிரார்த்த தீபிகை என்ற தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"அந்தியேட்டி என்பது கடைசியிற் செய்யும் யாகம் எனப் பொருள்படும். இஷ்டி - யாகம். சைவர்கள் இறந்தவழி அந்தியேட்டி செய்வித்துச் சிவரூபமான அவர் தேகத்தைச் சிவாக்கினியிற் சேர்த்தலாகிய சம்ஸ்காரஞ் செய்க. அந்தியேட்டி செய்யின் சமயாசாரத்தில் வழுவிய குற்றந் தீருமுகத்தால் சிவத்துவ சித்தியுண்டாகும். ஆசாரமற்றவர்கள் இறந்தவழி, சிவாக்கினியினால் மாத்திரமன்றி, அவர் தேகத்தைத் தகனஞ்செய்து ஆசௌசாந்தத்தில் அந்தியேட்டி செய்து, மற்றைய கிரியைகளையுஞ் செய்தல் முறையாம்." (குமாரசுவாமிக் குருக்கள், ச., 1935:2)

அந்தியேட்டியை அடுத்த பல கிரியைகளின் பின்னர் வருவருது சபிண்டீகரணம் ஆகும்.

நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர், தாம் எழுதிய சபிண்டீகரணச் சிரார்த்தவிதி என்ற நூலில், சபிண்டி என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கம் செய்கிறார்.

"சபிண்டீகரணச் சிரார்த்தமாவது சிவமாகிய உயிருக்குப் பிரேதத் தன்மை முழுதொருங்கு நீங்கும்பொருட்டு மூன்று புருடரை உத்தேசித்துத், தேவபூருவமாகப் பிரேத கருமங்களின் இறுதியிற் செய்யுங்கருமம். ச என்பது, சமானம். பிண்டம் என்பது தேகம். கரணம் என்பது செய்தல். சபிண்டன் என்பதற்குச் சமான தேகமுடையோன் என்பது பொருள். ஆகவே, சமான தேகமுடையனல்லாதவனைச் சமான தேகமுடையனாகச் செய்தலின் கருவியே சபிண்டீகரணம் என்பதாயிற்று." (சிவசங்கர பண்டிதம்., 2016:129)

அந்தியேட்டியும் சபிண்டியும் அபரக்கிரியைகளில் முக்கியமானவை. இறந்த ஒரு சைவனைச் சிவத்துவமாக்குவதற்கான கிரியைகளாக அவை நிகழ்த்தப்படுகின்றன. ஆகமங்களின்வழியும் புராணங்களின்வழியும் வந்த கருத்துக்களையும் விதிகளையும் காலனியகாலத்தில் சிரார்த்தவிதி நூல்களாக எழுதி, சிரார்த்தக் கிரியையின் முக்கியத்துவத்தை விளக்குவதில் ஈழத்துச் சைவப்புலமையாளர்கள் முன்னின்றனர்.

அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலான அபரக்கிரியைகளின் முக்கியத்துவம்பற்றி "அபரக்கிரியையின் அவசியம்" என்ற தலைப்பில் மிகவும் நீண்ட பதிவினை எழுதுகிறார், அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள். இது அரவது சிரார்த்த தீபிகை நூலின் முக்கிய இயலாகவும் கொள்ளத்தக்கது. அவரது நூலில்,

அபரக்கிரியையின் முக்கியத்துவத்தினைக் கூறும் இரு பகுதிகளை இங்கு குறிப்பிடலாம்.

> "அந்தியேட்டியோடு கூடிய அபரக்கிரியைகளெல்லாம் இறந்தவர் சிவத்துவமடைவதற்கு ஏதுவாயிருத்தலினால், பிதா, மாதா முதலாயினோருக்குப் புத்திரர் முதலாயினோர் சிரத்தையோடு, தவறாது, உலோபமின்றித் தம் பொருளளவுக்கேற்ப அபரக்கிரியைகளைச் செய்தல் முறையாம்." (குமாரசுவாமிக் குருக்கள், ச., 1959:11)

> "புலவராயினும் , ஞானிகளாயினும், மூடர்களாயினும், பெண்களாயினும், பிரமசாரி யாயினும், அரசராயினும் மற்றவர்களாயினும் பிதா மாதா முதலாயினோருக்குச் சிரார்த்தத்தைச் செய்யாதொழிந்தால், கோடி ஜனனத்திற் சண்டாளராவார்கள் என்பது நூல் துணிபு." (குமாரசுவாமிக் குருக்கள், ச., 1959:18)

மதக்காலனிய யாழ்ப்பாணத்தில் அபரக் கிரியையைத் தீர்மானிப்பதில் கிறிஸ்தவ எதிர்ப்பு மனோபாவமும் முக்கியம் வகித்தது. நாவலர், "ஓர் சைவன்" எனும் பெயரில் "சைவவிரோதம்" எனும் தலைப்பில் எழுதிய கண்டனப்பிரசுரம் இலங்கைநேசன் பத்திரிகையில் வெளியாகியது. இதற்கு, சைவவிரோதம் [9] கண்டனப் பிரசுரத்திலிருந்து சில பகுதிகளைச் சான்று காட்டலாம்.

> "கிறிஸ்து மதத்திலே புகுந்த ஒரு நாவிதன், மனையாளுடைய பிரேதத்தைச் சுற்றத்தாராகிய நாவிதர் தீண்டவும் உடன்படாது வெறுத்து மறுத்ததும், ஒரு வேளாளக் கிறிஸ்தவன், சில கரையாரக் கிறிஸ்தவர்களோடுகூடி அந்தப் பிரேதத்தைச் சுமந்ததும் ஊர் அறியுமே. அந்த வேளாளக் கிறிஸ்தவனுக்கு வேதாரணியத்து வடக்குத் தெருச் சைவகுரு ஒருவர் அந்தியேட்டி செய்ததும், பிராமணர் பலரும் போய், வீட்டுக் கிருத்தியத்தில் அரிசி வாங்கினதும், கரணவாயிற் சைவக்குருமார் சிலர் அந்த வீட்டிலே போய்ப் பூசை போசனஞ் செய்ததும் ஊரறியுமே இவையெல்லாங் கண்டித்தார் யாரோ நாவிதச் சைவனுக்கு அந்தியேட்டி செய்த மூன்றாந்தெருச் சைவகுரு அயோக்கியராம் வேளாளக் கிறிஸ்தவனுக்கு அந்தியேட்டி செய்த வடக்குத்தெருச் சைவகுரு யோக்கியராம்." (ஆ.பி.தி., 1996:22)

> "தீக்ஷை பெற்றபின் மரண பரியந்தம் அனுட்டிக்கப்பட்ட சமயாசாரத்தில் விளைந்த குறைவுபாட்டுக்குச் செய்யப்படும் பிராயச்சித்தமன்றோ அந்தியேட்டி சமய தீக்ஷை தானும் பெறாது, சமயாசாரம் ஒரு சற்றும் சாராது, விபூதி சிறிதுமிடாது, பாதிரிமாரைப் பிரீதிப்படுத்திக்கொண்டு, கிறிஸ்தவர்கள் பந்தியிலே கலந்து போசனஞ் செய்துகொண்டு திரியும் மனிதப் பதர்களுக்குத் தருப்பையிலும் அந்தியேட்டி செய்யத் தகாதே இப்படியாகவும், வேதாரணியத்துச் சைவகுருமார்களும் வரணி கரணவாயிற் சைவக் குருமார்களும் இவர்களுக்குப் பிரேதத்தில் அந்தியேட்டி செய்யத்தலைப்பட்டுக் கொண்டார்களே இவையெல்லாங் கண்டித்தவர் யாவர்" (ஆ.பி.தி., 1996:23)

மேற்குறித்த பகுதிகளின்வழி, அபரக் கிரியையில் கிறிஸ்தவத்துக்கு எதிரான நிலைப்பாட்டினை அவதானிக்க முடிகிறது.

நாவலர் சமயதீக்ஷை பெறாதவரைச் சைவசமயிகளாகக் கருதவில்லை. கிறிஸ்தவ மத எதிர்ப்பு நிறைந்த சூழலில் அந்தியேட்டி, சபிண்டீகரண விதிகளின் நிலவரத்தை அறிவதற்கு அவரது பதிவுகள் உதவுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ மதமாற்றச் சூழலில் அபரக்கிரியைகள் தொடர்பாக சைவமறுமலர்ச்சி இயக்கத்தாரின் அதீத கரிசனை எதற்கானது என்ற வினா முக்கியமானது. அவ் வினாவிற்குரிய பதில்களாக மூன்று அம்சங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவதாக அமைவது சமூகத்தில் நிலவிய, இருநிலைச் சமய வாழ்வு. கிறிஸ்தவத்துக்கு மாறியோரின் இரண்டகநிலை அபரக்கிரியை தொடர்பான கரிசனையைச் சைவர்கள் மத்தியில் அதிகப்படுத்தியது. இது முக்கியமான அம்சம். அதாவது, சைவராயிருந்து கிறிஸ்தவராக மாறியவரின் "இருநிலைச் சமய வாழ்வு" அல்லது "வெளியில் கிறிஸ்தவம் உள்ளே சைவம்" என்னும் நிலைப்பாடு ஆகும். இந்தநிலை கிறிஸ்தவத்திற்கு மதம்மாறிய ஒருவர் இறந்த பின்னர், அவருக்கான இறுதிக்கிரியையிலும் இரட்டைநிலையை உருவாக்கியது. அதவாவது, இறந்த ஒருவரின் உடல் இருவித மதக்கிரியைகளுக்கும் (சைவம் - சைவச்சிரார்த்தக் கிரியை, கிறிஸ்தவம் - நல்லடக்கப் பூஜை), (சைவம் - அந்தியேட்டி, கிறிஸ்தவம் - ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி) இடங்கொடுக்கும்நிலையை உருவாக்கியது. இதனால் சிரார்த்தவிதி இறுதிவரை சைவராக வாழ்ந்தவருக்கே உரியது என்ற நூல்விதிப் பிரகாரம் அபரக்கிரியை தொடர்பான அதீத கரிசனை எழுந்தது.

இரண்டாவதாக அமைவது, சமய வெளியும் சைவ உடலும் பற்றிய அவதானிப்பு. நாவலரது சைவசமயச் செயற்பாடுகள் சரியை, கிரியை எனும் இரண்டை மாத்திரம் முதன்மைப்படுத்தியவை. குறிப்பாக, சைவ உடலைக் கட்டமைப்பதற்காக சரியை, கிரியை ஆகியவற்றை நாவலர் அதிகம் கவனப்படுத்தினார். இதனை அவரது செயற்பாடுகளும் எழுத்துகளும் இதனை நிரூபிக்க வல்லவை. அவர், காலனியகால சமயப்போராட்டக் களரியில் "சைவ உடல்" என்பதற்கான கருத்தாக்கம் அவரது எழுத்துகளில் முதன்மை பெற்றிருப்பதை அவதானிக்கமுடிகிறது. அதற்காக, தீட்சை, திருநீறு முதலாய சிவசின்னங்களைக்கொண்டு "சைவ உடல்" என்பதை அவர் அதிகம் வலியுறித்தினார். அது இயக்கநிலைத் தேவை சார்ந்தது. நாவலர் உருவாக்கிய "சைவ உடல்" என்பது "சைவாலயத்துள் புகுவதற்கான உடல்". சமய அடையாள இயக்கத்தில் உடல்சார் அரசியலின் முக்கியத்துவம் இதனூடு புலனாகிறது. நாவலரதும் அவரைச் சார்ந்தோரதும் இத்தகைய நிலைப்பாடும் அபரக்கிரியை பற்றிய கரிசனையை அதிகமாக்கியது.

மூன்றாவதாக அமைவது, மதமாற்றத் தண்டனையாகக் கிரியை மறுப்பு என்ற அம்சம். காலனியகால யாழ்ப்பாணத்தில் சைவத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறியவர்களுக்கு அபரக்கிரியை செய்யக்கூடாது என்ற நிலைப்பாடு மதம் மாறியவர்களுக்கான தண்டனையாகவே பின்பற்றப்பட்டிருக்கலாம். அவதாவது, பிறப்பது சைவனாக எனில் இறப்பது எவ்வாறு கிறிஸ்தவனாக அமையும் என்பதையொட்டிய நிலைப்பாடாகும். மதம் மாறிய ஒருவர் இறந்த பின்னர், அவரின் உடலுக்குக் கிரியை செய்ய மறுப்பதும், அவ்வுடலுக்கு மதம் மாறாத உறவினர்கள் கிரியை செய்விப்பதைக் கண்டிப்பதும், கிறிஸ்தவராக இறந்தவரது சைவ உறவினரின் வேண்டுதலின்பேரில் கிரியை நிகழ்த்திய குருக்களைக் கண்டிப்பதும் தண்டனை வழங்கும் மனோபாவமாகக் கருதவேண்டியவை. இதன்மூலம், மதம்மாற எத்தனிப்போரைத் தடுப்பதும், மதம் மாறியோருக்குச் சிரார்த்தம் செய்யாது தடுத்துத் தண்டனை வழங்குவதன்மூலம் மதம்மாற இருப்போரை எச்சரிப்பதும் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் உத்திகள்

*எனக்கருதமுடியும். இதன் காரணமாகவும் அபரக்கிரியை பற்றிய அதீத கரிசனை நிலவியது. இதுவரைநோக்கிய, காலனியகால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டரசியற் பின்புலத்தில் சபிண்டி நாடக சங்காரம் என்ற கண்டனப் பிரதியை ஆராயலாம்.*

6. சபிண்டி நாடக சங்காரம்

*"சபிண்டி நாடக சங்காரம்" என்று அறியப்பட்ட சிவசம்புப் புலவர் எழுதிய கண்டன நூல் "வல்வைச் சிவன் கோயிற் சபிண்டி நாடக சங்காரம்" என்ற தலைப்பில் 1900ஆம் ஆண்டு வெளியாகியது. ஆறுமுகநாவலர் சைவதூஷண பரிகாரத்தை "சைவப்பிரகாச சமாசீயர்" எனும் பெயரில் எழுதியதுபோல, சிவசம்புப் புலவர் சபிண்டி நாடக சங்காரத்தை, "வடமராட்சி சுத்த சித்தாந்த சைவர் தோழர்" என்ற பெயரில் எழுதியுள்ளார். புலவரது கண்டன நூல், அவரது காலத்தில், சமூகத்தில் நடைபெற்ற சபிண்டிக் கிரியை ஒன்றைக் கண்டிக்கிறது. "உண்மைக்குப் புறம்பானது" என்ற அர்த்தத்தில் அதனை "நாடகம்" எனவும், எழுத்து மூலம் அதனை இல்லாதொழிப்பதால் "சங்காரம்" எனவும் கருதி வெளிவந்தே சபிண்டி நாடக சங்காரம்.*

*யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த சைவரான இராமுப்பிள்ளை கிறிஸ்தவ மதத்திற்குமாறி நதானியேல் றசல் எனும் பெயரோடு கிறிஸ்தவராய் விளங்கினார். சைவராக இருந்து கிறிஸ்தவத்துக்கு மதம் மாறிய றசல் இறந்தார். இவருக்கு மருமகன் நொத்தாரிசு வ.சின்னத்தம்பிப்பிள்ளை என்பவராவார். றசல் இறந்தபோது அவரது மருமகனாகிய சின்னத்தம்பிப்பிள்ளையே அந்தியேட்டி, சபிண்டி ஆகியவற்றைச் செய்து முடித்தார். சபிண்டிக்கிரியை செய்த குருக்கள் வல்வெட்டித்துறை (வல்வை) சிவன் கோயில் அர்ச்சகர்களுள் ஒருவரான சிவசிறீ சண்முகக் குருக்கள்.*

*சபிண்டிக்கிரியை செய்த சண்முகக்குருக்கள் தொடர்பாகப் பல சர்ச்சைகள் எழுந்தன. வல்வைச் சைவமக்கள் கொதித்தெழுந்தனர். சண்முகக் குருக்களுக்கு எதிராகக் கோயிலிலும் ஊரின் பிற இடங்களிலும் கூட்டங்கள் நடைபெற்றன. குருக்கள் எனும் தகுதியை அவர் இழந்துவிட்டார் என்ற அளவில் சர்ச்சைகள் நீண்டு சென்றன. சண்முகக் குருக்கள் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரைத் தனக்குத் துணையாக்கினார். வல்வைப் பிரமுகர்களும் பிரபுக்களும் சைவமக்களும் சிவசம்புப் புலவரைத் தமக்குத் துணையாக்கினர். இப்பிரச்சினை தொடர்பான பிரசுரங்கள் இருசாராராலும் வெளியிடப்பட்டன. பத்திரிகைகள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளைப் பிரசுரித்தன. குருக்கள் சார்பாகச் "சிவப்படை" என்னும் சிறு கண்டனப் பிரசுரம் சிவப்பிரகாச பண்டிதரால் எழுதி வெளியிடப்பட்டது. அதற்கு மறுப்பாகவே "வல்வைச் சிவன் கோயிற் சபிண்டி நாடக சங்காரம்" என்பது சிவசம்புப்புலவரால் எழுதப்பட்டது.*

*புலவர் இக்கண்டன நூலை எழுதி வெளியிடுவதற்கு முன்னர், வல்வெட்டித் துறையில் ஒரு கூட்டம் சிவப்பிரகாச பண்டிதர் தலைமையில் நடைபெற்றது.*

"றசல் கிறீஸ்தவரல்லவா எனப் பண்டிதர் சாதிக்க முற்பட்டார். "சண்முகக் குருக்கள் குற்றமுடையாரோ? அல்லரோ? என்று முடிபு சொல்லுகிறீர்கள்?" எனச் சந்தேகம் நிகழ வினவினர் கோவிலதிபதிகள். இராமப்பிள்ளை கிறீஸ்தவரல்லர் என நிச்சயிக்கிறோம். அவர் கிறிஸ்தவராயினும் ஆங்கிலப் பேர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை பேரிற் சபிண்டியேற்ற குருக்கள் குற்றமுற்றவர் ஆவது எப்படியோ? அயோக்கியரிடத்துத் தானமேற்றதால் வரும் குற்றமும் பிராயச்சித்த மந்திர செபற்றாற்றானே நீங்கத் தக்கது என்று வாதித்தார் சிவப்பிரகாச பண்டிதர் இதற்குப் பிரமாணங்களும் காட்டினார்." (தேவகி, நீலகண்டன்., 1972:32)

முன்னர் "கிறிஸ்தவர் அல்லர்" என்று நிச்சயித்து, பின் "அவர் கிறிஸ்தவரேயானாலும்" எனக் கூறி, "ஆங்கிலப் பெயர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை" என ஒன்றோடொன்று முரண்பாடாகக் கூறி, தாம் எடுத்துக்கொண்ட விடயத்தை நிலைநிறுத்த முடியாது போனார், பண்டிதர்.

"புலவர் சார்பினராகிய கோவிலதிபதிகளும் வல்வைப் பிரமுகர்களும் குறித்த இராமப்பிள்ளை கிறிஸ்தவ மதத்திற் பிரவேசித்ததையும், நதானியல் றசலாக மாறியதையும் கிறிஸ்தவராக வாழ்ந்து, கிறிஸ்தவராக மரித்தவர் என்பதையெல்லாம் தக்க ஆதாரங்களுடன் நிரூபித்து நிலைநாட்டினர். எதிர்ப்பகுதி குதர்க்கத்தில் இறங்கவே கூட்டம் குழப்பமுற்றது. சண்முகக் குருக்கள் தருக்கொழியாதவராக வேயிருந்தார்." (தேவகி, நீலகண்டன்., 1972:33)

கோயிலிற் கூடிய கூட்டம் குழம்பியமையும், எதிர்த்தரப்பிடம் பதிலின்மையும், தருக்க முறையற்ற விவாதமும் சிவசம்புப் புலவரைச் சபிண்டி நாடக சங்காரம் எழுதத் தூண்டின. இதுவே இந்தக் கண்டன நூல் தோன்றியதன் பின்னணி.

### 6.1. சபிண்டி நாடக சங்காரம் - நூல் அமைப்பு

ஈழத்தில் கண்டன நூல் ஒன்று, வழக்கறிஞரின் எழுத்துப் பத்திர அமைப்புக்கேற்ப வந்ததெனில், அது சிவசம்புப் புலவருடையதே ஆகும். நூல் அமைப்பு ஆறு பகுதிகளைக் கொண்டது. அவற்றைப் பின்வருமாறு குறிக்கலாம்.

1. நதானியேல் றசல் என்பவரைக் கிறிஸ்தவர் எனக்கருதி நற்சான்றுப் பத்திரங்களை எழுதி வழங்கிய பாதிரிமார்களின் விபரம்.
2. பாதிரிமார்கள் அனைவரும் நதானியேல் றசல் குறித்து எழுதிய நீண்ட அபிப்பிராயங்களின் சாராம்சம்.
3. கிறிஸ்தவரான றசலைச் சுத்த சைவரெனக் கருதி வெளியிட்ட கருத்துக்களும் மறுப்பும் கொண்ட பகுதி.

இது ஐந்து பிரிவுகளை உடையது. குறித்த விடயம் தொடர்பாக வே.கனகசபாபதி ஐயர், சு.சரவணமுத்துப்பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர், செ.இராமலிங்கக் குருக்கள், ச.சுப்பிரமணியக் குருக்கள் ஆகிய ஐவரது கருத்துக்களும் ஆட்சேபங்களும் ஐந்து பிரிவுகளில் அமைந்துள்ளன. இது புலவருக்குச்சார்பான சைவத்தமிழ்ப் புலமையாளர்களின் கருத்துக்கள் அடங்கிய பகுதியாக அமைகிறது.

4. புலவரது தீர்ப்பு. இப் பகுதி "தீர்ப்பு" எனும் தலைப்பிலேயே அமைந்துள்ளது. பாதிரிமார், றசல் பற்றிக் கூறியவற்றையும் சைவப் புலமையாளர்கள் றசலின் விவகாரம் குறித்துக் கூறியவற்றையும் ஆராய்ந்து புலவர் தமது தீர்ப்புக் கூறும் பகுதியாக இது அமைந்துள்ளது.
5. "சிவப்படையின் மறைந்துநின்ற சில கட்டிவசனச் செல்வரே" என்ற பகுதி, சிவப்பிரகாச பண்டிதரையும் அவரைச் சார்ந்தோரையும் விமர்சனம் செய்து கண்டிப்பதாயும், பண்டிதரதும் குருக்களதும் செயல் பிழையென்று வலியுறுத்துவதாயும், "சிவப்படை" எனும் பெயரிலான கண்டனப் பிரசுரத்தில் தருக்கம் அற்ற தன்மையைக் கேள்விக்குட்படுத்துவதாயும் அமைந்துள்ளது.
6. முடிவுரையாக இரு பந்திகள் அமைகின்றன. சிவப்படையின் கையொப்பம் பற்றிய விமர்சனமும், இப் பிரச்சினை தொடர்பாக இன்னும் தமது பிரசுரங்கள் வெளிவரும் என்பது தொடர்பான எச்சரிக்கையும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

### 6.2 சபிண்டி நாடக சங்காரத்தில் கண்டனப் பண்புகள்

புலவரின் கண்டனநூல், அவரது தருக்க சாஸ்திரப் புலமையையும், சம்பவத்தை ஒழுங்குற வடிவமைத்து எழுதும் அவரது பண்புகளையும், அவரது விவாதப் புலமையையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன. புலவரது கண்டன எழுத்தில் காணத்தகும் முக்கியமான விடயங்களைத் தனித்தனியே நோக்கலாம்.

#### 6.2.1 எதிர்த் தரப்பிடம் தகவல் பெறுதல்

புலவர் கண்டனம் எழுத ஆரம்பிக்கும் முன்னர், றசல் தொடர்பான கிறிஸ்தவ நிலைப்பட்ட தகவல்களைச் சேகரித்துள்ளார். அத்தகவல்களை வழங்கிய நபர்களின் விபரத்தைத் தருகிறார்.

> "கனம் எஸ்.மோஷ் - நல்லூர் - சேட்சு மிசியோன் - போதகர், கனம் சீ.எம்.சான்டேஷ் - காரைதீவு - அமரிக்க மிசியோன் - போதகர், மெஸ். பீ.எல்.கிறிஸ்தியன்-உடுவில் - அமெரிக்க மிசியோன் - உபாத்தியாயர், கனம் ஜீ.ஜீ.பிறவன் - உடுப்பிட்டி - அமெரிக்க மிசியோன் - மிஷனரி, கனம் டீ.ஸ்திக்கினி - உடுப்பிட்டி - அமெரிக்க மிசியோன் - உபதேசியார், மெஸ்.எஸ்.தேவதாசன் - உடுப்பிட்டி ___ அமெரிக்க மிசியோன் - உபதேசியார், மெஸ்.வீ.ஏ.சலோமோன் - உடுப்பிட்டி-அமெரிக்கமிசியோன் - உபாத்தியாயர், மெஸ்.எஸ். உ. தம்பிமுத்து - உடுப்பிட்டி -அமெரிக்கமிசியோன் - உபாத்தியாயர், மெஸ்.எஸ்.சூசைப்பிள்ளை - உடுப்பிட்டி-அமெரிக்க மிசியோன், மெஸ்.என்.ஏ.சின்னத்தம்பி - உடுப்பிட்டி-அமெரிக்கமிசியோன்" *(ச.நா.ச.,1900:1)*

மேற்குறித்த பத்து நபர்களில் சேட்சு மிஷனில் ஒருவரும் அமரிக்க மிஷனில் ஒன்பது பேரும் அடங்குகின்றனர். அவர்களில் போதகர் மூவர், உபாத்தியாயர் மூவர், மிஷனரி ஒருவர், உபதேசியார் ஒருவர். இருவரது தொழில்நிலை குறிக்கப்படாததால் அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய மக்களாக இருக்கலாம். குறித்த பத்து நபர்களும் நல்லூர், காரைதீவு, உடுவில், உடுப்பிட்டி ஆகிய இடங்களைச்

சேர்ந்தவர்கள். இவர்களில் எழுவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்கள். இக்காலத்தில் வட்டுக்கோட்டை போன்று உடுப்பிட்டியும் அமெரிக்க மிஷனின் கிறிஸ்தவ மையங்களில் ஒன்றாக அமைந்திருந்தமையும், வல்வெட்டித்துறைக்கு அண்மையில் அமைந்திருந்தமையும், இன்னும் வல்வெட்டித்துறைக்கான மிஷனறித் தலைமையகம் உடுப்பிட்டியில் இருந்தமையும், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிப் பங்குக்குக்கீழ், அதாவது உடுப்பிட்டியின் கோயிற் பற்றுக்குக்கீழ் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த பத்து நபர்களிடமிருந்தும் புலவர் விரிவான எழுத்துமூல ஆவணங்களைப் பெற்றிருக்கிறார் என்பது, "இவர்கள் நதானியேல் றசல் என்பவரைக் குறித்து நமக்கெழுதித்தந்த சாட்சிப் பத்திரங்களின் விரிவைச் சுருக்கிய சாரம்" (ச.நா.ச.,1900:1) எனும் வாசகத்தால் தெளிவாகிறது. "விரிவைச் சுருக்கிய சாரம்" என்பது விரிவாக எழுத்து மூலம் பெறப்பட்ட தகவல்களின் சாரம் என்பதைக் குறிக்கிறது.

### 6.2.2 எதிர்த்தரப்பிடம் பெற்ற தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்

புலவர் சபிண்டீகரணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, எதிர்த்தரப்பினரைத் தர்க்க ரீதியாகத் தோற்கடிப்பதற்கு, றசல் தழுவிய மதத்தினரிடமிருந்து, றசல் பற்றிய தகவல்களைப் பெற்று அவற்றை ஒழுங்கமைக்கிறார். புலவர் சாரமாகத் தருவனவற்றுள் முக்கிய அம்சங்கள் கவனத்துக்குரியவை. அவற்றின் சாராம்சம் வருமாறு. (ச.நா.ச.,1900:1-2)

றசல், 1863ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதி நல்லூர் சேர்ச் மிஷன் பாதிரியாரான அறலி அவர்களால் கிறிஸ்தவராக ஞானஸ்நானம் பெற்றவர், 1863ஆம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்ற பின்னர் அதே ஆண்டில் விஷப்பினால் கிறிஸ்தவராகத் திடப்படுத்தப்பட்டவர், 1863இல் இராப்போசனம் எடுத்து அச் சபையின் உரித்துடைய அங்கத்துவத்தை உறுதிப்படுத்தியவர், உடுவில் கிறிஸ்தவப் பெண்கள் பாடசாலையின் உபாத்தியாயராக இருந்தவர், வன்னியில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்வதற்குப் பொருள் உதவும் சீவியகால உபகாரியாய் இருந்தவர், ஓய்வுபெற்ற பின்னர் உடுப்பிட்டித் தேவாலயத்தில் பிரசங்கம் செய்து - செபம் செய்து வந்தவர், கண்டியில் வசித்தபோது "கூலியோன் சபை"யில் சேர்ந்து கிறிஸ்தவ ஆராதனைகள் செய்தவர், கண்டியிலிருந்து வெளியேறி உடுப்பிட்டியில் வசித்த காலத்தில் அமெரிக்கன் மிஷன் தேவாலயத்தில் கூட்டங்கள் - பிரசங்கங்கள் ஒழுங்கமைத்துச் செய்தவர், கிறிஸ்தவ அறம்சார் புத்திமதியும் செபமும் சொல்லி வந்தவர், உடுப்பிட்டியில் நிகழ்ந்த நிலாக் கூட்டங்களில் சமயப் பிரசாரம் - செபம் ஆகியவை செய்தவர், வேதாகம ஆராய்ச்சியில் ஆசையுடையவராக எப்போதும் இருந்தவர், தனிச் செபத்தில் விருப்பம் உடையவராய்க் காணப்பட்டவர், முழுநாளும் கிறிஸ்தவர்களோடுகூடி வேத விஷயத்தில் அன்பும் ஆதரவும் பயபக்தியும் உள்ள சிந்தையோடு உரையாடுவதில் ஊக்கமாயிருந்தவர், கூட்டத்திற்கு வரமுடியாது நோய்வாய்ப்பட்டபோது கிறிஸ்தவர்களைத் தம்வீட்டுக்கு அழைத்து வேதம்

வாசித்துச் செபம் செய்து ஆறுதலடைந்தவர், "நேர்மையான" சைவசமயிகளுக்கு கிறிஸ்தவமே உண்மை மார்க்கம் என வாதாடிச் சாதித்துக் காண்பித்தவர், கிறிஸ்தவத்தை வியந்து போதித்துத் தன் அனுபவத்தையும் சேர்த்துக் கிறிஸ்தவப் பெருமை பேசியவர், கிறிஸ்தவர்களின் தவறுகளை அந்தரங்கமாய்ப் புத்தி சொல்லித் திருத்தியவர், உடுப்பிட்டிக் கிறிஸ்தவ சபைக்கு வேண்டும் பொழுதெல்லாம் பொருள் உபகரிப்பித்தவர். உடுப்பிட்டியிலிருந்து நல்லூர்வரை சென்று கிறிஸ்தவ சபைகளில் இராப்போசனம் ஏற்றவர், இறக்கும்வரை கிறிஸ்தவச் சபையின் உறுப்பினராய் இருந்தவர், தான் இறந்த பின்னர் நல்லூர் சேர்ச் மிஷனுக்குரிய சவக்காலையில் அடக்கம் செய்யும்படி பலமுறை வாஞ்சையுடன் வற்புறுத்திச் சொன்னவர்.

மேற்குறித்த இருபது அம்சங்களும் றசல் தொடர்பாகப் புலவர் முன்வைக்கும் கருத்துக்கள். இவற்றைக் குறித்துவிட்டுப் புலவர் பின்வருமாறு எழுதுகிறார்.

> "இவ்வித சிறிஸ்தவராகவிருந்து மரித்தும் அவர் பரத்திலே தேவனோடும் இகத்திலே கிறிஸ்தவர்களோடும் வாசஞ் செய்கிறார்." *(ச.நா.ச.,1900:2)*

மேற்குறித்த புலவரது கூற்று எள்ளல் தொனியுடன் அமைந்துள்ளது. அத்துடன் அக்கூற்றுக்குரிய அடிப்படைக்கருத்து, றசல் பற்றித் தகவல் எழுதி அனுப்பிய மிஷனரிகளின் வழியாகவும் அமைந்திருக்கலாம். புலவர் தமது கண்டனத்தின் இப் பகுதியில் றசல் தொடர்பாக 1900ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஏழாம் திகதி பாலியர்நேசன் பத்திரிகையில் வெளியாகிய செய்திகளையும் குறிப்பிடுகிறார்.

### 6.2.3 சைவத் தமிழ்ப் புலமையாளர்களின் கருத்துக்களை முன்வைத்தல்

புலவர் கிறிஸ்தவத் தரப்பிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிட்ட பின்னர், "இவ்வித உறுதியைக் கொண்ட கிறிஸ்தவரைச் சுத்த சைவரென்று நடித்த நாடகமும் மறுப்பும்" என்று தலைப்பிட்டு, சைவத் தமிழ்ப் புலமையாளர் ஐவரின் கருத்துக்களைத் தருகிறார். இவ் ஐவரதும் கருத்துக்களும் றசலுக்குச் சபிண்டீகரணம் செய்தமைபற்றியதாக அமைந்துள்ளது. ஐவரது கருத்துக்களின் சாரத்தையும் தனித்தனியே நோக்கலாம்.

முதலாவதாக வே.கனகசபாபதியையர் கருத்துக்களின் சாரத்தினை, றசல் தனது இரண்டாவது மகளைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றி, அமெரிக்க மிஷனில் படிக்கவைத்தவர், றசலின் இரண்டாம் மகள் கிறிஸ்தவராக மாறிய ஒருவரைத் திருமணம் செய்தவர், இரண்டாவது மகளின் மகள் கிறிஸ்தவரை மணம் செய்தவர், தனது மகளுக்குச் சைவ மணாளருக்கு விவாகம் செய்து வைக்காது கிறிஸ்தவ நபருக்குச் செய்து வைத்தவர், சைவாகம விதிப்படி மகள்மாருக்கு விவாகச் சடங்கைச் செய்தமை பற்றிய பத்திரம் காட்டப்படாததன் காரணம் யாது என்ற கேள்வி, உடுப்பிட்டி ஸ்ரீ மணியம் வீட்டில் சார்வரி பங்குனி மூன்றாம் திகதி நடந்த ஆட்டத்துவசத்துக்குச் (இறந்தவரின் முதலாம் ஆண்டுத் திவசம் அல்லது திதி) சண்முகக் குருக்கள் வருவதை அறிந்து நவிண்டில் குருக்கள்மார் வரவில்லை - சண்முகக் குருக்கள் இனத்தவரும் அதற்கு வராது ஒதுங்கினர், சிவப்படைப்

பிரசுரத்தில் கரணவாய் ஆதீனத்து ஆசாரியர்கள் எனவும் நவிண்டிலாதிச் சைவர்கள் எனவும் குறிப்பிட்டு, அதற்கு முந்திய பத்திரத்தில் அவ் விபரங்களைக் குறிப்பிடாமை, வழக்கமான புரோகிதரைக் காட்டாது நவிண்டில் ஆதிசைவரைக் காட்டியது பொருள் பெறுவதற்கே, அந்தியேட்டி செய்த குரவர் குற்றமுடைவர் என்பதால் றசல் கிறிஸ்தவர் என்பது புலப்படல், சண்முகக் குருக்கள் அடிக்கடி கடல் மார்க்கமாக இந்தியா சென்று வருபவர் - மறையவர் கடல் தாண்டக் கூடாது - எனவே குருக்கள் சைவ நியமத்தை வரையறுக்க அருகதையற்றவர் எனப் (ச. நா.ச.,1900:2-3) பத்தம்சங்களாகக் குறிக்கலாம்.

மேற்குறித்த பத்து அம்சங்களும் புலவர் தரும் கனகசபாபதி ஐயரின் பதிவில் இருந்து பெறப்பட்டவை. ஐயர் மேற்குறித்தவற்றைத் தனது பாஷையில் குறித்துவிட்டு "பரம்பரைச் சைவத்துக்கியல்போ" (ந.ச.ச.,1900:3) என வினவி சபிண்டி செய்தது தவறு எனக் கூறுகிறார்.

இரண்டாவதாக, சு.சரவணமுத்துப்பிள்ளை அவர்களது கருத்தின் சாரத்தினை, கிறிஸ்தவக் கல்விக்காகப் பொருள் உபகரித்தவர், சைவப் பெயரை மாற்றிக் கிறிஸ்தவராக வாழ்ந்தவர் சைவராகமாட்டார், றசல் கிறிஸ்தவர் என்பதற்குச் சான்றுகள் அதிகம், அவர் கிறிஸ்தவர் அல்லர் என்பதற்குச் சான்று ஒன்று கூட இல்லை (ச.நா.ச.,1900:3-4) என மூன்றம்சங்களாகக் குறிக்கலாம்.

சு. சரவணமுத்துப்பிள்ளையின் பதிவிலிருந்து மேற்குறித்த மூன்று அம்சங்களும் பெறப்பட்டுள்ளன. இவற்றில் மூன்றாவது அம்சம் முக்கியமானது. றசல் கிறிஸ்தவர் அல்லர் என்பதற்குச் சண்முகக் குருக்கள் தரப்பிலிருந்தோ, சிவப்பிரகாச பண்டிதர் தரப்பிலிருந்தோ ஆதாரம் காட்டப்படவில்லை என்பது முக்கியமானதாகும்.

மூன்றாவதாகச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் கருத்தின் சாரத்தினை சபிண்டி செய்வதால் உண்டான வத்தியற்ப தோஷம் மந்திர செபத்தால் மாறும் என ஆகமம் கூறியது சைவ சமயிகளுக்கே, கிறிஸ்தவ சமயிகளுக்குச் சபிண்டி செய்த குற்றம் மந்திர செபத்தால் நீங்காது - அவ்வாறு நீங்கும் என்று கூறினால் அதற்கு எந்த நூலும் விதிகாட்டாது, விதித்த சைவசமயி விதியா இதர சமயி (கிறிஸ்தவர்) இருவருக்கும் சபிண்டி செய்வதால் வரும் குற்றம் ஒன்றே ஆகும், கிறிஸ்தவருக்குச் சபிண்டி செய்வதைப் பார்க்கினும் அதிக குற்றங்கள் குருக்கள்மாரிடம் உள்ளன. (ச.நா.ச.,1900:4) என நான்கம்சங்களாகக் குறிக்கலாம்.

குமாரசுவாமிப் புலவர் கருத்திலிருந்து எடுக்கப்பட்ட மேற்படி நான்கு அம்சங்களும் மூன்று விடயங்களைப் புலப்படுத்துகின்றன. ஒன்று சபிண்டிவிதி சைவசமயிகளுக்கே உரியதென்பது. இரண்டு, சபிண்டியை முறையானவருக்குச் செய்யாதுவிடின் ஏற்படும் குற்றம் எல்லோருக்கும் சமம் என்பது. மூன்று, சபிண்டியால் வரும் குற்றத்தைவிடக் குருக்கள்மார் புரியும் குற்றம் அனந்தம் என்பது

நான்காவதாக செ. இராமலிங்கக் குருக்கள் கருத்தின் சாரத்தினை, அந்தியேட்டியால் ஆன்மா சிவத்துவம் அடையும் என்பது கிறிஸ்தவ சமயிக்கும்

ஏற்புடையதே, சிவத்துவம் கற்பித்த சண்முகக் குருக்களுக்கு சைவத்தின் மேலானது கிறிஸ்தவமே என்பது கருத்து, சபிண்டி செய்தவரில் குற்றம் ஏற்படாது என்பதால் சிவத்துவம் கொடுத்த குருக்களில் குற்றம் ஏறும் - றசல் கிறிஸ்தவர் என்பதால் இது நிகழும் (ச.நா.ச.,1900:4) என மூன்றம்சங்களாகக் குறிக்கலாம்.

மேற்குறித்த மூன்று கருத்துக்களும் இராமலிங்கக் குருக்களது பந்தியிலிருந்து பெற்றதன் சாராம்சம். குருக்களது கருத்து முரண்பாடுமிக்கதென்பது முதலாவது, இரண்டாவது கருத்துக்களை ஒப்புநோக்கும்போது புலனாகிறது.

ஐந்தாவதாக சுப்பிரமணியக் குருக்கள் கருத்தின் சாரத்தினை, றசல் ஏறக்குறைய ஐம்பது வருடமாகக் கிறிஸ்தவராய் ஒழுகி, பின்னர் இறந்தமையால் அவரைக் குறித்துச் செய்யும் அந்தியேட்டி கிறிஸ்தவத்தில் மாறியவுடன் செய்யும் அந்தியேட்டி ஆகாது, அவர் கிறிஸ்தவரானவுடன் அந்தியேட்டி செய்து விலகிக்கொள்ள தற்காலம்போல அக்காலத்தில் சுத்தசைவர் இல்லைப்போலும் (ச.நா.ச.,1900:5) என்ற இரண்டம்சங்களாகக் குறிக்கலாம். இக்கருத்துக்கள் குருக்களின் எள்ளல்சார்ந்த பதிவுகளாக அமைகின்றன.

6.2.4 தீர்ப்பு எழுதுதல்

கிறிஸ்தவம் சார்ந்த பத்துப் பேரது கருத்துக்களையும் சைவம் சார்ந்த ஐந்து பேரது கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு தருக்க சாஸ்திர நியாயத்துக்கு அமைவாகத் தீர்ப்பு வழங்குகிறார், சிவசம்புப் புலவர். அவரது தீர்ப்பில் சிவப்பிரகாச பண்டிதர் மீதும் சண்முகக் குருக்கள்மீதும் குற்றம் எனத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

சிவப்பிரகாச பண்டிதர் செய்த குற்றங்களாகப் புலவர் கூறுவனவற்றைப் பின்வருமாறு நிரற்படுத்தலாம்.

1. ஒன்றோடு ஒன்று முரண்பட்டனவும் கிறிஸ்தவர் என்று கொள்ளத்தக்கனவும் சைவர் எனப் பிரமாணம் காட்டாதனவும், றசலுடைய மருகனாய் அந்தியேட்டி முதலியவற்றைச் செய்த நொத்தாரிஸ் ஸ்ரீ.வ. சின்னத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதி வாசித்தது எனப் பத்திரத்தில் எழுதி வெளிப்படுத்தாததும் ஆகிய அம்சங்களைக்கொண்டு றசல் கிறிஸ்தவர் அல்லது எனச் சிவப்பிரகாச பண்டிதர் சாதித்தார்.

2. கோயிலதிபதிகள் சண்முகக் குருக்கள் குற்றமுடையவரோ? அற்றவரோ? என்ன முடிவு சொல்லுகிறீர்கள்? என வினவியபோது அதற்குத் தக்க பதில் கூறாது பண்டிதர் சாதித்தார். “இராமப்பிள்ளை என்பவர் கிறிஸ்தவரல்லரென்று நிச்சயிக்கிறோம். அவர் கிறிஸ்தவரேயானாலும், ஆங்கில பேர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை பேரிற் சபிண்டியேற்ற குருக்கள் குற்றமுற்றவராவ தெப்படியோ?” (ச.நா.ச.,1900:5) என்றெல்லாம் சாதித்தார்.

“அயோக்கியரிடத்துத் தானமேற்றதால் வருங் குற்றமும் பிராயச்சித்த மந்திர செபத்தாற்றானே நீக்கத்தக்கதென்று பிரமாணங்காட்டிச் சண்முகக் குருக்கள் குற்றமுடையரல்ல என்று முடித்தார்” (ச.நா.ச.,1900:5)

3. முன்னர் கிறிஸ்தவர் அல்லர் என நிச்சயித்துப் பின்னர் "அவர் கிறிஸ்தவரேயானாலும் "எனச் சொல்லி" ஆங்கிலப் பெயர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை" என ஒன்றுடன் ஒன்று முரணான கருத்துக்களைக் கூறிச் சண்முகக் குருக்கள் குற்றம் அற்றவர் எனப் பண்டிதர் சாதித்தது, "சைவநிலைப் பத்தியின்றிப் பொருண் மாத்திரையினொருபாற் கோடிய பெருந்தவறே" (ச.நா.ச.,1900:5)

சண்முகக் குருக்கள் செய்த குற்றங்களாகப் புலவர் குறிப்பனவற்றைச் சுருக்கமாக இங்கு நிரற்படுத்தலாம். (ச.நா.ச.,1900:5-6)

1. கோயிலில் நடைபெற்ற கூட்டத்தில் சரியான முறையில் கருத்துக் கூறாமை.
2. வாதிகள் அற்ற நேரத்தில் தன் கருத்துக்கூற முற்பட்டமை.
3. பிற்பகல் கூட்டத்துக்கு முற்பகல் அறிவித்தும் றசலை அறிந்த ஒருவரையும் அழையாமை.
4. சபிண்டிக்குப்போவது முறையல்ல எனப் புலவரவர்கள் பலர் மூலமாக அறிவித்ததைக் கேளாமல் சபிண்டி செய்யச் சென்றமை.
5. சபிண்டிக்குச் சென்ற குற்றம்பற்றி, கோயிலதிபதிகள் வாயிலாகவும் குருக்களின் மருமக்கள் வாயிலாகவும் பிறர் வாயிலாகவும் குருக்களிடம் அறிவிக்க, அது பற்றிச் சிந்தித்து ஆவன செய்யாமை.
6. பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்திய விடயங்களுக்குத் தீர்ப்பு வழங்கும்வரை பதில் கூறாமை.
7. பிரச்சினை நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் கூட்டம்கூடி ஆராயாமை.
8. 1900ஆம் ஆண்டு ஐப்பசி 17இல் இறந்த றசலுக்குக் கார்த்திகை 25 இல் ஞாயிற்றுக்கிழமையிற் கிரியை செய்தமை. இது சிரார்த்த காலவிதிமுறை பற்றிய அறிவு குருக்களுக்கு இல்லை. அத்துடன் கிறிஸ்தவ விடுமுறை நாளில் சைவக் கிரியைக்கு உடன்பட்டமை.
9. சபிண்டீகரணம் செய்யும் வழக்கமான குருக்கள்மாரும் சைவாசிரியர்களும், புரோகிதர்களும் உடன்படாத விடயத்திற்குக் கோயிற்குருக்களாக இருந்து உடன்பட்டமை.
10. கி.பி. 1900ஆம் ஆண்டு கார்த்திகை 25இலும் மார்கழி 16இலும் இறந்தவர் வீட்டிலும் மற்றுமொரு மருமகன் வீட்டிலும் பிறர்க்குரிய கிரியைகளைக் குருக்கள் செய்தமை.
11. தன்னைக் குற்றமற்றவரென நிரூபிக்க ஆறுபேரைத் தூண்டி, அவர்களையும் குற்றத்துக்கு ஆளாக்கியமை.
12. கோயிலுக்குப் பரிகாரஞ் செய்யும் நிலையை ஏற்படுத்தியமை.

### 6.2.5 தீர்ப்பின் முடிவை எழுதுதல்

சிவசம்புப் புலவர் சண்முகக் குருக்களதும் சிவப்பிரகாச பண்டிதரதும் அவ்விருவரைச் சார்ந்த தரப்பினரதும் கருத்துக்களைத் தருக்க ரீதியில் ஆராய்ந்து, குற்றங்களை விரிவாக எழுதிவிட்டு, இறுதில் தனது முடிவை அறிவிக்கிறார். அவர் தனது முடிவில் இரண்டு முக்கிய குறிப்புக்களைத் தருகிறார்.

1. வல்வைச் சிவன் கோயிலில் இப் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற இறுதிக்கூட்டம் வாதங்களால் குலைந்தது. சூழ்ச்சி செய்த குருக்கள் ,பண்டிதர் தரப்பினர், பலரும் வினவிய வினாக்களுக்கு விடை கூறவில்லை. ஆனால் கூட்டம் முடிவுபெற்றது என அறிவிக்கும் துண்டுப் பத்திரிகையைக் குருக்கள், பண்டிதர் தரப்பு வெளியிட்டது. அப் பத்திரிகை "கோயிலதிபதிகள் கையொப்பம்" இட்டதாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் கையொப்பமிடவில்லை. இது குற்றமான காரியம். கூட்டத்தில் இடம்பெற்றதை எழுதாது திரித்து எழுதித் துண்டுப் பத்திரிகையை வெளியிட்டனர். "தக்க மனுஷர் பலரும் இத் துண்டுப் பத்திரிகையை வாசித்து இதில் எழுதப்பட்டவைகளெல்லாம் விபரீதச் சூது விளையாட்டென்று முடித்தார்கள்" (ச.நா.ச.,1900:5)
2. வல்வைச் சிவன் கோயிலில் அர்ச்சகராய் அமைந்த காலம் முதலாக உடுப்பிட்டி முதலிய ஊர்களில் நிகழும் விவாகச் சடங்கு, பிதிர் கருமம் ஆகியவற்றில் சென்று மதிப்படைந்த சண்முகக் குருக்கள் சார்வரி, கார்த்திகை 25ஆம் திகதியின் பின் அவ்வாறு செய்வதை நிறுத்திக் கொண்டார். இதனால் "தாமாகவே போகா தொழிந்ததுந் தமது வழுவைத் தெரிக்கின்றதே" (ச.நா.ச.,1900:5) இவ்வாறு குருக்களது குற்றச் செய்கையை, கிறிஸ்தவத் தரப்பினர், சைவத்தமிழ்த் தரப்பினர், குற்றச்செயலுக்குப் பின்னான குருக்களின் நடத்தை முதலாய பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, சண்முகக் குருக்கள் குற்றமுடையவர் எனத் தீர்ப்பின் முடிவை எழுதுகிறார், புலவர்.

### 6.2.7 தீர்ப்பு வழங்குநரின் மூவகைத் தகுதி

புலவர் தீர்ப்பு வழங்கிய தமது தகுதிபற்றி மூன்று விதமாகக் குறிப்பிடுகிறார். அவற்றைத் தனித்தனியே சுருக்கமாக நோக்கலாம்.

முதலாவது மக்களது கருத்தின்வழியான தகுதி. தம்மைப்பற்றி மக்கள் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்பதைப் புலவர் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> "சைவப் பிரசாரகபானுவாய்ச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் கூட்டம் வைக்கும் காலங்களிற் பல தினத்துக்கு முன்னறிவித்த பத்திரவாயிலா யாண்டுப்போய் அவர்களுக்குக் கந்தரங்க மந்திரியாயிருந்த புலவரவர்கள், அழுக்காறு முதலியவற்றைப் பூஷணமாய்ப் பூண்ட சைவவேஷத்தாரது கூட்டத்துக்குப் போகாமல்விட்டது யோக்கியதையென்று தக்கவரெவரும் பேசுகிறார்கள்" (ச.நா.ச., 1900:6)

இரண்டாவது, சைவத்தமிழ்ப் புலமையாளர் கருத்தின்வழியான தகுதி. இதற்கு உதாரணமாக, ஸ்ரீமத் கு.செல்லப்பாபிள்ளை அவர்களின் கருத்தினைப் புலவர் சான்றுகாட்டுவதைக் குறிப்பிடலாம். செல்லப்பாபிள்ளையவர்கள் கூட்டத்தில் எதிர்த்தரப்பைநோக்கிப் பேசிய கூற்றை அப்படியே பதிவுசெய்கிறார். அது வருமாறு,

"புலவரவர்களுடைய கல்விப் பெருமையையும் சைவ பக்தியையும் நிதானத்தையும் பிதாவின் பெருமையையும் அறியாமற் பேயாண்டீ ஏன் பிதற்றுகிறாய்?" (ச.நா.ச.,1900:6)

மூன்றாவது, புலவரது கருத்தின்வழியான தகுதி. புலவர் தனது தகுதிப்பாடு பற்றியும் தாமே தீர்ப்பில் பதிவுசெய்கிறார். "ஸ்ரீ நாவலரவர்களாலும் எட்டிகுடியில் எட்டாந் திருநாளில் ஸ்ரீ தம்பிரான்மார், வித்துவாம்சர்கள், உபாத்தியாயர்கள், சாஸ்திரிகள் முதலிய குழுவினராலும் புலவரெனவும், இராமநாதபுரத்தில் சிறீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜாவவர்கள் சமஸ்தானத்தில் சிறீமத் இராகவையங்காரவர்கள் முதலிய பல பண்டிதர்களால் மகா வித்துவானெனவும் சூட்டப்பட்ட சிறப்புடையார்." (ச.நா.ச.,1900:9)

புலவரது மேற்படி கூற்று தற்புகழ்ச்சி அல்ல. தமிழ் மரபில் அது தகுதியான செயற்பாடு என்பதற்கொப்பப் புலவர் அவ்வாறு கூறுகிறார். நன்னூல் சிறப்புப் பாயிரத்துக்குரிய இலக்கணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"மன்உடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே" (நன்னூல்:59)

மேற்குறித்த கூற்றின்வழி, புலவர் தமது தகுதிபற்றித் தாமே கூறுவது பொருத்த முடையதே. புலவர் சபிண்டீகரணப் பிரச்சினைக்குத் தாம் தீர்ப்பெழுதுவதற்கான தகுதியை மேற்குறித்த மூன்று அம்சங்களாலும் தெளிவுபடுத்துகிறார்.

### 6.3 சபிண்டி நாடக சங்காரத்தில் எதிர் கண்டனப் பண்புகள்

புலவர் தனது தீர்ப்பை அறிவித்துவிட்டுக் குருக்களது சார்பில் வெளிவந்த "சிவப்படை" எனும் கண்டனப் பிரசுரத்திற்கு எதிர் கண்டனம் செய்கிறார். புலவரது கண்டன நூலின் நீண்ட பகுதியாக இப் பகுதி அமைகிறது. "சிவப்படையின் மறைந்து நின்ற சிலகட்டி வசனச் செல்வரே" என்ற தலைப்பில் இப் பகுதி அமைந்துள்ளது. சிவப்படை தொடர்பான புலவரது எதிர் கண்டனப் பண்புகள் சிறப்பானவை. அவற்றைத் தனித்தனியே சுருக்கமாக ஆராயலாம்.

#### 6.3.1 சிவப்படைத் தோல்வியைச் சுட்டுதல்

சிவப்படைப் பிரசுரம் தோல்வியில் முடிந்தது என்பதைப் பின்வருமாறு புலவர் அறிவிக்கிறார்.

"இயற்றமிழ்ப் போதகாசிரியரென வொருவருக்கு இயற்பெயரின்மையான் அவரது மாணாக்கரு ளொருவரென்ற தின்மையதபாவம். சிவப்படையென, முன்விட்டது சக்தியற்றதெனவே போதரும். ஆக, முற்பத்திரிகை தோல்வியுற்றதென்றாயிற்று." (ச.நா.ச.,1900:7)

### 6.3.2. சிவப்படைக் காரணம் அச்சமே

"சிவப்படை" என்னும் பிரசுரத் தலைப்பு அச்சத்தால் எழுந்தது எனக் குறிப்பிடும் புலவர், எய்யப்பட்டானுக்கு அது இடையூறினைத் தரவில்லை எனப் பின்வருமாறு கூறுகிறார்.

"சிவப்படை மறைந்துய்த்தன் மரபின்மையின் உய்க்கப்பட்டானுக்கு இடையூறெய்தாமையுந் தோன்றிற்று. அசனி வீழ்தோறும் மந்திரமுரைத்தல் போல அச்சத்தாற் சிவப்படை உளதெனக் கூறியவாறுமாம்" (ச.நா.ச.,1900 :7)

### 6.3.3 சிவப்படைக்கு அறிவின்மை

சிவப்படை எழுதியவரின் அறிவின்மை பற்றிப் புலவர் பல இடங்களில் ஆதாரத்துடன் நிரூபிக்கிறார். இரு உதாரணங்கள் வருமாறு.

"முதற்பத்திரிகையிற் சமையமெனவும் இரண்டாம் பத்திரிகையில் சமயமெனவும் தீட்டியதை நுனியாது நூலுரைகளில் யாண்டாயினுங் கண்டீரோ வென்ற தூலபுத்தியைச் சிறுவரும் நகைக்கின்றாரே." (ச.நா.ச.,1900:8)

"இருபாடை வழக்குந் தெரியீர்க்கு ஒரு பாடையினுந் தேற்றமின்றுதானே." (ச. நா.ச.,1900:8)

### 6.3.4 சிவப்படையில் தூய மொழியின்மை

புலவர், சிவப்படைப் பிரசுரத்தில் காணப்படும் தகுதியற்ற மொழித் தன்மையை வன்மையோடு கண்டிக்கிறார். பின்வரும் பகுதியை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

"ஊத்தை வசனம் பொருந்திய சிவப்படையை மேதக்கதெனக் கருதி, வல்வைக் காளையர் தாம் தாம் எழுதியதாக வொருவரோடொருவர் வாதாடவும் அது விசேட வசனந்தானென்று மயங்கி அப்பேற்றைத் தான் புனைந்து கொள்ளமுறையில் கூட்டத்தொரு பேய் முறுவலாற் றெரிக்கவும் வைத்த நமது மாயம் கிருஷ்ண பகவானுக்கு மெய்தாதே" (ச.நா.ச.,1900:10)

### 6.3.5 சிவப்படையாளர் கிறிஸ்தவச் சார்புடைய புதுச் சைவரே

"சிவப்படை" எழுதியோர் கிறிஸ்தவச் சார்புடைய புதுச் சைவரே எனப் புலவர் குறிப்பிடுகிறார். பின்வரும் பகுதியை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

"சிவாக்கினியின்றிய தகனத்தைச் சைவகிரியையென்றது சைவாகமப் பயிற்சி பெரிதுடைமையாற்றானோ? வீடெரிதலுங் காடெரிதலுஞ் சைவக் கிரியை தானோ? கிறிஸ்து சமயிக்குஞ் சபிண்டி செய்கவென்றும் அது அத்தியற்ப குற்றமென்றும் மந்திரசெபத்தால் நீங்குமென்றுஞ் சொல்லிய ஆகமமேது? உபாகமமேது? பிரகரணமேது? இறைவன் சைவனுக்குச் சொல்லிய விதியையோ நீர் இப் புறப்புறச் சமையிக்குச்

*சேர்த்துக் கொடுத்தது, புதுச் சைவர் பாலலெழும் புதிய புணர்வுக்கருத்து." (ச. நா.ச.,1900:10)*

### 6.3.6 சிவப்படை எழுதியவரைக் கண்டித்தல்

சண்முகக் குருக்கள்சார்பில் "சிவப்படை" எழுதிய சிவப்பிரகாச பண்டிதரைக் கண்டித்து எழுதுதல் புலவரது கண்டன எழுத்தின் இன்னொரு சிறப்பம்சமாகும். உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

"விதியார்க்குச் சந்தியாவந்தனம் போதிக்க விலக்குகளையெல்லாம் விதியாகக் கொள்ளும் நீரும் சண்முகக் குருக்களுமிருக்கச் சித்தாந்த சைவராதற் குடன்படின் அவரைப் பரம்பரைச் சைவாசிரியர் பந்தியால் விலக்குவார்களே." *(ச.நா.ச.,1900:9)*

### 6.3.7 மேற்கோள் காட்டிக் கருத்தை நிறுவுதல்

புலவரது தமது கண்டனத்தில் கந்தபுராணம், திருவாசகம், ஆகமம் முதலாய பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தம்கருத்தை நிறுவுந்தன்மை, புலவரின் பன்னூற் புலமையைப் புலப்படுத்துகிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

*"சமையமென்பது கந்தபுராணத்தில் "சமையமாறினையும் அமைதரும் உமையவள் இமையவர்", எ-ம் திருவாசகத்தில் "சமையவாதிகள் அமைவதாக" எ-ம். தேவிகாலோத்ரத்தில் "சமையாசார அமையாதாம்" எ-ம் வருவனவற்றாலும் பிற செய்யுட்களாலும் ஒத்த பண்பே." (ச.நா.ச.,1900:8)*

### 6.3.8 வடமொழிப் புலமையும் தருக்க நூற் புலமையும்

புலவரது கண்டனத்தில் வடமொழி இலக்கண இலக்கியங்களின் செய்யுள் தொடர்கள், சொற்கள் விரவி வருகின்றன. அத்துடன் தருக்க நூலையும் அவ்வப்போது ஆதாரங்காட்டித் தனது கருத்தை நிறுவும் போக்கையும் காணமுடிகிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

*"வடமொழியில் கைலாசம், தைத்தியர், வைணவம், ஐந்திர மென்பன தென்மொழியில் முறையே கயிலாசம், தயித்தியர், வயிணவம், அயிந்திரம் என வழங்குதலும் நாராணய:, அச்யுத:, ஆதித்ய: என்பன முறையே நாரணன், அச்சுதன், ஆதித்தன் என வழங்குதலும் பிழையாகுமோ? இருபாடை வழக்குந் தெரியீர்க்கு ஒரு பாடையினுந் தேற்றமின்றுதானே. தாலீ புலாக நியாயத்தாலேனையவும்மையும்." (ச.நா.ச.,1900:8)*

### 6.3.9 எதிராளியின் ஒழுக்கத்தைக் கண்டித்தல்

புலவரின் எதிர் கண்டனத்தில், எதிராளியின் கருத்தினை மட்டுமல்லாது அவரின் ஒழுக்கத்தைக் கண்டிக்கும் போக்கினையும் அவதானிக்கமுடிகிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

*"மதுபானத்தையும் சேர்த்தாற் கடியார் யார்? மற்ச மாமிசம் புசிப்பவர் காணவுண்பது மெய்யானால் அது ஆண்டிவிடுதியிற் பூசை போசனஞ் செய்தலோடொத்த வழுவுடைத்தன்றே." (ச.நா.ச.,1900:8)*

### 6.3.10 பத்திரிகைக் கருத்துக்களைச் சான்று காட்டுதல்

புலவர், அக் காலத்தில் வெளிவந்த உதயதாரகை, திராவிட கோகுலம், இந்துசாதனம், பாலியர்நேசன் முதலாய பத்திரிகைகளில் வெளிவந்த சபிண்டீகரண விவாதங்களையும் கவனத்திலெடுத்துக் கண்டனத்தை எழுதுகிறார். உதாரணத்திற்குப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> "புறமதப் பத்திரிகையில் சபிண்டீ விஷயத்தைக் காட்டியது சைவாபிமானஞ் சிறிதுமின்றி யெனவே காட்டிய விஷய முண்மையென்றும் அதிற் காட்டியதனா லுண்மையைப் பொய்யாக்கினோ மென்றும் தோன்றியதே. அதைச் சைவப் பத்திரிகையிற் காட்டினால் கிறிஸ்தவர்கள் வாசிக்கமாட்டார்களோ? பத்திரி கையினும் மதந்தோற்றியதோ?." *(ச.நா.ச.,1900:8)*

### 6.3.11 கிறிஸ்தவரிடம் எதிராளி அவமானப்படுவதாகக் கூறுதல்

புலவரது கண்டனத்தில் எதிராளி கிறிஸ்தவரின் அவமானத்துக்கு உள்ளாகிவிடுவதாகக் கூறும் பகுதிகள் அடிக்கடி வருகின்றன. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> "சைவாபிமானம் பெரிதுடையார் சாலம் எங்கும் வெளிவந்ததே. வேதத்தையும் ஆகமத்தையும் பிறமதத்தார் அச்சிட்டதையுணரீரோ? நீரும் பிறரும் பதித்த பிரதிகள் பல கிறிஸ்தவர்கள் வீட்டில் கிடப்பதைக் கண்டால் நமது சைவாபிமானப் பெருக்கமழிந்து போமோ? இது சைவக் களவன்றே." *(ச.நா.ச.,1900:8)*

### 6.3.12 எதிராளியின் சைவாபிமானத்தைக் கேள்விக்குள்ளாக்குதல்

சிவப்பிரகாச பண்டிதரின் சைவாபிமானத்தைக் கேள்விக்குள்ளாக்கும் சில பதிவுகளைப் புலவரின் கண்டனநூலில் காணமுடிகிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> "உரையெழுதுவாரை நிந்திக்குங் கருத்தாற் பெண்டுகளும் பொருள் சொல்லுகிற வள்ளியம்மை திருமணப் படலமென நிந்திப்பீர்க்கு, கந்தபுராணம் விசேஷமாய்த் தோற்றியது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிப்பேசும் வகைதானோ? சைவாபிமானம் பெரிதுடைமைதானோ?." *(ச.நா.ச.,1900:8)*

### 6.3.13 தம்மேற் சுமத்திய குற்றத்திற்கான கண்டிப்பு

சிவப்பிரகாச பண்டிதர் எழுதிய சிவப்படைப் பிரசுரத்தில், புலவர்மீது சுமத்திய வீண்பழிக்குக் கண்டனம் தெரிவித்தலையும் புலவரது எழுத்தில் அவதானிக்க முடிகிறது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> "ஒருவருக்கொருவர் மாறிமாறியெழுதில் ஏச்சுப் பேச்சுவரும். கோட்டுக்குப் போகவும் வருமென்று மகாசாந்தமுடையாரைப்போலப் புணர்ப்பாய்ச் சொல்லிய நுமக்கு, தையலம்மைப்பிராட்டியார் திருமணத்துக்குத் திருச்சரமகவியெழுதித் தருகவெனக் கேட்டதற்குப் புலவரவர்களுடன் படாமையையும் திருவரங்கக் கலம்பகம் முதலியவற்றில் மறைசைக் கலம்பகம் சாலத் தாழ்ந்ததெனவவர்கள் சொற்றதையுங் காவிக்கொண்டு கோட்பொதிச் செட்டி கொளுத்தியதனாலாய சலக்கடுப்பு, சிலவருஷ

*த்துக்கு முன் வித்துவான் சிறீமத் ந.ச.பொன்னம்பலப் பிள்ளையவர்கள் வடித்த மதமடக்குத் தைலம் போன்ற தைலத்தாலன்றி மாறாது போலும்." (ச.நா.ச.,1900:9)*

### 6.3.14 எதிராளிக்கு விடயஞானம் இல்லையெனல்

சிவப்பிரகாச பண்டிதருக்குச் சபிண்டீகரணம் பற்றிய அறிவு கிடையாது என்பதால் அவர் பலபடப் பேசுகிறார் எனப் புலவர் குறிப்பிடுகிறார். உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

> *"கிறிஸ்து சமயிக்குச் சபிண்டி செய்யலாமோவென்ற வினாவுக்கு விடைபகராமல் செய்யக்கூடாதென யாண்டுக் கண்டீரெனப் பலவும் அடுக்கிய வசனத்தாற் சைவாகமத்திற் கிறிஸ்தவ ஆகமமும் சொல்லப்பட்டதென்பதும் சபிண்டி முதலியவை செய்யலாம் என்பதும் நுமது துணிபு. அத் துணிபுக்கேற்ற ஆகம முதலியவற்றை லோகோபாரமாக வெளிப்படுத்தாமல் மீட்டுமீட்டு வினாவுதலா லவையொன்றும் நுமக்குத் தெரியாது என்பதே முடிவு." (ச.நா.ச.,1900:10)*

### 6.3.15 எதிராளிக்குப் பிறர் குற்றம் ஆராயும் திறனின்மை

குற்றமுடைய எதிராளிக்குப் பிறரது குற்றங்களை ஆராயும் தகுதி கிடையாது என்பது புலவரின் முடிவு. அதற்கு, எதிராளியின் விடயவழு, மொழிவழு, தருக்க வழு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார். மொழிவழு பற்றிப் புலவர் கூறுவதை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

> *"தீஷை எவை எவை என்றது எவ்விலக்கண முடிபு. கெட்டி, அம்மம்ம என்பன சான்றோர் நூலுரைகளிலுள்ளனவா? ஒருமையெழுவாய் அல்லவென்பதனோடு எவ்வாறு முற்றும்? அடுத்தடுத்தெழுதியது எத்துணிபு பற்றி? இயற்றமிழ் போதகாசிரிய ரெனக் கையொப்பமிட்டவரோ பிறர் வழுவை யாராயவல்லவர்?" (ச.நா.ச.,1900:10)*

### 6.3.16 எச்சரிக்கையுடன் நிறைவுசெய்தல்

கண்டனத்தை முடிக்கும்போது எதிராளியை நோக்கி, கண்டன அம்புகள் இன்னும் என்னிடம் இருந்து வருமெனக் கூறும் புலவரது பாணி நயக்கத்தக்கதாய் அமைகிறது. அப் பகுதி வருமாறு.

> *"பாயிரம் ஒரு வகையான் முடிந்தது. இனி பாயிரவிருத்தியும் ஒழிந்தவும் 200 செய்யுளமைந்த குலமுறைப் புராணமும் வரும்." (ச.நா.ச.,1900:10)*

## 7. முடிவுரை

புலவரது "சபிண்டி நாடக சங்காரம்" எனும் கண்டன நூல் தொடர்பாக இதுவரை ஆராய்ந்தவற்றினூடு ஈழத்துக் கண்டன இலக்கிய மரபில் புலவருக்குத் தனித்த இடம் உண்டு என்பதும் காலனிய எதிர்ப்புச் சூழலில் கிறிஸ்தவ மதக் காலனியத்துக்கு எதிரான கண்டனத்தைப் புலவர் எழுதியமை புலவரது காலனிய எதிர்ப்புணர்வைக் காட்டுகிறது என்பதும் தருக்க சாஸ்திர விதிகளை அனுசரித்துக் கண்டனத்தை எழுதியதிலிருந்து புலவர் கண்டனத்தை ஒரு புலமை எழுத்தாகக் கருதுகிறார் என்பதும் அறியப்பட்டன.

சைவமறுமலர்ச்சி இயக்கத்தின் இயங்கு தளத்திற்கும், அவ் இயக்கம் கிறிஸ்தவத்திற்கு எதிராக வினையாற்றுவதற்கும் புலவர் தமது கண்டனம் எழுத்து மூலம் பங்களிப்புச் செய்துள்ளமை அறியப்பட்டது. கிறிஸ்தவர்களாலும் கிறிஸ்தவத்திற்குச் சார்பான "உண்மைச் சைவர்" அல்லாத சிலராலும் சைவவிழுமியங்கள், சடங்குகள் முதலியவற்றில் ஊறு கற்பிக்கப்பட்டவேளை, சைவமே உண்மைச் சமயம் எனும் அடிப்படையில் நின்று, அதனை மறுத்துக் கண்டன எழுத்தினைப் புலவர் முன்வைத்துள்ளார் என்பதும் இது அவரது காலத் தேவைக்கேற்ற சைவச் சமூகப்பணி என்பதும் அறியப்பட்டன.

சைவத்திலிருந்து கிறிஸ்தவ மதம் மாறியவர்களின் இறப்பின் பின்னான அபரக்கிரியை, சைவத்தையும் அதன் சிரார்த்த விதிகளையும் மீறுவதாக அமைவதை முதன்முதலில் ஈழத்தில் சுட்டிக்காட்டிக் கண்டன நூல் எழுதியவர் புலவர் என்பதால் அவரது நூல் வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பது உணரப்பட்டது. கிறிஸ்தவ மதக் காலனியச் சூழலில் கிறிஸ்தவர்களுக்கான அபரக் கிரியை சமூகத்தில் ஏற்படுத்திய குழப்பத்தைத் தருக்க சாஸ்திர வழிநின்றும் சைவாகம வழிநின்றும் நிலைநிறுத்தும் வகையில் கண்டனம் எழுதியமையை அறியமுடிந்தது.

மதமாற்றச் சூழலில் கிறிஸ்தவருக்குச் செய்த சபிண்டிக் கிரியையைச் சரியென நிரூபிக்கும் சண்முகக் குருக்கள், சிவப்பிரகாச பண்டிதர் ஆகியோரையும் அவர்களைச் சார்ந்தோரையும் "நாடகம்" நடிப்பதாகக் குறிப்பிட்டு அந்த நாடகத்தைத் தனது கண்டனத்தால் அழிப்பதால் "சபிண்டி நாடக சங்காரம்" எனத் தலைப்பிட்டுள்ளமை ஒரு சமூக நிகழ்வு இத் தலைப்பினூடு புலப்படுகிறது. கண்டன நூல் ஒன்றை நீதிமன்றில் நீதிபதியளிக்கும் தீர்ப்புப் பத்திரமுறையில் உருவாக்கியவர் என்ற வகையில் புலவர் முக்கியத்துவமுடையவர் என்பது துணியப்பட்டது.

புலவரது கண்டனத் திறன் கிறிஸ்தவத் தரப்பையும் சைவத் தரப்பையும் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும் பாணியில் அமைந்துள்ளமை அறியப்பட்டது. விசாரித்த பின்னர் குற்றப் பத்திரிகையை எழுதும்போது சிவப்பிரகாச பண்டிதருக்குத் தனியாகவும் சண்முகக் குருக்களுக்குத் தனியாகவும் எழுதுவதிலிருந்து விடயத்தைப் பகுத்தாராயும் புலவரது திறன் அறியப்பட்டது.

புலவர் தமது கண்டன நூலில், தாம் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் தகுதியுடையவர் என்பதை மூன்று விதமாகக் குறிப்பிடுவதிலிருந்து, கண்டன நூலொன்று பிரச்சினை ஒன்றை விசாரணைக்கு உட்படுத்தி நீதிவழங்குவதாய் அமைதல் வேண்டும் என்ற அறிவுசார் நிலைப்பாடு புலப்படுகிறது. எதிராளியின் பிரசுரங்களுக்குப் புலவர் எழுதும் கண்டனம், நீதிமன்றில் நீதிபதி தீர்ப்பை எழுதிய பின்னர் குற்றஞ் செய்தவரை எச்சரிக்கும் பாணியில் அமைந்துள்ளமை அறியப்பட்டது. எதிராளியின் பிரசுரங்கள் "தோற்றுப் போயின" என அறிவிப்புச் செய்வதிலிருந்தும் அதற்கான புலவரது வாத முன்வைப்புக்களிலிருந்தும் கண்டன நூல் ஒன்று, தருக்க நூற் புலமையை அடிப்படையாகக் கொண்டது என்பது அறியப்பட்டது. ஈழத்துக் கண்டன மரபில் ஒரு கண்டனத்தைச் சமூகத்தின் சமகால அறிவுடன் இணைத்துக்

கண்டனமாக எவ்வாறு எழுதவேண்டும் என்பதற்குப் புலவரது கண்டனம் சிறந்த எடுத்துக்காட்டு என்பது அறியப்பட்டது. கண்டனம் மூலம் காலனியத்தை எதிர்ப்பதென்பது கிறிஸ்தவ அமைப்பை எதிர்த்தல், கிறிஸ்தவ அமைப்பிற்குச் சார்பான சைவ அமைப்பை எதிர்த்தல், சைவ அமைப்பில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, குற்றம் புரிவோரை எதிர்த்தல் எனும் மூன்று நிலைகளில் அமையுமாற்றையும் புலவரது கண்டனம் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதும் அறியப்பட்டது.

## அடிக் குறிப்புகள்

1. ஈழத்திலும் தமிழகத்திலும் வெளிவந்த கண்டனங்கள் தருக்க நிலைப்பட்ட தமிழ்ப் புலமை வரலாற்றை அறியத் தகுந்த சான்றுகளாய் அமைபவை. தமிழ் இலக்கிய வரலாற்று எழுத்துக்கள் கண்டன எழுத்துக்களைக் கவனத்திற் கொள்ளாது இலக்கிய நூல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் அமைந்துள்ளன. இதனால் தருக்கவழியில் நிகழ்ந்த இலக்கியச் சர்ச்சைகளான கண்டனப் பிரதிகளின்வழித் தெரியவரும் இலக்கியப் பண்புகளும் அவற்றின் வரலாறும் நீங்கிய வரலாறே இலக்கிய வரலாறாகக் கருதப்படும் போக்கு நிலவுகிறது.
2. தமிழில் தருக்க நூற் கல்வியானது கருவிநூற் கல்வியாகவே மதிப்புப்பெற்று வந்துள்ளது. இலக்கணம், நிகண்டு முதலாய நூற்கல்விக்கு இணையாகத் தருக்க நூற் கல்வியும் போதிக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வியின் வருகையின் பின்னரேயே மேலைத்தேய அளவையியல் அறிமுகமானது. எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில வழிவரும் அளவையியலுக்கு நிகரானதாகத் தமிழ்வழி வரும் தருக்கக் கல்வி, தமிழ்ச் சூழலில் நிலவியது.
3. தமிழ்நாட்டின் கண்டன இலக்கிய மரபு தொடர்பான விரிவான விளக்கத்தினை, ப. சரவணன் தொகுத்த அருட்பா மருட்பா - கண்டனத் திரட்டு (2014) எனும் பெரும் நூலுக்கு ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதிய "தப்பை ஒப்பென்று தாபித்தலும், ஒப்பைத் தப்பென்று வாதித்தலும் : தமிழில் கண்டன இலக்கியம்" எனும் நீண்ட கட்டுரையில் காண்க.
4. ஆறுமுக நாவலரது எழுதிய கண்டனங்கள் அனைத்தினையும் ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு (1996) எனும் நூலில் காண்க. இந்நூல் நாவலரது கண்டனத் திறனை மாத்திரமன்றி, காலனியகால யாழ்ப்பாணத்தின் சமூக பண்பாட்டு அரசியலையும் தெளிவுறக் காட்டிநிற்கிறது.
5. பிரசங்க மரபு கண்டன மரபாக மாற்றமடையவில்லை. பிரசங்க மரபு கதாகலாட்சேபத்தின் நவீன வடிவம். ஆனால் கண்டன மரபு அச்சியந்திரத்தின் வருகையுடன் ஆரம்பித்த புதிய மரபு. காலனிய காலத்தில் உருவான புதிய தமிழ் அறிவுத்துறைகளுள் ஒன்று. அது மேலைத்தேய அளவையியலையொட்டி மிஷனரிகள் முன்வைத்த கண்டனங்களுக்கு நிகராகத் தருக்க சூடாமணியை அடிப்படையாகக்கொண்டு சைவத்தமிழ்ப் புலமை வெளியில் உருவான புதிய அறிவுத்துறை.
6. ஆறுமுக நாவலரது சைவதூஷண பரிகாரம் என்ற நூல் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வசிக்கும் சைவசமயிகளுக்காக எழுதப்பட்டதென்பதை "விக்கியாபனம்" எனும் பகுதியின் விளிப்புக் காட்டிநிற்கிறது. அப்பகுதி வருமாறு.
7. "அகிலலோக பூஷணமாய், அவித்தியா சோஷணமாய், அநாசார பேஷணமாய், அநந்தசுக போஷணமாய், அசேஷாரிகுலபீஷணமாய், ஆதிசச்சுருதி கோஷணந் தாங்கி அதுலசம்ஸ்கிருதபாஷணமோங்கி விளங்காநின்ற புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே, வடக்கின்கண்ணே திருவேங்கடமும், தெற்கின்கண்ணே குமரியும், எல்லையாகவுடைய திராவிடம் என்னுந் தமிழ்நாட்டின்கண்ணும், அத் தமிழ்நாட்டாரே பெரும்பான்மையுங் குடியேறப்பெற்ற ஈழதேசத்தின்கண்ணும் வசிக்கும் சைவசமயிகளே"

8. ஈழத்தின் கண்டன இலக்கிய மரபு குறித்த விரிவை இரா.வை. கனகரத்தினம் எழுதிய ஆறுமுக நாவலர் வரலாறு (2006) எனும் நூலிலும், யோகேஸ்வரி கணேசலிங்கம் எழுதிய நாவலர் வழியில் தமிழ் அறிஞர் (2000) எனும் நூலிலும் காண்க.
9. காலனிய கால யாழ்ப்பாணத்தில் அபரக் கிரியைசார் விதிகளை ஒழுங்குமுறைப்படுத்தி நூல்களாக எழுதியவர்களில் அச்சுவேலி ச. குமாரசுவாமிக்குருக்கள், நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். ச. குமாரசுவாமிக் குருக்களின் சிரார்த்த தீபிகை(1959), சைவசிரார்த்த விதி(1965) ஆகிய இரு நூல்களும் சங்கர பண்டிதரின் சபிண்டிகரணச் சிரார்த்த விதி(2016) என்ற நூலும் முக்கியமானவை. இந்நூல்களின் இரண்டாம் பதிப்புகளே இன்று கிடைக்கப் பெறுகின்றன.
10. ஆறுமுக நாவலரின் சைவவிரோதம் எனும் பெயரிலான கண்டனப் பிரசுரம் அபரக் கிரியை தொடர்பான சர்ச்சைக்குரிய பதிவுகளைக் கொண்டமைந்தது. இதனை நாவலர் முதன் முதலில் வெளியிடும்போது "ஓர் சைவன்" எனும் பெயரிலேயே வெளியிட்டார். நாவலரது கிறிஸ்தவ எதிர்ப்பும் சாதிசார் மனோநிலையும் அபரக் கிரியை தொடர்பான கருத்தாடலில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதை இப் பிரசுரத்தின்வழி அறிய முடிகிறது.

## உசாத்துணைகள்


அரசு, வீ., (2017) தமிழ்ச் செந்நெறிப் பிரதிகளைச் சைவமரபு எதிர்கொண்ட கதை, சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.

ஆறுமுகநாவலர்., (1852) சைவ தூஷண பரிகாரம், யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை.

இரகுபரன், க., (ப.ஆ.) (1996) ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

இரகுபரன், க., (2012) தமிழ் மொழிப்புலமை விருத்திக்கு வடமராட்சிப் புலமையாளர்களின் பங்களிப்பு, நிறுவுனர் தின நினைவுப் பேருரை,பருத்தித்துறை: வேலாயுதம் மகாவித்தியாலயம்.

இராசநாயகம், செ., (1934) யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆங்கிலேயர் காலம், கொழும்பு: விவேகானந்தா புத்தக நிலையம்.

ஈசுவரபிள்ளை, தா., (2006) பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

எட்வர்ட் கிண்டர்ஸ்லி நதானியல்., கோவிந்தராஜன், ந.,(மொ.பெ.) (2016) அதிகாரமும் தமிழ்ப் புலமையும், சென்னை: க்ரியா.

கணபதிப்பிள்ளை, சி., (1975) நாவலரும் கோயிலும், யாழ்ப்பாணம்: நாவலர் தர்ம பாதுகாப்புச் சபை.

கணேசலிங்கம், ப., (தொ.ஆ.) (2017) இலங்கையில் இந்து சமயம் (கி.பி 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில்), கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

கனகரத்தினம், இரா.வை., (2007) நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும், கொழும்பு: ஐ. இரத்தினம் ஞாபகார்த்த வெளியீடு.

குமாரசுவாமிக்குருக்கள், ச., (1965) சைவ சிரார்த்தவிதி, யாழ்ப்பாணம்: சேர் கந்தையா

வைத்தியநாதன் நினைவு வெளியீடு.

”””” (1959) சிரார்த்த தீபிகை, சென்னை: வித்தியாநுபாலன அச்சகம்.

சந்திரகாந்தன், ஏ.ஜே.வி., (தொ.ஆ.) (1993) தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம், யாழ். பல்கலைக்கழகம்: கிறிஸ்தவ மன்றம்.

சரவணன், ப.,(ப.ஆ.) (2019) அருட்பா மருட்பாக் கண்டனத் திரட்டு, நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

சனாதனன், தா., (2018) நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920-1990), கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சிவசம்புப் புலவர், அ., (1900) வல்வைச் சிவன்கோயில் சபிண்டி நாடக சங்காரம், யாழ்ப்பாணம்: அச்சுவேலி யந்திரசாலை.

சிவத்தம்பி, கா., (1995) யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம், கொழும்பு: சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழு.

”””” (2000) யாழ்ப்பாணம்: சமூகம் - பண்பாடு - கருத்துநிலை, கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சிவபாதசுந்தரம், சு., (1928) சைவக்கிரியை விளக்கம், யாழ்ப்பாணம்: சைவ

பரிபாலன சபை

சுதர்சன், செ., நீலகண்டன், கா., (ப.ஆ.) (2014) உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு - தேவபாகமும் மானுடபாகமும், உடுப்பிட்டி: புலவரில்லம்.

பரமசிவன், தொ., (2005) சமயங்களின் அரசியல்,சென்னை:கங்கு.

மயில்வாகனம், நா., (1974) ஐரோப்பியர் பார்வையில் இலங்கை, யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம்.

முத்துமோகன், ந., (2015) தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல் சென்னை: நியூ

செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

வேலுப்பிள்ளை, க., (1918) யாழ்ப்பாண வைபவ கௌமுதி, வசாவிளான்: ஜயஸ்ரீ

சாரதா பீடேந்திர சாலை.

வையாபுரி, மு.,(தொ.ஆ.) (2011) காலனியகால மதப்பிரசாரத்தில் கிருத்துவர்கள் - இந்துக்கள், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.

ஜெபநேசன், எஸ்., (2009) இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன், கொழும்பு ___ சென்னை: குமரன் புத்தக இல்லம்.

ஸெய்த், எட்வர்ட்., ரவிக்குமார்., (மொ.பெ.) (2010) அதிகாரத்திடம்

உண்மையைப் பேசுதல், புதுச்சேரி: மணற்கேணி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி., (2010) சென்னை: க்ரியா.

கழகத் தமிழ் அகராதி., (2017) சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

தமிழ் லெக்சிக்கன்., (1982) சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.

*மதுரைத் தமிழ்ப் பேரகராதி., (2008) சென்னை: சந்தியா பதிப்பகம்*

*வின்சிலோ தமிழ் - ஆங்கில அகராதி., (1992) சென்னை: ஏசியன் எடிடுகேஷனல் சேவிஸ்*

Bhabha, Homi k., (2013) The Location of Culture, London and Newyork: Routledge.

Blackburn, Stuart., (2003) Print, Folklore and Nationalism in Colonial South India, New Delhi: Permanent black.

Harlow, Barbara., (1987) Resistance Literature, New York and London:

Jayasekera, P.V.J., (2017) Confrontations with Colonialism, Resistance, Revivalism and Reform Under British Rule in Sri Lanka 1796 - 1920, Colombo: Vijitha Yapa Publications.

Panikkar, K.N., (2009) Colonialism, Culture and Resistance, India: Oxford university press.

Said, W. Edward., (1993) Culture and Imperialism, London: Vintage Books.

Shulman, David., (2016) Tamil A Biography, London, England: The Belknap Press of Harvard University press.

# யாழ்ப்பாண அரசுகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் ஓர் வரலாற்றுப்பார்வை

க.ஜெயதீஸ்வரன்

---

## ஆய்வு அறிமுகம்

மத்தியகால இலங்கை வரலாற்றில் வடபகுதியில் தோற்றம்பெற்றிருந்த ஓர் அரசாக யாழ்ப்பாண அரசு விளங்குகின்றது. இவ்வரசின் தோற்றம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்தாலும் இவ்வரசு கி.பி 13ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்ததென்பது இன்றுவரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாக உள்ளது. இவ்வரசு ஆரியச்சக்கரவர்த்திகள் என்போரால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்டிருந்ததுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்திய வகையில் தோற்றம் பெற்றிருந்ததனால் யாழ்ப்பாண அரசு என்ற பெயரைப் பெற்றிருந்தது. இவ்வரசு யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதனைச் சுற்றியிருந்த தீவுகளையும், வன்னியின் சில பகுதிகளையும், மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியவகையில் யாழ்ப்பாண இராச்சியமாகத் திகழ்ந்தது. இவ்வாறு விளங்கிய இவ்வரசு கி.பி 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டுத் துறைகளில் பெருவளர்ச்சி பெற்றிருந்ததை இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களின் மூலம் அறியமுடிகின்றது. இவ்வரசின் எழுச்சிக்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியாக விளங்கியவகையில் அவற்றில் ஒன்றாக பொருளாதாரக் காரணிகளும் விளங்கியிருந்தன. பொதுவாக எந்த ஒரு அரசின் எழுச்சிக்கும் பொருளாதாரம் அடித்தளமாக விளங்குவது முக்கியம் என்றவகையில் யாழ்ப்பாண அரசின் எழுச்சிக்கும் பொருளாதாரம் அடித்தளமாக விளங்கியிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண அரசின் பொருளாதாரத்தில் இயற்கை வளங்களான முத்து, யானைகள், சாயவேர் ஆகியவை முக்கிய இடம் பெற்றிருந்ததுடன் உள்ளூர் உற்பத்திகளும் இடம்பிடித்திருந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கை அரசிற்கு பெருமளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுத்து அரசு பொருளாதாரரீதியில் சிறப்புநிலையை அடைவதற்கு வழியமைத்துக் கொடுத்தது. இவ்வாறு காணப்பட்ட பொருளாதார வளங்களை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுடனும் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவற்றுள் உள்நாட்டிற்குள் முன்னெடுக்கப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவிற்கு தென்னிலங்கை மற்றும் வன்னிப்பகுதிகளுடனும், வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை தென்னிந்தியா, சீனா,

யாவா, பாரசீகம், கிரேக்க மற்றும் உரோம நாடுகளுடன் இடம்பெற்று வந்தது. இவ்வாறான வர்த்தக நடவடிக்கையில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தரைவழியாக கடவைகளூடாகவும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் வடபகுதியில் காணப்பட்ட துறைமுகங்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியாக எழுச்சியடைவதற்கு வித்திட்டிருந்ததுடன் யாழ்ப்பாண அரசின் புகழ் சர்வதேச அளவில் பரவவும் வழிவகுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண அரசுகாலத்திற்கு முன் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள்

வட பகுதியில் யாழ்ப்பாண அரசு கி.பி 13ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்தாலும் இப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலப்பகுதியிலிருந்து ஆரம்பித்திருந்ததென அண்மைக்கால ஆய்வுகள் நிரூபித்திருக்கின்ற வகையில் இக்காலம் முதலே இப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பாக, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததை தொல்லியற் சான்றுகள் மூலமாக அறியமுடிகின்றது. இந்தவகையில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலமான வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் இப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெற்று வந்ததையும் இப்பின்னணியில் அவ்வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த மையங்கள் நகரமயமாக்கத்திற்கு உட்பட்டு சிறந்த நகரங்களாக புராதன காலத்தில் எழுச்சி கண்டிருந்தன. வட பகுதியில் இவ்வாறு எழுச்சிகண்ட நகரங்களாக மாந்தை, கந்தரோடை, பூனகரி, யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள பகுதி ஆகியவை விளங்கின (புஷ்பரட்ணம்,2017,ப.54). இப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், மட்பாண்டச் சிதைவுகள் ஆகியவை இவற்றிற்கு ஆதாரமாக விளங்குகின்றன. இவ்வாதாரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டு வந்ததைக் காண முடிகின்றது.

வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகளில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக முதலில் நோக்கும்போது புராதன காலம் முதல் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததை புராதன காலக் குடியிருப்பு மையங்களாக அடையாளங் காணப்பட்ட கந்தரோடை, வல்லிபுரம், குடத்தனை, வேலனை, நெடுந்தீவு, பூனகரி, மாந்தை, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் கிடைக்கப்பட்ட அச்சுக்குத்திய நாணயங்களும், இலக்குமி நாணயங்களும் சான்றாக அமைகின்றன (சிற்றம்பலம்,1993,ப,494). இந்நாணயங்கள் சுதேச நாணயங்களாகக் காணப்படுவதனால் இந்நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டுமென கூறமுடியும். அடுத்து இப்பகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கை புராதன காலத்தில் முன்னெடுக்கப்

பட்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாக வவுனியா பெரியபுளியங்குளக் கல்வெட்டு விளங்குகின்றது. கி.மு 3ஆம் அல்லது 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் காணப்படும் இக்கல்வெட்டில் தமிழ்வணிக கணத்தினர் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததை அறியமுடிகின்றது (இந்திரபாலா,2006,ப,173.). இக்கல்வெட்டின் அடிப்படையில் தமிழர்கள் இப்பகுதிகளில் அதிகம் வாழ்ந்துவந்ததனால் இப்பகுதியின் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கையில் தமிழ் வணிகர் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர் எனலாம்.

வடபகுதியில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட காலத்திலும் மேற்கொள்ளப்பட்டதற்கு ஆதாரமாக சோழர்கால ஆதாரங்கள் விளங்குகின்றன. சோழர் காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சோழ வணிக கணத்தினர் வெளிநாட்டவராக விளங்கினாலும் அவர்களே உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்ததை அறியமுடிகின்றது. இவ் வணிக கணத்தினருள் பல்வேறு பிரிவினர்கள் காணப்பட்டாலும் அவர்களுள் நானாதேசிகர்கள் மற்றும் ஐநூற்றுவர் ஆகியோரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. இவர்களுள் நானாதேசிகரது நடவடிக்கை வடபகுதியின் பூனகரிப்பகுதியில் இடம் பெற்றிருப்பதை பதவியாவிலுள்ள 1ஆம் இராஜராஜனது கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. ஐநூற்றுவரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றிருப்பதை யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலுள்ள இடம் ஐநூற்றுவன் வளவு என அழைக்கப்படுவதன் மூலம் அறியமுடிகின்றது (சிற்றம்பலம், 1993,ப,487.).

வடபகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பது தொடர்பாக வட பகுதியையும் தென்பகுதியையும் இணைக்கும்வகையில் அமைக்கப்பட்டிருந்த பாதைகள் மூலம் அறியமுடிகின்றது. இந்தவகையில் புராதன காலம் முதல் மாதோட்டத்திலிருந்து அநுராதபுரத்திற்கும், ஜம்புகோளப் பட்டணத்திலிருந்து அநுராதபுரத்திற்கும் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தமை தொடர்பான கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது. இதனை உறுதிப்படுத்துவதாக கோகில சந்தேசய எனும் சிங்கள இலக்கியம் தகவல் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இவ் விலக்கியம் தெவுந்தர, மாத்தறை, பாணந்துறை, கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மன்னார் ஊடாக யாழ்ப்பாணம் வரை பாதை அமைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடுகின்றது (Sriweera,2002,p.p133-134.). இவ்வாறு இவ் விலக்கியம் குறிப்பிடும் பாதை அமைப்பினூடாக வட பகுதி புராதன காலம் முதல் தென்பகுதியுடன் தரைவழியூடாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

வடபகுதியில் புராதன காலம் முதல் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவந்ததுபோல் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. இந்தவகையில் இவ் வர்த்தக நடவடிக்கைகள் வடபகுதியில் காணப்பட்ட ஆரம்பகால புகழ்பெற்ற துறைமுகங்களான மாந்தை, ஜம்புகோளத்துறை ஆகியவற்றுடன் வல்லிபுரம்,

பூனகரி, ஊர்காவற்துறை, அல்லைப்பிட்டி ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ் வெளிநாட்டு வர்த்தகத்தில் இந்தியா, கிரேக்க, உரோமநாடுகளும் பிற்பட்ட காலத்தில் அராபியர், சீனர் ஆகியோரும் ஈடுபட்டு வந்தனர். இவ் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை ஆரம்பகாலங்களில் தென்னிந்தியா ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அதாவது ஆரம்பகாலங்களில் தென்னிந்திய வர்த்தகர்கள் இலங்கைத் துறைகளுக்கு வருகைதந்து வர்த்தகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தென்னிந்தியத் துறைகளுக்குக் கொண்டு சென்று அங்கிருந்தே கிரேக்க உரோமர்களுக்கு விற்பனை செய்து வந்தனர் (சிற்றம்பலம், 1993,ப,473.). தென்னிந்தியத் துறைகளுக்கு வருகைதரும் கிரேக்க உரோமர்களும் இலங்கைத் துறைகளுக்கு நேரடியாக வருகைதராது அங்கிருந்தே தமக்குத் தேவையான இலங்கையின் வர்த்தகப் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தனர். இதனால் தென்னிந்தியர்களே ஆரம்பகால வெளிநாட்டு வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்தனர். ஆனால் பிற்பட்ட காலத்தில் கிரேக்க உரோமர் முதலிய வெளிநாட்டவர் நேரடியாகவே இலங்கையுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவ் வெளிநாட்டு வர்த்தகத்தில் வடபகுதியின் இயற்கை வளங்களான முத்து மற்றும் யானை ஆகியன முக்கிய இடம் பெற்றிருந்தன.

வடபகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் புராதன காலம் முதல் மேற்கொள்ளப்பட்டுவந்ததை வட பகுதியின் ஆரம்பகாலக் குடியிருப்பு மையங்களாக விளங்கிய கந்தரோடை, வேலணை, பூனகரி, நெடுந்தீவு, யாழ்ப்பாணக் கோட்டைப்பகுதி போன்ற பகுதிகளில் கிடைக்கப்பட்ட ரோமன் ரௌலட் மட்பாண்ட சிதைவுகளும் கிரேக்க உரோம நாணயங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. இச் சான்றுகளின் அடிப்படையில் வட பகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலம் முதலே இடம் பெற்று வந்ததைக் காண முடிகின்றது. இவ்வர்த்தக நடவடிக்கைகள் கி.பி 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்திருந்ததை இவர்களது நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறான நாணயங்கள் வடபகுதியின் கந்தரோடை, வல்லிபுரம், மண்ணித்தலை, வெட்டுக்காடு, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளிலிருந்து பெறப்பட்டிருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது (சிற்றம்பலம், 1993,ப,500.). வடபகுதியுடன் புராதன காலம்முதல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த கிரேக்க உரோமரது செல்வாக்கு கி.பி 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் குறைவடைய இப்பகுதிகளில் இந்தியர், அரேபியர், சீனர் ஆகியோரது வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின.

வட பகுதியின் வர்த்தக நடவடிக்கையில் புராதனகாலம் முதல் தென்னிந்தியர் ஈடுபட்டமை தொடர்பாக கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டியர்கால நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது. இந்நாணயங்கள் கி.மு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இனங்காணப்பட்டுள்ளன. இந்தவகையில் வட பகுதியுடனனான தென்னிந்தியாவின் வர்த்தகத் தொடர்பும் மிகவும் தொன்மையானதெனக் கூறலாம். இவ்வாறான வர்த்தகத்தொடர்பு தொடர்ந்தும் பேணப்பட்டிருப்பதை பூனகரிப்

பகுதியிலுள்ள கல்முனை, வெட்டுக்காடு, ஈழவூர் ஆகிய பகுதிகளில் கிடைத்த கி.பி 10ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த பாண்டியரது நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது (சிற்றம்பலம்,1993,ப,501). இதேபோல் பல்லவர்கால நாணயங்கள் கந்தரோடையிலும் திருக்கேதீஸ்வரப் பகுதியிலும் கிடைத்திருப்பது இக்காலப்பகுதியிலும் புராதன காலம் முதல் தென்னிந்தியர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றது. இவர்களை அடுத்து சோழர்காலத்தில் தென்னிந்தியர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததை காணமுடிகின்றது. சோழர் காலத்தில் வடபகுதியின் துறைமுகங்களான மாந்தை மற்றும் ஊர்காவற்துறை ஆகியவை வெளிநாட்டு வர்த்தகத்தின் பொருட்டு புகழ்பெற்றுத் திகழ்ந்தன. இவற்றுள் மாந்தைத் துறைமுகத்தில் சோழ வணிககணங்களது வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதை இங்கு கிடைத்துள்ள 1ஆம் இராஜேந்திரன் காலக் கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. இதுபோல் சோழ வணிககணத்தினரது வர்த்தக நடவடிக்கைகள் ஊர்காவற்துறைத் துறைமுகப் பகுதிகளில் இடம் பெற்றிருப்பதை இதன் அருகிலுள்ள ஊரான நாரந்தனைப் பகுதியில் 1951ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற 1ஆம் இராஜராஜன் காலத் தங்கநாணயம் மூலம் அறியமுடிகின்றது. இது போல் வடபகுதியில் உள்ள தீவுகள், குடாநாட்டுப்பகுதிகள், வன்னிப்பகுதிகள் ஆகியவற்றில் கிடைத்துவரும் சோழர்கால நாணயங்கள் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் இக்காலத்தில் அதிகரித்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. சோழராட்சியை தொடர்ந்து வடபகுதியில் பிற்பட்டகாலங்களில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஊர்காவற்துறை துறைமுகம் முக்கிய இடம் பெற்றுத் திகழ்ந்தது. இதன் காரணமாகவே 1ஆம் பராக்கிரமபாகு இத்துறைமுகத்தினூடாக இடம்பெற்ற வர்த்தகத்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் பொருட்டு கல்வெட்டு வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியரை அடுத்து வடபகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாக அராபியர் மற்றும் சீனர் ஆகியோர் விளங்குகின்றனர். இவர்களுள் அராபியரது நடவடிக்கைகள் வடபகுதியில் இடம் பெற்றது தொடர்பாக இக்காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த அராபியர்களான அபுசாயிக், மஸ்ஊடி, எல்எதிரிசி, எல்கஸ்வானி போன்றோரது குறிப்புக்கள் மூலம் அறியமுடிகின்றது. இவர்கள் தமது குறிப்புக்களில் யாழ்ப்பாணம் தொடர்பாகவும் இங்கு இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கை தொடர்பாகவும் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அக்காலத்தில் இடம் பெற்ற வர்த்தக நடவடிக்கை தொடர்பாக அறியமுடிகின்றது. இதேவேளை அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டுக்கரைக் குளப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது அராபிய மட்பாண்டங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளமையானது இப்பகுதியில் அராபியரது வர்த்தக நடவடிக்கை இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அராபியரை போன்று சீனர்களும் வடபகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் மாந்தை மற்றும்

அல்லைப்பிட்டிப் பகுதியில் அதிகரித்திருந்தது. இதனை உறுதிப்படுத்துவதாக இப்பகுதிகளில் கிடைக்கப்பட்ட சீன மட்பாண்டங்களும், சீன நாணயங்களும் விளங்குகின்றன. வடபகுதியில் சீனரது வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றதை உறுதிப்படுத்துவதாக இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோன் காஸ்வெல் என்பவர் 1970 ஆம் அண்டு மாந்தை மற்றும் அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைக்கப்பட்ட சீன மட்பாண்டங்கள் சான்றாக அமைகின்றது. இவ்வகை மட்பாண்டங்கள் கி.பி 12ஆம் மற்றும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக அடையாளங்காணப்பட்டுள்ளன (சிற்றம்பலம், 1993,ப.ப,490-491). இந்தவகையில் பிற்பட்ட காலத்தில் சீனரது வர்த்தக நடவடிக்கை இப்பகுதிகளில் அதிகரித்திருந்ததைக் காணமுடிகின்றது. இவ்வாறாக வடபகுதியில் கிரேக்க, உரோமர், தென்னிந்தியர், அராபியர், சீனர் ஆகியோர் புராதன காலம் தொட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

### யாழ்ப்பாண அரசுகால வர்த்தகம்

கி.பி 13ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருந்த யாழ்ப்பாண அரசானது கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை எழுச்சிபெற்றுத்திகழ்வதற்கு அதன் பொருளாதார வளங்களும் ஓர் காரணமாகத் திகழ்ந்தது. குறிப்பாக யாழ்ப்பாண அரசர்கள் இப்பகுதியின் இயற்கை வளங்கள், உற்பத்திகள், சமூகவழமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து யாழ்ப்பாண அரசின் பொருளாதாரம் சிறந்தநிலையை அடைவதற்கான வழியை ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறான இவர்களது பொருளாதார நிலையில் இக்காலத்தில் முன்னெடுத்துவந்த வர்த்தகமானது முக்கிய இடம் பெற்றுத்திகழ்ந்தது. இதன் மூலமாக அரசு பெருமளவு வருமானத்தையும் பெற்றுவந்தது. இவ் வர்த்தக நடவடிக்கையில் அரசானது இராச்சியத்தில் காணப்பட்ட இயற்கைவளங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கையை அரசின் ஏகபோக உரிமைபெற்ற தொழில் என்ற கொள்கையின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தமை இவ்வரசின் பொருளாதாரக் கொள்கையின் சிறப்பை பறைசாற்றுகின்றது. இக்கால வர்த்தகமானது உள்நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ் வர்த்தக நடவடிக்கைகள் தரைவழியாக கடவைகள் மற்றும் வடபகுதித் துறைமுகங்களான மாதோட்டம், அரிப்பு, மன்னார், கச்சாய், கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறை ஆகியவற்றி னூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தன (பத்மநாதன்,2011,ப,157). இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையின் போது கடவைகள் மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றில் அரசு சுங்கச்சாவடிகளை நிறுவி சுங்கவரிகளை அறவிட்டு வந்தது. இதன் மூலம் பொருளாதாரரீதியாக அரசிற்கு குறிப்பிட்டளவு வருமானம் கிடைத்துவந்தது குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு வர்த்தகம்

யாழ்ப்பாண இராச்சியத்தில் விளைந்த உற்பத்திப் பொருட்கள் அப்பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வந்ததுடன் பிறதேசங்களுக்கும் அவை விற்பனை செய்யப்பட்டு வந்தன. இந்தவகையில் இக்காலத்தில் உள்நாட்டு வர்த்தகமானது கண்டி இராச்சியத்துடனும், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுடனும் இடம்பெற்று வந்ததைக் காணமுடிகின்றது. குறிப்பாக இவ்வர்த்தகத்தின் பொருட்டு கிழக்கிலங்கையிலிருந்து நெல், அரிசி ஆகியவற்றை யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்குக் கடல் மார்க்கமாக வணிகர்கள் ஏற்றிவந்தனர். இதேவேளை கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே வர்த்தக நடவடிக்கைகள் தினமும் இடம்பெற்று வந்ததைக் காண முடிகின்றது. இவ்வர்த்தக நடவடிக்கையின்போது கண்டி இராச்சியத்தில் விளைந்த மிளகு, பாக்கு, மஞ்சள், இஞ்சி, கராம்பு, அரிசி, நெல் ஆகியவை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டது (பத்மநாதன், 2011,ப,156). இக்காலத்தில் கண்டி இராச்சியத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கையானது யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்த துறைமுகங்களூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றதை அறியமுடிகின்றது. இவ் வர்த்தக நடவடிக்கையானது தரைவழியாகவும், கடல்வழியாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. வன்னியின் பூனகரிப் பகுதியானது குடாநாட்டிற்கு அண்மையில் காணப்பட்டதனால் அப்பகுதியூடாக வன்னிப் பகுதியை சென்றடைவது இலகுவாக இருந்ததனால் கொழும்புத்துறையூடாக கடல்மார்க்கமாகப் போக்குவரத்து இடம்பெற்றுவந்தது. இதனால் கொழும்புத்துறை வன்னியுடனான வர்த்தகத்தின் பொருட்டு முக்கியம்வாய்ந்த துறைமுகமாக இக்காலத்தில் எழுச்சிகண்டிருந்தது. இதனால் இத்துறைமுகப்பகுதியில் அரசு சுங்கச்சாவடியை நிறுவி சுங்கவரியை அறவிட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக முன்னெடுக்கப்பட்டுவந்த உள்நாட்டு வர்த்தகத்தின் மூலம் யாழ்ப்பாண அரசின் பொருளாதாரம் சிறந்த நிலையை அடைந்துவந்ததெனக் கூறலாம்.

## வெளிநாட்டு வர்த்தகம்

யாழ்ப்பாண அரசு இக்காலத்தில் தென்னிந்தியா, சீனா, யாவா, பாரசீகம், கிரேக்க உரோம நாடுகள் ஆகியவற்றுடன் வர்த்தக உறவைப் பேணியிருந்தது. இந்நாடுகளுடன் இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னார்க் கடலில் இருந்து பெறப்பட்ட முத்து, சங்கு, வன்னிப்பகுதியில் இருந்து பிடிக்கப்பட்ட யானைகள், சாயம், தென்பகுதியில் உற்பத்தியாகிய கறுவா, வடபகுதியின் வளமான பனை உற்பத்தி மற்றும் சில உள்நாட்டு உற்பத்திகளான எண்ணைவகை மற்றும் தெங்கு உற்பத்திகள் ஆகியவை இடம்பிடித்திருந்தன. இவற்றுள் முத்து, யானை, சாயம் ஆகியவை முக்கியம் வாய்ந்த வர்த்தகப் பொருட்களாக விளங்கியிருந்ததுடன் அவற்றின் மூலம் அரசு பெருமளவான வருமானத்தைப் பெற்றுவந்தது. இதனால்

அரசு இவ் வர்த்தக நடவடிக்கையை தனது ஏகபோக உரிமைபெற்ற தொழிலாக மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது (பத்மநாதன்,2011,ப.ப,150-157.).

யாழ்ப்பாண அரசு காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த நாடுகள் வரிசையில் தென்னிந்தியா முக்கிய இடம் பெற்றுத்திகழ்ந்தது. இவ்வர்த்தக உறவு புராதன காலம் தொட்டு இடம்பெற்று வந்த வர்த்தக உறவின்

தொடர்ச்சியாகவே திகழந்தது. இந்தவகையில் இக்காலத்தில் தென்னிந்தியாவின் பாண்டிய அரசு, நாயக்க அரசு, பாமினி அரசு ஆகியவற்றுடன் வர்த்தக நடவடிக்கைகளை பெருமளவில் மேற்கொண்டிருந்தது. இத்தென்னிந்திய அரசுகளுடனான வர்த்தக நடவடிக்கைகள் மலையாளம், சோழமண்டலக்கரை ஆகியவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இத்தென்னிந்தியப் பகுதிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கைகள் மூலம் அங்கிருந்து அரிசி முதலிய உணவுப் பொருட்களும், மென்மையான புடவைகள், பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு, இரும்பு, முதலிய பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதியாகின. அதுபோல் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து யானை, முத்து, சங்கு, சாயம், கறுவா, பனை உற்பத்திகளான பனங்கட்டி, கற்காரம், பனை ஓலைப்பாய், கடகம், எண்ணை வகைகளான வேப்பெண்ணை, இலுப்பை எண்ணை, தேங்காய் எண்ணை ஆகியவையும், தென்னை உற்பத்திகளான தேங்காய், கயிறு ஆகியவை இப்பகுதிகளுக்கு ஏற்றுமதியாகின (பத்மநாதன்,1992,ப.ப,126-127).

இக்காலத்தில் தென்னிந்தியாவின் கயல் பட்டணம் வர்த்தகத்தின் பொருட்டு சிறந்த பட்டணமாக விளங்கியது. இப்பட்டணத்திலே மன்னார் முத்துக்கள் விற்பனையாகிவந்தன. இப்பட்டணம் இக்காலத்தில் சர்வதேச வர்த்தக நிலையமாகத் திகழ்ந்தது. இங்கு வருகைதந்த வெளிநாட்டு வர்த்தகர்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து தமது நாடுகளில் விற்பனைசெய்து வந்தனர். யாழ்ப்பாண அரசின் மன்னார் முத்துக்கள் இப்பட்டணத்தில் விற்பனையாகியதால் இதனூடாக யாழ்ப்பாண அரசு சர்வதேச வர்த்தகத் தொடர்பைப் பேணிவந்தது. இதற்கு ஆதாரமாக வெனிசிய நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறிப்பிடும் தகவல் ஆதாரமாக விளங்குகின்றது (பத்மநாதன்,1992,ப.126). இவர் கயல் பட்டணத்திற்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்றதாகக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் யாழ்ப்பாண அரசு காலத்தில் தென்னிந்தியாவுடனான வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக இருந்ததுடன் தென்னிந்தியா ஊடாக பிறநாடுகளுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்ததைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாண அரசுகாலத்தில் தென்னிந்தியா ஊடான பிறநாடுகளுடனான வர்த்தக நடவடிக்கை இடம்பெற்று வந்த அதேவேளை நேரடியாகவும் வர்த்தக நடவடிக்கை இடம்பெற்று வந்ததைக் காணமுடிகின்றது. இதற்கு ஆதாரமாக வெளிநாட்டுப் பயணியான இபன் பதூதாவின் குறிப்புக்கள் காணப்படுவது

சுட்டிக்காட்டத்தக்கது. இவரது தகவலின் ஊடாக நோக்கும்போது இபன் பதூதா இலங்கைக்கு வருகைதந்த சமயம் ஆரியச்சக்கரவர்த்தி வலிமைமிக்கவனாக விளங்கினான் எனவும் இவன் நூற்றுக்கணக்கான நவாய்களை வைத்திருந்து வர்த்தகத்தின் பொருட்டு அவற்றைப் பயன்படுத்திவந்தான் எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறான நூற்றுக்கணக்கான நவாய்கள் ஒருநாள் அராபிய நாடான யெமன் நோக்கிப் பயணித்ததைத் தான் கண்டதாகக் குறிப்பிடுகின்றார் (பத்மநாதன்,1992,ப,110). இவருடைய குறிப்பின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகள் மத்தியகிழக்கு நாடுகள்வரை தங்களது வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருந்ததை அறியமுடிகின்றது. இதற்கு ஒரு காரணம் இக்காலப் பகுதியில் மேலைத்தேசத்திற்கும், கீழைத்தேசத்திற்குமிடையிலான வர்த்தக நடவடிக்கையில் அராபியர்களும், பாரசீகர்களும் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்தனர். இப்பின்னணியிலேயே ஆரியச்சக்கரவர்த்திகள் மத்தியகிழக்கு நாடுகளுடன் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கையின் பொருட்டு நேரடியான தொடர்புகளைப் பேணிவந்தனர். இத் தொடர்பின் காரணமாக யாழ்ப்பாண அரசில் பாரசீகரது செல்வாக்கு அதிகரித்திருப்பதையும் காணமுடிகின்றது. இது தொடர்பாக இபன் பதூதா தகவல் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் தான் பட்டாள நகரில் சந்தித்த ஆரியச்சக்கரவர்த்தி பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்றிருந்ததாகக் குறிப்பிட்டிருப்பது இதற்குச் சிறந்த ஆதாரமாக விளங்குகின்றது.

யாழ்ப்பாண அரசு இராச்சியத்தில் காணப்பட்ட வளங்களான முத்து, யானை, சாயம் ஆகியவற்றை விற்பனை செய்தமை மூலம் பெருமளவு வருமானத்தை பெற்றுவந்த அதேவேளை தென்னிலங்கையின் வளமான கறுவாவை விற்பனை செய்தமை மூலமும் வருமானத்தைப் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெற்ற வாசனைச் சரக்குகளில் கறுவா பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. இது உணவுகளைச் சுவையூட்டுவதற்கும், மருந்துகளைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் கறுவாவிற்கு மிகப்பெரிய கேள்வி இருந்துவந்தது. அதிலும் இலங்கையில் உற்பத்தியாகிய கறுவா தரம்மிக்கதாகக் கொள்ளப்பட்டது. இவை அராபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. யாழ்ப்பாண அரசு கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வலிமை வாய்ந்ததாக எழுச்சியடைந்து இருந்ததனால் யாழ்ப்பாண அரசர்கள் தமது மேலாதிக்கத்தை தென்னிலங்கை மீது ஏற்படுத்தியதன் மூலம் கறுவா வர்த்தகத்தை தமது கடடுப்பாட்டின்கீழ் வைத்திருந்து மேற்கொண்டு வந்தனர். இவ்வர்த்தகம் தொடர்பாக இபன் பதூதா தகவல் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. இவர் தனது குறிப்பில் குறிப்பிடும்போது யாழ்ப்பாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்த துறைமுகங்கள் ஒன்றினூடாக கறுவா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தெனவும் ஏற்றுமதிக்காக கரையோரப் பகுதிகளில் கறுவாவினை குன்றங்கள் போல் அடுக்கியிருந்தனர் எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் இவ்வாறு காணப்பட்ட கறுவாவினை மலையாளம், தமிழகம் ஆகிய பகுதிகளில் இருந்து வருகின்ற வணிகர்கள் துணிகள் முதலானவற்றை ஆரியச்சக்கரவர்த்திகளிடம் கொடுத்துவிட்டு

கறுவாவினை ஏற்றிச்சென்றதாகக் குறிப்பிடுகின்றார் (பத்மநாதன்,1992,ப,127). இவ்வாறாக தென்னிலங்கையில் உற்பத்தியாகிய கறுவாவினை தென்னிலங்கையில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தியமை மூலம் பெற்று விற்பனை செய்தமை மூலம் வருமானத்தைப் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசின் ஏகபோக உரிமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த வர்த்தக நடவடிக்கை

யாழ்ப்பாண அரசு காலத்தில் இராச்சியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்பட்ட இயற்கை வளங்கள் அரச உடமையாகக் காணப்பட்டதன் அடிப்படையில் அவ் இயற்கைவளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகள் அரசின் ஏகபோக உரிமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை அதன் இயற்கை வளங்களாக கடல், காடு ஆகியவை காணப்பட்டன. இவற்றிலிருந்து கிடைக்கும் பொறுமதியான பொருள்கள் வரிசையில் காட்டிலிருந்து சாயவேர், யானைகள், பெறுமதியான மரங்கள் ஆகியவையும் கடலிலிருந்து பெறப்படும் முத்து, சிப்பி,சங்கு, உப்பு ஆகியவையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகமும் அரசின் கீழே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவற்றுள் முத்து, யானை, சாயம் ஆகியவை முக்கியமான வர்த்தகப்பொருட்களாக விளங்கியிருந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தின் மூலம் அரசு பெரும் வருவாயையும் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

### முத்து வர்த்தகம்

யாழ்ப்பாண இராச்சியத்தை பொறுத்தவரை கடல் வளத்திலிருந்து கிடைத்த வளங்களில் முக்கியம்வாய்ந்ததாக முத்துக்கள் திகழ்ந்தன. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இடம்பெற்றுவந்த முத்து வர்த்தகத்திற்கான முத்துக்கள் மன்னார்க் கடலில் இருந்தே பெறப்பட்டு வந்தன (குலசபாநாதன்,1949,ப,35). இம் முத்துக்கள் சர்வதேச வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததுடன் இவ் வர்த்தகத்தின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகள் பெருமளவு வருமானத்தையும் பெற்றுவந்தனர். இதனால் முத்துவர்த்தகமானது அரசின் ஏகபோக உரிமைபெற்ற வர்த்தகமாக இக்காலத்தில் காணப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்த ஜோர்தான்ஸ் எனும் வெனீசிய நாட்டைச்சேர்ந்த பாதிரியார் 8000 படகுகள் மன்னார்க் கடலிலே முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றார். இவுன்பதுதா எனும் யாத்திரிகன் இலங்கைக்கு வருகைதந்த சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தி ஒருவன் முத்துச்சலாபத்திற்கு சமீபமாக தங்கியிருந்து அதனை மேற்பார்வை செய்துவந்ததாக குறிப்பிட்டுள்ளார் (பத்மநாதன்,2011,ப,154). அக்காலத்தில் மன்னார்க் குடாவில் இருந்து பெறப்பட்ட முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்துவந்த வணிகர்களால் வாங்கிச்செல்லப்பட்டது.

முத்துக்குளிப்பானது சித்திரை, வைகாசி, ஆகிய மாதங்களில் நடைபெற்றுவந்தது. அக்காலங்களில் அரசன் அப்பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்திவைப்பதுடன்

முத்துக்குளிப்போர், வியாபாரிகள், அரசஅதிகாரிகள் ஆகியோர் அப்பகுதிகளில் தங்கியிருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துவந்தான். முத்துக்குளிப்பின்போது பெறப்பட்ட முத்துக்களில் அரைப்பங்கு அரசனுக்குரியதாகும் மிகுதியை தோணிகளில் செல்வோர் தமக்கிடையே பகிர்ந்துகொள்வர். அவர்கள் தமது முத்துக்களை வணிகர்களுக்கு விற்பனை செய்துவிட்டு தமக்குத்தேவையான உணவுப்பொருட்களையும், புடவைகளையும் பெற்றுக்கொள்வர். முத்துக்குளிப்புக் காலத்திலே மாதோட்டத்தில் சனப்புழக்கமும், பண்டமாற்றும் கணிசமான அளவில் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. முத்துக்களை கொள்வனவு செய்யும் வணிகர்கள் அவற்றை தென்னிந்தியத் துறைமுகப் பட்டணங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனைசெய்து வந்தனர் (பத்மநாதன்,2011,ப,156). முத்துக்குளிப்புடன் தொடர்பான சந்தைகளில் விற்பனையாகிய பொருள்கள் மீதும் அரசு வரி அறவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் கடலில் இருந்து பெறப்பட்ட முத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட வர்த்தகம் தவிர மீன்பிடி, கருவாடு பதனிடல், சங்கு பிடித்தல், உப்பு உற்பத்திசெய்தல் ஆகிய பல தொழில்கள் மூலமும் வருமானம் பெறப்பட்டு வந்தது (முத்துத்தம்பிப்பிள்ளை, 1915). இத் தொழில்களை யாழ்ப்பாண இராச்சியத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்கள் மேற்கொண்டுவந்ததுடன் இவர்கள் யாழ்ப்பாண சமூகத்தில் இருந்த சாதிக் கட்டமைப்பில் தனிப்பிரிவினராகக் கணிக்கப்பட்டு வந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் உற்பத்தியான உப்பிற்கு பெருவரவேற்பு கிடைத்திருந்தமை தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை பல தகவல்களை தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது (குலசபாநாதன்,1949). இவ்வாறு கடல் தொழிலில் ஈடுபட்டுவந்த மக்கள் கடலுக்குச் சென்று பெற்றுவந்த கடல் திரவியங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதார வளத்திற்கு உறுதுணையாக விளங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

### யானை வர்த்தகம்

யாழ்ப்பாண அரசர் காலத்தில் அரசுக்கு வருமானம் கிடைக்கும் மற்றொரு இயற்கை வளமாகக் காடுகளில் இருந்து பிடிக்கப்படும் யானைகள், பெறுமதிவாய்ந்த மரங்கள் ஆகியவை விளங்கின. இயற்கை வளமான காடுகள் அரச உடமைகளாகக் காணப்பட்டதனால் காட்டிலிருந்து பெறப்படும் யானை மற்றும் மரங்கள் விற்பனை அரசின் ஏகபோக உரிமைபெற்றவையாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை வன்னிப்பகுதியில் யானைகள் பெருமளவில் காணப்பட்டதனால் வன்னிப்பற்றுக்களை ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்கள் அங்குள்ள யானைகளைப் பிடித்து அரசருக்குத் திறையாகக் கொடுத்துவந்தனர் (இராசநாயகம், 1933). வன்னிப்பகுதியிலிருந்து குடாநாட்டிற்கு யானைகளைக் கொண்டுவரும் பகுதியே ஆனையிறவு என்ற பெயரால் வழங்கிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட யானைகளை யாழ்ப்பாண அரசர்கள் தமது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திவந்ததுடன் தென்இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்துவந்தனர். அவ் யானைகளை விஜயநகரத்து ராய்கள், தில்லி சுல்தான்கள், வங்காளத்து நவாபுகள், பாமினி சுல்தான்கள், ஆகியோர் கொள்வனவு செய்து வந்தனர். சோழமண்டலக் கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகைதரும் வணிகர்கள் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றனர். அவர்கள் யாழ்ப்பாணம் வரும்போது நெல், அரிசி, ஆகியவற்றை கப்பல்களில் ஏற்றிவந்து வழங்கும் முறையைப் பின்பற்றிவந்தனர் (பத்மநாதன், 2011,ப.152.).

## சாயவேர் மற்றும் சாய உற்பத்தி

யாழ்ப்பாண அரசர் காலத்தில் சாயவேர் உற்பத்தி ஏற்றுமதிப் பொருளாகக் காணப்பட்டதுடன் அரசின் ஏகபோக உரிமை பெற்ற தொழிலாகவும் காணப்பட்டது. இக்காலத்தில் சாயவேர் பெருமளவில் தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதியாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. சாயவேருடன் சம்மந்தப்பட்ட சாயம் காச்சுதல் குடிசைக்கைத்தொழிலாக அக்காலத்தில் விருத்திபெற்றிருந்தது. சாயவேர் உற்பத்தியானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுவந்தது. சாயவேரை சேகரிப்பதற்கென அரசு ஊழியர்களை நியமித்திருந்ததுடன் அவர்களைக்கொண்டு அதனைக் காய்ச்சிப் பதப்படுத்தி சாயக்கட்டிகளாக விற்பனை செய்துவந்தனர். இச்சாயக்கட்டிகள் பச்சை, சிவப்பு, நீலநிறங்களில் காணப்பட்டதுடன் அவை துணிகளுக்கு சாயமூட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன (பத்மநாதன்,ப,150).

## முடிவுரை

யாழ்ப்பாண அரசு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை ஏறத்தாள நான்கு நூற்றாண்டுகள் நிலைத்து நின்றதுடன் அக்காலப்பகுதியில் எழுச்சிமிக்க அரசாகத்திகழ அதன் பொருளாதார நிலை ஓர் காரணமாகத் திகழ்ந்தது. இப் பொருளாதார நிலை சிறப்பாகவும் வலிமையாகவும் அமைவதற்கு மன்னர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளும் இங்கு இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளும் முக்கிய காரணமாக அமைந்தன. குறிப்பாக மன்னர்கள் இராச்சியத்தின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டுவந்த வர்த்தக நடவடிக்கையை அரசின் ஏகபோக உரிமை அடிப்படையில் மேற்கொண்டு வந்தமை முலம் அரசிற்கு அதிகளவில் பெருமளவில் வருமானம் கிடைக்க வழியமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது அவர்களது பொருளாதாரக் கொள்கையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றது. இதேவேளை யாழ்ப்பாண அரசில் உற்பத்தியாகிய ஏனைய வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்தமை மூலமும் அரசிற்கு வருமானம் கிடைக்க வழிவகுத்திருந்தனர். இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகள் உள்நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளுடனும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவற்றுள்

உள்நாட்டு வர்த்தகம் தரைவழியூடாகவும், வெளிநாட்டு வர்த்தகம் வடபகுதித் துறைமுகங்களுடாக கடல்வழியாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வர்த்தக நடவடிக்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் வடபகுதி உற்பத்திகள் ஏற்றுமதியாகியதுடன் வடபகுதிக்குத் தேவையான உற்பத்திகள் அந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கையின் மூலம் அரசு சிறந்த வருமானத்தைப் பெற்றுவந்ததுடன் யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியாக எழுச்சிமிக்க அரசாக விளங்கக் காரணமானது குறிப்பிடத்தக்கது.

### உசாத்துணை நூல்கள்

1. இந்திரபாலா, க. (2006). இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு. கொழும்பு-சென்னை: குமரன்புத்தக இல்லம்.

2. இராசநாயகம்,செ. (1933). யாழ்ப்பாணச் சரித்திரம். யாழ்ப்பாணம்:

3. இந்திரபாலா,கா. (1972). யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம். வட்டுக்கோட்டை, இலங்கை: யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம்.

4. குணசிங்கம்,மு. (2008). இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு. ஆஸ்திரேலியா: எம்.வி. வெளியீடு.

5. சபாநாதன்,கு. (1949). யாழ்ப்பாண வைபவமாலை.சுன்னாகம்: திருமகள் அச்சகம்.

6. சிற்றம்பலம்,சி.க.(1992).யாழ்ப்பாண இராச்சியம்.திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

7. பத்மநாதன், சி.(2011).யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு.கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

8. பத்மநாதன், சி.(2001). இலங்கைத் தமிழர் தேசவளமைகளும் சமூகவழமைகளும். கொழும்பு- சென்னை: குமரன் பதிப்பகம்.

9. புஸ்பரட்ணம்,ப. (2017). இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு. தமிழ்க் கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.

10. Sriweera,W.I. (2002), History of Sri Lanka from earliest times upto the sixteenth century, Dayawansa Jayakody & company , Colombo.

11. Pathmanathan,S. (1978). The Kingdom of Jaffna. Colombo.

12. Gueyroz,Fernao De.The temporal and spiritual conquest of Ceylon, Translated by Fr.S.G.Prerera, (1930): Colombo.